# பெரிய புராண விளக்கம்

கி.வா.ஜ.



அல்லயன்ஸ்

# பெரிய புராண விளக்கம்

பகுதி—1

கி. வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ் கம்பெனி

தபாற் பெட்டி எண் 617

மயிலாப்பூர் :: சென்னை-4.

## BIBLIOGRAPHICAL DATA



| | | | |
|---|---|---|---|
| 1. | Title of the Book | : | Periya Purana Vilakkam |
| 2. | Author | : | Ki. Va. Jagannathan. |
| 3. | Language | : | Tamil |
| 4. | Edition | : | First Edition 1987 |
| 5. | Date of publication | : | August 1987 |
| 6. | Copy Right Holder | : | Author |
| 7. | Paper used | : | 10.9 kg. D. Cr.white printing |
| 8. | Size of the Book | : | 18.5 cms x 12.5 cms |
| 9. | Printing Point used | : | 10 Point |
| 10. | Number of pages | : | (328+8) 336 Pages) |
| 11. | Number of copies | : | 1100 Copies |
| 12. | Artist | : | Muthu |
| 13. | Printer | : | Sundaram Printing Works, Madras-14. |
| 14. | Binding | : | Card Board Binding |
| 15. | Price | : | Rs. 26-25 |
| 16. | Publisher (with full address) | : | The Alliance Company, 244, R.K. Mutt Road, Post Box No. 617, Mylapore, Madras-600 004. Phone: 7 1 3 1 4 |
| 17. | Subject | : | Appreciative Commentary of "Peria Puranam" |

## நூற்றாண்டை நோக்கி ...

''தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ வி. குப்புஸ்வாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்.''

—மகாத்மா காந்தி

''நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழிபெயர்ப்புகளையும் இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகின்றேன்.''

—மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

"Books published by Alliance Company are highly Popular Books."

—Rt. Hon'ble V. S. Srinivasa Sastri

''தமிழில் அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுகிறேன்.''

—சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

''அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ்நாட்டார் தக்க ஊக்கம் தரவேண்டும் என விரும்புகிறேன்.''

—சத்தியமூர்த்தி

''மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை. அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ்நாட்டுக்குப் பல வழிகளிலும் பயன் விளைத்து வருதல் கண்கூடு. நாட்டு நலங்கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக.''

திரு. வி. க.

# வாகீச கலாநிதி கி.வா.ஜ. அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

**பெயர்:** கி.வா. ஜகந்நாதன் **தந்தையார்:** வாசுதேவ ஐயர் **தாயார்:** பார்வதி அம்மாள் **துணைவியார்:** அலமேலு அம்மாள் **பிறப்பு: 11—4—1906.** **பிறந்த ஊர்:** கிருஷ்ணராயபுரம் (திருச்சி மாவட்டம்) **படித்த இடங்கள்:** கிருஷ்ணராய புரம், மோகனூர், குளித்தலை, சென்னை **படிப்பு:** வித்துவான், எம்.ஏ.(தமிழ்) **திருமணம்:** 1932. **பட்டங்கள்:** ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் வழங்கிய **"திருமுருகாற்றுப்படை அரசு, வாகீச கலாநிதி"** சிருங்கேரி சங்கராச்சாரியர் அவர்கள் வழங்கிய **"தமிழ்க்கவி பூஷணம்"**, புஷ்பகிரி சங்கராச்சாரியர் வழங்கிய **"உபந்நியாச கேசரி"**, மதுரை ஞானசம்பந்தர் மடாதிபதி வழங்கிய **"திருநெறித் தவமணி"**. மற்றப் பட்டங்கள் **"கந்தர் அலங்காரச் செம்மல்"**, **"தமிழ் முனிவர்"** **"செந்தமிழ்ச் செல்வர்"** முதலியன **பரிசுகள்: திருப்பனந்தாள் மடத்தில் வித்துவான் பரீட்சையில் முதல்வராகத் தேர்ச்சி பெற்றவர்க்குத் தரும் பரிசு ரூ. 1000, சாகித்திய அகாதமியார் "வீரர் உலகம்?" என்ற புத்தகத்திற்கு அளித்த பரிசு ரூ. 5000, திருச்சித்தமிழ் சங்கத்தினர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் பரம்பரையில் வந்தவர்களுக்கு அளிக்கும் பரிசு ரூ. 1000.**

**எழுதிய புத்தகங்கள்:** சிறு கதைத் தொகுதிகள்-10 நூல்கள், கவிதை நூல்கள்-8, கந்தர் அலங்கார விளக்கம்—20 நூல்கள், திருமுறை மலர்கள்-12 பகுதிகள், அபிராமி அந்தாதி விளக்கம்—4 பகுதிகள், தமிழ்க் காப்பியங்கள் (ஆராய்ச்சி நூல்) 1, தமிழ் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்—1, முருகனைப் பற்றிய கட்டுரைத் தொகுதிகள்—4 நூல்கள். பதிப்பு: திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, சுந்தர மூர்த்தி நாயனார் தேவாரம், பதினோராம் திருமுறை, திருவாசகம் முதலியன. மொத்தப் புத்தகங்கள் 200க்கும் மேல், **புதல்வர்கள்:** மூவர் **பெண்:** ஒருத்தி **பிரயாணங்கள்:** பாரீஸ், லண்டன், ரோம், கோலாலம்பூர், பர்மா, இலங்கை, இந்தியாவில் பல இடங்கள்.

# முன்னுரை

பெரிய புராணத்தில் உள்ள பாடல்களின் பொருளை விரிவாக எழுதும் பணியில் ஈடுபட்டு முருகன் திருவருளால் முதற் பகுதி நிறைவேறியது. பாடல்களை விளக்கும்போது முதலில் பொழிப்புரையைத் தந்து, பிறகு பாடலை எழுதி, அப்பால் சொற்களின் பொருள்களையும், இலக்கணக்குறிப்புக் களையும், ஒப்புமைப் பகுதிகளையும் காட்டியிருக்கிறேன். ஒப்புமையாகக் காட்டிய பகுதிகள் சங்க நூல்கள், திருமுறை கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி, கம்ப ராமாயணம் முதலிய நூல்களில் உள்ளவை.

இந்த விளக்க நூலை வெளியிடும் பணியை மயிலாப்பூரில் புகழ் பெற்று விளங்கும் அல்லயன்ஸ் கம்பெனியார் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அந்தக் கம்பெனியை நிறுவிய அமரர் குப்புசாமி ஐயர் பல அருமையான நூல்களை நல்ல முறை யில் வெளியிட்டார். பங்கிம் சந்திர சட்டர்ஜி, சரத் சந்திர சட்டர்ஜி, ரவீந்திரநாத் டாகுர் முதலியவர்களின் நூல்களை யும், எஸ். வி. வி. முதலிய தமிழ்ப் புலவர்கள் எழுதிய நூல்களையும் அழகாகப் பதிப்பித்து வெளியிட்டார். தமிழ் நாட்டுச் சிறுகதைகள் என்ற பெயரில் தமிழ் எழுத்தாளர் களின் சிறுகதைகளைத் தனித்தனியே வெளியிட்டார். அவ் வாறு பல புத்தகங்கள் வெளியாயின. இவற்றையல்லாமல், "கதைக் கோவை" என்ற பெயரோடு ஐந்து தொகுதிகளை வெளியிட்டார். அவருடைய பணியைப் பின்பற்றி அவரு டைய புதல்வர்கள் மேலும் பல நூல்களை வெளியிடும் தொண்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழ் மக்களுடைய ஆதரவு இந்தக் கம்பெனியாரின் வெளியீடுகளுக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

'காந்த மலை'
சென்னை-28
20—7—1987

**கி. வா. ஜகந்நாதன்**

# பதிப்புரை

நூல் வெளியீட்டுத் துறையில் நூற்றாண்டை நோக்கி வெகு வேகமாக முன்னேறிச் செல்லும் எமது பதிப்பகம் மூலமாக எம் ஆத்ம நண்பர் வாகீச கலாநிதி திரு. கி. வா. ஜ. அவர்களின் ஒப்பற்ற 'பெரிய புராண விளக்கம்' என்ற நூலைப் பல தொகுதிகளாக வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறோம்.

பெரிய புராணம் முழுவதையும் விளக்கும் இந் நூல் தமிழ் அன்பர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

எமது மற்ற வெளியீடுகளுக்கு ஆதரவு தந்து வந்த தமிழ் மக்கள் இந்நூலுக்கும் அவ்வாதரவைத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

**பதிப்பாளர்**

## பொருளடக்கம்


| எண் | | | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | முகவுரை | .... | 1 |
| 2. | சேக்கிழார் வரலாறு | .... | 13 |
| 3. | பாயிரம் | ... | 46 |
| 4. | திருமலைச் சிறப்பு | .... | 61 |
| 5. | திருநாட்டுச் சிறப்பு | ... | 157 |
| 6. | திருநகரச் சிறப்பு | .... | 209 |
| 7. | திருக்கூட்டச் சிறப்பு | ... | 294 |
| 8. | சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி | ... | 313 |

**கி. வா. ஜ. வின் வேறு நூல்கள்**

1. *வழி காட்டி*
2. *ஞான மாலை*
3. *நீலமணி*
4. *மல்லிகை மாலை*
5. *இமயமும் குமரியும்*

## தமிழ் அன்பர்களுக்கு

பெரிய புராணத்தை விளக்கும் இந்நூலின் மற்ற ஒன்பது தொகுதிகள் விரைவில் வெளிவரும்.



கி. வா. ஜகந்நாதன்

# பெரிய புராண விளக்கம்

## முகவுரை

சேக்கிழார் பாடியருளிய பெரிய புராணத்துக்கு அவர் வைத்த பெயர் திருத்தொண்டர் புராணம் என்பது.

இது,

> "இங்கிதன் நாமம் கூறின்
> இவ்வுல கத்து முன்னாள்
> தங்கிருள் இரண்டில் மாக்கள்
> சிந்தையுட் சார்ந்து நின்று
> பொங்கிய இருளை ஏனைப்
> புறஇருள் போக்கு கின்ற
> செங்கதி ரவன்போல் நீக்கும்
> திருத்தொண்டர் புராணம் என்பாம்."

என்று பெரிய புராணத்தில் வரும் பாடலால் உணரலாம். இந்தப் புராணத்தின் பெருமையால் பெரிய புராணம் என்ற பெயரே வழங்கலாயிற்று. பெரிய புராணம் என்பதற்கு இரண்டு வகையில் பொருள் கூறலாம். இதில் உள்ள ஒவ்வொரு நாயனாருடைய வரலாறும் புராணம்

என்ற பெயரோடு அமைந்துள்ளது. அவ்வாறு பல புராணங்களைத் தன்னகத்தே உடைமையால் இது பெரிய புராணம் ஆயிற்று என்பது ஒன்று. மற்றொன்று பெரியவர்களாகிய நாயன்மார்களுடைய வரலாற்றைச் சொல்லும் புராணம் என்பது. நாயன்மார்கள் இறைவனை வழிபடுவதில் பேரின்பத்தை அடைந்து ஜீவன்முக்தர்களாக விளங்கினார்கள். அவர்கள் இறைவனை அன்போடு கும்பிடுவதையல்லாமல் வீடுபேற்றையும் விரும்புவது இல்லை, இது,

**"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினிற் கும்பிடலேயன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்,"**

என்று பெரிய புராணத்தில் வரும் பாடலால் தெளிவாகும்,

புறநானூற்றில் வரும் 204- ஆம் செய்யுளில்,

"கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன் றதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

என்ற அடிகள் வருகின்றன. அது கூறுவதன்படி பார்த்தால் வேறு யாரும் வழங்க முடியாத வீடுபேற்றை வழங்குபவன் எல்லாரினும் மேலான பரம்பொருளாகிய சிவபெருமான், அந்தப் பெருமான் வழங்கும் வீட்டையும் வேண்டாம் என்று கூறுபவர்கள் அவனைக் காட்டிலும் பெரியவர்கள் என்ற கருத்துத் தெளிவாகும். ஆகவே, வீடும் வேண்டா விறலோடு விளங்கின நாயன்மார்கள் பெரியவர்கள் என்பது பெறப்படும். அத்தகைய பெரியவர்களின் வரலாறுகளைச் சொல்வதால் இந்தப் புராணம் இறைவனைப் பற்றிய புராணங்களைவிடப் பெரியதாயிற்று; ஆதலால் இதற்குப் பெரிய புராணம் என்ற பெயரே வழங்கலாயிற்று.

மற்றப் புராணங்களுக்கு மூலம் வடமொழியில் இருக்கும். அவற்றைப் புலவர்கள் முதல் நூல்களாகக் கொண்டு வழிநூல்களாகத் தமிழில் புராணங்களைப் பாடினார்கள். ஆனால் பெரியபுராணமோ அத்தகையதன்று. இது தமிழிலேயே பாடப்பெற்றது. சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய திருத் தொண்டத் தொகையையும் நம்பியாண்டார் நம்பி பாடியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடியொற்றிச் சேக்கிழார் மிக விரிவாகப் பெரிய புராணத்தைப் பாடினார். அவர் அமைச்சராக இருந்த காலத்தில் சிவத்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தார். அவ்வாறு தலங்களைத் தரிசிக்கச் சென்றபோது நாயன்மார்களைப் பற்றிய செய்திகளை அங்கங்கே அறிந்தவர்கள் வாயால் கேட்டுத் தெரிந்துகொண்டார். அவற்றைப் பயன்படுத்தி விரிவாக நாயன்மார்களுடைய வரலாறுகளை அவர் பாடினார். அந்தக் காலத்தில் நாயன்மார்கள் திரு அவதாரம் செய்தருளிய ஊர்களில் இருந்த பெரியவர்கள் அந்த நாயன்மார்களுடைய வாழ்க்கையைப்பற்றிக் கர்ண பரம்பரையாக வந்த செய்திகளால் அறிந்து கொண்டிருந்தார்கள். சேக்கிழார் அவர்களைச் சந்தித்து அந்தச் செய்திகளைத் தொகுத்து வைத்துக்கொண்டார். அவற்றைப் பயன்படுத்தியே நாயன்மார்களின் வரலாற்றைப் பாடினார்.

வடமொழியில் அகஸ்திய பக்தவிலாஸம், உபமன்யு பக்தவிலாஸம் என்ற இரண்டு நூல்கள் உண்டு. மற்றப் புராணங்களைப் போல இராமல் அவை இரண்டும் பெரிய புராணத்தைத் தழுவியே இயற்றப்பட்டன.

பெரிய புராணப் பதிப்பிற்கு உபோற்காதமாக யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்கள் பின் வருமாறு எழுதியுள்ளார்.

அநாதிமல முத்த பதியாகிய பரமசிவன் தமக்கு ஒரு பிரயோசனமும் குறியாது அநாதிமல பெத்தராகிய ஆன்மார்களுக்கு மலநீக்கமும் சிவ தத்துவ விளக்கமும் சித்திக்கும் பொருட்டுப் பெருங்கருணையினாலே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியம் பண்ணுவர். அவற்றுள், படைத்தலாவது ஜென்மமுடைய பிராணிகளின் சமூகமாயும், போகோப யோகிகளாகிய பரிகரங்களோடு இயைவதாயும் இருக்கின்ற சகத்தை அந்த அந்த நானாவித யோனிகளில் உற்பவிப்பித்தல். காத்தலாவது, தனது இச்சையால் தடுக்கப்பட்ட சர்வலோகத்தையும் தத்தம் விடயத்தில் நியோகிக்க நிறுத்துதல். அழித்தலாவது, சகத்தைச் சகத்து யோனியில் ஒடுக்கல். மறைத்தலாவது, தத்தம் வாசனைக்குத் தக்க போகத்தின் வழுவாது இருக்கச் செய்தல். அருளலாவது, தீக்ஷா கிருத்தியமாகிய அனுக்கிரகம். இப்பஞ்ச கிருத்திய கருத்தாவாகிய பதிக்கு உரிய முக்கிய குணங்களான: சருவஞ்ஞதை, திருத்தி, அநாதி போதம், சுவதந்திரதை, அலுப்தசத்தி, அநந்தசத்தி என்னும் ஆறுமாம். இவை தமிழில் முறையே முற்றறிவு, வரம்பில் இன்பம், இயற்கை உணர்வு, தன்வயம், குறைவில் ஆற்றல், வரம்பில் ஆற்றல் எனப்படும். எல்லாப் பொருள்களையும் புலப்படக் காணும் அறிவு உள்வழி அல்லது எல்லாத் தொழிலும் இயற்றுதல் கூடாமையின் முற்றறிவும், தமது அனுபவத்தின்பொருட்டுப் பிறிது ஒன்றனை வேண்டிற் பரிபூரணத் தன்மை எடுபட்டுக் கடவுள் தன்மை கெட்டுப்போதலின் வரம்பில் இன்பமும், முற்றறிவுடைய வழியும் அஃது அநாதியன்றி அவாந்தரத்தில் வந்ததேல் காரண பூர்வகமாய் வந்ததெனின் வரம்பின்மைக் குற்றமும், காரணம் இன்றி வந்ததெனின் காரணகாரிய நியமம் இன்மைக் குற்றமும் அடுக்குமாதலின் இயற்கை உணர்வும், பிறர்வயம் உண்டேல் பாசத்தடையும் உளதாகி வேண்டியது

எய்தாமையும் வேண்டாதது எய்தலும் ஆகிய குற்றம் பற்றுதலின் தன்வயமும், ஆற்றல் குன்றுமாயின் எக்காலத்தும் எத்தேசத்தும் இளைப்பின்றித் தொழில் இயற்றுதல் ஏலாமையின் குறைவில் ஆற்றலும், அவ்வாற்றல் வரம்புட்பட்ட பரிமாணம் உடையதாயின் வரம்புட் படாத தொழில் இயற்றல் கூடாமையின் வரம்பில் ஆற்றலும் ஆகிய இவ்வறு குணங்களூம் பதிக்கு இன்றியமையாமை காண்க. அப்பதியானவர் அநாதியே உள்ள முற்றறிவு முற்றுத் தொழில் ஆகிய சிவத்துவம் இயைதலால்தான் சிவத்துவம் என்னும் அதிசுத்தம் இயைதலால்தான் ஶ்ரீ என்னும் தாது கிடத்தல் எனப் பொருள்படுதலின் இறுதிக் காலத்து உலகம் எல்லாம் தம்மிடத்து ஒடுங்கிக் கிடத்தலால்தான், சற்சனங்களுடைய மனங்கள் தம்பாற் கிடத்தலால்தான், ஶ்ரீ என்னும் தாது மெலிவித்தல் எனவும் உருவித்தல் எனவும் பொருள்படும். ஆதலால் ஆன்மாக்களின் பாசசத்தியை மெலிவித்துச் சிற்சத்தியைக் கூருவித்தலால்தான், காந்திப் பொருள் தரும் வஶீ என்னும் சொல் வர்ணவிபரியயம் உறுதலால்தான் சிவன் எனப்படுவர்.

அச்சிவனது ஆஞ்ஞையினாலே அவ்வான்மாக்கள் கர்மானுசாரமாக நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும் எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதமும் உடையராய்ப் பிறந்து இறந்து உழலும் காலத்திலே முன்னர்ப் பௌத்தம் முதலிய புறச்சமயங்களிலே நின்று அவ்வச்சமய நூல்களில் விதித்தபடி ஒழுகுவர்கள். அப் புறச் சமயிகளுக்கு, அவரவராலே சொல்லப்பட்ட கர்த்திரு காரணங்களை அதிஷ்டித்துக் கொண்டு அந்தக் கர்த்திரு காரண சொரூபியாய் இருந்து சிவனே அருள் செய்வர். அது, "அறிவினான் மிக்க அறுவகைச் சமயத் தவ்வவர்க்கங்கே ஆரருள் புரிந்து, வெறிய மாகடல் இலங்கையர் கோனைத் துவங்க மால்வரைக் கீழடர்த்திட்டுக்; குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக் கோல வாளொடு நாளது கொடுத்த

செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன் செழும்பொழில் திருப் புன்கூர் உளானே" என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் **தேவாரத்தா**லும், "அறுவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறாம், குறியது வுடைந்தாய் வேதா கமங்களின் குறியி றந்தாங் கறிவினில் அருளால் மன்னி அம்மையோ டப்ப னாகிச், செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்." எனவும், "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாகனார் தாம் வருவர்மற் றத்தெய் வங்கள், வேதனைப் படும்இ றக் கும் பிறக்கும்மேல் வினையும் செய்யும், ஆதலால் இவை யிலாதான் அறிந்தருள் செய்வன் அன்றே" எனவும் வரும் **சிவஞான சித்தி**த் திருவிருத்தங்களாலும் அறிக. புறச் சமயங்களிலே நின்று செய்த புண்ணியங்களினாலே பின் வைதிக மார்க்கத்திலே புகுந்து வேதத்திலும் அதன் வழிநூலாகிய மிருதி முதலியவற்றிலும் பிராமணர் முதலிய நான்கு வருணத்துக்கும், பிரமசரியம் முதலிய நான்கு ஆச்சிரமத்துக்கும் விதித்த பசு புண்ணியங் களைச் செய்து சுவர்க்கத்திற் சென்று போகம் துய்த்து மீண்டும் பூமியிலே பிறப்பார்கள். அவர்கள் முன் செய்த வைதிக புண்ணிய மிகுதியினாலே சைவாகமத்தால் உணர்த்தப்படும் சைவத்திற் பிரவேசித்து, சரியை கிரியை யோகங்களை முறையே அநுட்டித்து அவற்றின் பலங் களாகிய சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய பதங்களைப் பெறுவார்கள். அவர்களுள் போகத்திலே வைராக்கியம் உற்றவர்கள் திரும்பப் பூமியில் வாராது சிவானுக்கிரகத் தினாலே பரமுத்திமான்கள் ஆவார்கள். போகத்திலே வைராக்கியம் உறாதவர்கள் திரும்பப் பூமியிலே பிறந்து சிவஞானத்தைப் பொருந்திப் பரமுத்தியாகிய சிவ சாயுச் சியத்தைப் பெறுவார்கள். இதற்குப் பிரமாணம் **சிவ நெறிப் பிரகாசம்**; "இப்படி அவத்தை யோரைந் தெய்தியே பிறப் பி றப்பாம், வெப்புறும் காலந் தன்னில் வேதத்தின் வழிய தன்றிப், பொய்ப்பொருட் சமயந் தன்னிற்

புரிந்திடும் தவத்தினாலே, தப்பிலா வேதம் சொன்ன சமயத்தைச் சார்ந்து நின்றே,வன்னமோர் நான்கினுக்கும் மாசிலாச் சிரமங் கட்கும், சொன்னவா றிடறி லாதே செய்துபின் சுவர்க்கம் துய்த்துப், பின்னர், மா நிலத்தின் வந்து சிலதனமம் பெரிதென் றெண்ணி, முன்னையா கமங்கள் சொன்ன படிதவம் முயல்வம் என்றே எண்ணியோர் குருவைத்தேர்ந்தே எழில்பெறு சமய தீக்கை, நண்ணியே சரியை தன்னை நவையற இயற்றி அத்தரற், புண்ணிய சிவலோ கத்தைப் பொருந்தியங் குள்ள போகம், அண்ணலார் அருளப் பெற்ற தருந்திமேல் அவனி மீதே, உதித்தருள்செய் குருவாலே விசேட தீக்கை உற்றுணர்ந்து சிவபூஜை ஊனமறச் செய்தே, துதித்திடுநற் சாமீபம் சிவன்பாற் பெற்றுத் நுயத்திடுவர் பெரும்போகம் தொலைந்த காலை, நதிச்சடையான் அருளாலே புவியில் நண்ணி நாடரிய சிலயோகம் இயற்றி நன்றாய்த், திதித்தொழிலாம் காலமுறும் அளவும் அந்தச் சிவனுடைய சாருபம் சேர்ந்து நின்றே ஆகத்தில் ஆசையில ராகிச் சற்றும் அளவிறந்து மேன்மேலும் அடைவ தான, போகத்திற் பற்றிலரே யாகிலுல கெல்லாம் பொன்றிடுங் கால் இவர்தாமும் பொருந்திடுவர் முத்தி, மோகத்தைத் தவிராதோர் பிணைச்சிருட்டி கால முளைத்துலகிற் குரு வாலே முத்திபெற மலத்தின், பாகத்தை அடைந்ததனாற் சத்திபதிந் திடவே பரஞானத் தான்முத்தி பவிக்குமவர் பாலே, "எனவும்" **சில ஞானசித்தியார்**, "தானமியாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள் சாந்தி விரதங்கள் மோகங்கள் சார்ந்தோர், ஈனமிலாச் சுவர்க்கம்பெற் றிமை பப்ளவின்மீ ள்வ ரீசனியோ கக்கிரியா சரியையினில் நின்றோர், ஊனமிலா முத்திபதம் பெற்றுலகம் எல்லாம் ஒடுங்கும்போ தான்முனிலா தொழியினுற்பவித்து, ஞானநெறி அடைந்தடைவர் சிவனை யங்கு நாதனே முன்னிற்கின் அணுகுவர்நற் றாளே," எனவும், **கோயிற் புராணம்**, 'சுருதிவழி ஒழுகினர்கள் சுவர்க்கத்தார் **ஆகம**நூற்

சரியை கிரியா யோகர் சாலோக சாமீப, உருவுவமை யின ராக உதவுதுமெம் முடனாகும், பெருகியஞா னிகள் எம்மைப் பெற்றார்போக் கற்றாரே'' எனவும், சிலதருமோத் தரம்,"இருவினை உணர்ந்த புத்தரவர்முதல் இகலும் வாத, தெரிசனம் அனைத்தும் சேர்ந்தார் சிலசம யத்தைச் சேர்வார் பொருவிலி புகன்ற வாக்கிற் கருமநன் னெறியும் புக்கே, விரவுவர் ஞான யோகம் விடுவர்மெய் அடைவர் மெய்யே; எடுத்ததோர் ஆக்கை தன்னின் இருண்மல உத்தி தன்னைத் தடுத்தருள் சைவ நூலின் சாதன மதனைத் தள்ளி, விடுத்து வீ றற்ற நூலின் சாதனம் விரும்பு வார்முன், அடுத்த ஆ ரமுதம் விட்டுப் புற்கையா தரிப்பா ரன்றேல'' எனவும் வருமாறு காண்க.

இதுகாறும் கூறியவாற்றால், சைவ சித்தாந்தத்தன்றிப் பரமுத்தி சித்தியாது என்பதும், அப்பரமுத்திக்குச் சாதனம் சிவஞானமே என்பதும், அச் சிவ ஞானத்தைப் பயப்பன சரியை முதலிய மூன்றுமே என்பதும், வேதத்துள் விதித்த வேள்விமுதலியனஎல்லாம் அநித்தியமாகிய காமியங்களைப் பயப்பன என்பதும் பெறப்பட்டன. வேள்வி முதலியன ஞானத்தைப் பயவாமை மாத்திரையே அன்றி, தீவினை போல அது நிகழ ஒட்டாது தடைசெய்து நிற்றலும் உடையனவேயாம். ஆதலால் தீவினைகள் இருப்பு விலங்கும் வேதத்துள் விதித்த வேள்வி முதலிய நல்வினைகள் பொன் விலங்கும் போலத் தம்முட் சமப்படுத்தி உணர்தற் பான்மையை என்க. வேள்வி முதலிய தருமங்களின் பயனாகிய இன்பம் முன் பசித்து உண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியால் வரும் இன்பத்தைப்போலும். அவ்வேள்வி முதலியனபோல அனுபவமாத்திரையாற் கெடுதல் இன்றி மேன்மேல் முறுகி வளர்வனவாகிய சரியை கிரியை யோகங்களால் எய்தப்படும் சிவஞானம் பசித்து உண்டு பின்னும் பசித்தல் இல்லாத தேவர்களுக்கு அவ்வமுத உண்டியாலாய பயனைப்போலும். அவ்வமுதஉண்டி நரை திரை மூப்பின்றி

நிலைபெறுதல் ஆகிய பெரும் பயனைத் தருதல் மாத்திரையே அன்றிப் பசிதீர்தலாகிய அவரந்தரப் பயனையும் தருதல்போல, சரியை முதலியனவும் சிவ ஞானத்தைப் பயத்தல் மாத்திரையே அன்றித் தத்தம் பதமுத்தியாகிய அவாந்தரப் பயனையும் பயப்பனவாம்.

மேற்கூறிப் போந்த சரியை முதலிய நான்கு பாதங் களுள்ளும், சரியை கிரியை என்னும் இரண்டும் கூடி, சிவ தருமம் என ஒரு பெயரான் வழங்கவும் பெறும். அந்தச் சிவ தர்மம் மெல்வினை வல்வினை என இரு வகைப்படும். அவற் றுள், மெல்வினையாவது சைவாகமத்திலே சரியை கிரியை களுக்கு விதித்தவழி ஒழுகும் விதி மார்க்கம்.' வல்வினை யாவது அவ்விதி மார்க்கத்தில் வழுவாது நின்று அந்நிலை யின் முதிர்ச்சியினாலே பின் உண்டாகிய பிறப்பின் கண்ணே சிவனிடத்தில் எல்லையின்றி எழுந்து அதி தீவிர மாய முறுகி வளரும் அன்பின் பெருக்கத்தினாலே உலக நெறி கடந்து ஒழுகும் பத்தி மார்க்கம்'.இதற்குப்பிரமாணம் **திருக்களிற்றுப்படியார்.** "நல்லசிவ தர்மத்தால் நல்ல சிவ யோகத்தால், நல்லசிவ ஞானத்தால் நானழிய, வல்லதனால்? யாரேனும் அன்புசெயின் அங்கே தலைப் படும்காண், ஆரேனும் காணா அரன்" எனவும், "மெல் வினையே என்ன வியனுலகி னார்க்கரிய, வல்வினையே என்ன வரும்இரண்டும்— சொல்லிற், சிலதன்ம மாமதனிற் சென்றதிலே செல்வாய், பவகன்மம் நீங்கும் படி," எனவும் "ஆதியை அர்ச்சித்தற் கங்கமும் அங்கங்கே, தீதில அறம்பலவும் செய்வனவும் — வேதியனே, நல் வினையாம் என்று நமக்குமெளி தானவற்றை, மெல் வினையே என்றதுநாம் வேறு" எனவும், "வரங்கள் தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள், கரங்களினால் அன்று கறியாக — இரங்காதே, கொல்வினையே செய்யும் கொடுவினையே ஆனவற்றை, வல்வினையே என்றதுநாம் மற்று, 'எனவும், பாதகமே என்றும் பழிஎன்றும் "பாராதே,

தானதயை வேதியனைத் தாள்இரண்டும் — சேதிப்பக், கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே, சண்டீசர் தஞ்செயலாற் றான்.'' எனவும், ''செய்யில் உகுத்த திருப்படி மாற்றதனை, ஐயஇதுவமுது செய்யெனலே—பையவிருந், தூட்டி அறுப்பதற்கே யூட்டி அறுத்தவரை, நாட்டியுரை செய்வதே நாம்'' எனவும் வரும்.

இங்ஙனம் கூறிய சரியை முதலிய நான்கு பாதங்களிலே நின்று முத்தி பெற்ற மெய்யடியார்களுட் சிறந்த தனியடியார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர்எழுபத்திருவருடைய சரித்திரத்தைக் கனகசபையின்கண்ணே ஆனந்த நிருத்தம் செய்தருளும் கருணாநிதியாகிய சிவனது திருவருளினாலே பசுகரணம் எல்லாம் சிவகரணமாய் நிகழப் பெற்ற சிவாநுபூதிமானாகிய குன்றத்தூர்ச் சேக்கிழார் நாயனார், தமிழ் உலகம் உய்தற்பொருட்டு, திருத்தொண்டர் புராணம் எனப் பெயர் தந்து விரித்தருளிச் செய்தார். இப்புராணம் தன்னை ஓதல் கேட்டல் செய்வார்க்குச் சிவனடியார்களது அதியற்புத பக்தித் திறத்தையும் அவர்கட்கு எளிவந்த சிவனது அதியற்புதப் பிரசாதத்தையும் உணர்த்தி, அவர் நெஞ்சை அழலிடைப்பட்ட மெழுகு போலக் கசிந்துருகச் செய்தலின் தனக்கு உயர்வு ஒப்பு இன்றி விளங்கும் பெருமையுடைமை பற்றி, பெரிய புராணம் எனவும் பெயர் பெற்றது. இப் பெரிய புராணம் சைவ சித்தாந்த நூற்கருத்தோடு மாறுபடாத வேக முடிவாகிய உபனிசித்துக்களின் காற்பரிங்களை உள்ளடக்கிய தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்னும் நான்கனோடு கூட்டி, கல்வியறிவு ஒழுக்கங்களான் ஆன்றமகத்துக்களாலே தொன்று தொட்டு அருட்பா என வழங்கப்படும்.

பிரஞ்ஞை இல்லாத சில பிராமணர் இப்பெரிய புராணத்துக்கு அப்பிரமாணியம் பேசுவர். இப்புராணத்துக்

குத் தில்லைவாழந்தணர் மடபதிகள் முதலிய எண்ணிறந்த அடியார்கள்கேட்கச் சிதம்பரசபாநாதர், 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுத்தருளினார் எனவும், இது முற்றிய பின்னர் அநபாய சோழ மகா ராஜாவுக்கு, "சோழனே, சேக்கிழான் நாம் உலகெலாம் என்று அடி எடுத்துக்கொடுக்க நம்முடைய தொண்டர்களது அடிமைத் திறத்தை விரித்துப் புராணம் பாடி முடித்தான் நீ அதைக் கேள்" என்று யாவரும் கேட்ப அருளிச் செய்தார் எனவும் தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய சிவானுபூதிமான் எனப் பிரசித்தி பெற்ற உமாபதி சிவாசாரியார் சேக்கிழார் புராணத்துக் கூறுதலானும், பரமசிவன் உமாதேவிக்குச் சதுர்யுக தருமங்களும் கூறிய பின்னர், இனிக் கலியுகத்திலே அறுபத்து மூன்று தொண்டர்கள் பிறந்து தம்மேற் பத்தி செய்வார்கள் எனவும், அவர்கள் சரித்திரத்தை உபமன்னியு முனிவர் பத்தர் குழாங்கட்குக் கூறுவர் எனவும் கூறி அச் சரித்திரத்தை முன் உரைத்தமை பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே நவமாம்சிசத்திற் பெறப்படுதவானும், சங்கராசாரியர் இப்பெரிய, புராணத்துட் கூறப்படும் அறுபத்து மூவருள் சிலரது அடிமைத் திறத்தை, 'வழியிலும் இடப்பட்ட செருப்பானது பசுபதியின் அங்கத்துக்குக் கூர்ச்சமாகின்றது. வாய் நிறைந்த நீரால் நனைத்தல் புரப்பகைவருக்குத் திவ்வியாபிஷேகம் ஆகின்றது. சற்றே புசிக்கப்பட்ட மாமிச சேஷத்தின் கவளமானது திவ்வியோபகாரம் ஆகின்றது. வசைரன் பக்தச்ரேஷ்டன் ஆகின்றான். பத்தி எதைச் செய்கின்றிலது?' எனச் சிவானந்தலகரியிலும், "கிரீசரே, மனைவிக்கும் புதல்வனுக்கும் தந்தைக்கும் துரோகம் செய்தவர்களுக்குப் பிரசன்னமாயினீர். நானோ பிறருக்குத் துரோகம் சிறிதும் செய்ய வல்லவன் அல்லன். என்னிடத்து நீர் எவ்வாறு பிரீதி செய்வீர்! அறியேன்." எனச் சிவபுசங்கத்திலும் சிறப்பித்து உரைத்தவானும் அப் பிராமணர் கூற்றுத் தூரம் போய்த் துச்சமாய்விடும்.

இப் பெரிய புராணமானது தன்னை உணர்ந்தவர்களுக்கு அன்றி மற்றவர்களுக்குத் தமிழ் வேதமாகிய தேவாரத்தின் வரலாறும் மகிமையும் ஓரோ விடங்களில் அதன் பொருளும் விளங்குதல் கூடாமையானும், தன்னை அத்தியந்த ஆசையுடன் ஓதுவோர்க்கும் கேட்போர்க்கும் பத்தி வைராக்கிய ஞானங்களைப் பயக்கும் கருவியாய் இருத்தவானும், சிவஞானசித்தியார் திருக்களிற்றுப்படியார் முதலிய சைவ சித்தாந்த நூல்களினும் உரைகளினும் சிவானுபவத்துக்குத் தான் கூறும் நாயன்மார் பலருடைய சரித்திரங்களில் உதாரணம் காட்டுவதானும் சர்வாதிகாரிகளாகிய ஆதிசைவருக்கும் பிறருக்கும் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்து மூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத் திருவருடைய் சரித்திரங்களையும் உணர்ந்து அவர்கள் மகிமையைத் தெரிந்தாலன்றிச் சிவாலயங்கள் எங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்கற்கண்ணும் அவைகளைச் சேவித்தற்கண்ணும் ஊக்கமும் அன்பும் நிகழாமையானும், சைவர்கள் யாவரும் ஒருதலையாகக் கற்று உணர வேண்டும் நூலாம்.

# சேக்கிழார் வரலாறு

தொண்டை மண்டலத்தில் பாலாறு ஓடுகின்றது. அதில் இருபத்து நான்கு கோட்டங்கள் உண்டு. அவற்றுள் புலியூர்க் கோட்டம் என்பது ஒன்று. அந்தக் கோட்டத்தில் புகழ் பெற்று விளங்குவது குன்றை வளநாடு. அதன் தலை நகரம் குன்றத்தூர். அந்த ஊரில் சேக்கிழார் என்ற பரம்பரையினர் வாழ்ந்து வந்தார்கள். அந்த ஊரில் நாற்பெத்தெண்ணாயிரம் சைவவேளாளர்கள் வாழ்ந்தார்கள். கூடல்கிழான், புரிசைகிழான், வெண்குளப்பாக்கிழான், வரிசைக்குளத்துக்கிழான் முதலியவர்கள் இருந்தார்கள். அவர்களுக்குள் ஒருவர் அருள்மொழித்தேவர் என்பவர். அவருடைய தம்பியார் பாலறாவாயர் என்பவர்.

வாயிலார் நாயனார், சத்திநாயனார், விறல்மிண்ட நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சாக்கிய நாயனார், கோட்புலி நாயனார், மானக்கஞ்சாற நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், இளையான்குடி மாற நாயனார், மூர்க்க நாயனார், அரிவாட்டாய நாயனார், செருத்துணை நாயனார், முனையடுவார் நாயனார் என்ற பதின்மூன்று பேர்களும் சைவவேளாளர்கள்.

அத்தகைய சைவவேளாளர் குலத்தில் சேக்கிழார் என்பவருடைய பரம்பரையில் அருள்மொழித்தேவர் திருஅவதாரம் செய்தருளினார். அந்தக் காலத்தில் சோழ நாட்டை ஆட்சி புரிந்து வந்த அபயகுலசேகரன் என்னும் சோழமன்னன் அருள்மொழித் தேவருடைய கல்வி அறிவு பக்தி நல்லொழுக்கம் முதலியவற்றைத் தெரிந்து கொண்டு அவரை அழைத்துவரச்செய்து தன்னுடைய முதல் அமைச்சராக நியமித்தான். அவருக்கு உத்தமச்சோழப் பல்லவன் என்ற உயர்ந்த பட்டத்தை வழங்கினான். அந்த அருள்மொழித் தேவர் சோழ நாட்டில் விளங்கும் சிவத்தலமாகிய திருநாகேச்சுரத்தில் மிக்க பக்தி உடையவராகி அங்கே கோயில் கொண்டு விளங்கும் நாகேசுவரரை அடிக்கடி அந்தத் தலத்துக்கு எழுந்தருளி வணங்கிவிட்டு வருவது வழக்கம்.

தாம் பிறந்த ஊராகிய குன்றத்தூரில் மடவளாகத்தை உண்டாக்கி ஒரு திருக்கோயிலையும் கட்டுவித்து அந்த ஆலயத்துக்குத் திருநாகேச்சுரம் என்ற திருநாமத்தை வைத்து அந்த ஆலயத்திற்கு வேண்டிய பாத்திரங்கள் முதலியவற்றை வழங்கி ஒவ்வொரு நாளும் பூசை முறைப் படி நடக்கும் வண்ணம் வேண்டிய பொருளையும் வழங்கினார்.

அந்தக் காலத்தில் சமணர்களில் ஒருவராகிய திருத்தக்க தேவர் இயற்றிய பெருங்காப்பியமாகிய சீவக சிந்தாமணியைக் கற்று அந்த நூலின் சொற்சுவை பொருட்சுவைகளில் சில புலவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். சோழ மன்னனும் அந்தச் சீவகசிந்தாமணியைப் புலவர்கள் படித்துச் சொல்லக் கேட்டு அந்தப் பெருங்காப்பியத்தில் ஈடுபாடு உடையவன் ஆனான். அதை அறிந்த அருள்மொழித் தேவர், "இது சமணர்கள் பொய்களைக் கட்டிப் பாடிய நூல். இந்த நூல் மறுமைக்கு உதவாது; இம்மைக்கும் உதவாது. ஆனால் சிவ

பெருமானுடைய கதை இகலோக வாழ்வுக்கும், பரலோக வாழ்வுக்கும் உறுதியை உண்டாக்கும் தன்மையைப் பெற்றது'' என்று சோழ மன்னனிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

அவர் அவ்வாறு கூறியதைக் கேட்ட சோழவேந்தன், ''வீணான கதையாகவும் பயனற்ற கதையாகவும் இந்தச் சீவகசிந்தாமணி இருப்பதானால் மறுமைக்கும் இம்மைக்கும் உறுதியை உதவும் கதை என்ன இருக்கிறது? அந்தக் கதையைக் கற்றுத் தேர்ச்சி பெற்ற புலவர் யார் இருக்கிறார்? அந்தக் கதை சீவகசிந்தாமணியைப் போல இடைக்காலத்தில் பாடப்பெற்ற புதுக்கதையோ? அல்லது பழைய கதையோ? அதற்கு முதல் நூல் இருக்கிறதா? அந்த நூலைப்பாடம் சொன்னவர் யார் இருக்கிறார்? அதைக் கேட்டவர்கள் யார் யார்? அது தவம் செய்தவர் பாடிய வரலாறோ? தவத்தைச் செய்து அதைப் படித்துப் பேறு பெற்றவர்கள் கற்ற தனியான கதையோ?எல்லாவற்றையும் தெளிவாக எடுத்து எனக்குச் சொல்லுங்கள்'' என்று கூறினான்.

அவ்வாறு சோழ மன்னன் மகிழ்ச்சியோடு தம்மைக் கேட்கவே சேக்கிழார் பின்வருமாறு திருவாய்மலர்ந் தருளிச் செய்வாரானார்; ''இந்தப் பூமண்டலத்தில் திருத் தொண்டர்களுடைய பெருமையைச் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப்பெருமானார், தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்ற முதல் அடியை அசரீரி வாக்காக எடுத்து வழங்கினார். அதை முதலில் வைத்துத் திருநாவலூரில் திருஅவதாரம் செய்தருளிய சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பதினொரு பாசுரங்கள் அமைந்ததாகப் பாடியருளினார். அந்தத் திருத்தொண்டத் தொகையைத் தழுவித் திருநாரையூரில் கோயில் கொண்

டிருக்கும் பொல்லாப் பிள்ளையார்கருத்துக்களைத்தெரிவித் தருள அந்த ஊரில் வாழ்ந்து வந்த நம்பியாண்டார் நம்பி என்னும் சான்றோர் கட்டளைக் கலித்துறையில் அமைந்த திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடியருளினார்.

அந்த அந்தாதியைத் திருமுறை கண்ட இராசராசச் சோழச் சக்கரவர்த்தி, சிவாலயத்தேவர் முதலாக உள்ள வர்கள் படித்துப் பாராட்டினார்கள் என்று சேக்கிழார் கூறினார்.

''அவ்வாறானால் அந்தத் தூய்மையான வரலாற்றைத் தெளிவாக எடுத்துக் கூறுங்கள்'' என்று சோழமன்னன் கூறினான். அதைக் கேட்டுச் சேக்கிழார் தில்லைவாழந் தணர்கள் முதலாகத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் இறுதியாக உள்ள நாயன்மார்களைப் பற்றிப் பாடியுள்ள திருத்தொண்டத் தொகை திருத்தொண்டர் திருவந்தாதி ஆகியவற்றின் பொருளை விரிவாக எடுத்துக் கூறினார்.

அவர் கூறியவற்றைக் கேட்டுச் சோழமன்னன் அவருடைய திருவதனத்தைப் பார்த்துப் பின் வருமாறு கூறலானான்; 'தாங்கள் எடுத்துக் கூறிய திருத் தொண்டர் ஒவ்வொருவரும் பிறந்த நாடு, வாழ்ந்த ஊர், பிறந்த குலம், திருநாமம், செய்த திருத் தொண்டு, பரமுத்தியைப் பெற்றவர்கள், சீவன் முக்தர்களாக இந்த நாட்டில் வாழ்பவர்கள், இனிமேலும் பிறக்கப் போகிறவர் கள், அவர்களோடு சேர்ந்து இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்கள், தங்களுடைய உறவினர்களைப் பகைவர் களாகக் கொண்டு திருவருளைப் பெற்றவர்கள்' அவர் களுக்குப் பகைவர்களாக இருந்து நரகத்தை அடைந்தவர் கள், இல்லற வாழ்க்கையை நடத்தி முத்தியைப் பெற்றவர் கள், இல்லற வாழ்வில் பெறும் சிற்றின்பத்தை விலக்கி விட்டுத் துறவறத்தை ஏற்றுப் பிழைவராமல் வாழ்ந்து முத்தி பெற்றவர்கள், பிரமசாரிகளாகவே வாழ்ந்து சிவ

பெருமானுடைய திருவருளைப் பெற்று உஜ்ஜீவனத்தை அடைந்தவர்கள், நல்ல கதியைச் சற்குருவினுடைய திருவருளால் சேர்ந்து சிறப்படைந்தவர்கள், சிவ பூஜையைப் புரிந்து பாமுத்தியைப் பெற்றவர்கள், சிற்றறிவைப் பெறாதவர்களாகி அடியார்களுடைய சைவத் திருக்கோலமே உண்மையான செல்வம் என்று எண்ணிச் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தவர்கள் என்று இவ்வண்ணமாகவே தொடர்ச்சி அமைய வகைவகையாகப் பிரித்துச் சொல்ல வேண்டும். அந்தத் தொண்டர்களுடைய வரலாறுகளை எல்லோரும் காது கொடுத்துக் கேட்கவும் பிறருக்குத் தம்முடைய திருவாய்களால் எடுத்துக் கூறவும் ஒப்பு இல்லாத கருத்துக்களைத் தெரிந்து கொண்டு விளக்கமாக விளங்கும் வண்ணம் உவமைகளைப் பெற்றதாக ஒரு வரலாற்றை யாவரும் கற்கவும் கற்றவண்ணம் ஒழுகவும் ஏற்ற வகையில் ஒரு பெருங்காப்பியமாக விரிவாகப் பாடி வழங்குங்கள்'' என்று சோழ மன்னன் கூறி அருள் மொழித் தேவருக்கு விடையை வழங்கி, வேண்டிய செல்வத்தையும் வழங்கினான். அந்தச் செல்வத்தைப் பெற்றுக்கொண்டு சேக்கிழார் சிதம்பரத்திற்கு எழுந்தருளிச் சென்றார்.

அவ்வாறு சிதம்பரத்தின் எல்லைக்கு வந்து ஆலயத்திற்குச் சென்று திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள நடராஜப்பெருமானுடைய சந்நிதியில் தரையில் விழுந்து அந்தப் பெருமானை வணங்கிப் பிறகு தரையிலிருந்து எழுந்து போய்த் தாமரைக் குளத்தில் நீராடி விட்டு அம்பலவாணர் சந்நிதிக்கு வேகமாக எழுந்தருளி அவரை வணங்கித் தம்முடைய கைகளைத் தம்முடைய தலயின்மேல் வைத்துக் கும்பிட்டுத் திருவுள்ளத்தில் உருக்கத்தை அடைந்து நெகிழ்ந்து வரம்பு காண்பதற்கருமையான பேரானந்த சாகரத்தில் முழுகினார். நடராஜப் பெருமானுடைய திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை வணங்கி விட்டு நின்று கொண்டு, ''எம்பெருமானே, தேவரீருடைய தொண்டர்களின்

சிறப்பை அடியேன் பாடுவதற்கு அடி எடுத்து வழங்கியருள வேண்டும்'' என்று கூறி நடராஜப் பெருமானுடைய திருவருளைப் பெற நினைந்து அந்தப் பெருமானைச் சேக்கிழார் வணங்கினார்.

திருச்சிற்றம்பலத்தில் நின்று கொண்டு திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாருடைய திருவருளினால் அசரீரிவாக்கு ஒன்று, ''உலகெலாம்'' என்று அடியெடுத்துப் பெருமை பெற்ற ஒலியாக உரக்க எழுந்து அங்கே இருந்த அடியவர்களுடைய செவிகளில் விழுந்து நிரம்பியது.

அவ்வாறு அசரீரி வாக்குக் கேட்டபோது தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்கள், சிதம்பரத்தில் விளங்கும் பல மடாதிபதிகள் முதலிய கணக்கு இல்லாத மக்கள் எல்லோரும் பேரானந்தக் கடலில் முழுகினார்கள். அவர்கள் யாவரும் தங்கள் கைகளைத் தங்களுடைய தலைகளின் மேல் வைத்து நடராஜப் பெருமானைக் கும்பிட்டு வணங்கித் தங்கள் உள்ளங்களில் உருக்கத்தை அடைந்தார்கள். அப்போது தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர் நடராஜப் பெருமானார் அணிந்திருந்த அழகிய மாலை ஒன்றையும், திருநீற்றையும், ஒரு பரிவட்டத்தையும் சேக்கிழாருக்கு வழங்கினார். சிதம்பரத்தில் வாழும் மக்கள் எல்லோரும் சேக்கிழார் தங்கள் ஊருக்கு வந்திருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியை அடைந்தார்கள். தொண்டர்களினுடைய சிறப்பையும் தொண்டுகளையும் பாடுவதற்கு, மற்றச் செய்யுட்களைக் காட்டிலும் உயர்வைப் பெற்றவையாகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திரு நாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் மூன்று நாயன்மார்களும் பாடியருளிய திருநெறித் தமிழாகிய தேவாரத் திருப்பதிகங்களே துணை புரிபவை ஆதலால் வரன்முறைப்படி அந்த மூன்று நாயன்மார்களையும் சேக்கிழார் தியானித்து வணங்கிவிட்டுச் சைவ சாதனங்

களாகிய திருநீற்றையும் உருத்திராட்ச மாலையையும் அணிந்து கொண்டார்.

சிதம்பரம் திருக்கோயிலில் விளங்கும் ஆயிரக் கால் மண்டபத்துக்குச் சேக்கிழார் எழுந்தருளி வந்து நடராஜப் பெருமானுடைய திருவருளையும் திருவடிகளையும் தியானித்துவிட்டு அமர்ந்துகொண்டு பெரிய புராணத்தைப் பாடத் தொடங்கினார். அசரீரி வாக்காகக் கேட்ட, ''உலகெலாம்'' என்பதை முதலில் வைத்து அந்தத் தொண்டர் புராணத்தைப் பாடியருளலானார்.

அந்தணர்களாகிய நாயன்மார்களின் புராணங்கள் பதின்மூன்று, சிவாசாரியர்களாகிய ஆதிசைவர்களின் புராணங்கள் இரண்டு, அமைச்சராகிய நாயன்மார்களின் புராணம் ஒன்று, முடிமன்னர்களாகிய திருத்தொண்டர்களின் புராணங்கள் ஆறு, சிற்றரசர்களாகிய நாயன்மார்களின் புராணங்கள் ஐந்து, வணிகர்களாகிய தொண்டர்களின் புராணங்கள் ஐந்து, உழுதுண்போர் உழுவித்துண்போர் என்னும் இரண்டு வகை வேளாளர்களாகிய நாயன்மார்களின் புராணங்கள் பதின்மூன்று, இடைக்குலத்தில் உதித்த நாயன்மார்களுடைய புராணங்கள் இரண்டு, சாலியர், குலாலர், எண்ணெய் வாணிகர், மீனவர், சான்றார், ஆடை வெளுப்பவர், வில்வீரர், இழிந்த குலத்தவர், பாணர் ஆகிய குலங்களில் தோன்றியவர்களின் புராணம் ஒவ்வொன்று ஆகிய இவற்றைப் பெரியபுராணத்தில் வைத்துப் பாடலானார்.

வரையறையாக இன்ன குலத்தில் தோன்றியவர் என்று தெரியாத நாயன்மார்களின் புராணங்கள் பதின்மூன்று, தொண்டர்களுடைய திருக்கூட்டத்தில் உள்ளவர்களில் அவர்கள் பிறந்த ஊர்கள் இன்னவென்று தெரிந்து கொண்ட நாயன்மார்களின் புராணங்கள் இரண்டு, பிறந்த குலம் தெரிந்த நாயன்மார்களின் புராணங்கள் இரண்டு, பெயர் தெரிந்த நாயனார் புராணம் ஒன்று,

பிறந்த குலம் இன்னதென்று அறிந்து கொள்ள முடியாத நாயன்மார்களினுடைய புராணங்கள் ஏழு, பிறந்த ஊர்கள் தெரியாத நாயன்மார்களின் புராணங்கள் ஏழு, பெயர் தெரியாத நாயன்மார்களின் புராணங்கள் எட்டு, இறுதியில் இத்தனை பேர்கள் என்று தொகை தெரிந்த திருக்கூட்டத்தின் புராணம் ஒன்று, கணக்கு இத்தனை என்று தெரியாத திருக்கூட்டத்தின் புராணங்கள் எட்டு என்று புராணங்களை வைத்துச் சேக்கிழார் பாடலானார். தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்கள், குங்கிலயக் கலய நாயனார், முருக நாயனார், உருத்திர பசுபதி நாயனார், சிறப்புலி நாயனார், கணநாத நாயனார், சண்டேச நாயனார், சோமாசி மாற நாயனார், நமிநந்தியடிகள் நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், அப்பூதியடிகள் நாயனார், நீல நக்க நாயனார் ஆகிய நடராஜப் பெருமானுடைய திருவருட் செல்வத்தைப் பெற்ற அந்தணர்களினுடைய புராணங்கள் பதின்மூன்று, சிவாசாரியர்களாகிய நாயன்மார்களின் புராணங்கள் இரண்டு, புகழ்த்துணை நாயனார், முப்போதும் திருமேனி தீண்டுவார் நாயனார், சிவபெருமானை அருச்சிப்பவர்களாகிய நாயன்மார்கள், அமைச்சர் மரபில் தோன்றிய சிறுத்தொண்ட நாயனாராகிய ஒருவர், முடிசூடும் மன்னர்களாகிய ஆறு நாயன்மார்கள் என்பவர்களுடைய புராணங்களைப் பாடலானார். அந்த முடிமன்னர்கள் யாவரெனின், கோச்செங்கட் சோழ நாயனார், புகழ்ச்சோழ நாயனார், பாண்டியமன்னனுடைய பட்டமகிஷியாராகிய மங்கையர்க்கரசியார், இடங்கழி நாயனார், நின்ற சீர் நெடுமாற நாயனார், சேர மன்னர், சிற்றரசர்களாகிய நரசிங்கமுனையரையர், கூற்றுவ நாயனார், கழற்சிங்க நாயனார், மெய்ப்பொருள் நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் ஆகிய இந்த நாயன்மார்களுடைய புராணங்களையும் பாடலானார். வணிகர் குலத்தில் தோன்றிய ஐந்து நாயன்மார்களாகிய காரைக்

காலம்மையார், மூர்த்தி நாயனார், கலிக்கம்ப நாயனார், அமர்நீதி நாயனார், இயற்பகை நாயனார் என்பவர்களுடைய புராணங்களையும், வேளாளர்களாகிய பதின்மூன்று பேர்களுடைய புராணங்களையும் பாடலானார். அவர்கள் மூர்க்க நாயனார், செருத்துணை நாயனார், வாயிலார் நாயனார், கோட்புலிநாயனார், சத்தி நாயனார், அரிவாட்டாய நாயனார், இளையான்குடி மாற நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சாக்கிய நாயனார், மானக்கஞ்சாற நாயனார், விறன்மிண்ட நாயனார், முனையடுவார் நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்பவர்கள். ஆயர் மரபில் தோன்றிய இரண்டு நாயன்மார்களாகிய திருமூல நாயனார், ஆனாய நாயனார் என்பவர்களுடையபுராணங்களும் பெரிய புராணத்தில் அமைந்தன. குலாலராகிய திருநீலகண்ட நாயனார், பாணர் குலத்தில் தோன்றிய திருநீலகண்டத்துயாழ்ப்பெரும்பாணநாயனார், மீனவராகிய அதிபத்த நாயனார், வேடராகிய கண்ணப்ப நாயனார், சான்றாராகிய ஏனாதி நாத நாயனார், சாலியராகிய நேச நாயனார், இழிகுலத்தில் உதித்தவராகிய திருநாளைப்போவார் நாயனார், துணி வெளுக்கும் குலத்தில் தோன்றிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார், எண்ணெய் வணிகர் குலத்தில் உதித்த கலிய நாயனார், இன்ன குலம் என்று தெரியாத நாயன்மார்கள்பதின்மூன்று பேர்கள், குலச்சிறை நாயனார், தண்டியடிகள் நாயனார், கணம்புல்ல நாயனார், எறிபத்த நாயனார், காரி நாயனார், பெருமிழலைக் குறும்ப நாயனார், பத்தராய்ப் பணிவார்கள், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார். திருவாரூர்ப் பிறந்தார், பொய்யடிமையில்லாத புலவர், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச்சார்ந்தார் என்ற இவர்களுக்குள் செந்தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் சில பேர்கள். கன்னட மொழி பேசுகிறவர்கள் சிலர்,தெலுங்கு மொழியைப் பேசுகிறவர்கள் சிலர், மலையாள மொழி பேசுகிறவர்கள் சிலர், வேறு நாடுகளில் வாழ்ந்து தவம் புரிந்து சிவலோகப்பிராப்தி

அடைந்தவர்கள் சிலர், இக்காலத்திலும் வாழ்ந்து சிவபெரு மானை வழிபடுபவர்கள் சிலபேர்கள், இனிமேலும் பிறந்து சிவபெருமானை வழிபடப் போகிறவர்கள் சில பேர்கள் ஆகிய யாவரையும்பற்றிச் சேக்கிழார் பாடியருளினார். திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருமூல நாயனார், நின்ற சீர் நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார், திருநீல கண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனார், குறும்ப நாயனார், கணநாத நாயனார், அப்பூதியடிகள் நாயனார், சோமாசி மாற நாயனார் ஆகிய இந்தப் பதினொரு பேர் களும் குருவினுடைய் திருவருளால் முக்தியை அடைந்தவர் கள். எறிபத்த நர்யனார், குங்கிலியக்கலய நாயனார், முருக நாயனார், கண்ணப்ப நாயனார், ஆனாய நாயனார், அரி வாட்டாய நாயனார், மூர்த்தி நாயனார், சண்டேச நாயனார், திருநாளைப்போவார் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், சாக்கிய நாயனார், கூற்றுவர் நாயனார், தண்டியடிகள் நாயனார், சிறப்புலி நாயனார், உருத்திர பசுபதி நாயனார், கலிக்காம நாயனார், கலிய நாயனார், காரி நாயனார், அதிபத்த நாயனார், நீலநக்க நாயனார், பூசலார் நாயனார், கணம்புல்ல நாயனார், கோட்புலி நாயனார், நமிநந்தியடிகள் நாயனார், கழற் சிங்க நாயனார், வாயிலார் நாயனார், செறுத்துணை நாயனார், புகழ்த்துணை நாயனார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார், ஆகிய முப்பது நாயன்மார்கள் சிவலிங்கத்தைப் பூசை புரிந்து முக்தியைப் பெற்றவர்கள்.

திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார், மூர்க்க நாயனார், சிறுத்தொண்ட நாயனார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், விறன்மிண்ட நாயனார், இடங்கழி நாயனார், முனையடுவார் நாயனார், சத்தி நாயனார், அமர்நீதி நாயனார், மெய்ப்பொருள் நாயனார், ஏனாதிநாத நாயனார், புகழ்ச்சோழ நாயனார், மானக்

கஞ்சாற நாயனார், இளையான்குடி மாற நாயனார், காரைக்கால் அம்மையார், கழற்சிங்க நாயனார், கலிக்கம்ப நாயனார், நேச நாயனார் ஆகிய பத்தொன்பது சிவனடியார்களுக் உருத்திராக்கம் தரித்த சிவ்பக்தர்களை வழிபட்டுச் சிவகதியை அடைந்தவர்கள்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார்,காரைக்கால் அம்மையார் ஆகிய மூவரும் இசையில் வன்மை படைத்தவர்கள். திருநாளைப்போவார் நாயனார், ஆனாய நாயனார், திருநீலகண்டத்து யாழ்ப் பெரும்பாண நாயனார், பரமனையே பாடுவார் ஆகிய நான்கு நாயன்மார்களும் இசைத்தமிழ்நூலில் வன்மை பெற்றவர்கள். ஐயடிகள் காடவர்கோன் நாயனார், திருமூல நாயனார், காரி நாயனார், பொய்யடிமை இல்லாத புலவர், சேரமான் பெருமாள் நாயனார் ஆகிய ஐந்து நாயன்மார்களும் இயற்றமிழில் தேர்ச்சியைப் பெற்றவர்கள், எஞ்சி நின்ற நாயன்மார்கள் தவத்தைச் செய்து சிவகதியைப் பெற்றவர்கள்.

இல்லற வாழ்க்கையை நடத்தியவர்கள் திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார் முதலியவர்கள். மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய இரண்டு நாயன்மார்களும் துறவறத்தை மேற்கொண்டவர்கள். நைஷ்டிகப் பிரமசாரியாக வாழ்ந்தவர் சண்டேச நாயனார். சிவனடியார்களோடு சேர்ந்து சிவகதியைப் பெற்றவர்கள் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரோடு திருநல்லூர்ப்பெருமணத்தில் அந்த நாயனாருடைய திருமணம் நடந்தபோது சோதியில் கலந்தவர்கள் பல பேர்கள். சேரமான் பெருமாள் நாயனார் குதிரைமேல் ஏறிக் கயிலாயம் சென்றபொழுது அவரோடு சேர்ந்து கயிலாயம் போனவர்கள் கணக்கு இல்லாதவர்கள். சிவபெருமானுடை அடியவர்களிடம் பகைமையை உடையவர்களாக இருந்து முக்தியைப் பெற்றவர்கள் சண்டேச

நாயனாருடைய தந்தையாராகிய யக்ஞதத்தர், புகழைப் பெற்றவராகிய கோட்புலிநாயனார்கூறிய திருவிரையாக்கலி என்னும் ஆணையை மீறி நடந்த சுற்றத்தினரைப் பகைத்துக்கொண்டு நரகத்தை அடைந்தவர்கள், தவத்தைப் புரிந்வராகிய மூர்த்தி நாயனார் சிவ பெருமானுக்கு அணியும் சந்தனக் காப்பைத் தடுத்து விலக்கிச் சமணசமயச்சார்பை உடையவனாய் நாட்டை ஆட்சிபுரிந்த கருநட தேயத்தின் அரசன் முதலிய பலருடைய புராண வரலாறுகளை வகைவகையாகப் பிரித்துக் கூறும் செயல் எளிது அன்றோ?

சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளிய காலத்தில் அவருடைய திருவடித் தொண்டைப் புரிந்த தொண்டர்கள் சில பேர்கள். அந்த நாயனாருக்கு முன்னாலேயே உண்மையான தொண்டுகளைப் புரிந்தவர்கள் சிலர். அந்த நாயனாருக்குப் பிற்பட்ட காலத்தில் தொண்டு செய்தவர்கள் சில அடியவர்கள். திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தில் சேர்த்துச் சேக்கிழார் நாயனார் கூறிய சேவை புரிந்த தொண்டர்கள் அளவு கடந்தவர்கள். சிவ பெருமானுக்கு அத்தகைய தொண்டர்கள் செய்த தொண்டு நிலைமையைக் கரைகண்டு கூறுதல் எளிய செயல் அல்லவே!

ஓர் உலகமோ? ஒரு திசையோ? ஓர் ஊரோ? ஒரு குலமோ? ஒரு திருநாமமோ? ஒரு காலமோ? உலகத்தில் ஒரே வழியைக் கூறும் கதையோ? பல வழிகளைக் கூறும் பெரிய வரலாறோ? பேர் ஒன்று தானோ? இவை அல்லவே, இத்தகைய பெரிய புராணத்தை உலகத்தில் வாழும் மக்கள் தெரிந்துகொண்டு, சொல்லுவதற்கு அரியவனான நடராஜப்பெருமான்" உலகெலாம்" என்று அடி எடுத்து வழங்கியருள அந்தத் தொடரை முதலில் வைத்துக் கலைமகள் இனிய சொற்களைக் கையில் எடுத்து வழங்கத் தொண்டர் சீர் பரவ வல்லவராகிய சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடியருளி நிறைவேற்றினார்.

கரிய நிறத்தை உடைய நீர் நிரம்பிய சமுத்திரத்தைக் கைகளை அடித்து நீந்திக் கரை சேர்தல் எளிது, கடற்கரையில் உள்ள நுட்பமான மணல்களை எண்ணி அளவைச் சொல்லி விடலாம். பெரிய கடலில்வீசும் அலைகளை ஒன்று,இரண்டு, மூன்று என்று எண்ணி எழுதிக்கொண்டு பிறகு எல்லா வற்றையும் கூட்டிக் கணக்கைச் சொல்லிவிடுதலும் கூடும். அந்தச் சமுத்திரத்தில் வாழும் மீன்களையும் கணக்கிட்டுச் சொல்ல முடியும், ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களை எண்ணிப் பார்த்து அவற்றின் தொகையைச் சொல்லி விடலாம், சிவபெருமானுடைய திருவடிகளைத் தங்களுடைய தலைகளின்மேல் வைத்துக் கும்பிட்டு வணங்கும் தொண்டர்களின் புராணமாகிய பெரிய புராணத்தை அளவு தெரிந்து கூறுதல் சேக்கிழாருக்கு அல்லாமல் தேவர்களுக்கும் முடியாத செயல்.

தனியான நாயன்மார்கள் அறுபது பேர்கள்;தொகையடியார்கள் ஒன்பது பேர்கள். அவ்வாறு அறுபத்தொன்பது நாயன்மார்களுடைய வரலாறுகளைத் திருநாவலூரில் ஆதிசைவர்களின் மரபில் பிறந்த சடையனாருக்கு அவருடைய பத்தினியாராகிய இசைஞானியாருடைய திருவயிற்றிலிருந்து திருவவதாரம் செய்தருளிய ஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனார் முன் காலத்தில் பாடியருளிய திருத்தொண்டத் தொகையின்படியும், திருநாரையூரில் திருவவதாரம் செய்தருளிய நம்பியாண்டார் நம்பி பாடியருளிய திருத்தொண்டர் திருஅந்தாதியின்படியும் பெரிய புராணத்தை இரண்டு காண்டங்களாகப் பிரித்து நாயன்மார்களுடைய வரலாறுகளின் விரிவைத் தொகுத்துச் சருக்கங்கள் பதின்மூன்றாக அமைத்துக் கொண்டு திருத்தொண்டர் புராணம் என்று பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்திற்குப் பெயர் சூட்டித் திருவிருத்தங்கள் நாலாயிரத்து இருநூற்றைம் பத்து மூன்றாக அமைத்து அந்தச் செய்யுட்கள் எல்லாவற்

றையும் ஓலைச் சுவடிகளில் வரைந்து மைக்காப்பைச் சாத்தி அழகு அமையும் வண்ணம் ஒரு பையையும் பெற்று அதில் சுவடிகளைச் சேக்கிழார் வைத்துக் கொண்டார்

பிறகு, "சேக்கிழார் நாயனார் தொண்டர் புராணத்தைப் பாடும்பொருட்டு எம்மை விட்டுப் போன பிறகு யார் யார் அவருக்குப் பக்கத்தில் இருந்த மக்கள்? புராணம் எவ்வளவு தூரம் வரையில் பாடி முடிந்திருக் கிறது? எஞ்சியிருப்பது எத்தனை? இவற்றைத் தெரிந்து கொண்டு வாருங்கள்" என்று சோழ மன்னன் தூதர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினான்; அந்தத் தூதர்களுக்குத் தெரியாதவாறு ஒற்றர்களையும் செல்ல விடுத்தான்.

அவ்வாறு சோழ மன்னன் அனுப்பிய வலிமையைப் பெற்ற தூதர்கள் சிலர்திருத்தொண்டர் புராணமாகிய நூல் பாதியளவு பாடி முடிந்திருக்கிறது என்று மன்னனி டம் ஓடிச் சென்று அறிவித்தார்கள். வேறு சில தூதர்கள் மகிழ்ச்சியை அடைந்து சோழ மன்னனிடம் போய்,' "இன்றைக்கோ நாளைத் தினமோ புராணம் பாடி நிறை வேறும்" என்று கூறினார்கள். அதைக் கேட்டுச் சோழ மன்னன் வணங்கினான். வேறு சிலர், "இந்த நல்ல புராணம் பாடி முடிந்து விட்டது" என்று சோழ மன்ன னுக்கு உறுதியாகக் கூறினார்கள்.

செய்தியைத் தன்னிடம் வந்து கூறியவர்கள் எல்லோருக்கும் சோழமன்னன் நவரத்தினங்களையும், மெல்லிய ஆடைகளையும், தங்கக் காசுகளையும் அள்ளி அள்ளி மகிழ்ச்சியை அடைந்து வாரி வாரி வீசி வழங் கினான். சிவந்த தங்கத்தால் வேயப்பெற்ற திருச்சிற்றம் பலத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜப்பெருமானுடைய திருநடனத்தையும் வணங்கினான். "அந்த நடராஜப்பெரு மான் "உலகெலாம்"என்று முதல்தொடரைஎடுத்து வழங்க

அதைத் தம்முடைய திருவுள்ளத்தில் பதித்துக்கொண்டு மகிழ்ந்த சேக்கிழார் இயற்றிய புராணத்தையும் அந்தச் சேக்கிழாரையும் நான் வணங்குவேன்'' என்று கூறிச் சோழமன்னன் புறப்பட்டான்.

ஒவ்வொரு வீதியிலும் அரசன் புறப்பட்டு வருகிறான் என்று வெற்றி முரசை அடித்து வள்ளுவர்கள் அறிவித்தார்கள். தில்லைவாழ் அந்தணர்கள் கணக்குப் பார்த்து வரையறுத்துக் கூறிய நட்சத்திரமும், முகூர்த்தமும் நன்றாக ஆராய்ந்து மலையைப் போன்றதும் மூன்று மதங்கள் ஒழுகுவதுமாகிய ஆண் யானை, குதிரை, தேர், காலாட்கள் என்ற சதுரங்க சேனை தன்னுடன் வர, முழங்குகின்ற பட்டத்து யானையின்மேல் ஏறிக்கொண்டு சோழ மன்னன் சென்றான்.

தேர் ஓடும்போது முழங்கும் ஒலி, மழையைப் போல் மதங்களை வழியவிடும் ஆண் யானை பிளிறும் முழக்கம், குதிரை ஓடும் சத்தம், காலாட்கள் வந்து சேர்ந்து முழங்கும் ஆரவாரம், ஆயுதங்கள் ஒன்றோடு ஒன்று மோதும் ஒலி ஆகிய இந்தச் சத்தங்கள் ஏழு மேகங்கள் முழங்கும் முழக்கத்தைப் போலவும், பதினாறு சமுத்திரங்கள் முழங்கும் முழக்கத்தைப் போலவும் எழுந்தன.

சோழ மன்னனுடைய வரவைத் தெரிந்துகொண்டு தில்லைவாழ் அந்தணர்களும், மடாதிபதிகளும், பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றிகளைப் பெற்ற பெண்மணிகளும், மற்றும் உள்ள சான்றோர்களும் போற்றும்வண்ணம் பிறர்பாடிய நூல்களில் உள்ள சொற்களையும் பொருள்களையும் திருடித் தம்முடைய நூலில் பயன் படுத்தாமல் தாமே சிந்தித்துச் சொற்களைத் தேர்ந்தெடுத்து வைத்துத் தொண்டர் புராணமாகிய நாயனார்களுடைய வரலாறுகளைப் பாடியருளிய கங்காகுல திலகரும் முல்லை மாலையை அணிந்த சோழ மன்னனை எதிர் கொண்டு வரவேற்று

இனிமையான சுவையைப் பெற்ற ஆசீர்வாத வார்த்தைகள் பலவற்றைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

மொட்டையடித்த திருமுடியும், திரிபுண்டரமாக நெற்றியில் அணிந்த விபூதியும், போர்வையும், இரண்டு காதுகளிலும் குண்டலங்களும், தொங்கியாடிய குழைகளும், கழுத்தில் உருத்திராக்க மாலையும், கைகளில் உருத்திராக்க மாலையும், தலையில் உருத்திராக்கமாலையும் அழகு பெற விளங்கித் தோன்ற, தொண்டர் சீர் பரவுவாராகிய சேக்கிழார் அமர்ந்திருந்த கோலத்தைச் சோழ மன்னன் தன் எதிரில் பார்த்தான்.

அவ்வாறு பார்த்தபோது தன்னுடைய உள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து தன்னை அறியாமலேயே தன்னுடைய கைகள் தன் தலையின்மேல் ஏறக் கும்பிட்டு, 'இந்தப் பெரியவராகிய சேக்கிழார் கொண்ட வேடமாகிய இது சிவபெருமானுடைய அடியவரின் வேடம், ஒரு குறையும் இல்லாத தவசியின் கோலம்'' என்று எண்ணித் தேவர்களின் தலைவராகிய நடராஜப்பெருமானுடைய திருவருளைத் தியானித்து அந்தப் பெருமான் சேக்கிழாரை அடிமையாகக் கொண்ட பெருமையையும் சோழமன்னன் எண்ணி அவருடைய பாதக்குறடுகளை வணங்கினான்.

அவ்வாறு வணங்கிவிட்டுத் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருக்கும் நடராஜப் பெருமானுடைய திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை வணங்குவதற்கு நினைத்து வரன்முறைப்படி தருமத்திற் சிறப்பை அடைந்த சேக்கிழாரும், மூவாயிரம் தில்லைவாழ் அந்தணர்களும், துறவறத்திற் சிறந்து விளங்கும் மடாதிபதிகளும் தன்னைப் பின்பற்றி வரச் சோழமன்னன் வந்து திருமாலுக்கும் பிரம தேவனுக்கும் பன்றியுரு எடுத்தும், அன்னப்பறவையின் வடிவத்தை எடுத்தும் திருவடிகளையும் திருமுடியையும் தேடிப்பார்த்தும் காண முடியாத

பரம்பொருள் யாவரும் தரிசிக்கும் வண்ணம் கனகசபையில் நடராஜப் பெருமானாக நின்ற கோலத்தைத் தரிசித்தான்.

அவ்வாறு தரிசித்த கண்கள் மலையிலிருந்து குதிக்கும் அருவியைப் போல நீர்த்துளிகளைத் தாரை தாரையாகச் சொரிய, இரண்டு கைகளும் தலையின் மேற் குவிந்து அஞ்சலி செய்ய, உள்ளம் நெகிழ்ந்து திருமேனி முழுவதும் மயிர்க்கூச்சு எழ, ஆனந்த சாகரம் கரைபுரண்டு அலைகளை வீச, திருவாயி லிருந்து வெளிப்பட்ட தூய வார்த்தைகள் குழற, பக்தியோடு விம்மி விம்மி அழுது நடராஜப் பெருமானுடைய திருவருள் மேம்படச் சேக்கிழாருக்கு முன்னால் தண்டாகாரமாகத் தரையில் விழுந்து வணங்கிவிட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்றுகொண்டு சோழ மன்னன் சேக்கிழாரை வாழ்த்தினான்.

அப்போது நடராஜப் பெருமான், "சேக்கிழான் நம்முடைய தொண்டர்களின் கீர்த்தியைப் புகழ்ந்து பாட நாம் மகிழ்ச்சியை அடைந்து உலகம் என்று நம்முடைய வாக்காகிய அசரீரி வாக்கினால் அடியெடுத்துக் கூற அவன் பெரிய புராணமாகிய காப்பியத்தைப் பாடி நின்றவேற்றிவிட்டான். வேலாயுதத்தை ஏந்தி நாட்டைப் பாதுகாக்கும் சோழமன்னனே, நீ இந்தப் புராணத்தை விரைவில் கேட்பாயாக" என்று பொன்னம்பல ஆகாசத்தில் ஊக்கத்தை உண்டாக்கும் அழகிய அசரீரி வாக்கும் நடராஜப் பெருமான் திருவடிகளில் அணிந்த சிலம்புகளின் ஒலியும் எழுந்தன.

திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய வார்த்தை களும் சிலம்புகளின் ஒலியும் திருச்சிற்றம்பலத்துக்கு அருகில் நின்று கொண்டிருந்த மனிதர்களின் காதுகளில் நுழைந்து நிரம்பியது; அல்லாமலும் உலகத்தில் உள்ள

சரங்களாகிய மக்கள், விலங்குகள், பறவைகள் முதலியவையும், அசரங்களாகிய மரங்கள், செடிகள், கொடிகள், மலைகள் ஆகியவையும் நெகிழ்ந்து உருக்கத்தை அடைந்து முழங்க, மலைகளைப் போல விளங்கும் திரண்ட தோள்களைப் பெற்ற சோழமாமன்னன் குதூகலத்தை அடைந்து உள்ளத்தில் ஆனந்தத்தை அடைந்தான்.

'சிவபெருமானுடைய தொண்டர்கள் தொண்டுகள் செய்ததை எடுத்து உரைக்கும் திருத்தொண்டர் புராணத்தில் உள்ள நாயன்மார்களின் வரலாறுகளைப் பிறைச்சந்திரனைத் தம்முடைய திருமுடியில் அணிந்த தலைவராகிய நடராஜப் பெருமானார் வழங்கிய திருவருளால் சாத்திரங்கள் விதித்த நீதிநெறியின் வண்ணம் நடக்கும் சேக்கிழாராகிய முனிவர் விரிவாகப் பாடியருளியுள்ளார். அந்த வரலாறுகளைக் கேட்பதற்காக நடராஜப் பெருமானுடைய அடியவர்கள் எல்லோரும் வேகமாக வருவீர்களாக என்று முரசறையச் செய்து சோழமன்னன் ஓலைகளை எடுத்துப் பெரிய புராணத்தை அவற்றில் வரைந்து ஆட்களையும் திருமுக ஓலையையும் அனுப்பினான்.

சட்டைகளை அணிந்த மக்களும், தம்முடைய வசமிழந்து சிவபெருமானைத் தியானிக்கும் உள்ளங்களும், பக்தி நீங்காத மேம்பாட்டையுடைய தவம் செய்யும் வாழ்க்கைக்கு உரிய வேலைகளும் உருத்திராச்ச மாலை திருநீறு பஞ்சாட்சரம் ஓதல் ஆகிய சைவசமயத்தின் சாதனங்களும் அமைந்த சைவ சமயத்தினர்களும் வந்து கூட்டமாகக் கூடினார்கள்.

மறையவர்கள் இருக்குவேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களையும் ஓதும் இனிய கானமும், வேதங்களைச் செந்தமிழ் மொழியினால் பாடியருளியவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி

நாயனார் என்னும் மூன்று நாயன்மார்களும் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களின் இனிய ஒலியும் விபூதியைப் பூசிக்கொண்டு ஹர ஹர என்று பக்தர்கள் புகழ்ந்து கூறும் பெரிய முழக்கமும், மேகத்தின் முழக்கத்தைப் போல முழங்கி எங்கும் பரவின.

தங்களுடைய ஆத்மார்த்த மூர்த்திகளைப் பூசிப்பவர்களாகிய சில பேர்களும், அவ்வாறு பூஜையைப் புரிந்துவிட்டுத் தூயனவாகிய நடராஜப் பெருமானுடைய திருவடிகளை விரும்புகிறவர்கள் சிலரும், "இனிமேல் பிறவாத வரத்தை அருள் செய்வாயாக, மலம் அற்றவனே!" என்று வேண்டுகிறவர்கள் சிலரும், திருமுறைகளை ஏட்டுச் சுவடிகளில் வரைந்து மகிழ்ச்சியை மிகுதியாக அடைந்து பெரிய புராணத்தைப் படிப்பவர்கள் சில பேர்களுமாக இருந்து மகிழ்ச்சியை அடைந்தார்கள். தெளிவான அலைகளை வீசும் சமுத்திரத்தின்மேல் மிதந்த அழகிய தோணியில் வீற்றிருக்கும் வள்ளலாகிய தோணியப்பரிடம் பக்தியைக் கொண்டவர்களும் சீகாழியில்வாழ்பவர்களும் ஆகிய பக்தர்களும், மடாலயம் ஒவ்வொன்றிலும் சிறுவர்களும் மெல்ல அமர்ந்து படிக்கின்ற பெரியபுராணத்தில் உள்ள விருத்தங்களைக் கிளிகள் கேட்டுத் தாங்களும் அவற்றைப் பாடிக் கூறுவனவாக இருந்தன. அவற்றை நாகணவாய்ப் புட்கள் கேட்டு மகிழ்ந்தன.

அதைப் பார்த்து மகிழ்ச்சியை அடைந்த நல்ல உள்ளங்களோடும் தன்னைச் சுற்றியிருக்கும் அமைச்சர்களோடு படைத்தலைவர்களும் சூழ்ந்து வர விரைவாகச் சேக்கிழார் பெரிய புராணத்தை அரங்கேற்றும் இடத்திற்கு அரசன் வந்து கூட்டமாகக் கூடித் தமிழ்நாடு சிறந்த செல்வத்தை அடைந்தது என ஒப்பற்ற உவகையினால் ஒரு சுற்றுத் தன்னுடைய உடம்பு பெருத்து விட்டான்.

தும்புருவும் நாரத முனிவரும் இசைப்பாடல்களைப் பாடினார்கள்; தேவ லோகத்தில் வாழும் தெய்வப் பெண்

கள் நீண்ட இசைப்பாடல்களைப் பாடிக்கொண்டே கூத்தாடினார்கள்; இந்தப் பூமண்டலத்தில் வாழும் பெண்மணிகள் அஞ்சலிகளைத் தங்களுடைய தலைகளின்மேல் தங்கள் கைகளை வைத்துப் புரிந்தார்கள்;பக்தர்கள் நடராஜப்பெருமான் புரிந்தருளும் ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசித்தார்கள். சங்கவாத்தியத்தோடு பேரிகை முழங்கும் கானம். வீணையின் நாதம், ஒப்பற்றகைத்தாளத்தைத் தட்டும்ஓசை, புல்லாங் குழலை வாசிக்கும் இனிய ஒலி, எக்காளத்தின் முழக்கம், இடக்கை என்னும் இசைக் கருவியின் நாதம், மாணிக்கத்தைப் பதித்த காகளத்தின் கானம், பம்பையைக் கொட்டும் ஓசை, வலம்புரிச் சங்கை ஊதும் துழனி, மணியை அடிக்கும் ஓசை முதலிய மங்கல வாத்தியங்களின் ஒலி எல்லா இடங்களிலும் முழங்கின. அதனால் ஒரு புதிய அழகு உண்டாயிற்று,

மறையவர்கள் புரியும் யாகத் தீயில் எழும் நீண்ட புகை, ஆலயங்கள் உள்ள இடங்கள் எல்லாவற்றிலும் குங்குலியத்தைப் புகைக்கும் புகை, நெடுங்காலமாக உள்ள கரும்புச் சாற்றைச் காய்ச்சும் ஆலைகளில் எழும் ஒளியோடு கூடிய புகை, தோரணங்களைக் கட்டியிருக்கும் ஒவ்வொரு தெருவிலும் அழகையுடைய பெண்மணிகள் தங்களுடைய கூந்தல்களை உலர்த்துவதற்காகப் புகைக்கும் அகிற்கட்டைகளின் புகை ஆகியவை எல்லா இடங்களிலும் அழகு உண்டாகும் வண்ணம் பரவின.

பெண்மணிகள் நடனமாடும் சாலை, நடிப்பவர்கள் நாடகம் நடிக்கும் சாலை, முத்துக்களைத் தொங்கவிட்ட ஆஸ்தான மண்டபம், மேடையை உடைய நாடக அரங்கம், அழுக்கு இல்லாத வெட்ட வெளியில் உள்ள கூடம், மாடம், மதில், மாளிகை, மேல்மாடி ஆகிய இடங்கள் எங்கும் இதழ்கள் மலர்ந்த மலர்களைக் கட்டிய மாலைகளையும், பொன்னரி மாலைகளையும் சிதம்பரத்தில் வாழும் தொண்டர்கள் தொங்க விட்டார்கள்.

குப்பை கூளம் புழுதி முதலியவை போகும் வண்ணம் மக்கள் துடைப்பங்களைக் கொண்டு பெருக்கித் தள்ளினார் கள்; குழைவு உண்டாகும் வண்ணம் கோமயத்தைக் கரைத்த நீரைத் தெளித்துத் தரையைப் பெண்கள் குளிர்ச்சியை அடையுமாறு செய்தார்கள். தழைகளும் மலர் களும் கட்டின தோரணங்களையும், துவசங்களையும், மெல்லிய ஆடைகளையும் அமைய வைத்து அழகு உண்டாகுமாறு திருவீதிகளைப் புதிய தெருக்களைப் போல் விளங்கும் வண்ணம் செய்தார்கள்.

திருநெறித்தமிழாகிய தேவாரத் திருப்பதிகங்களை ஓதும் வன்மையைப்பெற்ற ஓதுவார்கள், சைவ ஆகமங் களைக் கற்றுத் தேர்ச்சி பெற்ற சிவாசாரியார்கள், பல ஞான சாத்திரங்களைக் கற்ற ஞானிகள், நான்கு வேதங் களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேத விற்பன்னர்கள், குருவாக இருப்பதற்குரிய தகுதியைப் பெற்ற ஆசாரியர்கள், இலக்கணங்களையும் இலக்கியங் களையும் கற்றுத் தேர்ச்சி பெற்ற புலவர்கள், பல பெருங்காப்பியங்களை விரித்துப் பொருள் உரைக்க வல்ல சொற்பொழிவாளர்கள் ஆகியவர்களும் கூடினார்கள்.

நடராஜப்பெருமான் திருநடனம் புரிந்தருளும் திருச் சிற்றம்பலத்தின் முற்றத்தை வேதியர்கள் கோமயத்தைக் கரைத்த நீரால் மெழுகிவிட்டுச் சுண்ணாம்பைத் தரையில் தடவித் தரையின்மேல் ஆறு கால்களைப் பெற்ற ஒரு பீடத்தை வைத்து, அதன்மேல் பச்சை நிறத்தை உடைய பட்டைவிரித்து, அதற்குமேல் ஒரு வெள்ளையான துணியை மடித்து வைத்து, தேனையுடைய மலர்களை அந்தப் பீடத் தின்மேல் தூவி, நறுமணம் கமழும் தூபத்தைக் காட்டி, ஆசனத்தை அமைத்து, தெளிவான செந்தமிழ் மொழி யினால் சேக்கிழார் இயற்றிய தொண்டர் புராணமாகிய பன்னிரண்டாம் திருமுறையை அந்த ஆசனத்தின்மேல் வைத்து, அந்தக் காப்பியத்தை வணங்கி வாழ்த்தினார்கள்.

''திருத்தொண்டர் புராணத்தைத் தேவரீரே படித்துப் பாடல்களினுடைய அர்த்தத்தைத் திருவாய்மலர்ந்தருளிச் செய்வீர்களாக'' என்று சோழ மன்னன் முதலிய சிவ பெருமானுடைய அடியவர்கள் யாவரும் வேண்டிக்கொள்ள, அதைக் கேட்டுக் குன்றத்தூரில் திருவவதாரம் செய்தருளிய முனிவராகிய சேக்கிழார் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமான், ''உலகெலாம்'' என்று தொடக்கத்தை எடுத்து வழங்கியருளத் தாம் பாடியருளிய சைவசமயத்தவர்களாகிய நாயன்மார்களின் வரலாறுகளை விரிவாக எடுத்துத் திருவாய் மலர்ந்தருளிச் செய்யச் சுற்றியிருந்த அம்பலவாணருடைய அடியவர்கள் எல்லோரும் வேதங்களில் உள்ள வார்த்தைகள் அடங்கியது இந்தப் புராணம் என்று எண்ணித் தங்களுடைய கைகளைக் கூப்பிக் கும்பிட்டுச் சேக்கிழார் எடுத்துக் கூறும் பொருளைக் கேட்டார்கள்.

''தம்முடைய திருவடிகளில் அணிந்த அழகிய சிலம்புகள் ஒலிக்கத் திருநடனம் புரிந்தருளும் இயல்பைப்பெற்ற நடராஜப் பெருமானுக்குப் பொருத்தமான நாம நட்சத்திரமும், ஆளுடையபிள்ளையாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய நட்சத்திரமும், அந்த நாயனார் அழுது சீகாழியில் பிரமபுரீசர் ஆலயத்தில் உள்ள கட்டுமலையில் ஒரு தோணியில் தோணியப்பரோடு அமர்ந்திருக்கும் பெரிய நாயகியார் தம்முடைய கொங்கைகளிலிருந்து கறந்த பாலை ஒரு பொற்கிண்ணத்தில் வைத்துச் சிவ ஞானத்தைக் குழைத்து வழங்க அதைக் குடித்தருளிய நட்சத்திரமும் ஆகிய திருவாதிரை நட்சத்திரம் சித்திரை மாதத்தில் வரும் நாளில் பெரிய புராணத்தில் உள்ள பாடல்களின் பொருளை எடுத்துக் கூற ஆரம்பித்து அடுத்த ஆண்டில் சித்திரை மாதத்தில் திருவாதிரை நட்சத்திரம் வரும் நாளில் அந்தப் புராணத்தின் பொருளை விரித்துச்

சொல்லி நிறைவேற்றுவோம்'' என்று குன்றத்தூரில் திருவவதாரம் செய்தருளிய சேக்கிழார் பொருளை விரித்துச் சொல்ல, ஒவ்வொரு நாளும் சோழ மன்னனும் நடராஜப் பெருமானுடைய பக்தர்களும் அமர்ந்து அதைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

சிறப்பைப் பெற்ற திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூன்று தலைவர்களாகிய நாயன்மார்களும் திருவாய் மலர்ந்தருளிச் செய்த திருநெறிய தமிழாகிய தேவாரத் திருப்பதிகங்களும், திருமூல நாயனார் பாடியருளிய திருமந்திரமாலையும், காரைக்காலம்மையார் பாடியருளிய திருவிரட்டைமணிமாலை, அற்புதத் திரு அந்தாதி, மூத்த திருப்பதிகம் ஆகிய நூல்களும், கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாள் நாயனார் பாடியருளிய பொன் வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானஉலா என்னும் நூல்களும், ஐயடிகள் காடவர் கோன் நாயனார் பாடியருளிய க்ஷேத்திரத் திருவெண் பாவும் ஆகிய நூல்கள் அங்கங்களாகவும், பெரிய புராணத்தில் உள்ள திருவிருத்தங்கள் உடம்பாகவும், எட்டு வகையான பொருள்கோள்கள் உயிராகவும் கொண்டு நான்கு அடிகளால் அமைந்த பாடல்களால் பெரிய புராணம் உலக முழுவதும் பரவியது.

அந்தத் திருவாதிரை நட்சத்திரம் முதல் ஒவ்வொரு நாளும் நடராஜப் பெருமானுடைய அடியவர்கள் ஆகிய அளவு கடந்த மக்களும், வேறு ஊர்களிலிருந்து பெரிய புராணத்தைக் கேட்பதற்குச் சிதம்பரத்திற்கு வந்தவர்களும் ஆகிய எல்லோரும் போய்த் தங்குவதற்காகத் திருமடங் களையும் கட்டுவித்து, அந்தத் திருமடம் ஒவ்வொன்றிலும் திருவிளக்குகள், அந்த மக்கள் அணிந்துகொள்வதற்கு ஆடைகள், மேலே போர்த்துக் கொள்வதற்கு உரிய போர் வைகள், அவர்கள் உண்பதற்குச் சம்பா நெல்லின் அரிசிச்

சோறு, இனிய சுவைகளைப் பெற்ற வாழைப்பழம், மாம் பழம், பலாச்சுளை ஆகிய பழங்கள், புளிப்பு, இனிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, காரம், கைப்பு என்னும் ஆறு சுவை களைப் பெற்ற பல வகையான கறியமுதுகள், புத்துருக்கு நெய், தயிர், திரட்டுப்பால், தேன், பல வகையான இனிய பணியாரங்கள், குடிக்கத் தண்ணீர், வெற்றிலை, பாக்கு ஆகியவற்றை அந்த மக்களுக்குச் சோழ மன்னனுடைய கட்டளைப்படி மந்திரிகள் ஒவ்வொரு நாளும் வழங்கி னார்கள்.

சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் நின்று கொண்டு திருநடனம் புரிந் தருளும் நடராஜப் பெருமானுக்கு அன்று முதலாக மகாபூஜை நடக்குமாறு செய்து, அளவு இல்லாத புகழைப் பெற்றவர்களாகிய தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் வேதியர்களுக்கும் வேறு வேறாக அரிசிகள், கறியமுதுகள் முதலிய எல்லாவற்றையும் செங் கோலைச் செலுத்தும் சோழ மன்னன் ஒவ்வொரு நாளும் தவறாமல் வழங்கி வர, நடராஜப்பெரு மானுடைய அடியவர்கள் வந்து நிறைந்து கூடிப் பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபாத முனிவரும் தவத்தைப் புரிந்த பெரும்பற்றிப் புலியூராகிய சிதம்பர மாநகரம் பூலோகத் தில் உள்ள சிவலோகத்தைப் போல் விளங்கிக் காட்சி அளித்தது.

பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணப் பாடல்களைத் தொகுப்பவர்கள், அவற்றை ஏடுகளில் எழுதுபவர்கள், அவற்றை அமர்ந்து கொண்டு படிப்பவர் கள், அந்தப் பாடல்களின் அர்த்தத்தை விரித்துரைப்பவர் கள், அவற்றைச் சிரவணம் செய்பவர்கள், மகிழ்ச்சியை அடைந்து தங்களுடைய தலைகளை அசைத்துப் பாராட்டிக் குதூகலத்தை அடைபவர்கள், புன்னகை பூப்பவர்கள், தியானிப்பவர்கள், குன்றத்தூரில்திருவவதாரம்செய்தருளிய

முனிவராகிய சேக்கிழார் நாயனார் செய்த அருமையான தவத்தை எண்ணிப் பார்ப்பவர்கள், ''அம்பலவாணர் முன் காலத்தில், 'உலகெலாம்' என்று அடியெடுத்து வழங்கியருள இந்த நாயனார் பாடியருளினார்'' என்று கூறுபவர்கள், ''இந்தப் பெரிய புராணத்தைக் கேட்ட சோழ மன்னனுடைய காதுகளுக்கு இனிமேல் சீவகசிந்தாமணியாகிய சமணர்களுடைய பொய்யான காப்பியம் கேட்க விருப்பமாக இருக்குமோ?'' என்று கூறுபவர்கள் ஆகிய யாவரும் அந்த இடத்தில் அமர்ந்திருந்தார்கள்.

இத்தகைய சிறப்போடு திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தை அமர்ந்திருந்து கேட்டுப் பக்தர்கள் கொண்டாட, அந்தப் புராணத்தின் அரங்கேற்றம் நடந்து அடுத்த ஆண்டில் சித்திரை மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் நிறைவேறியது; அதைப் பார்த்து நடராஜப் பெருமானுடைய திருத்தொண்டர்கள் ஹர, ஹர என்று முழங்கும் பேராரவாரம் எழுந்து பொங்கி வர அந்த ஆரவாரம் சமுத்திரத்தில் அலைகள் எழுப்பும் ஒலியை விழுங்கிவிட்டு, முழக்கத்தைச் செய்யும் ஏழு சமுத்திரங்களில் எழும் அலைகளின் ஓசையைத் தாழ்வுடையதாகச் செய்து, பிரம்ம தேவனுடைய சத்திய லோகத்தளவும் சென்று முழங்கி, தேவர்களுடைய காதுகளை நிறையச் செய்து, அதற்கு மேலும் பொங்கி எழுந்து பொன்னுலகமாகிய தேவலோகத்துக்கு அப்புறத்திலும் சென்று சேக்கிழாருடைய புகழை விளங்கச் செய்தது.

திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம் என்னும் பன்னிரண்டாம் திருமுறையைத் தில்லை வாழ் அந்தணர்கள் சில மூலமந்திரங்களைச் சொல்லி அருச்சனையைப் புரிந்து அந்த நூலை வணங்கி, இருக்கு வேதம் முதலாகிய நான்கு வேதங்களைப் போல இன்று முதல் இந்தப் பெரிய புராணமும் ஐந்தாவது தமிழ்வேதம் என்று தங்கள் உள்ளங்களில் எண்ணி, திருவமுது, வெற்றிலை,

பாக்கு, நறுமணம் கமழும் தூபம், தீபம், கவரி, குடை, கண்ணாடி, ஆரத்தி, விபூதி ஆகியவற்றை அளவாக வைப்பதைப் பார்த்துச் சோழ மன்னன் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தைப் பச்சை நிறத்தைப் பெற்ற பட்டாடையால் சுற்றித் தங்கத்தால் ஆகிய ஒரு பாத்திரத்தில் வைத்தான்.

அந்தப் பெரிய புராணத்தை மதங்களை ஒழுகவிடும் பட்டத்து யானையினுடைய தலையின்மேல் தங்கப் பாத்திரத்தோடு எடுத்து வைத்த பிறகு சேக்கிழார் நாயனாரை முறைப்படி அந்த யானையின்மேல் ஏற்றி வைத்துச் சோழ மன்னனும் அவரோடு கூட யானையின் மேல் ஏறி இரண்டு கவரிகளைத் தன்னுடைய இரண்டு கைகளாலும் வீசினான்; இருக்கு வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதமந்திரங்களையும் வேதியர்கள் கானம் செய்ய, தேவலோகத்தில் வாழும் தேவர்கள் கற்பக மரத்திற் பூத்த மலர்களை மழையைப் போலப் பொழிய, சிதம்பரத்தில் விளங்கும் ஒரு திரு வீதியை வலமாக வரும் சமயத்தில் நடராஜப் பெருமானுடைய திருவருளைச் சிந்தித்து வீரத்தைப் பெற்ற சோழமா மன்னன், "இது அல்லவா அடியேன் முன்பிறவியில் புரிந்த தவத்தின் பிரயோசனம்?" என்று கூறினான். பட்டத்து யானையின்மேல் இவர்கள் ஏறி வருவதைப் பார்த்தவர்கள் ஒவ்வொரு தெருவையும் சுத்தமாகப் பெருக்கி, வாழைமரங்களையும் நட்டுவைத்து, பூரண கும்பத்தையும் வைத்து, நெற்பொரிகளையும் மிகுதியாக இறைத்து, பொன்னரி மாலையையும் நறுமணம் கமழும் மலர் மாலைகளையும் தொங்கவிட்டு, தோரணங்களை வரிசை வரிசையாகக் கட்டித் தொங்கவிட்டு, நறுமணம் கமழும் தூபத்தைத் தங்களுடைய கைகளில் எடுத்துக் கொண்டு, ஒளிவீசும் திருவிளக்குகளையும் ஏற்றி வைத்து, மாணிக்கங்களைப் பதித்த விளக்குகளையும்

தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு, வேத மந்திரங்களை எடுத்து ஓதிப் பெருமையைப் பெற்ற வேதியர்கள் எதிர் கொண்டு வரவேற்று அறுதம்புற்களை எடுத்து வர, தேவ லோகப் பெண்கள் எல்லோரும் வாழ்த்துக்களை எடுத்துக் கூறி வாழ்த்தினார்கள்.

''சோழச்சக்கரவர்த்தி இவர்; தவமுனிவர் இவர்;சோழ மன்னர் இந்தச் சேக்கிழாருக்குக் கவரி வீசுவது தகுதியான செயலோ?'' என்று சில மக்கள் கூறுபவர்கள் ஆனார்கள். ''சேக்கிழாராகிய அரசர் சிவபெருமானே ஆன சிறப்பு இது; இவருக்குச் செய்யும் சிறப்பு நல்ல சிறப்பே'' என்று சிலர் சொல்வானார்கள்; ''தேவர்களும் எழுத முடியாத வேதத்தைத் தமிழ் மொழியில் இயற்றித் தேவாரத் திருப் பதிகங்களைப் பாடியருளிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் மூன்று நாயன்மார்களும் ஒன்று சேர்ந்து ஒப்பற்ற முதல்வராகி இந்தப் பூமண்டலத்தில் திருவவதாரம் செய்தருளிய முதற் பரம்பொருளே இவர்'' என்று பாராட்டிச் சிலர் கூறினார்கள்.

மேகங்களின் கூட்டங்கள் மின்னலைமின்னி மழையைப் பெய்தன; தேவலோகத்தில் வாழும் தேவர்கள் நறுமணம் கமழும் கற்பகமரத்தில் மலர்ந்த பொன்னிற மலர்களை மழையைப் போலப் பொழிந்தார்கள்; சேக்கிழார் நாயனார் யாவரும் ஆனந்தத்தை அடையும் வண்ணம் தம்முடைய நாவிலிருந்து இனிய சொற்களாகிய மழையைப் பொழிந்தார்; சோழச் சக்கரவர்த்தி யாசகம் செய்பவர்களுடைய வறுமை போகும் வண்ணம் தன்னுடைய கைகளால் அள்ளி அள்ளித் தன்னுடைய கருவூலத்திலிருந்து முகந்து கொண்டு வந்து பொற்காசு களை மழையைப் போல வழங்கினான்; நடராஜப் பெருமா னுடைய பக்தர்கள் எல்லோரும் உருக்கத்தை அடைந்த

உள்ளங்களோடு தம்முடைய கண்களிலிருந்து ஆனந்தத் துளிகளை மழையைப் போலப் பொழிந்தார்கள்.

''இனிய சுவையை உடைய இராமாயணமாகிய கதையைச் சுலோக வடிவத்தில் பாடியருளிய வால்மீகி பகவானும் இந்தச் சேக்கிழாருக்குச் சமானமானவர் அல்லர்'' என்று சிலர் கூறினார்கள்; ''விதிமுறைப்படி மகாபாரதத்தைப் பாடியருளி முடித்த வேத வியாச முனிவரும் இவருக்கு ஒப்பானவர் அல்லர்;சிதைதல் இல்லாத வண்ணம் ஆயிரம் நாக்குகளைப் பெற்றவனும் சிறந்த அறிவுடையவனும் ஆகிய ஆதிசேடனாகிய சிறப்பை உடையவனும் இவருக்கு நிகர் அல்லன்; பொதிய மலையில் வாழ்ந்த குறுமுனிவனாகிய அகத்தியனும் புகழையுடைய இந்தக் குன்றத்தூர் முனிவருக்கு இணையானவன் அல்லன்'' என்று பலர் கூறினார்கள்.

உலகத்தில் வாழும் மக்கள் எல்லோரும், ''இந்தச் சேக்கிழாருடைய திருமேனியில் அணிந்திருக்கும் சைவர்களின் அடையாளமாகிய உருத்திராட்ச மாலையும், யாவரும் காணும் வண்ணம் இவர் திருமேனியில் பூசியுள்ள வெண்மையான விபூதியும், பெரிய புராணத்தை எழுதிய திருக்கரமும், அழகிய உருத்திராக்க மணியைக் கட்டியிருக்கும் கழுத்தும், பிரகாசம் வீசும் ஏட்டுச்சுவடியை வைக்கும் பையும், பெரிய புராணமாகிய நூலை எழுதிய ஏட்டுச் சுவடியும், உருகுகின்ற திருவுள்ளம் நெகிழுந்தோறும் ஹர ஹர என்று சொல்லும் திருநாமங்களும், நாம் எல்லோரும் உஜ்ஜீவனத்தை அடையுமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்கின்ற கருணையும் அழகாக உள்ளன'' என்று வியந்து பாராட்டிச் சேக்கிழாரை வணங்கினார்கள்.

வெள்ளைத் தாமரை மலரில் வீற்றிருக்கும் மயிலைப் போன்றசாயலைப் பெற்றகலைமகள் தான் அமர்ந்திருக்கும் அந்த மலரை மறந்து விட்டாள்;தமிழ்ச்சங்கத்தில் வீற்றிருக்

கும் நல்லிசைப்புலவர்களுடைய இனிய சொற்கள் அடங்கிய பாடல்களை மறந்து போனாள்; நாட்டில் வாழும் வட மொழி வித்துவான்கள் பாடிய சுபாஷிதங்களுடைய பிர யோசனத்தையும் மறந்து விட்டாள்; தாமரை மலரில் எழுந் தருளியிருக்கும் பிரம தேவனுடைய நாச்சையும் மறந்து போய்விட்டாள்; பொதிய மலையின் உச்சியில் இருந்த புண்ணியத்தைப் புரிந்த அகத்திய முனிவன் என்னும் முனி வேந்தனையும் மறந்தாள்; சேக்கிழாராகிய அரசருடைய அழகிய நாக்கில் வந்து குடியேறினாள்.

இவ்வாறு வேதம் விதித்த முறையில் இந்த உலகத்தில் வாழும் மக்களும், தேவலோகத்தில் வாழும் தேவர்களும், வேறு உலகங்களில் வாழ் பவர்களும் தம்மைச் சுற்றி வர, அழகிய வீதியை வலமாக வந்து சேர்ந்து, திருச்சிற்றம்பலத்தின் முற்றத்தில் தாங்கள் ஏறியிருந்த பட்டத்து யானையின் தலையிலிருந்து இறங்கி வந்து சோழ மாமன்னனும், பெரிய புராணத்தைப் பாடி யருளிய சேக்கிழாராகிய மன்னரும் மூன்று புரிகளை உடைய பூணூலை அணிந்த தில்லைவாழ் அந்தணர் களோடு வந்து பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணத்தை நடராஜப் பெருமானுடைய அழகிய சந்நிதியில் வைத்தார்கள்.

எல்லா அண்டங்களிலும் வாழ்பவர்களுக்குத் தலைவ ராகிய நடராஜப் பெருமானாருடைய எதிரில் யாவரும் தண்டாகாரமாகத் தரையில் விழுந்து சேக்கிழாரை வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து வந்து கீர்த்தியைப் பெற்ற சேக்கிழார் பரம்பரையில் திலகத்தைப் போல விளங்கும் சேக்கிழாருக்கு எல்லோரும் எண்ணிப் பார்த்து அவருக்கு வழங்கிய சிறப்புப் பெயராகத் தொண்டர் சீர் பரவுவார் என்று ஒரு திருநாமத்தைச் சூட்டி ஞான மகுடத்தையும் அவருடைய தலையில் அணிந்து முன்னால் உள்ள ஆயிரங்கா

மண்டபத்தில் அமரச் செய்து அந்தச் சேக்கிழாரைச் சோழச்சக்கரவர்த்தி பணிந்தான்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார் என்னும் மூன்று நாயன்மார்களும் பாடியருளிய பாசுரங்களை ஏழு திரு முறைகளாகவும், திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் ஒரு திருமுறையாகவும், திருவிசைப்பாக்களை ஒரு திரு முறையாகவும், திருமூலர்பாடியருளிய திருமந்திரமாலையை ஒரு திருமுறையாகவும், திருவால்வாயுடையார் அருளிச் செய்த திருமுகப்பாசுரத்தை முதலாக வைத்துக் கோத்த திருமுறை ஒன்றாகவும், சேக்கிழார் நாயனார் பாடியருளிய பெரிய புராணத்தை ஒரு திருமுறையாகவும் வைத்து, உமாதேவியைத் தம்முடைய வாமபாகத்தில் வைத்த வருடைய திருவருள் சிறப்பாக அமைந்த திருமுறைகள் பன்னிரண்டு என்று வகுத்து நம்பியாண்டார் நம்பி அமைத்தார்.

'தோடுடைய செவியன்' என்று தொடங்கும் பாசுரத்தைக் கொண்ட பதிகம்முதல் பல திருப்பதிகங்களை உடைய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய திருநெறிய செந்தமிழாகிய திருப்பதிகங்களோடு இந்தப் பெரிய புராணம் ஒப்பாக விளங்கும் என்று அந்தப் புராணத்தைச் செப்புத் தகடுகளில் வரையச் செய்து நடராஜப் பெருமானாருடைய சந்நிதியில் உயரமான பீடத்தில் வைத்தார்கள்; இது "பாலாறு சுற்றி ஓடும் தொண்டை மண்டலத்தில் வாழ்பவர்கள் முற்பிறவியில் செய்த தவத்தின் பயன்; நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும் குன்றத்தூராகிய வளப்பத்தைப் பெற்ற நகரத்தில் வாழ்பவர்கள் புரிந்த தவத்தின் பயன்; ஒப்பு இல்லாத பெருமையைப் பெற்ற கங்கா குலதிலகராகிய

சேக்கிழார் புரிந்த பெரிய தவத்தின் பயன்'' என்று பலர் பாராட்டினார்கள்.

அந்தச் சமயத்தில் அநபாயச் சோழமன்னன், ''இந்தச் சிறப்பான நிலைமை இருப்பதனால் இதைப் பார்த்து மகிழ் வதற்குச் சேக்கிழாருடைய தம்பியாராகிய பாலறாவாயர் எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டான். இரண்டு பக்கங் களிலும் நின்று கொண்டிருந்த பக்தர்கள் பின்வருமாறு கூறினார்கள்; ''பரிசுத்தமாகிய குன்றத்தூரென்னும் வளநகரத்தில் உள்ள மலையின்மேல் தம்முடைய திரு நாமம் விளங்கும் வண்ணம் ஒரு திருக்குளத்தை வெட்டச் செய்த பிறகு திருநாகேசுவரத்தில் கோயில் கொண்டிருக்கும் நாகேசுவரருடைய திருப்பணிகளைச் செய்து கொண்டு அந்தத் தவத்தில் தங்கியிருக்கிறார்.''

அவ்வாறு அந்தப் பக்தர்கள் கூற, அந்தப் பாலறா வாயரை அழைத்துக் கொண்டுவரச் சொல்லி, அவர் வந்த பிறகு, ''இவர் என்னுடைய அமைச்சர்; இவருடைய பட்டம் தொண்டைமான்''என்று சூட்டி நறுமணம் கமழும் மாலையை அவருக்கு அணிந்தான் சோழமன்னன். பிறகு பாலறாவாயர் தொண்டை மண்டலத்தில் அந்தக் காலத்தில் பஞ்சம் உண்டாகத் தம் மிடம் வந்து அடைந்த மக்களுக்குச் செல்வம், ஆடை முதலியவற்றை வழங்கி, 'தொண்டை மண்டலம் நின்று காத்த பெருமான்' என்று தம்முடைய திருநாமத்தை எல்லா இடங்களிலும் நிலைபெறுமாறு செய்தார்.

தொண்டர் சீர் பரவுவாராகிய சேக்கிழார் நாயனார் என்னும் அரசர் பரிசுத்தமான சிதம்பர மாநகரத்தில் பழைய காலத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார் ஆகிய மூன்று நாயன்மார்களும் பாடியருளிய தேவாரத் திருப் பதிகங்களில் பாடப் பெற்ற அறுபத்து மூன்று நாயன்

மார்களினுடைய வரலாறுகளைத் தெரிந்துகொண்டு நடராஜப்பெருமானுடைய அடியவர்களோடு அருமையான தவத்தில் அமர்ந்திருந்து, பிறகு இண்டை மலரை அணிந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையிற்பெற்ற அம்பலவாண ருடைய தூக்கிய திருவடியின் நிழலை அடைந்தார்.

சிதம்பரத்தில் விளங்கும் ஆலயத்தில் உள்ள மாணிக் கங்களைப் பதித்த திருச்சிற்றம்பலத்தில் எல்லாக் காலத்திலும் திருநடனம் புரிந்தருளும் அழகிய கண்களைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானுடைய செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகள் வாழ்க! சீகாழி நகரத் தில் வாழும் மக்கள் நல்வாழ்வு பெறும் வண்ணம் திருவவ தாரம் செய்தருளியவரும் திருநெறிய தமிழாகிய தேவாரத் திருப்பதிகங்களைப் பாடி வழங்கியருளிய வள்ளலுமாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகள் வாழ்க! பக்தர்கள் திரிபுண்டரமாக அணிந்த விபூதியும், இரண்டு சட்டைகளும் வாழ்க! குன்றத்தூரில் திருவவ தாரம் செய்தருளிய முனிவரும், சேக்கிழார் பரம்பரையில் உதித்த தலைவரும் ஆகிய சேக்கிழார் நாயனார் திருவாய் மலர்ந்து பாடியருளிய பெரிய புராணம் வாழ்க!

ஒளி விளங்கும் மேகத்தை அளாவிய குன்றத்தூரின் தலைவரும், தொண்டர் சீர் பரவுவாரும் ஆகிய சேக்கிழார் நாயனார் வாழ்ந்த திருமாளிகையின் திருவாசல் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரையிலும் இனி வரும் காலத் திலும் வாழையடி வாழையாய்த் தென்றல் காற்று வீசும் மாணிக்கங்களைப் பதித்த மண்டபத்தில் அரசர்களாக வீற்றிருக்கும் முடிமன்னர்களாகிய சேர சோழ பாண்டியர் களுக்கும் பரமேசுவரனுடைய பக்தர்களாகிய நாயன்மார் களுடைய வரலாறுகளைப் பாடியருளிய பெரிய புராணத்தை எடுத்துச் சொல்லி நன்மையை அடையும்.

பல அண்டங்களில் வாழ்பவர்கள் வணங்கும் தில்லையம்பலவாணர் அடியை எடுத்து, 'உலகெலாம்'

என்றுவழங்கத் தொண்டர் சீர் பரவுவாராகியசேக்கிழாரும், அரசர்கள் வழங்கும் வரிசைகளைப் பெற்றவரும், குன்றத்தூர் என்னும் நகரத்தின் தலைவரும், தொண்டை மண்டலத்தின் அதிபதியும், திருநெறிய தமிழ் வல்ல தலைவரும், செந்தாமரை மலர்களைப் போன்ற திருக்கரங்களைப் பெற்றவரும், மேகத்தைப் போல் இரவலர்களுக்குச் செல்வமழையைப்பொழிபவரும் ஆகியவருடைய பசும்பொன்னாற் செய்த வீரக்கழலைப்பூண்ட திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை வணங்கித் தம்முடைய பாவங்களைப் போக்குபவர்கள் இனிமேல் உண்டாகும் பிறவியை அடைய மாட்டார்கள்.

[இந்த வரலாறு உமாபதி சிவம் அருளிச் செய்த சேக்கிழார் நாயனார் புராணத்தைத் தழுவி எழுதப் பெற்றது.]

# பாயிரம்

பெரிய புராணத்தில் தொடக்கத்தில் விளங்குவது பாயிரம், அதில் முதலில் உள்ள மூன்று பாடல்களும் கடவுள் வாழ்த்துக்கள். முதல் பாடலின் கருத்து வருமாறு:

'இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் யாவரும் அறிந்து கொண்டு தன்னுடைய பெருமைகளை எடுத்துச் சொல்லுவதற்கு அருமையாக இருப்பவனும், பிறைச் சந்திரனும் அலைகள் வீசும் கங்கையாற்றின் நறும்புனலும் தங்கிய சடாபாரத்தைத் தன்னுடைய தலையிற் பெற்ற வனும், அளவு இல்லாத சோதி வடிவத்தைப் பெற்றவனும், சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம் பலத்தில் ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளுபவனுமாகிய நடராஜப் பெருமானுடைய சிலம்புகளை அணிந்து மலர்ச் சியைப் பெறும் திருவடிகளை வாழ்த்தி வணங்கு வோமாக.'

பாடல் வருமாறு:

> ''உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
> நிலவு லாவிய நீர்மலி வேணியன்
> அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
> மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.''

உலகு- இந்தம் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். எலாம்-எல்லோரும்; இடைக்குறை. உணர்ந்து- தன்னுடைய பெருமையைத் தெரிந்து கொண்டு. ஓதற்கு— அவற்றை எடுத்துச் சொல்வதற்கு.அரியவன்— அருமையாக உள்ளவனும். நிலவு—நிலாவை வீசும் பிறைச்சந்திரனும்; ஆகு பெயர். உலாவிய—அலைகளை வீசிய. நீர்— கங்கை யாற்றின் நறும் புனலும். மலி— தங்கிய. வேணியன்- சடா டாரத்தைத் தன்னுடைய தலையிற் பெற்றவனும். அலகு— அளவு. இல்— இல்லாத; கடைக்குறை. சோதியன்—சோதி வடிவமாக விளங்குபவனும். அம்பலத்து— சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில். ஆடுவான்— ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளுபவனுமாகிய நடராஜப் பெருமானுடைய. சிலம்பு—சிலம்புகள்; ஒருமை பன்மை மயக்கம், மலர்—மலர்ச்சியைப் பெறும். அடி—திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வாழ்த்தி— வாழ்த்துக்களைக் கூறி. வணங்குவாம்— பணிவோமாக, 'உலகத்தில் வாழ்பவர்கள் உணர்ந்து கொள்வதற்கும்,தன்னுடைய பெருமைகளை எடுத்துச் சொல்வதற்கும் அருமையாக இருப்பவன். எனலும் ஆம். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, 'உலகெலாம் மலர் சிலம்படி' என்று கூட்டிப் பொருள் செய்வார்.

சோதியன்: "அறிவரிய சோதியானே.", "அன்னியூர்ச் சோதி.", "பூந்தராய்ச் சோதி.", "சோதியாய் நிறைந்தான்.", சோதியே சுடரே.", "சோதியுள் ஓர் சோதியாய்," என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "சோற்றுத் துறைஎம் சோதியை.", "சோதியாய்ச் சுடர் விளக்காய்.", சோதியே சுடரே.", "சோதியாய்ச் சுடரும் ஆனார்." "சோதியாய்ச் சுடரதர்னார்." "சோதியைத் துருத்தியானை.", "சோதியுட் சுடருமாகி", "சோதியுட் சுடராய்த் தோன்றி." "உமையவள் பங்கா மிக்க சோதியே", "சோதியைத் துளக்க மில்லா விளக்கினை,"

''ஒருவருக்கும் அறிவொணாச் சோதியை'', ''ஆவடு தண்டுறை மேவிய சோதியே.'',''பராய்த்துறைச் சோதியானை.'' ''நின்மலனே என்றும் சோதியான் என்றும்.'', ''சோதியார் தரு தோணிபுரவர்.'', ''பழையாறை வடதளிச்சோதியை.'', ''உணர்தற்கரியதோர் சோதியானை'', ''பரஞ்சுடர்ச் சோதியுட் சோதியாய் நின்ற சோதியே.'', ''தூண்டு சுடரனைய சோதி கண்டாய்.'', ''சோதியாய் இருளாகி.'', ''செழுஞ்சுடர் நற்சோதி'' ''சுடர்ப்பவளச் சோதியானை'', ''மிக்க சோதியனை'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''சோதியிற் சோதி எம்மானை.'', ''வேதியர் விண்ணவரும் மண்ணவரும் தொழநற் சோதிய துருவாகி.'', ''அயன்மால் அறிதற்கரியசோதியன்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே.'' ''தூண்டு சோதி.'', ''பரம்பரஞ் சோதிப் பரனேபோற்றி'', ''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை.'' ''பாசம் பரஞ்சோதிக்கு.'', ''சோதி திறம்பாடி.'', ''சோதியுமாய் இருளாயினார்க்கு.'', ''சோதியாய்த் தோன்றும் உருவமே.'', ''சோதியேசுடரே சூழொளி விளக்கே.'' என்று மாணிக்கவாசகரும், ''சோதியாய் உணர்வுமாகி.'' என்று சேக்கிழாரும், ''மாசறு சோதியை,'' என்று நக்கீர தேவ நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 2-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'மாமிசங்களைப் பெற்ற மனித உடம்பை எடுத்த இந்தப் பிறப்பே தேன் நிரம்பிய மலர்கள் மலர்ந்த பல வகையான மரங்கள் வளர்ந்து நிற்கும் சோலை சூழ்ந்த தில்லையாகிய சிதம்பரத்தில் விளங்கும் திருக்கோயிலில் இருக்கும் திருச்சிற்றம்பலத்தில் பெருமையைப் பெற்ற திருநடனத்தைப் புரிந்தருளும் வரதராகிய நடராஜப் பெருமானாருடைய தங்கத்தைப் போன்ற திருவடிகளை வணங்குவதனால் தான் பெற்ற உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அடையும்.'

பாடல் வருமாறு:

"ஊன டைந்த உடம்பின் பிறவியே
ஞான டைந்த உறுதியைச் சாருமால்
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாந டம்செய் வரதர்பொற் றாள்தொழ."

இந்தப் பாடலில் விற்பூட்டுப் பொருள்கோள் அமைந்துள்ளது. ஊன்— மாமிசங்களை; ஒருமை பன்மை மயக்கம். அடைந்த—பெற்ற. உடம்பின்- தேகத்தை எடுத்த. பிறவியே- மனிதப் பிறப்பே. தான்- அந்தப் பிறப்பை. அடைந்த- பெற்ற. உறுதியை- உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை; ஒருமை பன்மை மயக்கம்; இவற்றைப் புருஷார்த்தம் என்பர். தேன் அடைந்த- தேன் நிரம்பிய; 'வண்டுகள் மொய்க்கும்.' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். மலர்-மலர்களைப் பூத்த பல வகை மரங்கள் வளர்ந்து நிற்கும். ப்:சந்தி, பொழில்- சோலை சூழ்ந்த. அந்த மரங்களாவன: மாமரம். வேங்கை மரம், வாகை மரம், மகிழ மரம், பூவரச மரம், வில்வ மரம், விளா மரம் முதலியவை. தில்லையுள்- தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில்; இட ஆகுபெயர். மா- பெருமையைப் பெற்ற. நடம்- திருநடனத்தை, செய்- புரிந்தருளும். வரதர்- வரதராகிய நடராஜப் பெருமானாருடைய. பொன்-தங்கத்தைப் போன்ற. தாள்- திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். தொழ—வணங்குவதனால். ச்: சந்தி. சாரும்- அடையும். ஆல: அசைநிலை.

பொற்றாள்: "கூற்றுதைத்த பொன்னடி.", "பொன்னடிக்கே நாள்தோறும் பூவோடு நீர்சுமக்கும் தன்னடியார்.", "பொன்னங் கழல்பரவாப் பொக்கமும் பொக்கமே.", "பொன்னின் மாமலரடி தொழும் அடியவர்.", "பொன்னியல் திருவடி" என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "பொன்னார் திருவடிக்

கொன்றுண்டு விண்ணப்பம்.'', ''பொன்னங் கழலடிக்கே'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.'', ''பொன்னார் கழல் பணித் தாண்டபிரான்'', ''கழலிணைகள் பொன்னானவா பாடி'', ''வானவரும் தானவரும் பொன்னார் திருவடிதாம் அறியார்'' என்று மாணிக்கவாசகரும் பாடியருளிய வற்றைக் காண்க.

பிறகு உள்ள 3-ஆவது பாடலின் கருத்து வருமாறு:

'அடியேன் பாடத் தொடங்கும் இந்தப் பெருமையைப் பெற்றதும், நாயன்மார்களினுடைய வரலாறுகளைச் சொல்வதுமாகிய பெரிய புராணம் இனிய சொற்சுவையும் பொருட்சுவையும் பெற்ற செந்தமிழ்ப் பாடல்களாக நடக்கும் மேம்பாட்டை எமக்கு அளித்தருள விசாலமான ஐந்து கைகளையும், தொங்குகின்ற காதுகளையும், உயர மான கிரீடத்தையும், மூன்று மதங்களையும் பெற்ற ஆண் யானையாகிய விநாயகப் பெருமானை நம்முடைய உள்ளத்துள் வைத்துத் தியானிப்போமாக,' பாடல் வருமாறு;

> '' எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
> நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
> தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
> கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்.''

எடுக்கும்- அடியேன் பாடத் தொடங்கும். மா- பெருமையைப் பெற்ற. க்:சந்தி. கதை- நாயன்மார் களுடைய வரலாறுகளாகிய பெரிய புராணம்; ஒருமை பன்மை மயக்கம். தட- விசாலமாகிய. க்:சந்தி. கை- கைகள்; ஒருமை பன்மை மயக்கம். ஐந்து உடை- ஐந்தைப் பெற்ற; ஐந்து கைகளாவன: இயல்பான கைகள் நான்கும், துதிக்கை ஒன்றும் ஆகும். துதிக்கையைக் கை என்று கூறுவது

மரபு; "கைம்மா வேழத்து.", "வேழக் கைபோல்.", "கருங் கை யானையின் ஈருரி போர்த்த கள்வனார்.", "பருக்கை யானை" என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், "கைம்மத யானை உரித்த பரஞ்சுடரே", "பனைக்கை மும்மத வேழம்", "துளைக்கை வேழத் துரியுடல் போர்த் தவர்", "கைம்மான மதகளிற்றின் உரிவையான்", "பொருங்கை மதக்கரி", "கைம்மான மதகளிற்றை உரித் தான்றன்னை", "கைவேழம்" என்று திருநாவுக்கரசு நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

த்: சந்தி. தாழ்- தொங்கும். செவி— காதுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். நீள்- உயரமான. முடி- கிரீடத் தையும், ச்: சந்தி. கட—கன்னமதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களை ஒழுக விடும்; ஒருமை பன்மை மயக்கம். க்- சந்தி. களிற்றை— ஆண் யானையின் முகத்தைப் பெற்ற விநாயகப் பெருமானை; திணை மயக்கம். க்: சந்தி. கருத்துள்- நம்முடைய உள்ளத்துள்; இது சேக்கிழார் தம்மையும் பெரிய புராணத்தைக் கேட்பவர்களையும் சேர்த்துக் கூறியது. இருத்துவாம்- வைத்துத் தியானிப்போமாக.

அடுத்து வரும் 4-ஆவது பாடல் திருக்கூட்டத்தின் சிறப்பைக் கூறுகிறது. அதன் கருத்து வருமாறு:

'பிறைச்சந்திரன் தங்கும் சடாபாரத்தைப் பெற்ற தலையை உடையவரும், சிதம்பரத்தில் உள்ள திருக் கோயிலில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தைத் தாம் திரு நடனம் புரிந்தருளும் அரங்கமாகப் பெற்றிருப்பவரும் ஆகிய நடராஜப் பெருமானாரை முன்காலத்தில் தோத்திரம் புரிந்த நாயன்மார்களுடைய வரலாறாகிய பெரிய புராண த்தில் உள்ள பரிசுத்தமான சொற்களாகிய மலர்களில் நிறைந்துள்ள நன்மையாகிய தேனைக் குடிக்கின்றவர் களும், தூயவர்களுமாகிய தொண்டர்களின் பெரிய சபை

விதிப்படி இந்தப் பூமண்டலத்தில் விளக்கத்தை அடைந்து வெற்றியைப் பெறுவதாக! 'பாடல் வருமாறு,

''மதிவளர் சடைமுடி மன்றுளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே''

மதி—பிறைச் சந்திரன். வளர்—தங்கிய. சடை - சடாபாரத்தை. முடி—தம்முடைய தலையில் பெற்றவரும். மன்று— சிதம்பரத்தில் உள்ள திருக்கோயிலில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தை. உளாரை- தாம் திருநடனம் புரிந்தருளும் அரங்கமாகப் பெற்றிருப்பவரும் ஆகிய நடராஜப் பெருமானாரை; இடைக்குறை. முன்—முன் காலத்தில், துதி—தோத்திரம். செயும்—புரிந்த; கால பயக்கம்;இடைக்குறை. நாயன்மார்—நாயன்மார்களுடைய. தூய சால்-பரிசுத்தமாகிய சொற்கள்' என்னும்; ஒருமை பன்மை மயக்கம். மலர்-மலர்களில்; ஒருமை பன்மை மயக்கம். பொதி— நிறைந்துள்ள, நலன்-நன்மையாகிய தேனை. நுகர்தரு- குடிக்கும். புனிதர்-வண்டுகளைப் போன்றவர்களும், பரிசுத்தமானவர்களும் ஆகிய தொண்டர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். பேரவை— பெருமையைப் பெற்ற சபை. விதிமுறை விதிமுறைப்படி. விளங்கி— விளக்கத்தை அடைந்து. வெல்க— வெற்றியைப் பெறுதாருக. ஏ! ஈற்றசை நிலை. இந்தப்பாடலில் ஏகதேச உருவகம் அமைந்துள்ளது.

அடுத்து வரும் ஐந்து பாடல்கள் அவையடக்கம். 5-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அளவு இல்லாத பெருமையைப் பெற்றவர்களும். கணக்கு இல்லாதவர்களும் ஆகிய சிவபெருமானுடைய அடியவர்களாகிய நாயன்மார்கள் பெற்ற புகழை அடி

யேன் பாடத் தொடங்குகிறேன்; அந்த நாயன்மார் களுடைய அளவைக் கூட அடியேனால் பாட முடியா விட்டாலும் அளவு இல்லாத ஆசை அடியேனைப் பிடர் பிடித்து உந்தப் பாடத் தொடங்குவேன். ''பாடல் வருமாறு

'' அளவி லாத பெருமைய ராகிய
அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரி தாயினும்
அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்.''

இது சேக்கிழார் கூற்று. அளவு இலாத -அளவே இல்லாத; இலாத- இடைக்குறை. பெருமையர் ஆகிய- பெருமையைப் பெற்றவர்கள் ஆகிய; ஒருமை பன்மை மயக்கம். அளவு— கணக்கு. இலா- இல்லாத; இடைக்குறை. அடியார் - சிவ பெருமானுடைய அடியவர்களாகிய நாயன்மார்கள் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். புகழ்- புகழை. கூறுகேன்— அடியேன் பாடத் தொடங்குகிறேன். அளவு- அவர் களுடைய அளவைக் கூட. உரைப்பு—அடியேன் பாடுவது அரிதாயினும் - முடியாத வண்ணம் அருமை உள்ளதாக இருந்தாலும். அளவு இல்— அளவு இல்லாத; இல்: கடைக் குறை. ஆசை - அவா. துரப்ப- அடியேனைப் பிடர் பிடித்து உந்த. அறைகுவேன்- பாடத் தொடங்குவேன். இவ்வாறே கம்பரும் கூறுகிறார். அவர் பாடிய அந்தக் கருத்து உள்ள பாடல் வருமாறு:

'' ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையலுற் றேன்மற்றிக்
காசில் கொற்றத் திராமன் கதையரோ,''

அடுத்து உள்ள 6- ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'அறிவதற்கு அருமையாக உள்ள பெருமையைப் பெற்ற திருத்தொண்டர்களாகிய நாயன்மார்களுடைய நிகர் இல்லாத கீர்த்தியை அடியேன் பாடத்

தொடங்கினேன்; பெருகி வருகின்ற தெளிவான கடலில் உள்ள ஊற்று நீர் முழுவதையும் குடிக்கும் பேரவாவலைப் பெற்றதாகிய ஒரு நாயைப்போல இருக்கும் இயல்பை உடையவன் அடியேன்'. பாடல் வருமாறு:

" தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ரும்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தெண்கடல் ஊற்றுண் பெருநசை
ஒரு சுணங்கனை ஒக்கும் தகைமையேன்.''

இதுவும் சேக்கிழார் கூற்று. தெரிவரும்-அறிந்து கொள்வதற்கு அருமையாகிய. பெருமை- பெருமையைப் பெற்ற. த்:சந்தி. திருத்தொண்டர்தம்- திருத்தொண்டர்களாகிய நாயன்மார்களுடைய; தம்: அசைநிலை; ஒருமை பன்மை மயக்கம். பொரு அரும்- ஒப்புக் கூறுவதற்கு அருமையாக உள்ள. சீர்—சீர்த்தியை. புகலலுற்றேன்- அடியேன் பாடத் தொடங்கினேன். பெருகு-பெருகி வரும். தெண்- தெளிவைப் பெற்ற. கடல்-சமுத்திரத்தில் உள்ள. ஊற்று-ஊற்று நீரை: ஆகுபெயர். முற்ற- முழுவதும், ப்:சந்தி. உண்- குடிக்கும். பெரு நசை- பேராசையை உடைய. ஒரு கணங்கனை-ஒரு நாயை. ஒக்கும்-போல இருக்கும். தகைமையேன்- இயல்பைப் பெற்ற அடியேன்.

அடுத்து வரும் 7-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'முதல் முதலாக மழலைப் பேச்சுக்களைப் பேசத் தொடங்கிய ஓர் இளங் குழந்தையின் சிறப்பினால் அந்தப் பேச்சுக்களுக்கு உரிய அர்த்தத்தை அந்தக் குழந்தையைப் பெற்றவர்கள் எல்லோரும் தெரிந்து கொள்வார்கள். அதைப்போல இந்த நாயன்மார்களின் வரலாறாகிய பொருளைப் பாடுவதற்கு அடியேன் பாடும் பாடல்கள் சிறுமையைப் பெற்றவை ஆனாலும் உண்மையான கருத்தை அறிந்து கொள்வதற்கு உரிய அறிவைப் பெற்றவர்கள் நாயன்மார்களுடைய மேம்பாட்டினால் இந்தப் புராணத்தை ஏற்றுக் கொள்வார்கள்,'

பாடல் வருமாறு:

"செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவரும் கொள்வரால்
இப்பொ ருட்கென் உரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருளுகுரி யார்கொள் வர் மேன்மையால்".

செப்பல்- முதல் முதலாக மழலைச் சொற்களைப் பேசுவதை. உற்ற - தொடங்கிய. பொருளின்-தங்களுடைய குழந்தையின். பொருள்-குழந்தை; "தாரகனைப் பொருத பொருளினை முன் படைத்துகந்த புனிதன்" என வருவதைக் காண்க.

சிறப்பினால் - சிறப்புக் காரணமாக. அப்பொருட்கு- அந்த மழலைச் சொற்களின் அர்த்தத்துக்கு. உரை - ஏற்ற சொற்களை; ஒருமை பன்மை மயக்கம். யாவரும்-அந்தக் குழந்தையைப் பெற்ற எல்லாப் பெற்றோர்களும்.கொள்வர்- தெரிந்து கொள்வார்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆல்: அசைநிலை. இப்பொருட்கு - இந்தப் பெரிய புராணம் என்னும் காப்பியத்தைப் பாடுவதற்கு.என்-அடியேனுடைய. உரை- சொற்கள்; ஒருமை பன்மை மயக்கம். சிறிது- சிறுமையை உடையவை; ஒருமை பன்மை மயக்கம். ஆயினும் - ஆனாலும். மெய்- உண்மையான. ப்: சந்தி. பொருட்கு-பொருளைத் தெரிந்து கொள்வதற்கு. உரியார் - உரிய அறிவைப் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மேன்மையால் - நாயன்மார்களுடைய மேம்பாடு காரணமாக. கொள்வர் - ஏற்றுக் கொள்வார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பின்பு உள்ள 8-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'சிவப்பு நிறத்தைப் பெற்ற திருமேனியை உடைய நடராஜப் பெருமானுடைய அழகியதும் பெருமையைப் பெற்றதும் ஆகிய திருச்சிற்றம்பலத்தைப் பரிசுத்தமான செம் பொன்னால் வேய்ந்த சோழ மன்னனும், நீடூழி இந்த

உலகத்தில் கீர்த்தியைப் பெற்றவனும் ஆகிய அநபாய சோழ மன்னனுடைய அவைக்களத்தில் வீற்றிருக்கும் சான்றோர்கள், மேவிய இந்த அடியேனுடைய பாடல்களை ஏற்றுக் கொண்டு விருப்பத்தைப் பெறுவார்கள்.'

பாடல் வருமாறு:

> '' **மேய இவ்வுரை கொண்டுவிரும்புமாம்**
> **சேய வன்திருப் பேரம் பலம்செய்ய**
> **தூய பொன்னணி சோழன்நீ டூழிபார்**
> **ஆய சீர்அந பாயன் அரசவை''.**

சேயவன் - சிவப்பு நிறத்தைப் பெற்ற திருமேனியை உடையவனாகிய நடராஜப் பெருமானுடைய; ''சிவன் எனும்பெயர் தனக்கே உடைய செம்மேனியம்மான்'' என்பதையும், ''செய்ய மேனி வெளிய பொடிப்பூசுவர்.'', ''செய்யன் வெய்யபடை ஏந்தவல்லான்'', ''செய்யர் செய்ய சடையார்.'', ''திருமேனி செய்யார்'', ''செய்யான் உறை கோயில் சிற்றம்பலந் தானே.'', ''திருமேனிச் செய்யான் வெண்ணீறணிவான்'', ''செய்ய மேனிக் கரியம்மிடற்றார்'' ''செய்யமேனிச் செழும்புனற கங்கைச் செஞ்சடைஐயன்,'' ''கோழம்பம் மேவிய செய்யானை'', ''செய்யவன் உறை விடம் திருவிற் கோலமே.'', ''செய்யன் வெள்ளியன்'', ''செய்ய னேதிரு ஆலவாய் மேவிய ஐயனே'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''செய்யர் வெண்ணூலர்'', ''செய்யவர் கரிய கண்டர்'', ''வெள்ளியர் கரியர் செய்யர்'', ''மால்அங்கம் தோள்மேல் கொண்ட செய்யனை'', ''செய்ய மேனி வெண்ணீற்றர்.'', ''செய்ய மேனி வெண்ணீறணிவான்தனை.'', ''செய்ய மேனி யன் தேனொடு பால்தயிர் நெய்ய தாடிய நீலக்குடி அரன்.'', ''செய்யனே கரியனே கண்டம்.'', ''செய்யதிரு மேனி வெண்ணீறாடி.'', ''செய்யன்காண் கரியன்காண்'', ''செய்யானைச் செழுப்பவளத் திரளொப் பானை'', ''செய்ய திருமேனி வெண்ணீற் றான்காண்'', ''செய்யாய்

கரியாய் வெளியாய் போற்றி.'', ''செய்யானை வெளி யானைக் கரியான் தன்னை.'', ''செய்யானே திருமேனி'', ''மேனிச் செய்யானைத். ''திருவானைக் காவுனை.'' ''பவளமால் வரைபோல் மேனிச் செய்யானை.'', ''செய் யவன்கான் செய்யவளை மாலுக் கீந்த சிவனவன்காண் '' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''செய்யார் மேனி யனே.'', ''செய்யவ னாகி வந்து'' , ''செய்யார் மேனியனே திருநீல மிடற்றினனே'', ''ஐயா செய்யாய் வெளியாய்'', ''செய்யனை வெளிய திருநீற்றில் திகழும் மேனியன்.'', ''செய்ய நம்பிசிறு செஞ்சடை நம்பி.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''செய்யவனே சிவனே.'', ''செய்யா வெண்ணீறாடி செல்லா.'', ''செய்யானை வெண்ணீறணிந் தானை.'', ''அயன்மாற்கறி யொண்ணாச் செய்ய மேனி யனே.'', ''தழற்பிழம் பன்ன மேனிச் செய்யனே.'' என்று மாணிக்க வாசகரும், ''செய்யான் கருமிடற்றான்''. என்று கபிலதேவ் நாயனாரும், ''செய்ய திருமேனிச் சிற்றம் பலவருக்கு.'', ''செய்யை பசியை வெளியை.'', என்று பட்டினத்துப் பிள்ளையாரும் பாடியருளிய வற்றைக் காண்க. திரு— அழகைப் பெற்றதும். ப்: சந்தி. பேரம்பலம்—பெருமையைப் பெற்றதுமாகிய திருச்சிற்றம் பலத்தை. செய்- சிவப்பானதும். தாய-பரிசுத்தமானதும் ஆகிய. பொன்— தங்கத்தால். அணி- வேய்ந்த. சோழன்- சோழ மன்னனாகிய. நீடுழி- நெடுங்காலம். பார்- உலகத் தில். ஆய- உண்டாகிப் பரவிய. சீர்- சீர்த்தியைப் பெற்ற, அநபாயன்- அநபாயச் சோழ மன்னனுடைய. அரசவை- அரச சபைக்களத்தில் வீற்றிருக்கும் சான்றோர்கள்; இட ஆகுபெயர். மேய-மேவிய. இவ்வுரை- அடியேன் பாடிய இந்தப் பாடல்களை; ஒருமை பன்மை மயக்கம். விரும்பும்- விரும்புவார்கள்; திணை மயக்கம். ஆம்: அசை நிலை. அநபாயன்— இரண்டாம் குலோத்துங்க சோழமன்னன். இந்த மன்னன் திருச்சிற்றம்பலத்தைத் தங்கத்தால் வேய்ந்

தது பின்வரும் குலோத்துங்க சோழன் உலாவில் வரும் பகுதியால் உணரலாகும்.

''...ஆலத்தான்

ஆடும் திருப்பே ரம்பலமும் கோபுர
மாடம் பரந்தோங்கு மாளிகையும்— கூடிப்
பொலங் கோட்டு மாமேருப் பூதரமும் போய
வலங்கோட் டிகிரியும் மானத்—தவம்கொள்
நிலையேழு கோபுரங்கள் நேரே நெருங்க
மலையேழும் என்ன வகுத்துத்—தலையில்
மகரங்கொள் கோபுரங்கள் மாக விமானம்
சிகரங்க ளாகித் திகழ-நிகரில்
எரிபொற்'' படர்பாறை என்னலாய் எங்கும்
விரிபொற்றிரு முற்றம் மின்னச்-சொரிபொற்
கடாரப் பனிநீர். கவனிச் கனபொற்
றடாகங்களாகித் ததும்ப.

அடுத்து உள்ள-9ஆம் பாடலின் கருத்து வருமாறு; ''நடராஜப் பெருமான் வழங்கும் திருவருளின் இயல்பையும், நாயன்மார்கள் புரிந்த திருத்தொண்டுகளையும் தெரிந்து கொள்வதற்கு உரிய தெளிவான அறிவு இல்லாத நீர் இந்தப் பெரிய புராணத்தைப் பாடுவதற்கு முடியுமோ?'' என்று யாரேனும் கேட்டால், மயக்கம் இல்லாத உண்மையான சொற்றொடராகிய 'உலகெலாம்' என்று ஆகாயத்திலிருந்து அசரீரி வாக்கு எடுத்துக் கொடுத்ததனால் அடியேனால் பாட முடியும்'' என்று கூறுவோம்.

பாடல் வருமாறு:

'' அருளின் நீர்மைத் திருத்தொண்டறிவரும்
தெருளில் நீர்இது செப்புதற் காம்எனின்
வெருளில் மெய்ம்மொழி வான்நிழல் கூறிய
பொருளின் ஆகும் எனப்புகல் வாமன்றே.''

அருளின்-நடராஜப் பெருமான் வழங்கும்திருவருளினுடைய. நீர்மை-இயல்பையும். த்:சந்தி. திருத்தொண்டு- நாயன்மார் கள் புரிந்த திருத்தொண்டுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். அறிவரும்- தெரிந்துகொள்வதற்கு உரிய அருமையான அறிவும். தெருள்- தெளிவும். இல்-இல்லாத; கடைக்குறை. நீர்-நீங்கள். இது-இந்தப் பெரியபுராணத்தை. செப்புதற்கு-பாடுவதற்கு. ஆம்-உம்மால் முடியுமோ? இது காகு ஸ்வரம். எனின்- என்று யாரேனும் கேட்டால்; இடைக்குறை. வெருள்-மயக்கம். இல்-இல்லாத; கடைக்குறை. மெய்ம்மொழி — உண்மையான சொற் றொடராகிய 'உலகெலாம்' என்பதை. வான் நிழல்- ஆகாயத்திலிருந்து எழுந்த அசரீரி வாக்கு. கூறிய-எடுத்துக் கொடுத்த. பொருளின்-சொற் றொடரால். ஆகும்- அடியேனால் பாடுவதற்கு முடியும். என-என்று; இடைக் குறை, ப்:சந்தி. புகல்வாம்- அவருக்குக் கூறுவோம். அன்று, ர: இரண்டும் ஈற்றசை நிலைகள்:

இதுவும் சேக்கிழார் கூற்று.

பிறகு வரும் 10-ஆம் பாடல் இந்த நூலின் பெயரைச் சொல்கிறது, அதன் கருத்து வருமாறு;

'இவ்விடத்தில் இந்த நூலினுடைய பெயரைக் கூறினால், இந்தப் பூமண்டலத்தில் பழங்காலம் முதல் தங்கியிருக்கின்ற இரண்டு வகையான இருட்டுக்களுக்குள் மக்களுடைய உள்ளங்களுக்கு உள்ளே சேர்ந்து நின்றதும் பொங்கி எழுவதுமாகிய இருட்டாகிய அறியாமையை மற்ற வெளி இருட்டாகிய இரவு நேரத்தைப் போகச் செய்கின்ற சிவந்த கிரணங்களை வீசும் சூரியனைப்போலப் போகச் செய்யும் திருத்தொண்டர் புராணம் என்று யாம் கூறுவோம்.', 'பாடல் வருமாறு;

**''இங்கிதன் நாமம் கூறின்**
**இவ்வுல கத்து முன்னாள்**

தங்கிருள் இரண்டில் மாக்கள்
சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப்
புற இருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும்
திருத்தொண்டர் புராணம் என்பாம்.'

இங்கு - இந்தப் பாயிரத்தில். இதன் - இந்தக் காப்பியத்தினுடைய. நாமம்-பெயரை. கூறின்-சொன்னால் இவ்வுலகத்து - இந்தப் பூமண்டலத்தில், முன் நாள்-பழைய காலத்திலிருந்து. தங்கு-இந்தக் காலம் வரையில் தங்கியிருக்கும். இருள்-இருட்டுக்கள்; ஒருமை பன்மை மயக்கம். இரண்டில்-இரண்டு வகையான இருட்டுக்களுக்குள். மாக்கள்-அறிவில்லாத மக்களுடைய. சிந்தையுள்-உள்ளங்களுக்கு உள்ளே; ஒருமை பன்மை மயக்கம். சார்ந்து, சேர்ந்து. நின்ற-நீங்காமல் நின்றதும். பொங்கிய-பொங்கி எழுவதும் ஆகிய. இருளை-இருட்டாகிய அறியாமையை. இருள்-அறியாமை; "இருள்நீங்கி இன்பம் பயக்கும்' (352) என்று திருக்குறளில் வருவதைக் காண்க.

# திருமலைச் சிறப்பு

பெரிய புராணத்தில் முதற் காண்டத்தில் முதலில் இருப்பது திருமலைச் சருக்கம் என்ற பகுதி. அந்தப் பகுதியில் முதலாவதாக உள்ளது திருமலைச் சிறப்பு, அதில் வரும் முதற் பாடலின் கருத்து வருமாறு:

'தங்கத்தின்மேல் வெண்ணிறமான விபூதியைப் பூசினாற் போன்றதென்று கூறப்படும் நிலை பெற்று விளங்கும் உயரமானதும் பெருமையைப் பெற்றதுமாகிய இமய மலையின் ஒரு பக்கத்தில் விளங்குவது, தன்னை எவருக்கும் தெரிந்து கொள்ள முடியாதவனாகிய கைலாசபதி எந்தக் காலத்திலும் நிலை பெற்று வாழ்கின்ற கயிலாசம் என்னும் அழகையும் பெருமையையும் பெற்ற மலை. பாடல் வருமாறு:

"பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யானென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை."

பொன்னின்-தங்கத்தின்மேல். வெண்-வெள்ளை நிறத்தைக் கொண்ட. திருநீறு-விபூதியை, புனைந்தென-பூசினாற்

போல, 'புனைந்தது என' என்பது 'புனைந்தென' என்று நின்றது;தொகுத்தல் விகாரம். என: இடைக்குறை, ப்:சந்தி பல தடவைகளிலும் புகழ்ந்து பேசப்படும் பன்னும்-தல்-பல தடவை கூறுதல்; "இன்னே இன்னே பன்னி." என்று கம்பராமாயணத்தில் வருவதைக் காண்க. நீள்-உயரமாக விளங்கும். மால்-பெருமையைப் பெற்ற, பனி வரை-இமயமலையின்.ப்:சந்தி. பாலது- ஒரு பக்கத்தில் விளங்குவது. தன்னை-கைலாசபதியாகிய தன்னை, யார்க்கும்-எத்தகையவர்களுக்கும்; ஒருமைபன்மை மயக்கம். அறிவரியான்-தெரிந்து கொள்ள முடியாதவனாகிய கைலாசபதி. என்றும்-எந்தக் காலத்திலும். மன்னி- நிலை பெற்று. வாழ்-வாழும். கயிலை- கயிலாசம் என்னும், த்:சந்தி. திரு- அழகைக் கொண்டதும். மா-பெருமையைப் பெற்றதும். மலை- ஆகிய வெற்பு.

யார்க்கும் அறிவரியான்: "சமயம்பல அறியாதவன்,", "அயன்பாலும் தனைநாடி அறியாவகை நின்றான்.", "அறிவரிய... எம்செல்வர்.", "உம்பராலும் உலகின்னவராலும் தம்பெருமை அளத்தற்கரியான்.", "ஆழியானும் அவரின் உறைவானும் ஊழி நாடி உணரார்.", "வெறியார் மலர்த் தாமரையானொடு மாலும் அறியாது.", "ஒருவரால் அறிவொண்ணிலன்.", "அரியோடயனும் அறியாவண்ணம் அளவில் பெருமையோடு... நிமிர்ந்த எங்கள் பெருமான்.", "கரிய மாலும் செய்ய பூமேல் அயனும் கழறிப்போய் அரிய அண்டம் தேடிப் புக்கும் அளக்க ஒண்கிலார்.", "இருவர் அறியாத ஒருவன்.", "வரியாய மலரானும் வையந்தன்னை உரிதாய அளந்தானும் உள்ளுதற்கு அரியானும்.", "ஒதி யாரும் அறிவார் இல்லை,", "அரியாய் எளியாய்." "அரியானாம் பரமேட்டி.", "அருமையில் அளப்பரிதாயவனே,","கரியமாலோடயன் காண்பரிதாகிய பெரியர்" "இன்னவுருஇன்னநிலம் என்றறிதேல் அரிது.", "சிறிதேயும் அறிவரியனாய பெருமான்.", "என்றும் அரியராய்." என்று

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், "கரவாடும வன்னெஞ்சர்க் கரியானை.", "வஞ்சகர்க்கரியர்.", "அளக்கலாகா ஆதியை", "கடல் மணி வண்ணன் கருதிய நான்முகன் தானறியா விடமணி கண்டம் உடையவன்", "மேலும் அறிந்திலன் நான்முகன் மேற்சென்று கீழிடந்து மாலும் அறிந்திலன்", "நாடி நாரணன் நான்முகன் என்றிவர் தேடியும் திரிந்தும் காண வல்லரோ", "ஓதி வானவரும் உணராததோர் வேதியா.", "மண்ணை உடண்மால் காணான் மலரடி விண்ணை கண்டயன் காணான் வியன் முடி.", "மற்றையார் அறியார்.", "மாலினோடு மறையவன் தானுமாய் மேலும் கீழும் அளப்பரி தாயவர்.", "இயலும் மாலொடு நான்முகன் செய்தவம் முயலிற் காண்பரிதாய நின்ற மூர்த்தி.", "நுண்ணியர் பார்த்தற்கரியவர்.", "எய்த நோக்கரிதாய வண்ணமும்,", "ஐயனை அறியார்சிலர் ஆதர்கள்.", "கோவணவை துகிலாடையர் தேறலாவ தொன்றன்று.", "நாரணன் நான்முகன் என்றிவர்நின்ற நீண்முடி யோடடி காண்புற்றுச் சென்று காண்பரியான்.", "அரியர் அண்டத்துளோர் அயன்மாலுக்கும் பெரியர்", 'பொன்னொத்த நிறத்தானும் பொருகடல் தன்னொத்த, நிறத்தானும் அறிகிலா", "மாலும் நான்முகனாலும அறிவொணாப் பாலின் மென்மொழியாள் ஒரு பாகனை.", 'யாவரும் அறிதற்கரியான்", "தேடுவார்பிரமன் திருமாலவர் ஆடு பாதம் அவரும் அறிகிலார்.", "நாடி நாரணன் நான்முகன் வானவர் தேடி ஓதவும் தெரியாததோர் கோடி காவனை.", "தன் உருவை ஒருவர்க்கறிவொணா மின்னுருவனை.", "அரியானை அந்தணர்தம் சிந்தையானை,", "அமரர்களுக் கறிவரிய அளவிலானை.", "நாடுவார் நாடற்கரியாய் போற்றி.", "காண்டற்கரிய கடவுள் கண்டாய்.", "அயனவனும் மாலவனும் அறியா வண்ணம் ஆரழலாய் நீண்டுகந்த அண்ணல்", "காண்பரிய பசுமுஞ் சுடரை"., "புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்தும் காணார்.", "நோக்கரிய திருமேனி உடையாய் நீயே.",

"ஆரும் அறியா இடத்தாய் நீயே.", "தன்னுருவம் யாவருக்கும் தாக்கா தான்காண்.", "இன்னவுரு வென்றறி வொண்ணா தான்", "மாலோடயன் மேலொடுகீழ் அறியா வண்ணம் வெந்தழலின் விரிசுடராய் ஓங்கினான்.","அடியும் முடியும் இகலிப் போற்றி அங்கொன்றறியாமை நின்றாய்.", "செய்ய மலர்மேலான் கண்ணன்போற்றித்தேடி உணராமை நின்றாய்." "அரியாய் அமரர்கட் கெல்லாம்", "சோதித்தார் காணாமை நின்றாய்.", ":புண்டரிகத் தயனொடுமால் காணா வண்ணம்பொங்குதழற்பிழம்பாய புராணனாரும்". "ஒருவரும்தன் பெருமைதனை, அறியவொண்ணா விண்டா கனை", "ஊர்தற் கரியானை", "அறிய வொண்ணா மாயவனை "யாவர்க்கும் அரியான் தன்னை., "அணவரியான் கண்டாய்""காரிலங்கு திருவுருவத் தவற்குமாமற்றைச் சமயத்தின் காரணத்திற்கும் காட்சியொண்ணாச் சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார்.", "அறிவரிய நுண்பொருள்கள் ஆயினான்," "அரி அயனென்றறிய வொண்ணா அமரர்தொழும் கழலானை" என்று திருநாவுக்கரசு நாயனாரும், "மண்அளந்தான் மலர்மேலவன் நேடியும் காண்பரியாய்", "மாப்வாய் பிளந்தானும் மலர்மிசையானும் ஆவா அவர் தேடித்திரிந் தமலந்தார்,", "மாலயனும் காண்பரியமால்எரியாய்நிமிர்ந்தோன்.", "பண்டைய மால பிரமன் பறந்தும் இடந்தும் அயர்ந்தும் கண்டிவராம்", "செய்யானும் கரிய நிறத்தானும் தெரிவறியான்", "அயனோ டன்றரியும் அடியும்முடி காண்பரிய பயனே.", "சங்கேந்து கையானும் தாமரையின் மேலானும் தன்மை காணாக்கங்கார்ந்தவார்சடைகள்உடையானை,","நெடியனொடு நான்முகனும் அறிவொண்ணாப் படியான்", "தெரிவரிய மாமணியை.", "செப்பரிய அயனொடுமால் சிந்தித்தும் தெளிவரிய அப்பெரிய திருவினையே.","பூவேந்திய பீடத்தவன் றானும்டல்அரியும் கோவேந்திய வினயத்தொடு குறுகப்புகல் அறியார்.,, "அயன்மால்", அறிதற்கரிய சோதியன்" என்று சுந்தரமூர்த்தி நாயனாரும்

"நோக்கரிய நோக்கே.", "பிரமன்மால் காணாப் பெரியோன்", "தேவரும் அறியாச் சிவனே காண்க", "திருநெடுமாலன் றடிமுடி அறியும் ஆதர வதனிற் கடுமுரண் ஏனம் ஆகிமுன் கலந்தேழ் தலம்உருவ இடந்துபின் எய்த் தூழி முதல்வ சயசய என்று வழுத்தியும் காணா மலரடியிணைகள்.", "கனவிலும் தேவர்க் கரியாய் போற்றி.", "அரியாய் போற்றி அமலா போற்றி.", "தெரிவரி தாகிய தெளிவே போற்றி.", "அரியானே யாவர்க்கும்,", "கேட்டாரும் அறியாதான்.", "தேவர்கோ அறியாத தேவ தேவன்.", "மேலை வானவரும் அறியாததோர் கோலமே,", "தன்மை பிறரால் அறியாத தலைவா", "வான நாடரும் அறியொ ணாத நீ.", "மாலறியா நான்முகனும் காணா மலையினை.", "பல அமரர் உன்னற் கரியான்.", "போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்.", "செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய பொங்கு மலர்ப்பாதம்.", "பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார் ஆராலும் காண்டற் கரியான்.", "வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும் கானின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய தான்.", "தேவர் கனாவிலும் கண்டறியாச் செல்வச் சேவக மேந்திய வெல்கொடியான்.", "பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும் மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச் சேசேவது சேவடிக்கே.", "திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை.", "அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும் தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம்.", "அருமந்த தேவர் அயன்திருமாற் கரிய சிவம்.", "ஆவா அரியயன் இந்திரன்வானோர்க்கரிய சிவன்." "கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்.", "மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே நூலே நுழைவரியான்.", "அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்.", "முன்னாய மாலயனும் வானவரும் தானவரும் பொன்னார் திருவடி தாமறியார்.", "நாரா யணன் அறியா

நாண்மலர்த்தாள்.'', ''ஆனோ அலியோ அரிவையோ என்றிருவர் காணாக் கடவுள்.'', ''மாலுக் கரியானை.'', ''யாவரும் அறிவரியாய்.'', ''கேட்டறி யோம்உனைக் கண்டறிவாரை.'', ''விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே.'', ''உணர்ந்த மாமுனிவர் உம்பரோ டொழிந்தார் உணர்வுக்கும் தெரிவரும் பொருளே.'', ''புற்றுமாய் மரமாய்ப் புனல் காலே உண்டியாய் அண்ட வாணரும் பிறரும் பற்றி யாரும்நின் மலரடி காணா மன்ன.'',''நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே.'', ''கருடக் கொடியோன் காண மாட்டாக் கழற்சேவடி.'', ''தேவர்க் கரியானே சிவனே.'', ''வானோர் அறியா மலர்ச் சேவடியானே.'', ''தன்னை யாவரும் அறிவதற்கரியவன்.'', ''திகழத் திகழும் அடியும் முடியும் காண்பான் கீழ்மேல் அயனும் மாலும் அகழப் பறந்தும் காண மாட்டா அம்மான்.'', ''நினையப் பிறருக் கரிய நெருப்பை.'', ''உம்பரும் அறியா ஒருவனே.'', ''பங்கயத் தயனும் மால் அறியா நீதியே.'', ''கமலநான்முகனும் கார்முகில்நிறத்துக் கண்ணனும் நண்ணுதற் கரிய விமலனே.'', ''வேண்டும் அயன்மாற் கரியோய்நீ.'', ''ஞால முண்ட ானொடு நான் முகன் வானவர் நண்ணரிய ஆலமுண்டான்.'', ''பூங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே.'', ''மூவராலும் அறியொணா முதலாய ஆனந்த மூர்த்தியான்.'', ''திருமால் அறியாத் திருப்புயங்கன்.'', ''மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த தேவரும் காணாச் சிவபெருமான்.'', ''பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும் கண்டாரும் இல்லை.'', ''மாலறியா மலர்ப்பாதம் இரண்டும்.'', ''வானவரும் அறியா மலர்ப்பாதம்.'', ''விண்ணவரும் மறியாத விழுப்பொருள்.'' என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 2-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தலைவனாகிய கைலாசபதி அமர்ந்திருக்கும் பாக்கியத்தைப் பெற்றது ஆகையால் பிரபஞ்சத்தில் இருக்கும் அந்தர் மத்திய பாதலம் என்ற மூன்று உலகங்களில் வாழ்பவர்களும், இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும், கணக்கு இல்லாததும், பெருமையைப் பெற்றதுமாகிய தவத்தைப் புரிந்ததனால் வந்து சேர்ந்த புண்ணியச் செயல்கள் யாவும் ஒரு சேரத் திரண்டு இருப்பதைப் போல விளங்குவது திருக்கயிலாய மலை.' பாடல் வருமாறு:

"அண்ணல் வீற்றிருக் கப்பெற்ற தாதலின்
நண்ணும் மூன்றுல கும்நான் மறைகளும்
எண்ணில் மாதவம் செய்யவந் தெய்திய
புண்ணி யந்திரண் டுள்ளது போன்றது."

அண்ணல்- தலைவனாகிய கைலாசபதி. வீற்றிருக்கப் பெற்றது- அமர்ந்திருக்கும் பாக்கியத்தைப் பெற்று விளங்குவது. ஆதலின்-ஆகையால். நண்ணும்-பிரபஞ்சத்தில் இருக்கும். மூன்றுஉலகும்- அந்தர் மத்திய பாதலம் என்னும் மூன்றுஉலகங்களில் வாழ்பவர்களும்; இடவாகுபெயர். உலகு; ஒருமை பன்மை மயக்கம். அந்தர் உலகம்—தேவர் உலகம்; அதில் வாழ்கிறவர்கள் தேவர்கள். மத்திய உலகம்—இந்தப் பூமண்டலம்; இதில் வாழ்கிறவர்கள் மனிதர்கள். பாதலம்-பாதாளஉலகம்; இதில் வாழ்கிறவர்கள் நாக அரசர்கள். நான்மறைகளும்— இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும். எண்—கணக்கு. இல்—இல்லாத; கடைக்குறை. மா—பெருமையைப் பெற்ற. தவம்—தவத்தை. செய்ய-புரிய. வந்து எய்திய- வந்து சேர்ந்த. புண்ணியம்—புண்ணியச் செயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். திரண்டு-ஒன்றாகச் சேர்ந்து. உள்ளது- இருப்பதை, போன்றது- போல விளங்குவது திருக்கயிலாய மலை; தோன்றா எழுவாய்.

தலைவன்: "தளையாயின தவிரவ்வருள் தலைவன்,", "விளைபொருள்கள் தானாகிய தலைவன்.", "வளரிளமதி புனைவனை உமை தலைவனை", "திருப்புன்கூர்த் தலைவர்.", "தலைவன் தாள்நிழல் சார்வோம்.", "சூலம் தாங்கிய தேவர் தலைவர்.", "தலைபுரிந்த பலி மகிழ்வாய் தலைவ.", "அன்பினோடும் தலைவ.", "மண்ணும் விண்ணும் தாய அடியனந்தான் காண மாட்டாத் தலைவர்க்கு.", "தாழ்சடை இளமதி தாங்கிய தலைவன்.", "சிராப்பள்ளித் தலைவரை.", "அந்தண் கலிக்காழித் தலைவா.", "ஆரூர்த் தந்திர மாவுடையான் அவன்எம் தலைமையனே.", "செங்குன்றூர் நின்ற தலைமகனை.", "தலையவன் தலையணி மாலை பூண்டு.", "நாகேச் சரநகருள் தலைவா.", "விடையூர்வார் தலைவர்.", "தாயுறு தன்மையாய தலைவன்.", "தன்னலங்கெட அடர்த்தவற் கருள்செய்த தலைவனார்.", "தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்.", "மதிதாங்கு நீள்சடையாய் தலைவா.", "தவள நீறணி தலைவனை.", "திருக் கோட்டாற்றுள் தானமரும் விடையானும் எங்கள் தலைவன்.", "தாருடைக் கொன்றையந் தலைவர்.", "தக்க நல்வானவர் தலைவர்.", "பிறை தானலங்கல் உகந்த தலைவனார்.", "தலையவன் ஊர்பனந்தாள் திருத் தாடகை ஈச்சரமே.", "தலைவளர் கோல நன்மாலை சூடும் தலைவர்.", "இமையோர்கள் தங்களை ஆரிடர் தீர நின்ற தலைவர்.", "மலையின் தலைவன்.", "தாயினும் நல்ல தலைவர்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "தலையாலே பலிதேரும் தலைவனை.", "தலைவனாய் அருள்கள் நல்கி.", "தானவர் தலைவர் போலும்.", "அமரர் தங்கள் தலைவர்க்கும் தலைவர் போலும்.", "தன்னிற் றன்னை அறியும் தலைமகன்.", "தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை.", "தருணேந்து சேகரன்காண் தலைவன் தான்காண்" "சலங்கொள்சடை முடியுடைய தலைவா.", "தில்லை நடம்பயிலும் தலைவன்.",

"விண்ணோர் தலைவனே.", "தலையவனாய் உலகுக்கு.", "சாம்பர்மெய் பூசும் தலைவா போற்றி.", "சங்கைதனைத் தவிர்த்தாண்ட தலைவன்.", "சமயமவை ஆறினுக்கும் தலைவன்", "வானோர்க்கும் ஏனோருக்கும் தலையவனை", "தலைகலனாப் பலிஏற்ற தலைவன்" என்று திருநாவுக்கரசு நாயனாரும், "துறையூர்த் தலைவா.", "உன்றன் தாளே வந்தடைந்தேன் தலைவா.", "வானோர் தம்மானைத் தலை மகனை.", "வானோர் தலைவா வாய்மூர் மணவாளா.", "தாயும் தந்தை பல்லுயிர்க்கும் தாமே ஆய தலைவனார்.", "ஏழைத் தலைவர் கடவூரில் இறைவர்.", "தன்அருள் தந்த எம் தலைவனை-" என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "சைவா போற்றி தலைவா போற்றி.", "தன்மை பிறரால் அறியாத தலைவா.", "மலைத்தலைவா மலையாள் மணவாள.", "என்னுயிர்த் தலைவா." என்று மாணிக்க வாசகரும், "தலைவ தடுமாறுகின்றேன்.", "ஆதிமூர்த்தியை அமரர்கள் தலைவனை,", "வானத் தலைவன் மலைமகள் பங்கன்." என்று நக்கீர் தேவ நாயனாரும், "காமனை விழித்த மாமுது தலைவா" என்று பட்டினத்துப் பிள்ளையாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 3-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இந்த உலகத்தில் இருந்து விளங்கும் கணக்கு இல்லாத சிவத்தலங்களும் பரவிய பிரகாசம் விளங்கும் குளிர்ச்சியைப் பெற்ற தளிர்கள் ஆகவும், எழுந்ததாகிய ஓர் உலகம் என்று வழங்கும் பிரகாசத்தைப் பெற்ற மாணிக்கக் கொடியின்மேல் மலர்கின்ற வெள்ளை நிறத்தை உடைய மலரைப்போல விளங்குவது அந்தப் பெரிய கைலாய மலை.' பாடல் வருமாறு:

> **"நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி**
> **இலகு தண்தளிர் ஆக எழுந்ததோர்**
> **உலகம் என்னும் ஒளிமணி வல்லிமேல்**
> **மலரும் வெண்மலர் போல்வதும் மால்வரை**

நிலவும்- இந்தப் பூமண்டலத்தில் இருந்து விளங்கும். எண்-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. தலங்களும் -சிவத்தலங்களும். நீடு- நெடுங்காலமாக. இலகு -விளங்கும். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. தளிர்- தளிர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தளிர்-முற்றாத இலை. ஆக- ஆகவும். எழுந்தது- எழுந்து தோன்றியது. ஓர்-ஒரு. உலகம்- பூமி. என்னும்- என்று வழங்கும். ஒளி - பிரகாசம் வீசும். மணி-மாணிக்க. வல்லிமேல்- கொடியின்மேல். மலரும் - மலர்ச்சியைப் பெறும். வெண் - வெள்ளை நிறத்தைப் பெற்ற. மலர் - மலரை. அ - அந்த .ம்: சந்தி .மால் - பெரிய. வரை-திருக்கயிலாய மலை. போல்வது - போல விளங்குவது .

பின்பு உள்ள 4-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'மேம்பாட்டைப் பெற்ற இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களின் கானமும், வித்தியாதரர்கள் மீட்டிப் பாடும் இசை யொலியை எழுப்பும் வீணையினுடைய இனிய நாதமும், மேகத் துக்கு நிகராகக் கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்ற மூன்று மதங்களையும் ஒழுகவிடும் யானைகள் பிளிறும் பேரொலியும், கெடுதல் இல்லாத சீர்த்தியைப் பெற்ற ஆகாச துந்துபிகளின் முழக்கமும் அந்தத் திருக்கைலாயத்தி னுடைய பக்கங்களில் எல்லாம் கேட்கும்.' பாடல் வருமாறு:

**"மேன்மை நான்மறை நாதமும் விஞ்சையர்**
**கான வீணையின் ஓசையும் காரெதிர்**
**தான மாக்கள் முழக்கமும் தாவில்சீர்**
**வான துந்துபி ஆர்ப்பும் மருங்கெலாம்."**

மேன்மை—மேம்பாட்டைப் பெற்ற. நான்மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களை வேதியர்கள் ஓதும்; ஒருமை பன்மை மயக்கம். நாதமும்— கானமும். விஞ்சையர்-

வித்தியாதர்கள் மீட்டிப் பாடும்; ஒருமை பன்மை மயக்கம். வீணையின்-வீணைகளில் எழும்; ஒருமை பன்மை மயக்கம், ஓசையும்- இனிய நாதமும். கார்-மேகங்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். எதிர்—எதிரில். தானம்— கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களை ஒழுக விடும்; ஒருமை பன்மை மயக்கம். மாக்கள்- யானைகளாகிய விலங்குகள். முழக்கமும்—பிளிறும் பேரொலியும். தா-கெடு தல். இல்-இல்லாத; கடைக்குறை. சீர்—சீர்த்தியைப் பெற்ற. வான- ஆகாய. துந்துபி- துந்துபிகளின்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்ப்பும்- முழக்கமும். மருங்கு— அந்தத் திருக் கயிலாய மலையின் பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்- எல்லா இடங்களிலும் கேட்கும். எலாம்: இடைக் குறை. 'கேட்கும்' என்ற சொல்லை வருவித்துப் பொருளை முடிக்க.

யானையின் பிளிறலுக்கு மேகத்தின் முழக்கம்: "கைம் மாமத கரியின்இனம் இடியின்குரல் அதிர," என்று திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும்,"மழையென முழங்கும் தாறுபாய் கரி" என்று கம்பரும் பாடியிருப்பவற்றைக் காண்க.

பிறகு உள்ள 5-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'குளிர்ச்சியைக் கொண்ட ஆகாயத்திலிருந்து வந்து தேவர்கள் வணங்கிச் சுற்றி வருவதால் அவர்கள் அணிந்த எண்ண முடியாத கோடிகளாகியவையும் அவர்கள் தங்களுடைய தலைகளில் அணிந்தவையும் ஆகிய மாலை களும், தூய்மையான கற்பக மரத்திலிருந்து பெற்ற பொன்னரி மாலைகளும், முனிவர்கள் அஞ்சலிகளைச் செய்யும் வரிசையும் அந்தத் திருக்கயிலாய மலையினுடைய முன் பக்கங்களில் உள்ள எல்லா இடங்களிலும் காட்சி அளிக்கும்.' பாடல் வருமாறு:

"பனிவி சும்பில் அமரர் பணிந்துசூழ்
அனித கோடி அணிமுடி மாலையும்
புனித கற்பகப் பொன்னரி மாலையும்
முனிவர் அஞ்சலி மாலையும் முன்பெலாம்."

பனி— குளிர்ச்சியைப் பெற்ற. விசும்பில்-ஆகாயத்தில் உள்ள தேவலோகத்திலிருந்து வந்த. அமரர்- தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பணிந்து-கைலாச பதியைவணங்கி விட்டு. சூழ்- வலம்வரும்போது. அனித- கணக்கு இல்லாத. கோடி-கோடிகள்ாகிய. அணி- அந்தத் தேவர்கள் அணிந்திருந்த. முடி- கிரீடங்களில் உள்ள;ஒருமை பன்மை மயக்கம்- மாலையும்-முத்து மாலைகளும்; ஒருமை பன்மை மயக்கம், புனித - தூய்மையான. கற்பக- கற்பகமரத்திலிருந்து அந்தத் தேவர்கள் பெற்றுக் கொண்டு வந்திருந்தப்: சந்தி. பொன்னரி மாலையும்-சரிகை மாலைகளும்; ஒருமை பன்மை மயக்கம். முனிவர் - கயிலைமலைக் குகைகளில் தவம் புரியும் முனிவர்கள் செய்யும்; ஒருமை பன்மை மயக்கம். அஞ்சலி- கைலாசபதியை அஞ்சலிகளைப் புரியும்: ஒருமைபன்மை மயக்கம். மாலையும்-வரிசையும். முன்பு- கயிலாய மலையின் முன்பக்கங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்— எல்லாவற்றிலும் காட்சி அளிக்கும். எலாம்: இடைக்குறை. 'மாலை' என்ற சொல் வேறு வேறு பொருள்களில் வந்தது. இது ஒரு சொற் பல் பொருள் அணி. 'காட்சி அளிக்கும்' என்பதை வருவித்துச் செய்யுளின் பொருளை முடிக்க.

அடுத்து உள்ள 6-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தேவர்கள் வந்து தங்கும் உயரமான மாளிகைகளையும், வேண்டுமானால் தாங்கள் விரும்பும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்து பெரிய பூதங்களையும் கொண்டு வந்து நிறுத்துபவையான கோடி கோடி குட்டையான சிறிய பூதகணங்களையும், அந்தப் பூதங்கள்

பாடல்களைப் பாடியும் கூத்தாடியும் மகிழும் பரந்த இடத்தையும் பெற்றது கயிலாய மலையின் பக்கம் முழுவதும்., பாடல் வருமாறு:

"நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின்
நாடும் ஐம்பெரும் பூதமும் நாட்டுவ
கோடி கோடி குறட்சிறு பூதங்கள்
பாடி ஆடும் பரப்பது பாங்கெலாம்."

தேவர் - தேவலோகத்திலிருந்து கைலாச பதியை வணங்குவதற்காகக் கயிலாச மலைக்கு வரும் தேவர்கள் தங்குவதற்குரிய; ஒருமை பன்மை மயக்கம். நீடு-உயரமான. நிலைகளும்-பல தளங்களைப் பெற்ற மாளிகைகளும்; ஆகு பெயர். வேண்டிடின்-தாங்கள் விரும்பினால். நாடும்-அவ்வாறு விரும்பும். ஐம்பெரும் பூதமும்- பிருதுவி, அப்பு, தேயு,வாயு, ஆகாசம் என்னும் ஐந்துபெரிய பூதங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். நாட்டுவ- கொண்டு வந்து நிறுத்துபவை. குறள்— குட்டையான. சிறு- சிறிய. பூதங்கள்- பூதகணங்கள். பாடி— பாடல்களைப் பாடிக் கொண்டும். ஆடும்— கூத்தாடிக் கொண்டும். பரப்பது— இருக்கும் பரவிய இடத்தைக் கொண்டது. பாங்கு— கைலாய மலையின் பக்கம். எலாம்— முழுதும்; இடைக்குறை.

பூதங்கள் சிவபெருமானோடு இருத்தல்: "பூதமும் பல்கணமும் சூழ.", "பூதம் புடைசூழ,", "பூதம் பாடப் புறங்காட்டிடை ஆடி.", "பூதம் பல்படை ஆக்கிய காதலான்.", "பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரி தோலார்." "பந்தமுடைய பூதம் பாடப் பாதம் சிலம்பு ஆர்க்க.", "படையார்தரு பூதப்பகடாருரி போர்வை உடையான்,", "பூதத்தின் படையினீர்.", "பூதம் சேர்ந் திசை பாடலர் ஆடலர்.", "பூதம் சூழப் பொலிந்தவன்.", "பூதங்கள் பலவுடைப் புனிதர்.", "பூதம் முன்னியல்புடைப் புனிதர்.", "பாரிடம் பாணி செய்ய.", "ஏதமில பூதமொடு கோதைதுணையாதிமுதல்.","பூதமொட்டியவர் புனைகழல்

தொழுதெழு புகழினர்.'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''பாடிளம் பூதத்தி னானும்.'', ''பூதம் சூழப் புலியுரி யதளனார்.'', ''பாடுடைப் பூதம் சூழ.'',''பூதங்கள் பாடி யாடல் உடையவன்.'',''பூதங்கள் பலவும் வைத்தார்'', ''பூதத்தின் படையர்.'', ''படைகொள் பூதங்கள்.'', ''பூதத் தான் என்பர்.'', ''பூதம் பாடநின் றாடும் புனிதனார்.'', ''பூத நாதனைப் பூம்புக லூரரனை.'', ''பூத நாயகன்.'' ''பரந்த பெரும்படைப் பூத நாதன்.'', ''பூத நாயகன் பொற் கயி லைக்கிறை.'', ''படையும் பூதமும்.'', ''பூத நாதன், புலியதள் ஆடையன்.'',''பூத நாயகன்புண்ணியமூர்த்தியே'' ''பூதங்கள் சூழப் புலித்தோல் வீக்கிப் புலியூர்ச் சிற்றம் பலமே புக்கார்.'', ''பசைந்த பலபூதத்தர்.'', ''பூதப் படை உடையார்.'', ''பூதப் படையுடையாய் போற்றி போற்றி.'', ''கருத்துடைய பூதப் படையார்.'', ''பூத கண நாதன் நீயே.'', ''சீரார்ந்த பூதம் சூழ.'', ''பூதப் படையாளிகாண்.'', ''குழுநற் பூதத்தான் காண்.'', ''பூதன்காண் பூதப் படை யி னான்காண்.'', ''புடைசூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப் புலியூர்ச் சிற்றம்பலத்தே நடமாடுவார்.'', ''பூதகணப் புடை சூழ வருவார்.'',''பூதப் படையாள் புனிதாபோற்றி.'', ''பாரிடங்கள் சூழ.'', ''தம்முடைய பூதம் சூழ'', ''பூத கணப் படையானை.'' ''பூதப் படையாள்புனிதர் போலும்.'', ''பொல்லாத பூதப்படையார் போலும்.'', ''பாரிடங்கள் பணி செய்யப் பலிகொண்டுண்ணும் பால்வணனை,'' ''பாரிடங் கள் உடன்பாடப் பயின்று நட்டம் பயில்வானை.'', ''சிறுகட் பூதம் சில பாடச் செங்கண் விடையொன் றூர்வான்.'', ''பூதப் படைகள் புடைசூழக் கொண்டார்.'', ''பாரிடங்கள் பலகருவி பயிலக் கொண்டார்.'', ''பூதம் தற்சூழ்ந் தனவோ.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''படைகள் ஏந்திப் பாரிடமும் பாதம் போற்ற.'', ''பூதம் பாடப் புரிந்து நட்டம் புவனி ஏத்த ஆட வல்லீர்.'', ''பூதம் தம்பால் பாட்டிக் கொண்டுண்பவர்.'', ''பூத ஆளிநின் பொன்னடி

அடைந்தேன்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 7-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'தலைவனாகிய கைலாச பதியின் வீரக்கழலைப் பூண்ட திருவடிகளை வணங்குவதற்கு வந்த நான்கு முகங்களைக் கொண்ட பிரம தேவன் உரிய காலம் அல்லாமையினால் திரும்பித் தன்னுடைய சத்திய லோகத்துக்குப் போக எண்ணியவன் பரிசுத்தத்தையும் பெருமையையும் பெற்ற கயிலாய மலையின் ஒளிவெள்ளத்தில் முழுகி ஒன்றாகிப் போன வெள்ளை நிறத்தைப் பெற்றதாகிய தன்னுடைய வாகனமாகிய அன்னப் பறவையையும் பார்க்க முடியாமல் சோர்வை அடைவான்., பாடல் வருமாறு:

**'' நாய கன்கழல் சேவிக்க நான்முகன்**
**மேய காலம் அலாமையின் மீண்டவன்**
**தூய மால்வரைச் சோதியின் மூழ்கிஒன்**
**றாய அன்னமும் காணா தயர்க்குமால்.''**

நாயகன்-தலைவனாகிய கைலாச பதியினுடைய. கழல் -வீரக் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகுபெயர். ஒருமை பன்மை மயக்கம். 'கழல்' இன்ன தென்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. சேவிக்க-வணங்கும் பொருட்டுக் கயிலாய மலைக்கு வந்த. நான் முகன்- நான்கு முகங்களைக் கொண்ட பிரமதேவன். முகன்: ஒருமை பன்மை மயக்கம். மேய - கைலாச பதியைத் தரிசிப்பதற்கு உரிய. காலம் - நேரம். அலாமையின்-அல்லாமையினால்; இடைக்குறை. மீண்டு- திரும்பி. அவன்-தன்னுடைய சத்தியலோகத்துக்குச் செல்ல எண்ணியவன். தூய - பரிசுத்தமானதும். மால் - பெருமையைப் பெற்றது மாகிய. வரை - கயிலாய மலை வீசும். சோதியின் -ஒளி வெள்ளத்துக்குள். மூழ்கி- -முழுகி. ஒன்றாய - ஒன்றாகிப் போன. அன்னமும் - தன்னுடைய வாகனமாகிய அன்னப்

பறவையையும. காணாது- பார்க்க முடியாமல். அயர்க்கும் சோர்வை அடைவான். ஆல்: ஈற்றசைநிலை.

பின்பு உள்ள 8 - ஆம் கவியின் கருத்து வருமாறு:

'தன்னுடைய செவிகளில் வெள்ளை நிறத்தைப் பெற்ற சங்கக் குழைகளை அணிந்தவனாகிய கைலாச பதியினுடைய வீரக்கழலைப் பூண்ட திருவடிகளை வணங்குவதன்பொருட்டு உயரமான திருவுருவத்தைக் கொண்ட திருமால் உரிய நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டு காத்திருந்ததையும் தெரிந்து கொள்ளாதவனாகி வெண்மையான ஒளிவெள்ளத்தை வீசும் கயிலாய மலையினுடைய அடிவாரத்தில் உள்ள ஒரு குகையில் துதிக்கையை உடையவனாகிய விநாயகப் பெருமானுடைய வாகனமாகிய மூஷிகத்தைப் பார்த்து வானத்தின்மேல் எழுந்து செல்லும் பழையவனும், சிவந்த கிரணங்களைப் பெற்றவனுமாகிய சூரியன் இன்றைக்கு வெள்ளை நிறத்தைக் கொண்ட நிலாவை வீசும் சந்திரனாகி விட்டான் என்று எண்ணி, அந்தக் கயிலாய மலையின் அடியில் தான் முன்காலத்தில் கொண்ட பன்றியினுடைய வடிவத்தைப் பெற்றவனாக மாறிக் கயிலாய மலையைத் தோண்டலானான் என்று எண்ணி அந்தத் திருமாலினுடைய வாகனமாகிய கருடன் அந்தப் பன்றியினிடம் வந்து சேர்வானானான்.' பாடல் வருமாறு:

**"காதில்வெண் குழையோன் கழல்தொழ நெடியோன்**
**காலம்பார்த் திருந்ததும் அறியான்**
**சோதிவெண் கயிலைத் தாழ்வரை முழையில்**
**துதிக்கையோன் ஊர்தியைக் கண்டு**
**மீதெழு பண்டைச் செஞ்சுடர் இன்று**
**வெண்சுட ரானதென் றதன்கீழ்**
**ஆதிஏ னமதாய் இடக்கலுற் றானென்**
**றதனைவந் தணைதரும் கலுழன்'.**

காதில்-தன்னுடைய செவிகளில்; ஒருமை பன்மை மயக்கம்.வெண்-வெள்ளை நிறத்தைப் பெற்ற. குழையோன் -சங்குக்குழைகளை அணிந்தவனாகிய கைலாசபதி; "குழை; ஒருமை பன்மை மயக்கம் காதிலங்குகுழையன்.", "குழையார் காதீர்.", "தோடுடையான் குழையுடையான்." "சங்கோடிலங்கத் தோடுபெய்து காதிலோர் தாழ்குழையான். "ஒளிர்சங்கக் குழையா.", "ஒருகாதில் தூயகுழை தாழ.","மன்னு காதில் குழையது.", "குழைநுழை திகழ்செவி யழகொடு.", "நலச்சங்க வெண் குழையும் தோடும் பெய்து.", "காதில் மிளிரும் குழையர்.", "தோடுடையார் குழைக்காதில்.", "சங்கவெண் குழைச் செவியன்.", "தோடிலங்கு குழைக்காதர்.", "சங்கணி குழையினர்.", "குழையொர் காதினிற் பெய்துகந்து,", "ஒருகாது சேர்ந்த குழையான்.", என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், "சங்கணி குழையும் வைத்தார்.", "குழைத் திகழ் காதினன்.", "குழைகொள் காதினர்:", "காதார் குழையினர்.", "கொள்ளைக் குழைக்காதில்.", "காதிசைந்த சங்கக் குழை யினான்காண்.", "குழையார் திருத் தோடுகாதிற்கண்டேன்.", "குழையாட நடமாடும் கூத்தன்.", என்று திருநாவுக்கரசு நாயனாரும், "குழைத்தழுவு திருக் காதில்.", "குழைவளர் காதுகள் மோத நின்றுகுனிப் பதே.", "குண்டலம் குழைதிகழ் காதனே.", "குழைகொள் காதன் குழகன்.", "குழைகாதத் கடிமைக்கட் குழையாதார் குழை வென்னே.", "குழைவிரவு வடிகாதா." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "குழையும் சுருள்தோடும்." என்று மாணிக்க வாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

கழல்- வீரக்கழலை அணிந்த திருவடிகளை, ஆகுபெயர். தொழ- வணங்குவதற்காக, நெடியோன்—உயரமான திருவுருவத்தைக் கொண்ட திருமால். காலம்—கைலாசபதியைத் தரிசிப்பதற்கு உரிய காலத்தை, பார்த்து- எதிர் பார்த்துக் கொண்டு. இருந்ததும்—காத்திருந்ததையும். அறியான்- தெரிந்து கொள்ளாதவனாகி; முற்றெச்சம்.

சோதி- ஒளிவெள்ளத்தை வீசும், வெண்—வெண்மை நிறத்தை உடைய வெள்ளியாலாகிய. கயிலை- கயிலாய மலையினுடைய. தாழ்வரை- அடிவாரத்தில் உள்ள. முழை யில்—ஒரு குகையில். துதிக்கையோன்-துதிக்கையை உடைய வனாகிய விநாயகப் பெருமானுடைய. ஊர்தியை- வாகன மாகிய மூஷிகத்தை. க்:சந்தி. கண்டு—பார்த்து. மீது— ஆகாயத்தின்மேல். எழு- உதயமாகிச் செல்லும். பண்டை—பழமையைப் பெற்ற. ச்:சந்தி. செஞ்சுடர்- சிவந்த சூரியன். இன்று- இன்றைக்கு. வெண்சுடர்- வெண்மை நிறத்தைப் பெற்ற சந்திரனாக. ஆனது— ஆகி விட்டது. என்று—என எண்ணி. அதன்கீழ்-அந்தக் கயிலாய மலையின் அடியில். ஆதி—தான் முன்காலத்தில் எடுத்த, ஏனமதாய்—பன்றியின் வடிவமுடையவனாய்; அது: பகுதிப்பொருள் விகுதி. இடக்கலுற்றான்— தோண்ட லானான். என்று- என எண்ணி, கலுழன்—திருமாலி னுடைய வாகனமாகிய கருடன். அதனை - அந்தப்பன்றி யினிடம்; உருபுமயக்கம். வந்து அணைதரும்- வந்து சேர்வான்.

பிறகு உள்ள 9-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'தேவலோகத்துப் பெண்மணிகள் நடனம் ஆடும் போது கொட்டப்படும் மத்தளத்தின் ஒலியோடு கயிலாய மலையின் பக்கத்தில் அந்த மலையிலிருந்து குதிக்கும் அருவி கள் எதிருக்கு எதிரில் முழக்கத்தைச் செய்ய, கைலாச பதி யினிடம் வரத்தைப் பெறும் விருப்பத்தைக் கொண்ட உள்ளங்களோடு தெய்வத் தன்மையைக் கொண்டவையும், தேன் நிரம்பியவையும் ஆகிய கற்பக மரத்தில் மலர்ந்த மலர்களைத் தங்களுடைய இரண்டு கைகளிலும் எடுத்துக் கொண்டு இடையீடு இல்லாமல் எப்போதும் விமானத்திற் குப் போகும் படிக்கட்டுக்களாகிய மிகவும் உயர்ந்த வழியில் ஏறி இந்திரன் முதலாகும் தேவர்கள் வாழ்த்திக் கைலாச

பதியை வணங்க, அந்த அழகிய திருக்கயிலாய மலையினுடைய வெளிப்பக்கம் விளங்குவதாக இருக்கும்." பாடல் வருமாறு:

"அரம்பையர் ஆடல் முழவுடன் மருங்கில்
அருவிகள் எதிரெதிர் முழங்க
வரம்பெறு காதல் மனத்துடன் தெய்வ
மதுமலர் இருகையும் ஏந்தி
நிரந்தரம் மிடைந்த விமானசோபான
நீடுயர் வழியினால் ஏறிப்
புரந்தரன் முதலாம் கடவுளர் போற்றப்
பொலிவதத் திருமலைப் புறம்பு."

அரம்பையர் - தேவலோகத்துப் பெண்கள். ஆடல்-நடனம்ஆடும்போது கொட்டப்படும். முழவுடன்—மத்தளத்தின்சத்தத்தோடு; ஆகுபெயர். மருங்கில்- கைலாயமலையின் பக்கத்தில். அருவிகள்—அந்த மலையிலிருந்து குதிக்கும்அருவிகள். எதிர் எதிர்— எதிருக்கு எதிராக. முழங்க— முழக்கத்தைச் செய்ய. வரம்—கயிலாச பதியிடம் வரத்தை. பெறு—பெற்றுக் கொள்ளும். காதல்-விருப்பத்தைக் கொண்ட. மனத்துடன்— உள்ளங்களோடு; ஒருமை பன்மை மயக்கம். தெய்வ— தெய்வத் தன்மையைப் பெற்றவையும். மது—தேன் நிரம்பியவையும் ஆகிய. மலர்— கற்பக மரத்திலிருந்து பறித்த மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். இரு— தங்களுடைய இரண்டு. கையும்—கைகளிலும்; ஒருமை பன்மை மயக்கம். ஏந்தி— எடுத்துக் கொண்டு. நிரந்தரம்— இடையீடு இல்லாமல் எப்போதும். மிடைந்த— நெருங்கிய விமான— கோபுரத்துக்குப் போகும். சோபானம்— படிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். நீடு— நீளமான. உயர்- உயரமான. வழியினால்— வழியில்; உருபு மயக்கம். ஏறி-மேலே ஏறி. ப்: சந்தி. புரந்தரன்— இந்திரன். முதலாம். முதலாக இருக்கும். கடவுளர்— தேவர்கள். போற்ற—

கைலாச பதியை வாழ்த்தி வணங்க. அ— அந்த. ந்: சந்தி. திரு- அழகிய. மலை—கயிலாய மலையின். புறம்பு-வெளியி யில் உள்ள இடம். பொலிவது- விளங்குவது ஆகும்

பிறகு உள்ள 1[illegible]-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு'

'இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் எப்போதும் ஓதிக் கொண்டிருக்கும் நான்கு முகங்களைப் பெற்ற பிரம தேவன் திருமால் இந்திரன் முதலாக இருக்கும் கணக்கு இல்லாத தேவர்களும், பிறரும் கைலாச பதியைத் தரிசித்து வணங்கும் விருப்பத்தோடு நெருங்கியுள்ள முதலில் உள்ள பெரிய வாசலாக இருக்கும் ஒளி வீசும் மாணிக்கங்களைப் பதித்த கோபுர வாசலில் இருப்பவர், பூதங்கள், வேதாளங்கள், பெருமையைப் பெற்ற சிவகணத் தலைவர்கள் ஆகியவர்கள் வாழ்த்தி வணங்க நடன சபையில் நின்று கொண்டு திருநடனம் புரிந்தருளும் தலைவரும் எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவரும் ஆகிய கைலாச பதி எழுந்தருளியுள்ள ஆலயத்துக்குத் தலைவா நந்தி தேவராகிய எம் பெருமான்.'' பாடல் வருமாறு

" வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம்
விண்ணவர் எண்ணிலார் மற்றும்
காதலால் மிடைந்த முதற்பெருந் தடையாம்
கதிர்மணிக் கோபுரத் துள்ளார்
பூதவே தாளப் பெருங்கண நாதர்
போற்றிடப் பொதுவில் நின்றாடும்
நாதனார் ஆதி தேவனார் கோயில்
நாயகன் நந்தியெம் பெருமான்,''

வேத-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர் வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் எப்போதும் ஓதிக்கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். நான்

முகன்-நான்கு முகங்களைப் பெற்ற பிரமதேவன்; முகன்: ஒருமை பன்மை மயக்கம். மால்-திருமால். புரந்தரன்-இந்திரன். முதலாம்-முதலியவர்களாகும்; விண்ணவர்-தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எண்-கணக்கு. இலார்-இல்லாதவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். இலார்; இடைக் குறை. மற்றும்-வேறாக உள்ளவர்களும்; திணை மயக்கம். காதலால்-கைலாச பதியைத் தரிசித்து வணங்கும் விருப்பத்தோடு; உருபுமயக்கம். மிடைந்த - நெருக்கமாகக் கூடியுள்ளதாகிய. முதல் - முதலில் உள்ள. பெரும் - பெருமையைப் பெற்றிருக்கும். தடையாம் - வாசலாகும். கதிர் - ஒளியை வீசும். மணி - மாணிக்கங்களைப் பதித்த; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கோபுரத்து-கோபுர வாசலில். உள்ளார் - இருப்பவர். பூத - பூதங்களும்; ஒருமை பன்மை மயக்கம். வேதாள - வேதாளங்களும்; ஒருமை பன்மை மயக்கம். பெரும்-பெருமையை அடைந்திருக்கும். கண - சிவகணங்களின்; ஒருமை பன்மை மயக்கம். நாதர் - தலைவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். போற்றிட-வாழ்த்தி வணங்கும் வண்ணம். ப்; சந்தி. பொதுவில் - நடன சபையில். நின்று - நின்று கொண்டு. ஆடும் - திருநடனம் புரிந்தருளும். ஆதி - எல்லாத் தேவர்களுக்கும் முதல்வராகிய; திணை மயக்கம். தேவனார் - தேவராகிய கைலாச பதியார். கோயில்-எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக்கு. நாயகன் - தலைவனாக விளங்குபவன். நந்தி-திருநந்திதேவனாகிய. எம்பெருமான் - அடியேங்களுடைய தலைவன்; இது சேக்கிழார் தம்மைக் கூறிக்கொண்டது.

கணநாதர் சூழ இருத்தல்: "பூதமும் கணமும் சூழ." என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளியதைக் காண்க.

ஆதி தேவனார்: "ஆதி பகவன்" என்று திருவள்ளுவரும், "தேவர்கள் தேவர்" "தேவர் தேவர் திரி

சூலத்தர்.'', ''தேவர்கள் தேவரோ.'', ''ஆதி எங்கள் பெருமான்'', ''ஆதி ஆரூர்'', ''ஆதி சேவடி அடைந் தனம்.'', ''வெண்ணீ றணிந்திட்ட எம் ஆதியை'', ''கருவூரானிலை ஆதியார்.''. ''ஆதியான் உறை ஆடானை.'', ''ஆதி அடியைப் பணிய.'', ''வீழிம்மிழலை விரும்பிய ஆதியை'', ''திருக் கோட்டாற்றுள் ஆதியை'', ''வெண்காடு மேவிய ஆதியை'' ''ஆதியாய்க் கிடமாய சிற்றம்பலம்.'', ''அந்தமாய் உலகாதியும் ஆயினான்.'', ''கருக்குடியார் ஆதியை'', ''ஆதிஎமை ஆளுடை அரிவையோடு பிரிவிலி'', ''ஆதியந்தம் ஆயினாய் ஆல வாயில் அண்ணலே'', ''ஆரூர் ஆதியானை.'', ''ஆதி ஆரூர் எந்தை'', ''ஆதி உன்னை அல்லால் அடையா தென் ஆதரவே.'', ''ஆதியன் ஆதிரையன்'', ''அந்த முதலாதி பெருமான்'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''அளக்க லாகா ஆதியை'', ''ஆதியும் அறிவுமாகி'', ''அண்டமாய் ஆதியாய் முன்னெறி யாகிய முதல்வன்'', ''தேவர்கள் தேவர்போலும்'', ''ஆதியாய் அந்த மானார்'', ''ஆதி ஆரூர் ஆதிரை நாளால்'', ''ஆதியும் ஈறும் ஆனார்'', ''ஆதியே அலந்து போனேன்'', ''மூவர்க்கும் முதல்வர்.'', ''ஆதியே ஆலவாயில் அப்பனே'', ''ஆதியும் அந்தமும் ஆனார்.'' ''குமரன்காண் ஆதியான் காண்'', ''ஆதியாய் அந்தமாய் நின்றான்'', ''ஆதித்தன் பல் லிறுத்த ஆதி'', ''அலைபுனல்சேர்செஞ்சடைஎம் ஆதி'', ''வானோர்க் கெல்லாம் அதிபதியே ஆரமுதே ஆதீ'', ''போற்றுவார்கள் ஆதியனை'', ''அமரர்களுக்கருள் செய்யும் ஆதி'', ''அனலங்கை ஏந்திய ஆதி'', ''ஆதிக் கயிலாயன் நீயே'', ''ஒரிருவர் அறியா வண்ணம் ஆதியும் அந்தமு மாகி'', ''ஆதியன்காண் அண்டத்துக் கப்பா லான் காண்'', ''அரனை ஆதிப் புத்தேளை'': ''ஆதி புராணனாய் நின்றாய் நீயே'', ''ஆதிபுராணனாய் நின்றாய் போற்றி'', ''ஆதியனை எறிமணியின் ஓசை-

யானை'', ''அயனொடுமால் அறியாத ஆதியானை'', ''விண்ணோர்க் கெல்லாம் ஆதியனை'', ''அந்தமும் ஆதியுமாகி'' செம்பொனின் அம்பலத் தாதியை'', ''ஆதியாகி நின்றார் அன்னி யூரரே'', ''திரு வீழியுள் ஆதியே'', ''ஆதி ஆவடு தண்டுறை மேவிய சோதியே'', ''ஆதி சேவடிக்கீழ் நாம் இருப்பதே'', ''ஆதியான் அண் . வாணர்க்கருள் நல்கும் நீதியான்'', ''ஆதியார் அயனோ டமரர்க்கெலாம்'', ''சங்கரன் ஆதியை'', ''ஆதி பாதம் அடைய வல்லார்களே'', ''ஆதிநாதன் அமரர்கள் அர்ச்சிதன்'' ''ஆதி நாதன் அடல்விடை மேலமர் பூத நாதன்'', ''ஆதி நாயகன் அண்டர்கள் நாயகன்'', ''ஆதியும் அரனாய்'', ''ஆதியானை அமரர் தொழப்படும் நீதியானை'' ஆதி யாயவன் ஆரும் இலாதவன்'', ''ஆதி நாயகன் ஆதிரை நாயகன்'', ''மூலா முதலாய மூர்த்தி'', ''முதலவா போற்றி'' ''அண்டத்துக் கப்புறத்தான் ஆதியான்'', ''ஆரூர் ஆதி'', ''நஞ்சை அமுதாக உண்டானை ஆதியானை'' என்று திருநாவுக்கரசு நாயனாரும்', ''வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் ஆதீ'', ''ஆதியே அற்புதனே'', ''திருவாவடுதுறையுள் ஆதியே'', ''வெண்ணீறணிந்திட்ட ஆதி'', ''கூடலை யாற்றூர் ஆதி'', ''ஆதியன் ஆதிரையன்'', என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''ஆதியனே அந்தம் நடுவாகி அலலானே'', ''அருந்தவர்க் கருளும் ஆதி வாழ்க.'', ''ஆதி போற்றி அறிவே போற்றி.'', ''ஆதி திறம்பாடி'', ''சொல்லுதற்கரிய ஆதியே.'', ''நிரந்தரமாய் நின்ற ஆதி.'', ''குருந்தம் மேவிய சீர் ஆதியே.'', ''அண்டரண்டமாய் நின்ற ஆதியே.'', ''ஆதி முதற் பரமாய பரஞ்சுடர்,'', ''ஆதி எனக்கருளியவா றார்பெறுவார் அச்சோவே'' என்று மாணிக்க வாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 11-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

"தங்களுடைய நெற்றிகளில் ஒற்றைக் கண்களை உடையவர்களும், நான்கு பெரிய தோள்களைப் பெற்றவர்களும், விபூதியைப் பூசிக்கொண்ட திருமேனிகளைக் கொண்டவர்களும் ஆகிய பலருக்கும், இடப வாகனத்தின்மேல் ஏறியருளிய கைலாசபதியாருடைய அடியவர்களுக்கும், பின்னிய சடாபாரத்தைத் தம்முடைய தலையிற் கொண்ட கைலாசபதியினுடைய திருவருளைப் பெறும்பொருட்டு வந்தவர்களுக்கும், ஏனையவர்கள் யாவருக்கும் தலைமைப் பதவியை வகிக்கும் வேலையும், தம்முடைய செந்தாமரை மலர்களைப் போன்ற கரங்களில் உடைவாளும், பிரம்பும், கற்றையாக நீண்ட சடாபாரத்தையுடைய தலையும் மேற் பெற்ற கைலாசபதி வழங்கிய திருவருளினால் பெற்று விளங்குகிறவனுமாகிய நந்தியெம்பெருமான் காவல் புரிவது அந்தக் கயிலாயம் என்று பெருமையைப் பெற்ற மலை.' பாடல் வருமாறு :

**''நெற்றியிற் கண்ணர் நாற்பெருந் தோளர்**
**நீறணி மேனியர் அனேகர்**
**பெற்றமேற் கொண்ட தம்பிரான் அடியார்**
**பிஞ்ஞகன் தன்னருள் பெறுவார்**
**மற்றவர்க் கெல்லாம் தலைமையாம் பணியும்**
**மலர்க்கையில் சுரிகையும் பிரம்பும்**
**கற்றைவார் சடையான் அருளினால் பெற்றான்**
**காப்பதக் கயிலைமால் வரைதான்.''**

நெற்றியில்—தங்களுடைய நெற்றிகளில்; ஒருமை பன்மை மயக்கம். கண்ணர்-ஒற்றைக் கண்களைப் பெற்றவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். நால்-நான்கு. பெரும்—பெரிய, தோளர்-தோள்களைக் கொண்டவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். நீறு-விபூதியை. அணி—பூசிக்கொண்ட, மேனியர்-திருமேனிகளைப் பெற்

றவர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். அனேகர்-பலருக்கும். பெற்றம் - இடபவாகனத்தின், மேற்கொண்ட-மேலே ஏறிக்கொண்டு செலுத்தும். தம்பிரான் -தலைவனாகிய கைலாசபதியினுடைய. அடியார்-அடியவர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். பிஞ்ஞகன் தன்-பின்னிய சடாபாரத்தைத் தன்னுடைய தலையில் மேற்கொண்ட கைலாசபதியினுடைய; தன்: அசைநிலை. அருள்-திருவருளை, பெறுவார்-பெற வந்தவர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். மற்றவர்க்கு-வேறாக உள்ளவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-ஆகிய யாவருக்கும், தலைமையாம்-தலைமைப் பதவியாகும். பணியும்-வேலையையும், மலர்-செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். க்; சந்தி கையில்-தம்முடைய திருக்கரங்களில்; ஒருமை பன்மை மயக்கம். சுரிகையும் - உடைவாளையும், பிரம்பும் - பிரம்பையும், கற்றை - தொகுதியாகிய, வார் - நீளமான, சடையான் - சடாபாரத்தைத் தன்னுடைய தலையின்மேற் கொண்ட கைலாசபதி, அருளினால்-வழங்கிய திருவருளினால், பெற்றான்-பெற்றவனாகிய நந்தியெம் பெருமான், காப்பது-காவல் புரிந்து நிற்பது. அ-அந்த, க் : சந்தி, கயிலை-கயிலாயம் என்னும், மால்-பெருமையைப் பெற்ற, வரை-மலை, தான் : ஈற்றசைநிலை.

இந்தப் பாடலில் கூறப்பெற்றவர்கள் சிவகண நாதர்கள்.

கற்றைவார் சடையான் : "நீட வல்ல வார்சடையான்.", "நீடிரும் சடை.", "கற்றைச் சடையது.", "ஈரவார் சடை.", "நீர்கொள் நீள்சடை.", "துன்று வார்சடை.", "பேழை வார்சடை.", "மதிமல்கு வார் சடை.", "எரிதருவார் சடையானும்.", "நீள் சடை மதியொடு பாம்பணி கருத்தனார்.", "கங்கை யோர் வார்சடைமேல் அடைய." என்று திருஞான சம்பந்த

மூர்த்தி நாயனாரும், "பெருந்தாழ் சடைமுடி.", "பின்னுவார் சடையான்.", "ஆற்ற நீள்சடை.", "சடை நீள்முடிச் சங்கரன்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "கங்கைவார் சடையாய்.," என்று சுந்தர மூர்த்தி நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பின்பு உள்ள 12-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'தங்களுடைய கைகளில் மானையும் மழுவையும் ஏந்தியவர்கள்; கங்கையாறு உலாவும் சடாபாரத்தில் ஒளியை வீசும் இளைய பிறைச் சந்திரனாகிய நறுமணம் கமழும் கண்ணியைப் பெற்றவரும், அழகை உடைய வரும் ஆகிய கைலாசபதியார் அமர்ந்திருக்கும் இயல் பாலும், அளத்தற்கு அருமையாக உள்ள பெருமை யாலும் தங்களுடைய திருமேனிகளில் தழைத்து ஓங்கி யிருக்கும் பரிசுத்தத்தாலும், வெற்றியையும் வெண் கொற்றக் குடையையும் பெற்றவனாகிய அநபாயச் சோழ மாமன்னனாகிய செங்கோலைப் பிடித்த அபயனு டைய அழகிய திருவுள்ளத்தில் ஓங்கி விளங்கும் அழகிய கயிலாயமாகிய உயரமான மலை.' பாடல் வருமாறு :

**"கையில்மான் மழுவர் கங்கைசூழ் சடையில்**
**கதிரிளம் பிறைநறும் கண்ணி**
**ஐயர்வீற் றிருக்கும் தன்மையி னாலும்**
**அளப்பரும் பெருமையி னாலும்**
**மெய்யொளி தழைக்கும் தூய்மையி னாலும்**
**வென்றிவெண் குடைஅந பாயன்**
**செய்யகோல் அபயன் திருமனத் தோங்கும்**
**திருக்கயி லாயநீள் சிலம்பு."**

கையில்-தம்முடைய திருக்கரத்தில், மான்-மான் குட்டியையும், மழுவர்-மழுவையும் பெற்றவரும், கங்கை-கங்கையாறு, சூழ்-உலாவும், சடையில்-தம்முடைய தலையில் விளங்கும் சடாபாரத்தில், கதிர்-ஒளியை வீசும், இளம்-இளமையான, பிறை-பிறைச் சந்திர

னாகிய, நறும்-நறுமணம் கமழும், கண்ணி-கண்ணியை அணிந்தவரும் ஆகிய. ஐயர்-அழகைப் பெற்ற கயிலாசபதியார், வீற்றிருக்கும்-எழுந்தருளியிருக்கும், தன்மையினாலும்-இயல்பாலும், அளப்பரும்-அளவிடுவதற்கு அருமையாக இருக்கும் பெருமையினாலும்-பெருமையோடு விளங்குவதாலும், மெய்-உண்மையான, ஒளி-பிரகாசம், தழைக்கும்-தழைத்து ஓங்கியிருக்கும், தூய்மையினாலும்-பரிசுத்தத்தாலும், வென்றி-வெற்றியைப் பெற்றவனும்; திணை மயக்கம், வெண்குடை-வெண்கொற்றக் குடையைப் பிடித்தவனும்; திணை மயக்கம், அநாபயன்-ஆகிய அநபாயச் சோழ மன்னனாகிய, செய்யகோல்-செங்கோலைச் செலுத்தி ஆட்சி புரியும், அபயன்-அபய குலசேகர மன்னனுடைய, திரு-அழகிய, மனத்து-திருவுள்ளத்தில், ஓங்கும்-சிறந்து ஓங்கி நிற்கும், திரு-அழகைப் பெற்ற, க்: சந்தி, கயிலாய-கயிலாயமாகிய, நீள்-உயரமான, சிலம்பு-மலை.

பிறைக்கண்ணி: "திங்கட் கண்ணியர்", "செஞ்சடை மதியக் கண்ணியான்.", "விண்ணார் திங்கட் கண்ணி சூடி.", "பால்மதிக் கண்ணியார்.", "விண்ணியங்கு மதிக் கண்ணியான்", "கண்ணிதானும் ஓர் பிறையார்." "பிறைக் கண்ணியர்." என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், "மாதர்ப் பிறைக்கண்ணியானை" "போழிளங் கண்ணியினானை," "எரிப்பிறைக் கண்ணியினானை". "பிறையிளங்கண்ணியினானை", "ஏடு மதிக் கண்ணியானை", "தண்மதிக் கண்ணியினானை." "கடிமதிக் கண்ணியினானை." "விரும்புமதிக் கண்ணியானை," "முற்பிறைக் கண்ணியினானை.", "திங்கள் மதிக் கண்ணியானை." "வளர்மதிக் கண்ணியினானை." "மதியங்கண்ணி ஞாயிற்றை.", "திங்களார் கண்ணித்தொத்த சடையர்.", "கண்ணியும் தண்மதி" "பிறையரவக் குறுங்கண்ணிச் சடையினான்.", "நளிர் வெண் திங்கட் கண்ணியனை.", "முற்றாத வெண்

திங்கட் கண்ணியானை.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''திங்கட் குறுந்தெரியல் திகழ்கண்ணியன்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அழகைப் பெற்றவர்: ''எழிலார்தரும் இறைவர்க்கு,'', ''ஏரார் தரும் இறைவர்க்கு.'', ''அழகன் அன்னியூர்க் குழகன்.'' ''எழிலினர் உறைஇடை மருதினை.'' ''வெண்நாவலின்மேவியஎம் அழகா.'', ''ஏரினார் எமதுச்சியாரே.'', ''முழங் கெரியாடும் அழகன்.'', ''கணம் ஏத்த ஆடிய அழகன்.'' ''நாகேச்சரத் தழகர்.'', ''அழகரை அடிகளை.'', ''கருகாவூர் எம் அழகர்.'' என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், '' எழிலார் இராச சிங்கத்தை.'', ''யானையின் தோல் மலைமகள் வெருவப் போர்த்த அழகனே.''. ''அழகனே ஆலவாயில் அப்பனே.'', ''அழகனை நினைந்த நெஞ்சம் அழகிதாம்'', ''அழகன் அடிநிழற் கீழ்தன்றோ என்றன் ஆருயிரே.'', ''காலனைச் சாடிய அழகனே.'', ''அழகன் ஆவடுதண்டுறையா.'', ''அழகனே கழிப்பாலை எம் அண்ணலே.'', ''ஐயனே அழகே.'', ''ஆமாத்தூர் அழகனை.'', ''ஆமாத்தூர் அழகனை நெஞ்சினால் நினைந்தேன்.'', ''சாந்த வெண்ணீறணி அழகர்.'', ''திருநாரையூர் அடிகள் தம்வடி வம்ம அழகிதே.'', ''ஆல நிழல்அமர்ந்த அழகனார்.'' சேறையிற், செங்நெறி மேவிய அழகனார்.'', ''அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே.'', ''அங்கைத் தீயர் அழகர்.'', அழகனை ஆரூரில் அம்மான்றன்னை'', ''அணியாரூர் இடம்கொண்ட அற்றா'', ''ஆனேன் தேறும் அழகர்.'', ''ஆறணிந்த கடர்மகு இடத்தழகர்.'' ''தில்லை அம்பலத்துள் நடமாடும் அழகன்.'' ''எழிலானை இடைமருதின் இடம்கொண்டானை.'' ''அரவசைத்த அழகன்.'', ''கருமணிபோற் கண்டத்தழகன்.'', ''அக்கினொடும் என்பணிந்த அழகன்'',

"பலிதிரியும் அழகர்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், "வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அழகர்.'', "அழகார் திருப்புத்தூர் அழகனீரே.'', "ஐவாய் அரவினை மதியுடன் வைத்த அழகா.'', "சங்கக் குழையார் செவியா அழகா.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், "சுந்தர வேடத் தொருமுதல் உருவுகொண்டு.'', "சுந்தரத் தன்மையொடு துனதந் திருந்தருளியும்.'', "அருமையில் எளிய அழகே போற்றி.'', "நித்தமணாளர் நிரம்ப அழகியர்.'' என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 13 - ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"அத்தகைய திருக்கயிலாய மலையினுடைய அடி வாரமாகிய இடத்தில் இத்தகைய இயல்பைப் பெற்றவன் என்று தெரிந்து கொள்ள முடியாத சிவபெருமானாகிய கயிலாச பதியையே தெரிந்து கொண்டு பேரன்பு தழைத்து ஓங்கியிருப்பவன் நினைப்பதற்கு அருமையாகிய கீர்த்தியை அடைந்த உபமன்னிய முனிவன்.'' பாடல் வருமாறு:

**"அன்ன தன்திருத் தாழ்வரை யின்இடத்**
**தின்ன தன்மையன் என்றறி யாச்சிவன்**
**தன்னை யேஉணர்ந் தார்வம் தழைக்கின்றான்**
**உன்ன ரும்சீர் உபமன் னியமுனி.''**

அன்னதன் — அத்தகைய கயிலாய மலையில் உள்ள. திரு — அழகிய த் : சந்தி, தாழ்வரையின் — அடிவார மாகிய, இடத்து — இடத்தில், இன்ன — இத்தகைய, தன்மையன் — இயல்பைப் பெற்றவன், என்று — என அறியா — தெரிந்து கொள்ள முடியாத, ச் : சந்தி, சிவன்தன்னையே — சிவபெருமானாகிய கயிலாச பதியையே, தன் : அசைநிலை, உணர்ந்து, தெரிந்து கொண்டு, ஆர்வம் — பேரன்பு. தழைக்கின்றான் — தழைத்து ஓங்கிச் சிறப்பை அடைந்து நிலையாக நிற்

கிறவன், உன்னரும் — நினைப்பதற்கு அருமையாக இருக்கும் சீர்-சீர்த்தியை அடைந்த. உபமன்னிய முனி — உபமன்னிய முனிவன்.

இன்ன தன்மையன் என்றறியாச் சிவன்: "ஆயாதன சமயம்பல அறியாதவன்.", "கோலம் முடி நெடுமாலொடு கொய்தாமரை யானும் சீலம் அறி வரிதாய்.", "மருளார் தருமாயன் அயன் காணார்.", "நல்லம்மலர் மேலானொடு ஞாலம்மது உண்டான் அல்லரென ஆவரென நின்றும்அறிவரிய... செல்வர்.", "அயனொடும் எழிலமர் மலர்மகள் மகிழ் கணன் அளவிடல் ஒழியவொர்.", "அணிமலர்மகள் தலைமகன் அயன் அறிவரியதொர் பரிசினில்... அமர்தரு பரமனே.", "நாற்ற மலர்மேல் அயனும் நாகத்தில் ஆற்றவணை மேலவனும் காண்கிலா... குழகன்.", "ஆற்றலுடைய அரியும் பிரமனும் தோற்றம் காணா வென்றிக் காழியார்.", "காரார் வண்ணன் கனகம் அனையானும் தேரார்.", "நாடவல்ல மலரான் மாலுமாய்த் தேட நின்றார்.", "உம்பராலும் உலகின் னவராலும் தம்பெருமை அளத்தற்கரியான்.", "ஆழியானும் அலரின் உறைவானும் ஊழி நாடி உணரார்.", "சங்கக்கயனும் அறியாமைப் பொங்கும் சுடரானவர்.", "ஞாலத்தை நுகர்ந்தவன்தானும் கோலத்தயனும் அறியாத சிலத்தவன்.", "நெடியான் நான்முகனும் நிமிர்ந்தானைக் காண்கிலார்.", "மாவினோடு மவரினானும் வந்தவர் காணாது.", "இயங்குகின்ற இரவிதிங்கள் மற்றுகற்றேவரெலாம் பயங்களாலே பற்றி நின்பாற் சித்தம் தெளிகின்றிலர்.", "இடந்து மண்ணை உண்ட மாலும் இன்மவர்மேலயனும் தொடர்ந்து முன்னம் காண மாட்டார்.", "ஞாலம் உண்ட மாலும் மற்றை நான்முகனும் அறியாக் கோலம்.", "இருவர் தேவரும் தேடித் திரிந்தினி ஒருவரால் அறிவொண்ணிலன்.", நாணமுடை வேதியனும் நாரணனும் நண்ணவொ

ணாத் தாணு.”, “கட்டார் துழாயன் தாமரையான் என்றிவர் காண்பரிய சிட்டார்.”, “மண்டான் முழுதுண்ட மாலும் மலர்மிசை மேலயனும் எண்டான் அறியா வண்ணம் நின்ற இறைவன்.”, “தேடிக் காணார் திருமால் பிரமன் தேவர் பெருமானை.”, “அந்திமாதி அயனும் மாலும் ஆர்க்கும் அறிவரியான்.”, “நெடியான்நீள் தாமரைமேல் அயனும் தேடிக் காண்கில்லாப் படியாம் மேனி உடையான்.”, “கோணா கணையானும் குளிர்தா மரையானும் காணார்.”, “மாலும் பிரமனும் அறியா மாட்சியான்.”, “வண்ண மலரானும் வையம் அளந்தானும் நண்ண லரியானை.”, “கண்ணன் கடிக்கமல மலர்மேல் இனிதுறையும் அண்ணற் களப்பரிதாய் நின்று.”, “இருவர் அறியாத ஒருவன்.”, “மீத்திக ழண்டம் தந்தயனோடு மிகுமாலும் மூர்த்தியை நாடிக் காணவொணாது முயல்விட்டு”, “தாதலர் தாமரைமேல் அயனும் திருமாலும் தேடி ஓதியும் காண்பரியான்.”, உமைகே “நீரின் மிசைத் துயின்றோன் நிறைநான் முகனும் அறியாதன்று தேரும் வகை நிமிர்ந்தான்.”, “செம்பொனின் மேனியனாம் பிரமன் திருமாலும் தேட நின்ற அம்பவளத் திரள்போல் ஒளியாய ஆதிபிரான்.”, “தாமரை மேலயனும் அரியும் தமதாள்வினையால் தேடிக் காமனை வீடுவித்தான் கழல் காண்பிலராய் அகன்றார்.”, “அடிமுடி காண்கிலர் ஓரிருவர்.”, “சங்களவிய கையன் சதுர்முகனும் அங்களவறிவரியவன்.”, “சிறியவர் சிந்தை செய்ய அரியவன்.”, “தனமணி தையல் தன்பாகன் தன்னை அனமணி அயன் அணி முடியும் காணான் பணமணி அரவரி பாதம் காணான்.”, “நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாது செய்து தோற்றமுடைய அடிமுடியும் தொடர்வரியீர்.”, “அடியிணை கண்டிலன் தாமரையோன் மால்முடி கண்டிலன்.”, “வரியாயு மலரானும் வையந்தன்னை உரிதாய அளந்தானும்

உள்ளுதற்கங் கரியானும்.'', ''மருதிடை நடவிய மணி வணர் பிரமரும்...கருதிட வரியதொ ருருவொடு.'', ''அரியொடு மலரவன் எனஇவர் அடிமுடி தெரிவகை அரியவர்.'', ''தேனமர் தருமலரணை பவன்வலி மிகும் ஏனைதாய் நிலம் அகழ் அரி அடிமுடி தானணையா உரு உடையவன்.'', ''அன்றிய வுருவுகொள் அரி அயன் எனுமவர் சென்றள விடலரியவன்.'', ''முந் நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை.'', ''பூமகள் தன்கோன் அயனும் புள்ளி னொடு கேழல்உரு வாகிப் புக்கிட் டாமளவும் சென்று முடிஅடி காணாவகை நின்றான்.'', ''மேலோடி விசும்பணவி வியனிலத்தை மிக அகழ்ந்து மிக்கு நாடும் மாலோடு நான்முகனும் அறியாத வகை நின்றான்.'', ''பூவார் பொற்றவிசின்மிசை இருந்தவனும் பூந்துழாய் புனைந்த மாறும் ஓவாது கழுகேனமாய் உயர்ந்தாழ்ந்துற நாடி உண்மை காணாத் தேவாரும் திருவுருவன்'', ''காணுமாறரிய பெருமானாகி'', ''செந் தளிர்மா மலரோனும் திருமாலும் ஏனமோ டன்னமாகி அங்கம்அடி காணாதே'', ''நாற்ற மாமல ரானொடு மாலுமாய்த் தோற்றமும் அறியாதவர்'', ''கண்ணன் வண்ண மலரானொடும் கூடியோர்க் கையமாய் எண்ணும் வண்ணம் அறியாமை எழுந்ததோர் அழல் அண்ணல்'', ''ஓதியாரும் அறிவார் இல்லை'', ''மாலும் சோதி மலரானும் அறிகிலா வாய்மையான்'', ''மாலி னோடரு மாமறைவல்ல முனிவனும் கோலினார் குறுகச் சிவன் சேவடி கோலியும் சிலம் தாமறியார்.'', ''ஞாலம் முன் படைத்தான் நளிர்மாமலர் மேலயன் மாலும் காண வொணா எரியான்.'', ''கண்ணனும் நான்முகனும் காணா விண்ணினை.'', ''கண்ணன்கடி மாமலரில் திக ழும் அண்ணல்இருவர் அறியா இறை.'', ''எரியார் சடை யும் அடியும் இருவர் தெரியாதலோர் தீத்திரளாயவனே'', ''பொன்னொப்பவனும் புயதொப்பவனும் தன்னொப்

பறியாத் தழலாய் நிமிர்ந்தான்.'', ''நாடினார் மணி வண்ணன் நான்முகன் கூடினார் குறுகாத கொள் கையர்.'', ''உழுது மாநிலத் தேனமாகி மாலதொழுது மாமலரோனும் காண்கிலார்.'', ''இருவருக்கும் நேட எரியாகி இருபாலும் அடிபேணித் தேட உறையும்.'', ''அவ்விக்கிடந்தவன் இருந்தவன் அந்துணரலாகார்.'', ''பருத்துருவதாகி விண்ணடைந்தலன் ஓர் பன்றிப் பொருத்துருவதாய் உலகிடந்தவனும் என்னும் கருத்துரு வொணாவகை நிமிர்ந்தவன்.'', ''உயர்ந் தவன் உருக்கொடு திரிந்துலகம் எல்லாம் பயந் தவன் நினைப்பரிய பண்பன்.'', ''நெடியானொடு நான்முகனும் நினைவொண்ணாப் படியாகிய பண்டங்கன்.'', ''மாவினோடயன் காண்டற் கரிய வர்.'', ''கரியானும் நான்முகனும் காணாமைக் கனலுருவாய் அரியானாம் பரமேட்டி.'', ''வையம் நீர் ஏற்றானும் மலருறையும் நான்முகனும் ஐயன்மார் இருவருக்கும் அளப்பரிதால் அவன்பெருமை.'', ''நாரணனும் நான்முகனும் காண்பரிய தொன்மை யான்.'', ''மண்ணினைமுன் சென்றிரந்த மாலும் மறை யவனும் எண்ணறியா வண்ணம் எரியுருவம் ஆயபிரான்'', ''மாலோடு நான்முகனும் நேடவளர் எரியாய் மேலோடு கீழ்காணா மேன்மையான்.'', ''நற்றா மரைமலர்மேல் நான்முகனும் நாரணனும் முற்றாங் குணர்கிலா மூர்த்தி.''.''இருவர்காண்பரியான்.'', ''செய்ய தாமரை மேல் இருந்தவனோடு மால் அடிதேட நீள்முடி வெய்ய வாரழலாய் நிமிர்கின்ற வெற்றிமை.'', ''சலம்தாங்கு தாமரைமே லயனும் தரணி அளந்தானும் கலங்கோங்கி வந்திழிந்தும் காணாவண்ணம் கனவானீர்.'', ''பாயோங்கு பாம்பணை மேலானும் பைந்தாமரை யானும் போயோங்கிக் காணகிலார்.'', ''மறைமங்கு நான்முகனும் மாலும் அறியா வண்ணத்தீர்.'', ''போதின்மேல் அயன் திருமால் போற்றி உம்மைக்

காணாது.'', ''மாணாய் உலகம் கொண்ட மாலும் மலரோனும் காணா வண்ணம் எரியாய் நிமிர்ந்தான்.'', ''நகுவாய் மலர்மேல் அயனும் நரகத் தணையானும் புகுவா யறியார்.'', ''கரியானொடு கமலமலரான் காணாமை எரியாய் நிமிர்ந்த எங்கள் பெருமான்.'', ''முன்ளார் கமலத்தயன் மால் முடியோடடிதேட ஒள் ளார் எரியாய் உணர்தற்கரியான்.'', ''அல்லி மலர்மேல் அயனும் அரவின் அணையானும் சொல்லிப் பரவித் தொடர வொணாச் சோதி.'', ''விண்ணவர் கண்டிலர்.'', ''அடிமுடிமால் அயன் தேட அன்றும் அளப்பிலர்.'', ''திருமரு மார்பிலவனும் திகழ்தருமா மலரோனும் இருவருமாய் அறிவொண்ணா எரியுருவாகிய ஈசன்.'', ''திருமகள் காதலினானுய'', திகழ்தரு மாமலர்மேலைப் பெருமகனும் அவர்காணாப் பேரழவாகிய பெம்மான்.'', ''தேவரும் அமரர்களும் திசைகள் மேலுள தெய்வமும் யாவரும் அறியாததோ ரமைதியால் தழலுருவினார்.'', ''நெடிய மால்பிரமனும் நீண்டு மண்ணிடந்தின்னம் நேடிகாணாப் படியனார்.'', ''வண்டமர்க் பங்கயத்து வளர்வானும் வையம் முழுதுண்ட மாலும் இகலிக் கண்டிடவொண்ணுமொன்று கிளறிப் பறந்தும் அறியாத சோதி.'', ''குலமலர் மேவினானும் மிகு மாயனாலும் எதிர்கூடி நேடிநினைவுற்றில பலஎய்தொணாமை எரியாய் உயர்ந்த பெரியான்.'', ''நுணங்கு நூலயன் மாலும் இருவரும் நோக்கரியானை.'', ''விண்ட மாமலரோனும் விளங்கொளி அரவணையானும் பண்டும் காண்பரிதாய பரிசினன்.'', ''தேடித் தானயல் மாலும் திருமுடி அடியிணை காணார்.'', ''குறிய மாணுருவாகிக் குவலயம் அளந்தவன்றானும் வெறிகொள் தாமரைமேலே விரும்பிய மெய்த்தவத்தோனும் சொறிவொணா வகை எங்கும் தேடியும் திருவடி காண அறிவொணா உருவத்தெம் அடிகள்.'', ''மாலும் மா மலரானும் மருவி நின்றிகலிய

மனத்தாற் பாலும் காண்பரிதாய பரஞ்சுடர்.'', ''இருந் தவன் கிடந்தவன் இடந்துவிண் பறந்துமெய் வருந்தி, யும் அளப்பொணாத வானவன்.'', ''நீரினார் சடற்று யின்றவன் அயனொடு நிகழ்அடி முடிகாணார்.'' ''அலர்மிசை அண்ணலும் அரவணைத் துயின்றானும் கழலும் சென்னியும் காண்பரி தாயவர்.'', ''பூவுளானும் அப் பொருகடல் வண்ணனும் புவியிடந்தெழுந்தோடி மேவி நாடிநின் னடியிணை காண்கிலா வித்தகம்.'', ''செங்கண் மாலொடு நான்முகன் தேடியும் திருவடி அறியாமை யெங்குமாய் எரியாகிய இறைவனை.'', ''கரிய மாலும் அயனும் அடியும்முடி காண்பொணா எரியதாகிந் நிமிர்ந்தான்.'', ''நீருளாரும் மலர்மேல் உறைவான் நெடுமாலுமாய்ச் சீருளாரும் கழல்தேட மெய்த்தீத்திரள் ஆயினான்.'', ''எய்த ஒண்ணா இறை வன்.'', ''இருலர் காண்பரியான் கழல்.'', ''பொன்னிற நான்முகன் பச்சையான் என்றிவர் புக்குழித் தன்னை இன்னானெனக் காண்பரிய கழற்சோதி.'', ''திக்கமர் நான்முகன் மால் அண்ட மண்டலம் தேடிட மிக்கமர் தீத்திரளாயவர்.'', ''திருவளர் தாமரை மேவினானும் திகழ்பாற்கடற் கருநிற வண்ணனும் காண்பரிய கடவுள்.'', ''ஓங்கிய நாரணன் நான்முகனும் உணரா வகைநீங்கிய தீயுருவாகி நின்ற நிமலன்.'', ''கண்ணனும் பூமகன் அறிகிலாப் பூந்தராய்நகர்க் கோமகன்.'', ''நீருடைப் போதுறைவனும் மாலுமாய்ச் சீருடைக் கழலடி சென்னி காண்கிலர்.'', ''ஏடலிழ் நறுமலர் அயனும் மாலுமாய்த் தேடவும் தெரிந்தவர் தேரகிற் கிலார்.'', ''தேடினார் அயன் முடி மாலும் சேவடி நாடினார் அவரென்றும் நணுககிற்றிலர்.'', ''மண் ணினை உண்டவன் மலரின் மேலுறை அண்ணல்கள் தமக்களப்பரிய அத்தன்.'', ''மாலவன் மலரவன் நேடி மால்கொள மாலெரியாகிய வரதர்.'', ''வெறிகிளர் மலர்மிசையவனும் வெந்தொழிற் பொறிகிளர் அரவ

ணைப் புல்கு செல்வனும் அறிகில வரியவர்.'', ''நீர் மல்கு மலருறைவானும் மாலுமாய்ச் சீர்மல்கு திருந்தடி சேர கிற்கிலர்.'', ''பூமனும்திசைமுகன் றானும் பொற் பமர் வாமனன் அறிகிலா வண்ணம் ஓங்கெரி ஆமென உயர்ந்தவன்.'', ''கார்வணன் நான்முகன் காணு தற் கொணாச் சீர்வணச் சேவடி.'', ''நெடியவன் பிரமனும் நினைப்பரி தாயவர்.'', ''ஏடுலா மலர்மிசை அயனெழில் மாலுமாய் நாடினார்க் கரியசீர் நாதனார்.'', ''நாக ணைத் துயில்பவன் நலமிகு மலரவன் ஆகணைந் தவர் கழல் அணையவும் பெறுகிலர்'', ''நாரணன் தன்னொடு நான்முகன் தானுமாய்க் காரணன் அடிமுடி காண வொண்ணான்.'', ''பூமகற்கும் அரிக்கும் ஓர்வரு புண் ணியன்.'', ''மறையோன் அரியும் அறியா அனலன்.'', ''மாலும் நான்முகன்தானும் வனப்புற ஓலமிட்டு முன் தேடி உணர்சிலாச் சீலம் கொண்டவன்.'', ''ஆட்சியால் அவரானொடு மாலுமாய்த் தாட்சியால் அறியாது தளர்ந்தனர்.'', ''நெடிய மாலும் பிரமனும் நேர்கிலாப் படியவன்.'', ''மாலும் நான்முகனும் அறியா நெறி ஆலவாயுறையும் அண்ணலே.'', ''போதன் போதன கண்ணனும் அண்ணல்தன் பாதந்தான் முடி நேடிய பண்பராய் யாதும் காண்பரி தாகியலந்தவர்.'', ''கருவ ருந்தியின் நான்முகன் கண்ணன்என் றிருவரும் தெரியா ஒருவன்.'', ''தாவி னான் அயன் தானறி யாவகை மேவி னாய்.'', ''பொறிவாய் நாகணை யன்னொடு பூமிசை மேயவனும் நெறியார் நீள்கழல் மேல்முடி காண்பரிதாய வனே.'', ''ஞாலம் அளித்தவனும் அரியும் அடியோடு முடி காலம் பல செலவும் கண்டிலாமையினால்.'' ''திருவினார் போதினானும் திருமாலும்ஓர் தெய்வம் உன்னித் தெரிவினாற் காண மாட்டார்.'', ''ஒருவர்க் கும் உணர்வரியான்.'', ''கோல மலரயனும் குளிர் கொண்டல் நிறத்தவனும் சீலம் அறிவரிதாய்த் திகழ்ந் தோங்கிய செந்தழலான்.'', ''நன்மலர் மேலயனும்

நண்ணு நாரணனும் மறியாத் தன்மையன்.'', ''சேணிய லும் நெடுமாலும் திசைமுகனும் செருவெய்திக் காணி யல்பை அறிவிலராய்.'', ''அருமறைநான் முகத்தானும் அகலிடம்நீ ரேற்றானும், இருவருமாய் அளப்பரிய எரியுரு வாய் நீண்டபிரான்.'', ''ஒண்டிறலின் நான்முகனும் மாலும் மிகநேடி உணராத வகையால் அண்டமுற அங்கியுரு வாகிமிக நீண்ட அரனார்.'', ''மாலும் மலரானும் அறியாமை எரியாகி உயர் மாகறலுளான்.'', ''தூய மலரானும் நெடியானும் அறியார் அவன தோற் றம்.'', ''வண்ண முகிலன்ன எழில் அண்ணலொடு வண்ண வண்ண மலர்மேல் நண்ணவனும் எண்ணரிய விண்ணவர்கள் கண்ணவன்.'', ''நீல வரைபோல நிகழ் கேழலுரு நீள்பறவை நேருருவமாம் மாலும் மலரானும் அறியாமை வளர் தீயுருவமான வரதன்.'', ''வாச மலர் மேவி உறைவானும் நெடுமாலும் அறியாத நெறியை.'', ''நேடும் அயனோடு திருமாலும் உணராவகை நிமிர்ந்து.'', ''பூவின்மிசை அந்தணனொ டாழிபொலி யங்கையனும் நேட எரியாய்.'', ''என்றும் அரியான் அயலவர்க்கு.'', ''ஏன உருவாகி மண்இடந்த இமை யோனும் எழில் அன்ன உருவம் ஆனவனும் ஆதியினொ டந்தம் அறியாத அழல்மேனியவன்.'', ''நாற்றமிகு மாமலரின் மேலயனும் நாரணனும் நாடி ஆற்றலத னால் மிக அளப்பரிய வண்ணம் எரியாகி.'', ''பொறிவரிய நாகமுயர் பொங்கணை அணைந்த புகழோனும் வெறி வரிய வண்டறைய விண்ட மலர்மேல் விழுமியோனும் செறிவரிய தோற்றமொடு ஆற்றல்மிக நின்று சிறிதேயும் அறிவரிய பெருமான்.'', ''மாலும் மலர்மேலயனும் நேடி அறியாமை எரியாய கோலம் உடையான்.'', ''பன்றியர் பறவையர் பரிசுடை வடிவொடு படர்தர அன்றிய அவர வர் அடியொடு முடியவை அறிகிலார்.'', ''வரியரா அதன்மிசைத் துயின்றவன் றானும் மாமலருளானும், எரியரா மணிகழல் ஏத்த ஒண்ணாவகை உயர்ந்து.''

"தாருறு தாமரை மேலயனும் தரணி அளந்தானும்தேர் வறியா வகையால் இகலித் திகைத்துத் திரிந்து.", "ஏடியல் நான்முகன்சீர் நெடுமாலென நின்றவர் காணார்.", "மண்ணது உண்டரி மலரோன் காணா.", "மாலயன் தேடிய மயேந்திரரும்.", "மதுசூதனன் நான்முகன் வணங்கரியார்.", "சக்கரம் வேண்டுமால் பிரமன் காணா மிக்கவர்.", "கண்ணனும் நான்முகன் காண்பரியார்.", "கடல்வண்ணன் நான்முகன் காண் பரியார்", "ஆதிமா லயனவர் காண்பரியார்.", "ஏனமால் அயனவர் காண்பரியார்.", "ஆழியங் கையிற்கொண்ட மால்அயன் அறிவொ ணாத தோர் வடிவு கொண்டவன்.", "துன்று பூமகன் பன்றி யானவன் ஒன்றும் ஓர்கிலா மிழலையான்.", "பங்கயத் துள நான்முகன் மாலொடே பாதம் நீள்முடி நேடிட மாலொடே துங்கநற்றழ லின்உருவாய்.", "அளவிட லுற்ற அயனொடு மாலும் அண்டமண் கிண்டியும் காணா முளையெரியாய மூர்த்தியை.", "கள்ளவிழ் மலர்மேல் இருந்தவன் கரியோன் என்றிவர் காண்பரி தாய ஒள்ளெரி உருவர்.", "ஏலும்தண் தாமரையானும் இயல்புடை மாலும் தம் மாண்பறிகின்றிவர்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை.", "திருமாலொடு நான்முக னும் தேடித் தேடொணாத் தேவனை.", "வானோர் கள் வேண்டித் தேடும் விளக்கினை.", "காணடற் கரிய கதிரொளியை.", "வஞ்சனையார் ஆர்பாடும் சாராத மைந்தனை.", "மண்உண்ட மாலவனும் மலர்மிசை மன்னினானும் விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காண மாட்டார்.", "திருவினாள் கொழுநனாரும் திசைமுகம் உடைய கோவும் இருவரும் எழுந்து வீழ்ந்தும் இணையடி காண மாட்டா ஒருவனே.", "காணிலார் கருத்தில் வாரார்.", "வானினுள் வானவர்க்கும் அறிய லாகாத வஞ்சர்.", "சதுர்முகன் தானும் மாலும் தம்

மிலே இகலக் கண்டு எதிர்முகம் இன்றி நின்ற எரியுருவதனை வைத்தார்.'', ''கண்ணனும் பிரமனோடு காண்கில ராகி வந்தே.'', ''குருந்தம தொசித்த மாலும் குலமலர் மேவி னானும் திருந்துநற் றிருவடியும் திரு முடி காணமாட்டார்.'', ''எந்தை பேரொளி உருவினானைப் பிரமனும் மாலும் காணாச் சீர்.'', ''நெடிய மால் பிரமனோடு நீரெனும் பிலயம் கொள்ள அடியொடு முடியும் காணார்.'', ''அருவரை தாங்கி னானும் அருமறையாதியானும் இருவரும் அறியமாட்டா ஈசனார்.'', ''கருவரை அனைய மேனிக் கடல்வண்ணன் அவனும் காணான் திருவரை அனைய பூமேல் திசைமுக னவனும் காணான்.'', ''நெடியவன் மலரி னானும் நேர்ந்திருபாலும் நேடக் கடியதோர் உருவ மாகிக் கனலெரி யாகி நின்ற வடிவு.'', ''ஏனமாய் இடந்த மாலும் எழில்தரு முளரி யானும் ஞானந்தான் உடைய ராகி நன்மையை அறிய மாட்டார்.'', ''வஞ்சகர்க் கரியர் போலும்.'', ''செம்மலர்க் கமலத்தோனும் திருமுடி காண மாட்டான் அம்மலர்ப் பாதம் காண்பான் ஆழியான் அகழ்ந்தும் காணான்.'', ''முந்திஇவ் வுலகம் எல்லாம் படைத்தவன் மாலி னோடும் எந்தனி நாதனே என் றிறைஞ்சிநின்றேத்தல் செய்ய அந்தமில் சோதி தன்னை அடிமுடி அறியா வண்ணம் செந்தழல் ஆனார்.'', ''கடல்மணி வண்ணன் கருதிய நான்முகன் தானறியா விடம்அணி கண்டம் உடையவன்.'' ''ஓணப் பிரானும் ஒளிமா மலர் மிசை உத்தமனும் காணப் பரவியும் காண்கின்றிலர்.'', ''கேழலதாகிக் கிளறிய கேசவன் காண்பரிதாய்.'', ''கருடத் தனிப்பாகன் காண்டற் கரியனே...மலரடியே.'', ''மேலும் அறிந்திலன் நான்முகன் மேற்சென்று கீழிடந்து மாலும் அறிந்திலன்...கழலடியே.'', ''நாடி நாரணன் நான்முகன் என்றிவர் தேடியும் திரிந்தும் காண வல்லரோ.'', ''மறையி னானொடு மாலவன் காண்கிலா.'', ''மாலும் நான்முகனும் அறிகிற்கிலார்.'',

"விண்ட மாமலர் மேலுறை வானொடும் கொண்டல் வண்ணனும் கூடி அறிகிலா அண்ட வாணன்.", "மண்ணை உண்டமால் காணான் மலரடி விண்ணை விண்டவன் காணான் வியன்முடி.", "மற்றையார் அறியார்.", "நாரணன் பிரமன் அறியாததோர் காரணன்.", "இயலு மாலொடு நான்முகன் செய் தவம் முயலிற் காண்பரி தாய்நின்ற மூர்த்தி.", "அல்லியாள் அரவைந்தலை நாகணைப் பள்ளியான் அறியாத பரிசு", "மாலொடும் மறைஓதிய நான்முகன் காலொடும் முடி காண்பரி தாயினான்.", "நாரணன் நான்முகன் என்றி வர் நின்ற நீள்முடி யோடடி காண்புற்றுச் சென்று காண் பரியான்.", "ஒன்றி மாலும் பிரமனும் தம்மிலே நின்ற சூழல் அறிவரியான்.", "பொன்னொத்த நிறத்தானும் பொருகடல் தன்னொத்த நிறத்தானும் அறிகிலா.", "மாலும் நான்முகனாலும் அறிவொணாப் பாலின் மென்மொழி யாளொரு பாகனை.", "யாவரும் அறிதற் கரியான்.", தேடுவார் பிரமன் திருமாலவர் ஆடு பாதம் அவரும் அறிகிலார்.", "பாம்பணைப் பள்ளி கொண்ட பரமனும் பூம்பணைப் பொலிகின்ற புராணனும் தாம் பணிந்தளப் பொண்ணாத் தனித்தழல்.", "மேலை வானவரோடு விரிகடல் மாலும் நான் முகனாலும் அளப் பொணாக் கோலம்.", "நாடி நாரணன் நான்முகன் வானவர் தேடி ஏசறவும் தெரியாததோர் கோடி காவனை.", "தன்னுருவை ஒருவர்க் கறிவொணா மின் னுருவனை.", "செங்கண்மால் பிரமற்கும் அறிவொணா அங்கியின் உரு.", "நுணங்கு நூலயன் மாலும் இருவரும் பிணங்கி எங்கும் திரிந்தெய்த்தும் காண்கிலா அனவ கன்.", "பிரமன்மால் அறியாத பெருமையன்.", "நுணங்கு நூலயன் மாலும் அறிகிலாக் குணங்கள்.", "செங்கணானும் பிரமனும் தம்முளே எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்.", "யார்க்கும் தெரியாத தத்து வனை.", "அமரர்களுக் கறிவரிய அளவி லானை.",

"அறிதற் கரியசீ ரம்மான்.", "நெடியானும் நான்முக னும் தேடிக் காணா நீண்டானே.", "கல்லாதார் காட்சிக் கரியாய்.", "கூரரவத் தணையானும் குளிர்தண் பொய்கை மலரவனும் கூடிச்சென் றறிய மாட்டார்.", "அமரர் காணா மறைவைத்தார்.", "பிறர்க்கென்றும் அரியான்.", "நெடியானும் சதுர்முகனும் நேட நின்ற நீலநற் கண்டத் திறையார்.", "திரையானும் செந்தா மரை மேலானும் தேர்ந்தவர்கள் தாம்தேடிக் காணார்.", "பிறர்தன்னைக் காட்சிக் கரியான்.", "நெடியானும் மலரவனும் நேடி ஆங்கே நேருருவம் காணாமே சென்று நின்ற படியானை.", "காண்டற் கரிய கடவுள்.", "அயனவனும் மாலவனும் அறியா வண்ணம் ஆரழலாய் நீண்டுகந்த அண்ணல்.", "அமரர் களும் அமரர்கோனும் தேடுவார்.", "திருமாலும் நான் முகனும் தேர்ந்தும் காணா தாரூரா ஆரூரா என்கின் றார்கள்.", "புண்டரிகக் கண்ணானும் பூவின் மேலைப் புத்தேளும் காண்பரிய புராணன்.", "அங்கமலத் தயனோடு மாலும் காணா அனலுருவா.", "காண்பரிய செழுஞ்சுடரை.", "புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்தும் காணார்.", "பிறர்க்கென்றும் காட்சிக் கரியார்.", "நோக்கரிய திருமேனி உடையாய் நீயே.", "ஆரும் அறியா இடத்தாய் நீயே.", "திருமாலும் அயனும் காணாப் பரிதியே.", "அரிஅயனும் காணா வண்ணம் நீண்டான்.", "வஞ்சமனத்தவர்கள் காண வொண்ணா மணிகண்டன்.", "விரைமலர்மேல் நான் முகனும் மாலும் தேட நீண்டானை.", "ஓரிருவர் அறியா வண்ணம் ஆதியும் அந்தமும் ஆகி அங்கே பிறிந் தானே.", "யாவர்க்கும் நினையவொண்ணா நீதியன்.", "தன்னுருவம் யாவருக்கும் தாக்காதான்.", "மண்ணை ளந்த மாலறியா மாயத்தான்.", "வருகாலம் செல் காலம் வந்த காலம் உற்றவத்தை உணர்ந்தாரும் உணர லாகா ஒருசுடரை.", "மாலொடயன் மேலொடுகீழ்

அறியா வண்ணம் வெந்தழலின் விரிசுடராய் ஓங்கினான்.'', ''மாலாலும் அறியாத வரதர்.'', ''அடியோடு முடிஅயன்மால் அறியா வண்ணம் நீண்டானை.'', ''பரிசை அறியாமை நின்றாய் போற்றி.'', ''சோதித்தார் காணாமை நின்றாய்.'', ''புண்டரிகத் தயனொடு மால் காணா வண்ணம் பொங்குதழற் பிழம்பாய புராணனார்.'', ''ஒருவரும்தன் பெருமைகளை அறியவொண்ணா விண்டானை.'', ''அறியவொண்ணா மாயவனை.'', ''யாவர்க்கும் அரியான்.'', ''அயனொடு மால் அறியாத ஆதியானை.'', ''அணவரியான் கண்டாய்.'', ''தண்டா மரையானும் மாலும் தேடத் தழற்பிழம்பாய் நீண்ட கழலான்.'', ''அளக்கலாகா எரிபுரியும் இலிங்க புராணத்துளானை.'', ''அறிவரிய நுண்பொருள்கள் ஆயினான்.'', ''தண்டா மரையானும் மாலும் தேடத் தழலுருவாய் ஓங்கி நிமிர்ந்தார்.'', ''ஞாலத்தை உண்ட திருமாலும் மற்றை நான்முகனும் அறியாத நெறியான்.'', ''அங்கனகத் திருமாலும் அயனும் தேடும் ஆரழலை.'', ''அவனிவனென் றியாவர்க்கும் அறியவொண்ணாச் செம்பொன்.'', ''ஆரழலாய் அயற்கரிக்கும் அறியவொண்ணாத் தேவன்.'', ''அரிஅயன்என் றறியவொண்ணா அமரர் தொழும் கழலானை.'', ''மறையானும் அறிய வொண்ணாக் கலையானை.'', ''பண்டிருவர் காணாப் படியார்.'', ''கல்லாதார் காட்சிக் கரியார்.'', ''நாரணனும் நான்முகனும் அறியாதானை.'', ''அயனும் மாலும் பாரிடந்தும் மேலுயர்ந்தும் காணாவண்ணம் பரந்தானை.'', ''பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப் புணர்வரிய பெருமானை.'', ''அளக்க லாகாத் தற்பரமாய்.'', ''அயனொடுமாற் சறிவரிய அனலாய் நீண்ட தேவாதி தேவன்.'', ''அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்தும் காணாப் பொருளாவாய்.'', ''தேவர் எல்லாம் திருவடிமேல் அலரிட்டுத் தேடி நின்று.'' என்று திருநாவுக்கரசு

நாயனாரும், ""மாலயனும் காண்பரிய மால்எரியாய் நிமிர்ந்தோன்.'', ""பண்டைய மால்பிரமன் பறந்தும் இடந்தும் அயர்ந்தும் கண்டிலராம் அவர்கள்கழல் காண்பரிதாய பிரான்.'', ""முதல் காண்பரிதாய பிரான்.'', ""அயனோடன் றரியும் அடியும் முடி காண்பரிய பயனே எம் பரனே.'', ""சங்கேந்து கையானும் தாமரையின் மேலானும் தன்மை காணா.'', ""நெடியானொடு நான் முகனும் அறிவொண்ணாப் படியான்.'', ""அரியொடு பூமிசையானும் ஆதியும் அறிகிலார்.'', ""செப்பரிய அயனொடுமால் சிந்தித்தும் தெளிவரிய அப்பெரிய திருவினையே.'', ""பூவேந்திய பீடத்தவன்றானும் அடல் அரியும் கோவேந்திய வினயத்தொடு குறுகப் புகல் அறியார்.'', ""மண்ணினை உண்டு மிழ்ந்த மாயனும் மாமலர்மேல் அண்ணலும் நண்ணரிய ஆதியை.'', ""அயன்மால் அறிதற்கரிய சோதியன்.'', ""மனத்தாலும் நினைப்பரியான்."' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''அரியொடு பிரமற் களவறி வொண்ணான்.'', ''அரியொடு பிரமற் களவறி யாதவன்.'', ""தேவரும் அறியாச் சிவன்.'', ""திருநெடுமாலன் றடிமுடி அறியும் ஆதரவதனிற் கடுமுரண் ஏனம் ஆகி முன்கலந்தேழ்தலம் உருவ இடந்து பின்னெய்த் தூழி முதல்வ சயசய என்று வாழ்த்தியும் காணா மலரடி யிணைகள்.'', ""வானோர்க் கரிய மருந்தே போற்றி.'', ""கனவிலும் தேவர்க் கரியாய்.'', ""அரியாய் போற்றி.'', ""தெரிவரி தாகிய தெளிவே போற்றி.'', ""சிந்தனைக் கரிய சிவமே."", ""அரியானே யாவர்க்கும்.'', ""தேவர்கோ அறியாத தேவ தேவன்.'', ""மேலை வானவரும் அறியாததோர் கோலமே.'', ""தன்மை பிறரால் அறியாத தலைவா."', ""வான நாட்டரும் அறியொ ணாதநீ மறையி லீறும்முன் தொடரொணாதநீ ஏனை நாட்டரும் தெரியொ ணாதநீ.'', ""மாலறியா நான்முகனும் காணா மலையினை.'', ""செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய

பொங்கு மலர்ப்பாதம்.'', "பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார் ஆராலும் காண்டற் கரியான்.'', "வான்வந்த தேவர்களும் மாலயனோ டிந்திரனும் கானின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய தான்.'', "மாலயனோ டிந்திரனும் எப்பிறவியும் தேட.'', "வெளிவந்த மாலயனும் காண்பரிய வித்தகனை.'', "தேவர் கனாவிலும் கண்டறியாச்செம்மலர்ப் பாதங்கள்.'', "பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும் மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச் சேவேறு சேவடிக்கே.'', "பூமே லயனோடு மாலும் புகலரிதென் றேமாறி நிற்க.'', "திருமாலும் பன்றியாச் சென்றுணராத் திருவடியை.'', "அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும் தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம்.'', "அருமந்த தேவர் அயன்திருமாற் கரியசிவம்.'', "ஆவா அரிஅயன் இந்திரன் வானோர்க் கரியசிவன்.'', "கனவேயும் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்.'', "மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே நூலே நுழைவரியான்.'', "அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்.'', "முன்னாய மாலயனும் வானவரும் தானவரும் பொன்னார் திருவடிதாம் அறியார்.'', "நாராயணன் அறியா நாண்மலர்த்தாள்.'', "வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்.'', "ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர் காணாக் கடவுள்.'', "யாவரும் அறிவரியாய்.'', "கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை.'', "மூவரும் அறிகில ரியாவர்மற் றறிவார்.'', "விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா விழுப்பொருளே.'', "உணர்ந்த மாமுனிவர் உம்பரோடொழிந்தார் உணர்வுக்கும் தெரிவரும் பொருளே.'', "புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியாய் அண்டவாணரும் பிறரும் வற்றி யாரும்நின் மலரடி காணா மன்ன.'' "நாட்டுத் தேவரும் நாடரும் பொருளே.'',

"கருடக் கொடியோன் காண மாட்டாக் கழற்சேவடி," "தேவா தேவர்க் கரியானே." "திகழத் திகழும் அடியும் முடியும் காண்பான் கீழ்மேல் அயனும் மாலும் அகழப் பறந்தும் காண மாட்டா அம்மான்.", "நினையப் பிறருக் கரிய நெருப்பை.", "உம்பரும் அறியா ஒருவனே.", "பங்கயத் தயனும்மால் அறியா நீதியே.", "கமல நான்முகனும் கார்முகில் நிறத்துக் கண்ணனும் நண்ணுதற்கரிய விமலனே.", "வேண்டும் அயன்மாற் கரியோய் நீ.", "பூங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே.", "மூவராலும் அறியொணா முதலாய ஆனந்த மூர்த்தியான்.", "திருமால் அறியாத் திருப் புயங்கன்.", "மூவரும் முப்பத்து மூவரும் மற்றொழிந்த தேவரும் காணாச் சிவபெருமான்.", "பண்டாய நான் மறையும் பாலணுகா மாலயனும் கண்டாரும் இல்லை.", "வானவரும் அறியா மலர்ப்பாதம்.", "விண்ணவரும் மறியாத விழுப்பொருள்," என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 14-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

"யாதவனும், துவாரகாபுரிக்கு அரசனும், திருமகளாகிய உருக்குமணிப் பிராட்டியின் கணவனும் ஆகிய கண்ணனுடைய தலையின்மேல் தன்னுடைய திருவடிகளை வைத்தவனும், பூதகணங்களுக்குத் தலைவனாகிய கைலாசபதியினுடைய ஒப்பற்ற தொண்டுகளுக்கு முதலும் முடிவும் இல்லாத தன்மையை அடைந்தவனுமாக விளங்குபவன் அந்த உபமன்னிய முனிவன்."

பாடல் வருமாறு :

> "யாத வன்துவ ரைக்கிறை யாகிய
> மாத வன்முடி மேல்அடி வைத்தவன்
> பூத நாதன் பொருவரும் தொண்டினுக்
> காதி அந்தம் இலாமை அடைந்தவன்."

யாதவன்-யது குலத்தில் திருவவதாரம் செய்தவனும். துவரைக்கு-துவாரகாபுரிக்கு. இறையாகிய-அரசனாக விளங்கிய. மா-திருமகளாகிய உருக்குமணிப் பிராட்டியி னுடைய. தவன்-கணவனும் ஆகிய கண்ணபிரானுடைய. முடிமேல்-தலையின்மேல். அடி-தன்னுடைய திருவடி களை; ஒருமை பன்மை மயக்கம். வைத்தவன்-வைத்த ஞானாசிரியனும். பூத-பூதகணங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாதன்-தலைவனாகிய கைலாசபதி யின். பொரு அரும்=ஒப்புக் கூறுவதற்கு அருமையாக இருக்கும். தொண்டினுக்கு-தொண்டுகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். ஆதி-முதலும். அந்தம்-முடிவும், இலாமை-இல்லாத தன்மையை; இடைக்குறை. அடைந் தவன்-பெற்றவனும் ஆக விளங்குபவன் அந்த உபமன் னிய முனிவன்; தோன்றா எழுவாய்.

அடுத்து வரும் 15-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'தந்தையாரைப் போன்றவராகிய கைலாசபதியார் வழங்கியருளிய திருவருளால் திருமால் பள்ளி கொண்ட ருளியுள்ள பாற்கடலில் உள்ள பாலைக் குடித்துத் தன்னு டைய திருவுள்ளத்தில் திருப்தியை அடைந்து தெவிட்டிப் போய் வளர்ச்சியை அடைந்தவன் அந்த உபமன்னிய முனிவன். கைலாசபதியினுடைய பக்தர்களாகிய முனி வர்கள் பல ஆயிரம் பேர்களும், தூய வாழ்க்கையை நடத்தும் யோகிகளும் தன்னைச் சுற்றி இருந்த சமயத்தில்.'

பாடல் வருமாறு :

> **"அத்தர் தந்த அருட்பாற் கடல்உண்டு**
> **சித்தம் ஆர்ந்து தெவிட்டி வளர்ந்தவன்**
> **பத்த ராய முனிவர்பல் லாயிரர்**
> **சுத்த யோகிகள் சூழ இருந்துழி."**

இந்தப் பாடல் குளகம். அத்தர் - தந்தையாரைப் போன்ற கைலாசபதியார். தந்த - வழங்கிய. அருள் -

திருவருளால். பாற்கடல்-திருமால் பள்ளி கொண்டருளி யுள்ள பாற்கடலில் உள்ள பாலை; ஆகுபெயர். உண்டு - குடித்து, சித்தம் - தன்னுடைய திருவுள்ளத்தில். ஆர்ந்து - திருப்தியை அடைந்து. தெவிட்டி - தெவிட்டிப் போய். வளர்ந்தவன் - வளர்ச்சியைப் பெற்றவன் அந்த உபமன்னிய முனிவன். பத்தர் - கைலாசபதியின் பக்தர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆய - ஆகிய. முனிவர் - முனிவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல் ஆயிரர் - பல ஆயிரம் பேர்கள். சுத்த - தூய்மையான வாழ்க்கையை நடத்தும். யோகிகள் - யோகத்தைப் புரிந்தவர்கள். சூழ - தன்னைச் சுற்றி. இருந்துழி - இருந்த சமயத்தில்.

அத்தர்: "எந்தாய் என இருந்தான்.", "எந்தை என்றங் கிமையோர் புகுந்தீண்டிக் கந்த மாலை கொடு சேர்காழியார்.", "வெண்ணீற் றப்பர்.", "காழி அத்தன்.", "வேத முதல்வன் எந்தை.", "தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே.", "பல்லவ னீச்சரத்தெம் அத்தன்.", "எந்தையார் வளநகர் இலம்பையங் கோட்டூர்.", "கொன்றைகமழ் புன்சடை வைத்த எந்தை" "அத்தன் அறவன்.", "அத்தன் ஆரூரை.", "அத்தன் முதுகுன்றை" "அந்த மில்புகழ் எந்தை.", "எந்தை மருதரை.", "அத்தர் அன்னியூர்ச் சித்தர்.", "அன்னியூர் எந்தையே.", "எந்தைதன் வளநகர் இடை மருதே.", "எந்தைதன் கழலடி.", "சிவபுர நகருறை எந்தையை.", "எந்தை மேவிய ஏகம்பம்.", "அனேக தங்காவதம் எந்தை.", "எந்தையான் இமையாத முக்கண்ணினன்.", "மங்கலக்குடி மன்னிய எந்தையை.", "கோழம்பம் மேவிய அத்தனை.", "வெண்ணியில் அத்தனை.", "தாயானே தந்தையும் ஆகிய தன்மைகள் ஆயானே.", "மருகல் எந்தாய்.", "அத்தா அருளாய்.", "கருவூருள் ஆனிலை அத்தர்.", "கருவூருள் ஆனிலை எந்தையை.", "அத்தன் எமை

ஆளுடைய அண்ணல்.'', ''எந்தை இரும்பூளை இடம் கொண்ட ஈசன்.'', ''காழி அத்தனே அரனே.'', ''இமையோர் பரவிடும் அத்தனே.'', ''எந்தை இவனென் றிரவி முதலா இறைஞ்சுவார்.'', ''தேவூர் அத்தன்.'', ''எந்தை ஈசன் எம்பெருமான்.'', ''மாதோட்டத் தத்தர்.'' ''எந்தை பெம்மான்'', ''எந்தை பெம்மான் இடம் எழில்கொள் சோலை யிரும்பை.'', ''எந்தை ஈசன் இருக்கு முலகு'', ''எந்தை மூக்கீச் சரத்தடிகள்.'', ''எந்தாய்உன் அடியலால் ரத்தா தென்நா'', ''அட்பா உன் அடியலால் அரற்றா தென்நா.'', ''அத்தா உன்னடியலால் அரற்றா தென்நா.'', ''இருவர் மருவொணா அத்த னானவன்'', ''அத்தனார் உறைவிடம் அணிமழ பாடியே'', ''காளத்தி எந்தையார்.'', ''அத்தன்றன் காளத்தி.'', ''காழியுள் எந்தை யாரடி என்மனத் துள்ளவே.'', ''திருஆரூர் எம்எந்தை'', ''கருகாவூர் எம்அத்தர்.'', ''அத்தனே அணி ஆலவாயாய்.'', ''மழபாடியுள் எந்தை.'', ''ஆலவாய் மேவிய அத்தனே.'', ''அப்பன் ஆலவாய் ஆதி.'', ''எந்தை யாரவர் எவ்வகை யார் கொலோ.'', ''கயிலாய மலைமேல் எந்தை.'', ''எந்தை பெருமான் இறைவன்.'', ''கொச்சை மேய எந்தையார்.'', ''குரங்காடுதுறை எந்தையார்'', ''அத்தனார் உமையோ டின்புறுகின்ற ஆலா வாய்.'' என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், ''எந்தை பெம்மான் என்னெம்மான்.'', ''அத்தன் ஆரூர் ஆதிரை நாளால்.'', ''அத்தாஉன் ஆடல் காண்பான் அடியனேன் வந்த வாறே.'', ''எந்தைநீ அருளிச் செய் யாய்'', ''தந்தையும் தாயு மாகி.'', ''தந்தையாய்த் தாயும் ஆகி'', ''எந்தையார் எம்பி ரானார் இடை மரு திடம்கொண் டாரே.'', ''அத்தனே அமரர்கோவே'', ''ஆலவாயில் அப்பனே'', ''எந்தையும் எந்தை தந்தைதந் தையும்ஆய ஈசர்'', ''பழனை மேய அத்தனார்.'', ''அத்

தனை நினைந்த நெஞ்சம்.'', ''அத்தனை ஆரா அமு தினை'', ''பாதிரிப்புலியூர் அத்தன்.'', ''அத்தா அடியேன் அடைக்கலம்.'', ''செம்பொன் அம்பலத்துள் நின்ற அத்தனை.'', ''புரம் மூன்றெய்த அத்தனை.'', ''எந்தை நீ.'', ''திருவீழிமிழலையுள் அத்தனே.'', ''எந்தை என் இடைமருதினில் ஈசனை.'', ''எந்தை தாய்தந்தை எம்பெரு மானுமே.'', ''பைஞ்ஞீலிஎம் அத்தனை.'', ''தேவர் தொழப்படும் அத்தனை.'', ''எந்தை ஏகம் பம்.'', ''நான்மறை வேதியர் பேணிய அத்தனே.'', ''கோளிலி அத்தனை.'', ''எந்தை ஈசனைக் கண்டினி தா யிற்றே.'', ''குரங்காடுதுறை உறை அத்தன்.'', ''திருக் கானூரில் அத்தன்.'', ''சேறைச் செந்நெறி மேவிய அப்பனார்.'', ''அத்தர் தாம்உளர் அஞ்சுவ தென் னுக்கே.'', ''எந்தை ஈசன்என் றேத்திட.'', ''எந்தை ஈசன் என்றேத்தும் இறைவனை.'', ''மணஞ்சேரி எம் அத்தனார்.'', ''எந்தைதறுகந் தேறெரி வண்ணனை.'', ''எந்தை எம்பிரான் என்றவர்.'', ''எந்தையே எம்பி ரானே என உள்கி.'', ''எந்தையைக் கண்டுகொண்ட தென் உள்ளமே.'', ''அத்த னென்றரி யோடு பிரமனும் துத்தி யஞ்செய நின்றநற் சோதியே.'', ''அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன்.'', ''எந்தை பெருமானை ஈசன் றன்னை.'', ''இருங்கெடில வீரட்டத் தெந்தாய் போற்றி.'', ''என் தாதாய் போற்றி.'', ''எந்தை கழிப் பாலை மேய கபாலப்பனார்.'', ''எந்தை தந்தை என் சிந்தை மேவி உறைகின்றானை.'', ''ஆக்கூரில் தான் றோன்றிஅப்ப னாரே.'', ''பனையுரியைத் தன்னுடலிற் போர்த்த எந்தை.'', ''வானோர் தங்கள் அப்பனை.'', ''அத்தனை ஆரூரில் அம்மான் தன்னை.'', ''அற்பு தனை அரநெறியில் அப்பன் தன்னை.'', ''என்னானை எந்தை பெருமான் தன்னை.'', ''தன்சார்பை வெய்ய தீர்க்கும் அத்தனை.'', ''அத்தனொடும் அம்மை யெனக் கானார்.'', ''என்னியாய் எந்தை பிரானே போற்றி.''.

"வானோர் அப்பா." "வானவர்க்கும் முதலாய் மிக்க அத்தன்." "மாதா பிதாவாகி." "அப்பன் நீ அம்மை நீ." "அத்தாஉன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்." என்று திருநாவுக்கரசு நாயனாரும். "வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அத்தா." "அஞ்சைக்களத் தப்பனே." "அத்தர் கோயில் எதிர்கொள் பாடி." "துறையூர் அத்தா.", "துறையூர் எந்தாய்." "தாய வளாய்த் தந்தை ஆகி.", "திருமேற்றளி உறையும் எந்தாய்." "எந்தாய் நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே." "திருக்கற்குடி மன்னி நின்ற எந்தாய்." "பைஞ்ஞீலி எந்தை." "அத்தன் அம் பொற் கழல்.", "ஐயனை அத்தனை ஆளுடை ஆமாத் தூர் அண்ணலை." "ஆரூர் அத்தா." "அத்தா ஆவங்காடா.", "அத்தன் ஆலங்காடன்.", "எந்தையை எந்தை தந்தை பிரானை." "அத்தன் எந்தை பிரான்." "அமரர்கள் தலைவா எந்தை." "எந்தை இருப்பதும் ஆரூர்." "தந்தைதாய் உலகுக்கு." "எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே." "கூடலை யாற்றூரில் அத்தன்." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும். "ஆற்றின்ப வெள்ளமே அத்தா." "அத்தா போற்றி அரனே போற்றி." "அத்தா போற்றி ஐயா போற்றி." "உத்தமன் அத்தன் உடையான்.", "எந்தையாய் எம்பிரான் மற்று மியாவர்க்கும் தந்தை.", "எந்தை என்னை ஆண்டு." "எந்தையாய நின்னை." "அப்பனே எனக் கமுதனே." "எனக்கத்த னொப்பாய்." "என் அத்தன் ஆனந்தன்." "அப்பார்சடை அப்பன்." "அத்தன் ஐயாறன்." "அத்தன் கருணை." "பிறப்பறுத்த அத்தன்." "என்னப்பன் எம்பிரான்." "செய்தனவே தவமாக்கும் அத்தன்.", "அடியனேனுடைய அப் பனே." "எந்தையே ஈசா.", "அத்தா சால ஆசைப் பட்டேன்." "ஒண்மலர்த் திருப்பாதத் தப்பன்."

"அத்தன் ஆண்டு.", "தாதாய் மூவே ழுலகுக்கும் தாயே.", "குருந்தம் மேவியசீர் அப்பனே.", "அத்தனே அடியேன் ஆதரித் தழைத்தால் அதெந்துவே என் றருளாயே.", "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே.", "அத்தனே அண்ட ரண்டமாய் நின்ற ஆதியே.", "அப்பன் என்னைவந் தாண்டுகொண் டருளிய அற்புதம்.", "அச்சன்.", "அத்தன் மாமலர்ச் சேவடி.", "அத்தன் பெருந்துறையான்.", "எனையாண்ட அத்தன்." என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து உள்ள 16-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தக் கயிலாய மலையில் ஒரு பிரகாசம் ஆயிரம் சூரியர்களால் பொங்கி எழும்பெரிய சோதியைப் போலத் தங்களுக்கு முன்னால் காட்சி அளிக்க அந்த மலையைச் சுற்றியிருந்தவர்களும், பரிசுத்தமான வாழ்க்கையை நடத்துகிறவர்களும் ஆகிய பெருமையைப் பெற்ற தவத்தைப் புரிந்த தவசிகள், "இந்த மலையில் இது என்ன ஆச்சரியம்!" என்று கேட்டவுடன்.' பாடல் வருமாறு :

**"அங்கண் ஒரொளி ஆயிர ஞாயிறு**
**பொங்கு பேரொளி போன்றுமுன் தோன்றிடத்**
**துங்க மாதவர் சூழ்ந்திருந் தாரெலாம்**
**'இங்கி தென்கொல் அதிசயம்!' என்றலும்."**

இந்தப் பாடல் குளகம். அங்கண்-அந்தத் திருக்கயிலாய மலையில். ஒரொளி-ஒப்பற்ற ஒரு பிரகாசம். ஆயிர ஞாயிறு-ஆயிரம் சூரியர்களால்; ஒருமை பன்மை மயக்கம். பொங்கு-பொங்கி எழும். பேரொளி-பெரிய சோதியை, போன்று-போல. முன்-தங்களுக்கு முன்னால், தோன்றிட—காட்சி அளிக்க. த்:சந்தி. துங்க—தூய்மையான வாழ்க்கையை நடத்தும், மா-பெருமையைப் பெற்ற. தவர்-தவத்தைப் புரிந்த தவசிகள்; ஒருமை

பன்மை மயக்கம். சூழ்ந்திருந்தார்-உபமன்னியமுனிவரைச் சுற்றி இருந்தவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்-யாவரும்; இடைக் குறை. இங்கு-இந்த மலையில். இது என்கொல்-இது என்ன. கொல: அசைநிலை. அதிசயம்-ஆச்சரியம். என்றலும்-என்று கேட்டவுடன்.

பிறகு உள்ள 17-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

"செவ்வந்தி வானத்தில் உதயமாகும் பிறைச்சந்திரனைத் தம்முடைய தலையில் அணிந்த தலைவராகிய கைலாசபதியினுடைய திருவடிகளைத் தியானித்து உணர்ச்சியை அடைந்து அந்த உபமன்னிய முனிவன், "செந்தமிழ் நாட்டில் தெற்குத் திசையில் விளங்கும் திருநாவலூரில் திருவவதாரம் செய்தருளிய அரசனும், புகழைப் பெற்றவனும், வன்றொண்டனும் ஆகிய சுந்தரமூர்த்தி அடியேனுடைய தந்தையாரைப் போன்ற கைலாசபதியார் வழங்கிய திருவருளால் அடைகிறான்'' என்று உபமன்னிய முனிவன் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய.' பாடல் வருமாறு :

**"அந்தி வான்மதி சூடிய அண்ணல்தாள்**
**சிந்தி யாஉணர்ந் தம்முனி, 'தென்திசை**
**வந்த நாவலர் கோன்புகழ் வன்றொண்டன்**
**எந்தை யார்அரு ளால்அணை வான்'என.''**

இந்தப் பாடலும் குளகம்.

அந்தி வான்-செவ்வந்தி வானத்தில் உதயமாகும். மதி-பிறைச்சந்திரனை. சூடிய-தன்னுடைய தலையின் மேல் அணிந்த. அண்ணல்-தலைவனாகிய கைலாசபதியினுடைய, தாள்-திருவடிகளை, ஒருமை பன்மை மயக்கம். சிந்தியா-தியானித்து. உணர்ந்து-உணர்ச்சியை அடைந்து. அம்முனி-அந்த உபமன்னிய முனிவன். தென் திசை-செந்தமிழ் நாட்டில் தெற்குத் திசையில். வந்த-திருவவதாரம் செய்தருளிய. நாவலர் கோன்-திருநாவலூரை ஆட்சி புரியும் அரசனும். புகழ்-புகழைப் பெற்ற

வனும்; திணைமயக்கம். வன்றொண்டன்-வன்றொண்டனும் ஆகிய சுந்தரமூர்த்தி. எந்தையார்-அடியேனுடைய தந்தையாரைப் போன்ற கைலாசபதியார். அருளால்-வழங்கிய திருவருளால். அணைவான்-இந்தக் கைலாச மலையை அடைபவன் ஆனான். என-என்று உபமன்னிய முனிவன் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய; இடைக் குறை.

அந்தி வான் மதி சூடிய அண்ணல்: "அந்தி மதியோடும் அரவச் சடைதாழ.", "அந்தி வெண்பிறையினோ டாறு சூடிய நந்தியை.", "அந்திமதி சூடிய எம்மானை.", "அந்தி வான் மதிசேர் சடைமுடி அண்ணல்." என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், "அந்திப் பிறையணிந் தாடும் ஐயாறன்", "அந்திலட்டத் திங்கட் கண்ணியன்.", "அந்திப் பிறையும்" என்று திருநாவுக்கரசு நாயனாரும், "அந்தி வெண்பிறை சூடும் எம்மானே" என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "அந்தி மதிமுகிழான்." என்று கபிலதேவ நாயனாரும், "அந்தி மதியொடணிந்து." என்று பட்டினத்துப் பிள்ளையாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து உள்ள 18-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய கைகளைக் குவித்துக் கும்பிட்டுப் பிறகு தரையில் விழுந்து வணங்கிப் பின்பு தரையிலிருந்து எழுந்து உபமன்னிய முனிவர் நின்றுகொண்டு அந்தத் திசையை நோக்கித் தம்முடைய திருமேனியில் ஆனந்த சாகரத்தைப் போலக் கண்ணீர்த் துளிகள் பொழிய, சிவந்த நீளமான சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் கொண்ட வரும் பெருமையைப் பெற்றவரும் ஆகிய அந்த முனிவர் போகும் சமயத்தில் தங்களுடைய சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளும்பொருட்டு, அங்கே இருந்த வேதியர்கள் கேட்பவர்களானார்கள்.' பாடல் வருமாறு:

**"கைகள் கூப்பித் தொழுதெழுந் தத்திசை**
**மெய்யில் ஆனந்த வாரி விரவிடச்**
**செய்ய நீள்சடை மாமுனி செல்வுழி**
**ஐயம் நீங்க வினவுவோர் அந்தணர்."**

கைகள் - தன்னுடைய கைகளை. கூப்பி-குவித்துக் கும்பிட்டுவிட்டு. த்: சந்தி. தொழுது-தரையில் விழுந்து வணங்கி. எழுந்து-பின்பு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. அத்திசை-அந்தத் திசையைப் பார்த்து. மெய்யில்-தன்னுடைய திருமேனியில். ஆனந்த வாரி-ஆனந்த சாகரத்தைப் போல. விரவிட-கண்ணீர்த் துளிகள் பொழிய. ச்: சந்தி. செய்ய-சிவந்ததும். நீள்-நீளமானதும் ஆகிய. சடை-தன்னுடைய தலையில் சடாபாரத்தையும். மா-பெருமையையும் பெற்ற. முனி-உபமன்னிய முனிவன். செல்வுழி-போகும் சமயத்தில். ஐயம்-தங்களுக்கு உண்டான சந்தேகம். நீங்க-போகும் வண்ணம். வினவுவோர்—கேட்பவர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்தணர்-உபமன்னிய முனிவனோடு இருந்த வேதியர்கள்.

பிறகு வரும் 19-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

"எம்பிரானே, தேவரீர் சம்புவாகிய சிவபெருமானுடைய திருவடிகளாகிய செந்தாமரை மலர்களை அல்லாமல் வணங்க மாட்டீர்கள்; அவ்வாறு இருக்க இப்படி வணங்கியது ஏன்?'' என்று வேதியர்கள் கேட்க, ''தலைவனாகிய சிவபெருமானைத் தன்னுடைய திருவுள்ளத்தில் தழுவியுள்ளவனாகிய நம்பி ஆரூரன் என்னும் சுந்தரமூர்த்தி நாம் அனைவரும் வணங்கும் பான்மையைப் பெற்றவன்.'' பாடல் வருமாறு:

**''சம்பு வின்அடித் தாமரைப் போதலால்**
**எம்பி ரான்இறைஞ் சாமி.: தென்?' எனத்**
**''தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்**
**நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்.**

சம்புவின்-சம்புவாகிய சிவபெருமானுடைய. சம்பு-சுகத்தைச் செய்பவன். அடி-திருவடிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தாமரைப் போது-செந்தாமரை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். அலால்-அல்லாமல்; இடைக்குறை. எம்பிரான்-எம்பிரானே; விளி.

இறைஞ்சாய்-நீ வணங்க மாட்டாய். இஃது-இப்போது வணங்கிய இது. என்-ஏன். என-என்று வேதியர்கள் கேட்க; இடைக்குறை. த்: சந்தி. தம்பிரானை-தன்னுடைய தலைவனாகிய சிவபெருமானை. த்—சந்தி. தன்-தன்னுடைய. உள்ளம்-திருவுள்ளத்தில். தழீஇயவன்-தழுவிக் கொண்டவனும்.நம்பி ஆரூரன்-நம்பிஆரூரனும் ஆகிய சுந்தரமூர்த்தி. நாம்-நாம் அனைவரும். தொழும்-வணங்கும். தன்மையான்-பான்மையைப் பெற்றவன்.

சம்புவின் அடித்தாமரைப் போதலால் இறைஞ்சாத இயல்பு: "கோலக் காவு ளானையே வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்.", "கைச்சிறு மறியவன் கழலலாற் பேணாக் கருத்துடை ஞானசம்பந்தன் தமிழ்", "பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே.", "ஆல வாயிலார் சீல மேசொலீர்:", "ஏகம்பம் உடையானை அல்லதுள் காதென துள்ளமே.", "வெண்ணியை உடையானை அல்ல துள்காதென துள்ளமே", "அறையணி நல்லூர்ச் சைவனாரவர் சார்வலால் யாதும் சார்விலோம் நாங்களே", "அரிவைதன் பங்கனை யன்றி மற்றறியோமே.", "கேடிலா மணியைத் தொழல் அல்லது கெழுமுதல் அறியோமே.", "நின்னையன்றி நித்தலும் சீல மாய சிந்தையில் தேர்வ தில்லை தேவரே", "திருவான்மி யூர்உறையும் அரையா உன்னை யல்லால் அடையாதென தாதரவே.", "அடிகேள் உன்னையல்லால் அடையாதென தாதரவே.", "ஐயா உன்னையல்லால் அடையாதென தாதரவே.", "அன்பா உன்னையல்லால் அடையாதென தாதரவே.", "அண்ணா உன்னையல்லால் அடையாதென தாதரவே.", "ஆதீ உன்னையல்லால் அடையாதென தாதரவே.", "ஆனாய் உன்னையல்லால் அடையாதென தாதரவே.", "அறிவே உன்னையல்லால் அடையாதென தாதரவே.", "அண்டா உன்னையல்லால் அடையாதென தாதரவே.", "காழியடிகளையே அடிபரவும் சந்தம்கொள் சம்பந்தன்" என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், "நெஞ்சம் உமக்கே

இடமாக வைத்தேன்.'', ''அணியணா மலையுளானே நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே.'', ''தொண்டனேன் உன்னை யல்லாற் சொல்லுமா சொல்வி லேனே.'', ''மருவிநின் பாத மல்லால் மற்றொரு மாடி லேனே'', ''எம்பொனே உன்னை அல்லால் யாதும்நான் நினைவி லேனே'', ''இறைவனே உன்னை அல்லால் யாதும்நான் நினைவி லேனே.'', ''பரவுநின் பாதம் அல்லாற் பரமநான் பற்றி லேனே.'', ''தீர்த்தனே நின்றன் பாதத் திறமலால் திறமி லேனே.'', ''எம்பிரான் என்னின் அல்லால் என்செய் வேன் ஏழை யேனே.'', ''வீரட்டம் காணில் அல்ல தென் கண்துயில் கொள்ளுமே.'', ''திருவீரட்டம் நண்ணிலல்ல தென் கண்துயில் கொள்ளுமே.'', ''வீரட்டம் கற்கில் அல்லதென் கண்துயில் கொள்ளுமே.'', ''எயில் எய்தவர் வீரட்டம் கற்றா லல்லதென் கண்துயில் கொள்ளுமே'', ''வீரட்டம் கல்லே னாகில்என் கண்துயில் கொள்ளுமே'', ''மும்மதில் எய்தவன் வீரட்டம் கண்டா வல்லதென் கண்துயில் கொள்ளுமே'', ''வீரட்டன்பால் கரையே னாகிலென் கண்துயில் கொள்ளுமே'', ''திருவீரட்டம் கூறில் அல்லதென் கண்துயில் கொள்ளுமே.'', ''வீரட்டம் காணே னாகில்என் கண்துயில் கொள்ளுமே.'', ''வீரட்டம் உரையே னாகில்என் கண்துயில் கொள்ளுமே'', ''வீரட்டம் புலம்பே னாகில்என் கண்துயில் கொள்ளுமே'', ''திருக்கோளிலி அண்ண லார்அடி யேதொழு துய்ம் மினே'', ''கோளிலி அரன் பாதமே கூறுமே.'', ''கோளிலிக் குழகனார் திருப் பாதமே கூறுமே.'', ''கோளிலி ஏற்றனார் அடி யேதொழு துய்ம்மினே.'', ''கோளிலி அருத்தி யாய்அடியே தொழு துய்ம்மினே.'', ''ஆறை வடதளி நிலையி னான்அடி யேநினைந் துய்ம்மினே.'', ''திருவால வாய்ச் சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே'', ''ஆவடுதண் டுறையுள் மேய அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே'', ''கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே'', ''ஒருவனை அல்லா துணரா துள்ளம்''

என்று திருநாவுக்கரசு நாயனாரும், "வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அத்தாஉனக் காளாய்இனி அல்லேன் எனல் ஆமே", "ஆயாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே", "அன்னேஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே", "அடிகேள்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே", "ஆதீஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே", "அண்ணாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே". "ஆனாய்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே". "ஆற்றாய்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே", "அழகாஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே", "ஆரூரன்எம் பெருமாற்காள் அல்லேன்எனல் ஆமே", "வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும் நெஞ்சமும்", "எம்பெருமான் நினையே நினைந் தேத்துவன்", "திருமேற்றளி உறையும் எந்தாய் உன்னை அல்லால் இனி ஏந்த மாட்டேனே", "மாட்டே உன்னை யல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே", "ஏறே உன்னை அல்லால் இனி ஏத்த மாட்டேனே", "பற்றே உன்னை அல்லால் பணிந்தேத்த மாட்டேனே.", "பெம்மான் உன்னை அல்லால் பெரிதேத்த மாட்டேனே", "கோனே உன்னை அல்லால் குளிர்ந்தேத்த மாட்டேனே", "ஐயா உன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே.", "அரையா உன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே", "மலையே உன்னை அல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே", "மழபாடியுள் மாணிக்கமே அன்னே உன்னை அல்லால் இனியாரை நினைக்கேனே", "ஆளாய் நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே." "அம்மான் நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே.", "அண்டா நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே.", "அண்ணா நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே.", "ஆனா நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே.", "எந்தாய் நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே.", "ஐயா நின்னை அல்லால் இனியாரை நினைக்கேனே.", "அறிவே நின்னை அல்லால்

இனியாரை நினைக்கேனே.'', ''காளத்தியாய் அண்டா உன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே.'', ''அமைவே உன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே.'', ''உடையாய் உன்னை அல்லால் உகந்தேத்த மாட்டேனே.'', ''அறிவே உன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே.'', ''அஞ்சா துன்னை அல்லால் அறிந்தேத்த மாட்டேனே.'', ''ஐயா றன் றன்னைஅல்லால் அறிந்தேத்த மாட்டேனே.'', ''அடியேன் உன்னை அல்லால் அறியேன் மற்றொருவரையே.'', ''ஏறே உன்னை அல்லால் இனி ஏத்த மாட்டேனே.'', ''ஒளியே உன்னை அல்லால் இனி ஒன்றும் உணரேனே.'', ''கடவூர் தனுள் வீரட்டத்தெம் அடிகேள் என்அமுதே எனக்கார் துணை நீயலதே.'', ''இறைவா என் அமுதே எனக்கார் துணை நீயலதே.'', ''என் தாதை பெருமான் எனக்கார் துணை நீயலதே.'', ''ஆரா என் அமுதே எனக்கார் துணை நீயலதே.'', ''ஐயா என் அமுதே எனக்கார் துணை நீயலதே.'', ''அண்ணா என் அமுதே எனக்கார் துணை நீயலதே.'', ''அரியாய் என் அமுதே எனக்கார் துணை நீயலதே.'', ''ஆறார் செஞ்சடையாய் எனக்கார் துணை நீயலதே,'', ''அயனே என் அமுதே எனக்கார் துணை நீயலதே'', ''பண்மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்.'', ''மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப் பாத மேமனம் பாவித்தேன்.'', ''விரும்பி நின்மலர்ப் பாதமே நினைத்தேன்.'', ''வாழ்கொளி புத்தூர் மாணிக்கத்தை மறந்தென் நினைக்கேனே.'', ''நள்ளாறனை அமுதை நாயினேன் மறந்தென் நினைக்கேனே.'', ''ஆர் எனக்குற வமரர்கள் ஏறே.'', ''ஏழை பாகனை அல்லால் இறையெனக் கருதுதல் இலமே'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி.'', ''உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள் உத்தமனே.'', ''உடையான் அடியே நினைந்துருகி.'', ''பேசிற்றாம் ஈசனே 'எந்தாய் எந்தை பெருமானே என்றென்றே பேசிப்பேசி.'', ''வந்தனையும் அம்மலர்க்கே

ஆக்கி.'' ''சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி.'', ''ஐயனின் தைல்லாதில்லை மற்றோர் பற்று.'', ''நின்னையே பாடி நைந்து நைந்துருகி நெக்குநெக் காடவேண்டும்.'', ''மற்றடி யேன்றனைத் தாங்குநர் இல்லை.'', ''எம் கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க.'', ''அனலேந்தி ஆடு வான் சேவடியே பாடுதும் காளி அம்மானாய்?'', ''சேவேறு சேவடிக்கே சென்றூதாய கோத்தும் பீ.'', ''அம்பலவன் தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.'', ''குனிப் புடையானுக்கே சென்றூதாய் கோத்தும் பீ.'', ''கண்ணப் பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும் பீ.'', ''மெய்த் தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.'', ''வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.'' ''சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ.'' ''குன் றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.'' ''கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.'' ''கருணைத் தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.'' ''அம்பல வன் பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.'' ''தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.'', ''திரு வான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ.'', ''பிரான் தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.'', ''என்னை வேறேயாட் கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.'', ''செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.'', ''தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந் தூதாய் கோத்தும்பீ.'', ''தெள்ளும் கழலுக்கே சென்றூ தாய் கோத்தும்பீ.'', ''தீமேனியானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.'' என்று மாணிக்க வாசகரும் பாடியருளிய வற்றைக் காண்க: ''உன்னை ஒழிய ஒருவரையும் நம்பு கிலேன் பின்னை ஒரு வரையான் பின்செல்லேன்.'' என்று வருவதையும் காண்க.

பின்பு உள்ள 20—ஆம் பாட்டின் கருத்து வருமாறு

சுந்தர மூர்த்தி நாயனாருடைய பெருமையைப் பற்றி உபமன்னிய முனிவர் அவ்வாறு கூற வேதியர்கள் அவரை வணங்கிப் பின் வருமாறு சொல்லலானார்கள்; ''வேறு எந்தப் பிரகாசத்தையும் வெற்றி கொண்ட பெரிய பிரகாச மாகிய இது யார் புரிந்த மேலான தவம்? அதை நன்றாகக் கேட்பதற்கு விழையும் விருப்பத்தை உடையோம் அடியேம்; இன்றைக்கு அதை எங்களுக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்க'' என்று கூறியவுடன்' பாடல் வருமாறு:

**''என்று கூற இறைஞ்சி இயம்புவார்**
**'வென்ற பேரொளீ யார்செய் விழுத்தவம்?**
**நன்று கேட்க விரும்பும் நசையினோம்?**
**இன்றெ மக்குரை செய்தருள்' என்றலும்.''**

இந்தப் பாடல் குளகம். என்று—என சுந்தரமூர்த்தி நாய னாருடைய பெருமையைப் பற்றி.கூற—உபமன்னிய முனிவர் அவ்வாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. இறைஞ்சி— வேதியர்கள் அந்த முனிவரை வணங்கி. இயம்புவார்—பின் வருமாறு சொல்லலானார்கள்; ஒருமை பன்மை மயக்கம். வென்ற—வேறு எந்தப் பிரகாசத்தையும் கீழ்ப்படுத்தி வெற்றி கொண்ட. பேரொளி—பெருமையைப் பெற்ற பிரகாசமாகிய இது.யார் செய்—எவர் புரிந்த. விழுத்தவம்— மேலான தவம். நன்று—அதை நன்றாக. கேட்க—கேட்டுத் தெரிந்து கொள்ள. விரும்பும்—விழையும். நசையினோம்— விருப்பத்தை உடையோம் அடியேம். இன்று—இன்றைக்கு. எமக்கு—அடியேங்களுக்கு உரைசெய்தருள்—திருவாய்— மலர்ந்தருளிச் செய்க. என்றலும்—என்று அந்த வேதியர் கள் வேண்டிக் கொண்டவுடன்.

அடுத்து வரும் 21—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

உள்ளவாறு உபமன்னிய முனிவன் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவனாகி கங்கையாற்றின் வெள்ளமாகிய நீரைத் தன்னுடைய தலையின்மேல் உள்ள சடாபாரத்தில் தாங்கிக்

கொண்ட உண்மையான பரம்பொருளாக உள்ளவனும் வள்ளலும் ஆகிய கைலாசபதி அணிந்து கொள்ளும் தேன் நிரம்பிய மலர்களைக் கட்டிய மாலையையும் பக்தர்களுக்கு அள்ளி வழங்கும் விபூதியையும் தன்னுடைய கைகளில் ஏந்திக்கொண்டு கைலாயத்தில் இருப்பவன் ஒருவன் இருக்கிறான்.' பாடல் வருமாறு:

**''உள்ள வண்ணம் முனிவன் உரைசெய்வான்**
**வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொரு ளாகிய**
**வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும்**
**அள்ளும் நீறும் எடுத்தணை வானுளன்.''**

உள்ள வண்ணம்-உள்ளவாறு. முனிவன்-உபமன்னிய முனிவன். உரை செய்வான்-திருவாய் மலர்ந்தருளிச் செய்பவனாகி; முற்றெச்சம். வெள்ள-வெள்ளமாகிய நீர்-கங்கையாற்றின் நீரை. ச்-சந்தி. சடை-தன்னுடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் தாங்கிக் கொண்ட. மெய்-உண்மையான. ப்-சந்தி. பொருள்-பரம்பொருள். ஆகிய-ஆக விளங்கிய. வள்ளல்-வள்ளலாகிய கைலாசபதி. சாத்தும்-அணிந்து கொள்ளும். மது-தேன் நிரம்பிய. மலர்-மலர்களைக் கட்டிய; ஒருமை பன்மை மயக்கம். மாலையும்-மாலையையும். அள்ளும்-பக்தர்களுக்கு அள்ளி வழங்கும். நீறும்-விபூதியையும். எடுத்து- தன்னுடைய கைகளில் ஏந்திக் கொண்டு. அணைவான்-வருகிறவனாகிய ஒருவன். உளன்-கைலாசத்தில் இருக்கிறான்.

வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருள்: ''வெள்ளம் ஆர்ந்து மிளிர் செஞ்சடை.'',''வெள்ள நீர் விரிசடைத் தாங்கிய விமலன்.'', ''வெள்ளம் எல்லாம் விரிசடை மேலோர் விரி கொன்றை கொள்ள வல்லான்'', ''வெள்ளமது சடை மேற் கரந்தான்'', ''வெள்ள நீரோடு செஞ்சடை வைத்த வியப்பதே.'', ''பள்ளமார் சடையிற் புடையே யடையப் புனல் வெள்ளம் ஆதரித்தான்.'', ''வெள்ளம் தாங்கு சடையினான்.'',''பள்ளமே படர்சடைப் பாற்படப் பாய்ந்த நீர் வெள்ளமேதாங்கினான்.''.''செஞ்சடைம்மிசை வைத்ததும்

பெரு நீரொலி வெள்ளம் தாங்கியது.'' "படர்சடை மேற் பயிலும் திரைக்கங்கை வெள்ளமதார விரும்பி நின்ற விகிர்தன்" என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், "வெள்ளத்தைச் சடையில் வைத்த வேதகீதன்.", "வெள்ள நீர்ச் சடையர் போலும்.", "வெள்ளம் தாங்கும் விரிசடை வேதியன்.", "வெள்ளம் தாங்கு சடையனை.", "வெள்ளம் உள்ள விரிசடை நந்தியை.", "வெள்ளமும் அரவும் விரவும் சடை வள்ளல்.", "வெள்ளநீர் கரந்தார் சடைமேல்.", "வெள்ளத்தைச் சடைவைத்த விகிர்தனார்.", "வெள்ளச் சடைமுடியர்.", "வெள்ளம் ஒருசடைமேல் ஏற்றார்-", "வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர்.", "கரந்தானைச் செஞ்சடைமேல் கங்கை வெள்ளம்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "வெள்ளம்தாழ் விரிசடையாய்." என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

வள்ளல்: "வள்ளல் ஆரூரை.", "விடை யேறிய வேதியன் வள்ளல்.", "ஆமாத்தூர் அம்மான் எம் வள்ளல்.", "வள்ளல் இருந்த மலை.", "விடையேறும் வள்ளல்" என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், "இக்காயந்தன்னுள புண்டரீ கத்திருந்த வள்ளலை.", "ஆரூர் அமர்ந்தஎம் வள்ளல்", "திருப்பெயர் வள்ளல்.", "ஆறை வடதளி வள்ளலை.", "வள்ள லாகிய வான்மியூர் ஈசனே.", "மணஞ்சேரி எம் வள்ளலார்.", "வள்ளலே போற்றி மணாளா போற்றி." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "வள்ளல் எந்தமக்கே துணை" என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், "பரியின்மேல் வந்த வள்ளல்.", "போற்றிஎன் போலும் பொய்யர் தம்மையாட் கொள்ளும் வள்ளல்.", "வானோர்க் கமுதமீ வள்ளல்.", "மனிதரை யாட்கொண்ட வள்ளல்." என்று மாணிக்க வாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 22-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அத்தகையவனுடைய திருநாமம் ஆலால சுந்தரன் என்பது; முன்பு அந்தக் கயிலாய மலையில் ஒரு நாள் எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனாகிய கைலாச பதிக்கு இத்தகைய மலர்கள் அருச்சனை புரிவதற்கு ஏற்றவை ஆகும் என்று சொல்லப்படுபவையாகிய அன்று அலர்ந்த மலர்களைப் பறிக்கும்பொருட்டு நந்தனவனம் உள்ள இடத்தை அடைந்தான்.' பாடல் வருமாறு:

**" அன்ன வன்பெயர் ஆலால சுந்தரன்**
**முன்னம் ஆங்கொரு நாள்முதல் வன்தனக்**
**கின்ன ஆமெனும் நாண்மலர் கொய்திடத்**
**துன்னி னான்நந் தனவனச் சூழலில்.''**

இது உபமன்னிய முனிவர் கூற்று. அன்னவன்-அத்தகைய வனுடைய. பெயர்-திருநாமம். ஆலால சுந்தரன்-ஆலால சுந்தரன் என்பது. முன்னம்-முன்பு, ஆங்கு-அந்தக் கயிலாய மலையில். ஒரு நாள்-ஒரு தினம். முதல்வன்தனக்கு-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவனாகிய கைலாசபதிக்கு; தன்: அசைநிலை. இன்ன-இத்தகைய மலர்கள். ஆம்-அருச்சனை புரிவதற்கு ஏற்றவை ஆகும். எனும்-என்று வரையறுக்கப் படும்; இடைக்குறை. சிவபெருமானுக்குத் தாழம்பூவை அல்லாமல் மற்ற மலர்களை அருச்சனை செய்யலாம். நாள்-அன்று அலர்ந்த. மலர்-மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். கொய்திட-பறிக்கும்பொருட்டு. த்-சந்தி. நந்தனவனம்-நந்தனவனம் இருக்கும். ச்:சந்தி. சூழலில்-இடத்தை; உருபு மயக்கம். துன்னினான்-ஆலால சுந்தரன் அடைந்தான்.

முதல்வன்: ''ஆதிபகவன்,'' என்று திருவள்ளுவரும், ''புளமங்கை ஆதியவர்.'', ''மூவராய முதல்வர்,'', ''ஆதியு மாகிய அண்ணல்.'', ''ஆதி நீஅருள்.'', ''தேவர்கள் தேவர் எம்பெருமானார்.'', ''தேவர்கள் தேவரோ.'', ''மூவராய முதல் ஒருவன்'', ''திருவோத்தூர் ஆதிரே.'', ''தேவர் தேவர் திரிசூலத்தார்'', ''ஆதியும் ஈறு மாகியஎம் அடிகள்''. ''ஆதி பாதமே.'', ''ஆதி அன்னியூர்ச் சோதி.'', ''ஆதியா

னாகிய அண்ணல்.'', ''பராய்த்துறைஆதியாயஅடிகளே.'', ''திருவான்மியூர் ஆதி எம்பெருமான்.'', ''ஆதியாகி நின்றானும்.'', ''கச்சியுள் ஆதியார்.'', ''ஆதியை ஆதியும் அந்தமும் இல்லாத வேதியை.'', ''ஆதியார் அந்தம் ஆயிருனார்.'', ''ஆதி அடியைப் பணிய.'', ''திருநின்றியூருறை ஆதியே.'', ''முக்கண் ஆதி.'', ''தேவூர் ஆதி.'', ''ஏற தேறிய ஆதியான்.'', ''புலியூர்தனுள் ஆதி.'', ''தில்லை தன்னுள் ஆதியாய்க்கு.'', ''விழிமிழலை விரும்பிய ஆதியை.'', ''திருக்கோட்டாற்றுள் ஆதியையே.'', ''வெண்காடு மேவிய ஆதியை.'', ''கருக்குடி அமர் ஆதியை.'', ''உலகாதியும் ஆயினான்.'', ''ஆதியேதிரு ஆலவாய் அண்ணலே.'' ''ஆதி அந்தம் ஆயினாய்.'', ''திருவான்மியூர் உறையும் ஆதீ.'', ''ஆதியாய் நின்ற பெம்மான்.'', ''ஆதியன் ஆதிரையன்.'', ''அந்தமுதல் ஆதி பெருமான்.'', ''ஆதி எமை ஆளுடையஅரிவையொடு பிரிவிலி.'',''அண்ணல் ஆரூர் ஆதியானை.'', ''அந்தண் ஆரூர் ஆதியானை.'', ''ஆலை ஆரூர் ஆதியானை.'', ''அருளன் ஆரூர் ஆதியானை.'', ''அதியன் ஆரூர் ஆதியானை.'', ''அடல்விடை ஆரூர் ஆதியானை.'', ''ஆதியாரூர் எந்தை.'', ''பல்லவனீச்சாத் தாதியாய் இருப்பார்.'', ''ஆதியாய் நடுவாய் அந்தமாய் நின்ற அடிகள்.'' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், 'அண்டமாய் ஆதியாய்.'', ''ஆதி ஆரூர்.'', ''ஆதியும் ஈறும் ஆனார்.'', ''ஆதியே அலந்து போனேன்.'', ''ஆதியாய் அந்தம் ஆனார்.'', ''ஆதியும் அறிவுமாகி.'', ''ஆதியே ஆலவாயில் அப்பனே.'', ''ஆதியே அமரர் கோவே,'' ''அளக்கலாகா ஆதியை.'', ''ஆதியும் அந்தமும் ஆன ஐயாறன்.'', ''அந்தமும் ஆதியும் ஆகி நின் றீர்.'', ''செம்பொன் அம்பலத் தாதியை.'', ''திருவீழியுள் ஆதியே.'', ''ஆதிஆவடு தண்டுறை மேவிய சோதி.'', ''ஆதி சேவடிக் கீழ்நாம் இருப்பதே.'', ''ஆதியான் அண்ட வாணர்க்கு.'', ''ஆதியார் அயனோ டமரர்க்கெலாம்.'', ''சங்கரன்

ஆதியை.'', ''ஆதி பாதம் அடையவல் லார்களே.'', ''ஆதி நாதன் அமரர்கள் அர்ச்சிதன்,'', ''ஆதி நாதன் அடல்விடை மேலமர் பூதநாதன்.'', ''ஆதி நாயகன் அண்டர்கள் நாயகன்.'', ''ஆதியும் அரனாய்.'', ''ஆதியானை அமரர் தொழப்படும் நீதியானை.'', ''ஆதிப்பால் அட்ட மூர்த்தியை.'',''ஆதியாயவன் ஆரும்இலாதவன்.'',''ஆதி நாயகன் ஆதிரை நாயகன்.'', ''அண்டத்துக் கப்புறத்தார் ஆதியானார்.'', ''ஆரூர் ஆதி.'', ''நஞ்சை அமுதாக உண்டானை ஆதியானை.'', ''ஆதிக் களவாகி நின்றார்.'', ''ஆதியும் அந்தமும் ஆனான்.'', ''ஆதியாய் அந்தமாய் நின்றான்.'', ''ஆதித்தன் பல்லிறுத்த ஆதி.'', ''சோதியன்காண் ஆதி தான்காண்.'', ''ஆரமுதே ஆதி.'', ''செஞ்சடைஎம் ஆதி.'',''வானோர்க் கெலாம் அதிபதியே ஆரமுதே ஆதி.'', ''ஆதியனை அரநெறியில் அப்பன் தன்னை.'', ''அமரர்களுக்கருள் செய்யும் ஆதி.'', ''ஆதியே ஐயா றன்னே.'', ''அனலங்கை ஏந்திய ஆதி.'', ''அணுவாகி ஆதியாய் நின்றான்.'', ''ஆலாலம் உண்டுகந்த ஆதி.'', ''ஆதிக் கயிலாயன் நீயே.'', ''ஆதியும் அந்தமுமாகி யங்கே பிறிந்தானே.'', ''ஆதியன்காண் அடைத்துக் கப்பா லான்காண்.'', ஆதிப் புத்தேளை.'' ''ஆதி புராணனாய் நின்றாய் போற்றி.'', ''ஆதியனை எறிமணியின் ஓசை யானை.'', ''அயனொடு மால் அறியாத ஆதியானை.'', ''விண்ணோர்க்கெல்லாம் ஆதியனை.'', ''யாவர்க்கும் ஆதிதேவர்.'', ''ஆதியான் அரியயன் என்றறிய வொண்ணா அமரர் தொழும் கழலானை.'', ''ஆதியாய் வேதமாகி.'', ''அக்காரம் பூண்டானே ஆதியானே.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் ஆதி.'', ''ஆலந்தான் உகந்தமுது செய்தானை ஆதியை.'', அற்புதனே.'', ''திருவாவடு துறையுள் ஆதியே.'', ''வெண்ணீறணிந்திட்ட. ஆதி'',''கூடலை யாற்றூரில் ஆதி.'', ''விரிநீர் மிழலையுள் ஆதி.'', ''ஆதியன்ஆதிரையன்.'' என்று சுந்தர

மூர்த்தி நாயனாரும், "ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே.", "அருந்தவர்க்கருளும் ஆதி,", "ஆதி போற்றி அறிவே போற்றி.", "ஆதி திறம்பாடி.", "ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு.", "சொல்லுதற்கரிய ஆதியே.", "நிரந்தரமாய் நின்ற ஆதி.", "குருந்தம் மேவியசீர் ஆதியே.", "அண்டர் அண்டமாய் நின்ற ஆதியே.", "ஆதி முதற்பரமாய பரஞ்சுடர்.", "ஆதிஎனக் கருளியவா றார்பெறுவார்." என்று மாணிக்கவாசகரும் பாடியருளிய வற்றைக் காண்க.

அடுத்து வரும் 23-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த நந்தன வனத்தில் முன்னரால் அடியேங்களை ஆட்களாக உடைய தலைவியாகிய பார்வதி தேவியினுடைய இயற்கையாகவே நறுமணத்தைப் பெற்ற கூந்தலுக்கு அணி வதற்கு ஆகும் மலர்களைப் பறிக்கும்பொருட்டுச் சந்திர னைப் போன்றவையும் ஒளி வீசுபவையுமாகிய முகங்களைக் கொண்ட தோழிமார்களும், பொங்கி எழுகின்ற அழகைப் பெற்றவர்களும், நாகணவாய்ப் புள்ளைப் போன்றவர்களும் ஆகிய பெண்மணிகள் அடைந்தார்கள்.' பாடல்பின்வருமாறு:

**"அங்கு முன்னெமை ஆளுடை நாயகி**
**கொங்கு சேர்குழற் காம்மலர் கொய்திடத்**
**திங்கள் வாண்முகச் சேடியர் எய்தினார்**
**பொங்கு கின்ற கவினுடைப் பூவைமார்."**

அங்கு-அந்த நந்தனவனத்தில். முன்-முன்னால். எமை-அடியேங்களை; இடைக்குறை. இவ்வாறு கூறியது உபமன் னிய முனிவர் தம்மையும் தம்மைச் சார்ந்த வேறு முனிவர் களையும் சேர்த்து. ஆளுடை-ஆட்களாகக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். நாயகி—தலைவியாகிய பார்வதி அம்மையினுடைய. கொங்கு—இயற்கையாகவே நறுமணம். சேர்—கமழும். குழற்கு—கூந்தலுக்கு. ஆம்—அணிவதற்கு ஆகும். மலர்-மலர்களை; ஒருமைபன்மை மயக்கம். கொய்திட-பறிக்கும் பொருட்டு, த்-சந்தி. திங்கள்-சந்திரனைப் போன்

றவையும்; உவம ஆகுபெயர். வாள்-ஒளியை வீசுகின்றவையும் ஆகிய; ஆகு பெயர். முக-முகங்களைக்கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. சேடியர்-தோழிமார்களும். பொங்குகின்ற—பொங்கி எழுகின்ற. கவினுடை-அழகைப் பெற்றவர்களும்; திணை மயக்கம். ப்: சந்தி. பூவைமார்-நாகணவாய்ப் புள்ளைப்போன்றவர்களுமாகிய பெண்மணிகள். எய்தினார்—அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

தெய்வப் பெண்மணிகளின் கூந்தல் இயற்கையாகவே நறுமணம் வீசும். இதை நக்கீரர் வரலாற்றால் உணரலாகும்.

பெண்மணிகளின் முகங்களுக்குச் சந்திரன் உவமை; "நிறைவெண்டிங்கள் வாண்முக மாதர்." "மாகத் திங்கள் வாண்முக மாதர்," "நெடுவெண் திங்கள் வாண்முக மாதர்", "கதிரார் திங்கள் வாண்முக மாதர்", "வானார் திங்கள் வாண்முக மாதர்," "பனிவெண் திங்கள் வாண்முக மாதர்", "கிளரும் திங்கள் வாண்முக மாதர்," "சூழ்ந்த திங்கள் வாண்முக மாதர்", "தனிவெண் திங்கள் வாண்முக மாதர்", "வெள்ளைத் திங்கள் வாண்முக மாதர்" என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 24-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'முடிவு இல்லாத சீர்த்தியைப் பெற்ற அனிந்திதை அழகிய கூந்தலைப் பெற்றவளும், நறுமணம் கமழும் மாலையை அணிந்தவளும் ஆகிய கமலினி என்ற பெண்மணிகள் கொத்துக்களைப் பெற்ற அழகிய மலர்களைப் பறிக்கும் சமயத்தில் ஆலால சுந்தரன் அந்த நந்தனவனத்துக்கு வந்து தேவர்களுக்குப் பரமேசுவரராகிய கைலாச பதியார் வழங்கும் திருவருளைப் போல.' பாடல் வருமாறு:

**"அந்த மில்சீர் அனிந்திதை ஆய்குழற்**
**கந்த மாலைக் கமலினி என்பவர்**
**கொந்து கொண்ட திருமலர் கொய்வுழி**
**வந்து வானவர் ஈசர் அருளென.**

இந்தப் பாடல் குளகம். அந்தம்-முடிவு. இல்-இல்லாத; கடைக்குறை. சீர்—சீர்த்தியைப் பெற்ற. அனிந்திதை—பார்வதியம்மையின் சேடியாகிய அனிந்திதை என்ற திருநாமத்தைப் பெற்ற பெண்மணி. ஆய்—அழகிய. குழல்—கூந்தலையும். கந்தம்—நறுமணம் கமழும். மாலை—மலர்களைக் கட்டிய மாலையையும் பெற்ற. க்: சந்தி. கமலினி—பார்வதி தேவியின் மற்றொரு சேடியாகிய கமலினி என்னும் திருநாமத்தைக் கொண்ட பெண்மணி. என்பவர்—என்னும் பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். கொந்து—கொத்துக்கள்; ஒருமை பன்மை மயக்கம். கொண்ட—பெற்ற. திரு—அழகிய. மலர்—பூக்களை; ஒருமை பன்மை மயக்கம். கொய்வுழி—பறிக்கும் சமயத்தில். வந்து—ஆலால சுத்தரன் அந்த நந்தனவனத்திற்கு வந்து.வானவர்—தேவலோகத்தில்வாழும் தேவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஈசர்—கடவுளராகிய கைலாசபதியார். அருள்—வழங்கும் திருவருள். என—என்று கூறும்படி; இடைக்குறை.

அடுத்து வரும் 25—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பெருமையைப் பெற்ற தவத்தைப் புரிந்த தமிழ் நாட்டில் விளங்கும் தெற்குத் திசையில் உள்ள ஊர்களில் வாழும் மக்கள் நல்வாழ்வைப் பெறவும், குற்றம் இல்லாத திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடி வழங்கியருளவும் திருநாவலூரில் திருவவதாரம் செய்தருளப் போகிறவராகிய ஆலால சுந்தரர் அந்தப் பெண்மணிகளின் மேல் தம்முடைய திருவுள்ளத்தைச் செலுத்தக் காதலைப் பெற்ற அந்த இரண்டு பெண்மணிகளும் அவருடைய பார்வையில் அகப்பட்டார்கள்.' பாடல் வருமாறு:

**"மாத வம்செய்த தென்திசை வாழ்ந்திடத்**
**தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்**
**போது வார்அவர் மேல்மனம் போக்கிடக்**
**காதல் மாதரும் காட்சியிற் கண்ணினார்"**

மா—பெருமையைப் பெற்ற. தவம்—தவத்தை. செய்த—புரிந்த. தென் திசை-செந்தமிழ்நாட்டில் விளங்கும் தெற்குத் திசையில் உள்ள ஊர்களில் வாழும் மக்கள்; இடவாகு பெயர். வாழ்ந்திட—நல்வாழ்வைப் பெற்று வாழவும். த்: சந்தி. தீது-ஒரு குற்றமும். இலா-இல்லாத; இடைக்குறை. த்: சந்தி. திருத்தொண்டத் தொகை—திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தை. தர-பாடி வழங்கியருள வும். ப்: சந்தி. போதுவார்—திருநாவலூரில் திருவவதாரம் செய்தருளப் போகிறவராகிய ஆலால சுந்தரர். அவர்மேல்-அந்த இரண்டு பெண்மணிகளின் மேலும். மனம்—தம்மு டைய திருவுள்ளத்தை. போக்கிட—செலுத்த. க்.சந்தி. காதல்—காதலைப் பெற்ற. மாதரும்-விருப்பம் மருவிய அந்த இரண்டு பெண்களும்; ஒருமை பன்மை மயக்கம். காட்சியில்-ஆலால சுந்தரருடைய பார்வையில். கண்ணினார்—அகப்பட் டார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பின்பு உள்ள 26—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'முன்னால் அந்த நந்தனவனத்தில் அந்த ஆலாலசுந்தரன் வண்டுகள் மொய்க்கும் அரும்புகள் மலர்ந்த அன்று அலர்ந்த மலர்களை அடியேனை ஆளாகக் கொண்ட பரமேசுவர னாகிய கைலாசபதிக்குப் பொருத்தமாக விளங்கும் பல வகை யாகிய மலர்களைப் பறித்துக்கொண்டு போகக் குளிர்ச்சி யைப் பெற்ற தாமரை மலரின்மேல் அமர்ந்திருக்கும் அன்னப் பறவையைப் போன்றவர்களாகிய அனிந்திதையும் கமலினி யும் மலர்களைப் பறித்துச் சென்ற பிறகு.' பாடல் வருமாறு:

**முன்னம் ஆங்கவன் மொய்ம்முகை நாண்மலர்**
**என்னை ஆட்கொண்ட ஈசனுக் கேய்வன**
**பன்ம லர்கொய்து செல்லப் பனிமலர்**
**அன்னம் அன்ன வருங்கொண் டகன்றபின்,''**

இந்தப் பாடல் குளகம். முன்னம்-முன்னால். ஆங்கு-அந்த நந்தனவனத்தில். அவன்-அந்த ஆலால சுந்தரன்.

மொய்—வண்டுகள் மொய்க்கும். ம்: சந்தி. முகை—அரும்புகள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். நாள்—அன்று அலர்ந்த. மலர்—பூக்களை; ஒருமை பன்மை மயக்கம். என்னை—அடியேனை; இதைக் கூறியவர் உபமன்னிய முனிவர். ஆட்கொண்ட—ஆளாக ஏற்றுக் கொண்ட. ஈசனுக்கு—பரமேசுவரனாகிய கைலாசபதிக்கு. ஏய்வன—பொருத்தமானவையாகிய. பல்—பல வகையான. மலர்—பூக்களை; ஒருமை பன்மை மயக்கம். கொய்து—பறித்து எடுத்துக்கொண்டு. செல்ல—போக. ப்: சந்தி. பனி—குளிர்ச்சியைப் பெற்ற. மலர்—தாமரை மலரின் மேல் அமர்ந்திருக்கும். அன்னம்—அன்னப்பறவையை. அன்ன வரும்—போன்றவர்களாகிய அனிந்திதையும் கமலினியும்; ஒருமை பன்மை மயக்கம். கொண்டு—மலர்களைப் பறித்து எடுத்துக்கொண்டு. அகன்ற-நந்தனவனத்தை விட்டு நீங்கிய. பின்—பிறகு.

பெண் மணிகளுக்கு அன்னப்பறவை உவமை; "அன்னம் அன்ன மென்னடையாள்.", "அன்ன நடையார் மனைகள்.", "அன்னம் அன்ன நடையாள் ஒரு பாகத்தமர்ந் தருளி.", "மட அன்னமும் அன்னதோர் நடையுடைம் மலைமகள்.", "அன்ன மென்னடை அரிவையொ டினிதுறை யமரர்தம் பெருமானார்.", "அன்னம் அன்ன நடைச் சாயலோ டழகெய்தவே.", "அன்னம் அன்னந்நடை மங்கை யொடும் அமர்ந்தான்.", "பல ஊர்கள் போய் அன்னமன்ன நடையாளொடும் அமரும் இடம்.", "அன்னமன் னந்நடை அரிவை பங்கரே." என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், "அன்ன நடையார் அதிகைக் கெடில வீரட்டானத் துறையம் மானே.", "அன்னநடை மடவாள் பாகத்தானே." என்று திருநாவுக்கரசு நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 27—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய கைலாச மூர்த்தியார் அந்த ஆலால சுந்தரனுடைய இயல்பைப்

பார்த்து, "நீ இந்தப் பெண்மணிகளின்மேல் உன்னுடைய உள்ளத்தைச் சிக்க வைத்துவிட்டாய்; ஆதலால் நீ பாரத நாட்டில் தெற்குத் திசையில் விளங்கும் செந்தமிழ் நிலத்தில் பிறந்து அந்த மென்மையான இயல்பைப் பெற்ற பெண்மணிகளோடு காதல் இன்பத்தை அவர்களோடு கூடி அடைவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய.' பாடல் வருமாறு:

**"ஆதி மூர்த்தி அவன்திறம் நோக்கியே**
**மாதர் மேல்மனம் வைத்தனை தென்புவி**
**மீது தோன்றிஅம் மெல்லிய லாருடன்**
**காதல் இன்பம் கலந்தணை வாய்என."**

இந்தப் பாடல் குளகம். ஆதி—எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய, மூர்த்தி—கைலாச மூர்த்தி. அவன்—அந்த ஆலால சுந்தரனுடைய. திறம்—இயல்பை. நோக்கி—அறிந்துகொண்டு. ஏ: அசைநிலை. மாதர்மேல்—நீ அனிந்திதை கமலினி என்னும் விருப்பம்மருவிய இரண்டு பெண்மணிகளின் மேல். மனம்—உன்னுடைய உள்ளத்தை. வைத்தனை—சிக்க வைத்துவிட்டாய். தென்—ஆதலால் நீ பாரத நாட்டில் தெற்குத் திசையில் விளங்கும். புவிமீது—செந்தமிழ் நிலத்தின் மேல். தோன்றி—பிறந்து. அம்மெல்லியலாருடன்—மென்மையான இயல்பைக் கொண்ட அந்த இரண்டு பெண்மணிகளோடும். காதல் இன்பம்—காதல் செய்வதனால் உண்டாகும் சிற்றின்பத்தை. கலந்து—அந்த இரண்டு பெண்மணிகளோடும் கூடி. அணைவாய்—அடைவாயாக. என—என்று கைலாசபதி திருவாய் மலர்ந்தருளிச் செய்ய; இடைக்குறை.

மெல்லியலார்: "உருவார்ந்த மெல்லியலார் பாகம் உடையீர்." என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடி யருளியதைக் காண்க.

பிறகு உள்ள 28—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஆலால சுந்தரன் தன்னுடைய கைகளை அஞ்சலியா குவித்துக் கைலாசபதியைக் கும்பிட்டுக் கலக்கத்தை அடை

வனாகி, "ஐயனே, தேவரீருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை விட்டுப் பிரியும் சிறிய தன்மையைப் பெற்ற அடியேன் காம மயக்கத்தை அடையும் மனிதனாகப் பிறந்து மயங்குகின்ற காலத்தில் அடியேனைத் தேவரீர் தடுத்து ஆட்கொண்டருளிச் செய்வீராக" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய.* பாடல் வருமாறு:

**"கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கினான்,**
**'செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்**
**மையல் மானுட மாய்மயங் கும்வழி**
**ஐயனே, தடுத் தாண்டருள் செய்' என."**

இந்தப்பாடலும் குளகம். கைகள்—ஆலாலசுந்தரன் தன்னுடைய கைகளை. அஞ்சலி—அஞ்சலியாக. கூப்பி— குவித்துக் கைலாசபதியைக் கும்பிட்டு. க்: சந்தி. கலங்கினான்—மனக்கலக்கத்தை அடைந்தவனாகி; முற்றெச்சம். ஐயனே—அடியேனுடைய தந்தையைப் போன்றவனாகிய கைலாசபதியே. செய்ய—செந்தாமரை மலர்களைப்போலச் சிவந்த. சேவடி—செம்மையான திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். நீங்கும்—விட்டுப் பிரியும். சிறுமையேன்—அற்பனாகிய அடியேன். மையல்—காம மயக்கத்தை அடையும். மானுடமாய்—மனிதனாகி; திணை மயக்கம். வழி—காலத்தில். தடுத்து—அடியேனைத் தடுத்து. ஆண்டருள் செய்—ஆண்டருளிச் செய்வீராக. என—என்று ஆலால சுந்தரன் வேண்டிக் கொள்ள; இடைக்குறை.

தந்தையைப் போன்றவன்: "ஐயன் நொய்யன்.", "புளமங்கை அத்தன்.", "எந்தாய் என இருந்தான்.", "எந்தை என்றங் கிமையோர்.", "வெண்ணீற் றப்பர்.", "ஐயர் சோற்றுத்துறை", "எந்தை உறைகின்ற இடைமரு தீதோ." "தாயும் நீயே தந்தையும் நீயே சங்கரனே.", "மாற்பேற் றிருக்கின்ற ஐயா.", "பல்லவ னீச்சரத்தெம் அத்தன்.", "எந்தையார் வளநகர் இலம்பையங் கோட்டூர்.", "கொன்றைகமழ் புன்சடை வைத்த எந்தை.", "அந்தண் அறவன் றன்னடி", "அத்தன் ஆரூரை." "ஐயன் அணி

ஆரூர்.'', ''அத்தன் முதுகுன்றை'', ''ஐயன் முதுகுன்றை.'', ''முதுகுன்றில் ஐயா,'', ''அந்த மில்புகழ் எந்தை.'', ''எந்தை மருதரை.'', ''அத்தர் அன்னியூர்ச் சித்தர்.'', ''அன்னியூர் எந்தையே.'', ''முக்கண் மறையோனே ஐயா.'' ''எந்தைதன் வளநகர் இடைமருதே'', ''ஐயன் நின் சேவடி.'', ''எந்தைதன் கழலடி.'', ''சிரபுர நகருறை எந்தையை.''; ''எந்தை மேவிய ஏகம்பம்.'', ''அனேக தங்காவதம் எந்தை;'', ''திருவாஞ்சியத் தையர்.'', ''எந்தையான் இமையாத முக்கண்ணினன்.'', ''கங்கை செறி சடை ஐயன்.'', ''மங்கலக்குடி மன்னிய எந்தையை,'', ''கோழம்பம் மேவிய அத்தனை.'', ''வெண்ணியில் அத்தனை,'' ''தாயானே தந்தையு மாகிய தன்மைகள்,'' ''மருகல் எந்தாய்'', ''அத்தா அருளாய்.'', ''கருவூருள் ஆனிலை அத்தர்.'', ''அத்தன் எமை ஆளுடைய அண்ணல்'', ''எந்தை இரும்பூளை இடம்கொண்ட ஈசன்.'', ''நாலூர் மயானத்தென் அத்தன்.'', ''கலிக்காழி ஐயனே அரனே,'', ''கலிக்காழி அத்தனே'', ''இமையோர் பரவிடும் அத்தனே'', ''புறவார் பனங்காட்டூர் ஐயனை.'', ''புத்தூரில் ஐயா.'', ''ஐய அரனே பெருமான்.'', ''வேதிதர் எந்தை.'', ''தேவூர் அத்தன்.'', ''கண்ணனும் நான்முகனும் மலர் காணா எந்தை.'', ''எந்தை ஈசன் எம்பெருமான்.'', ''மாதோட்டத் தத்தர்.'' ''கொன்றை சூடிய ஐயன்.'', ''எந்தை பெம்மான்.'', ''விடை ஊர்தியான் எந்தை.'', ''எந்தை பெம்மான் இடம் எழில் கொள் சோலை யிரும்பை.'', ''எந்தை ஈசன் இருக்கும் உலகு.'', ''எந்தை மூக்கீச்சரத்தடிகள்'', ''எந்தாய் உன் அடியலால் ஏத்தாதென் நா.'', ''அப்பா உன் அடியலால் அரற்றாதென் நா.'', ''அத்தா உன் அடியலால் அரற்றாதென் நா.'', ''இருவர் மருவொணா அத்தனானவன்.'', ''ஐயன் நல் அதிசயன்.'', ''பத்தியாற் பாடிடப் பரிந்தவர்க்கருள் செயும் அத்தனார்.'', ''தண்மதி சூடிய ஐயனார்.'', ''ஏடகத் தையனை.'', ''காளத்தி எந்தையார் இணையடி.''.

''அத்தன்றன் காளத்தி அணைவது கருமமே.'', ''ஐயன் ஆண்டகை அந்தணன்.'',''காழியுள் எந்தையார்.'',''கடற் காழியுள் ஐயன்.'',''கழிப்பாலை எம் ஐயன்.'',''ஆரூர் எம் எந்தை.'',''கருகாவூர் எம் அத்தர்.'', ''ஐயர் வண்ணம்.'', ''கருகாவூர் எம் எந்தை.'', ''யானையின் ஈருரி மூடிய அத்தனே.'', ''மழபாடியுள் எந்தை.'', ''ஆலவாய் மேவிய ஐயனே.'', ''ஆலவாய் மேவிய அத்தனே.'',''அப்பன் ஆல வாய் ஆதி.'', ''கொன்றை துன்று சென்னி எம் ஐயன்'', ''தழல துருவத்தான் எங்கள் ஐயன்'',''எந்தை யாரவர் எவ் வகை யார்கொலோ.'', ''திருவான்மியூர் உறையும் ஐயா.'', ''கயிலாய மலைமேல் எந்தை.'', ''எந்தை பெருமான் இறைவன் என்று தொழ நின்றருள்செய் ஈசன்.'', ''ஈசன் எம்மையாளுடைய எந்தை.'', ''மேனி அழகார் ஐயன்.'', ''சொச்சை மேய எந்தையார்.'', ''குரங்காடுதுறை எந்தை யார்.'', ''நடமதாடும் ஐயன்.'', ''ஐயனே அனலாடிய மெய்யனே.'', ''ஐயனார் உமையோ டின்புறுகின்ற ஆல வாய்.'', ''அத்தனார் உமையோ டின்புறுகின்ற ஆலவாய்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''அத்தன் ஆரூர்.'', ''அம்பலத் தாடுகின்ற அத்தா.'', ''எந்தை நீ அருளிச் செய்யாய்.'', ''ஐய நீ அருளிச் செய்யாய்.''. ''ஐய நான் அலந்து போனேன்.'', ''த்ந்தையும் தாயு மாகி.'', ''தந்தையாய்த் தாயு மாகி.'', ''எந்தையார் எம்பிரானார் இடைமரு திடங்கொண் டாரே.'', ''ஐயன் ஐயாற னாரே.'', ''ஐயன் ஐயாற னார்க்கே.'', ''அத்தனே அமரர் கோவே.'', ''ஆதியே ஆல வாயில் அப்பனே.'', ''ஐயனே ஆல வாயில் அப்பனே.'', ''எந்தையும் எந்தை தந்தை தந்தையு மாய ஈசர்.'',''பழனை மேய அத்தனார்.'', ''நாகைக் காரோணம் கோயில் கொண்ட ஐயனை.'', ''அத்தனை நினைந்த நெஞ்சம் அழகிதாம்.'', ''திருவேதிகுடி ஐயனை.'', ''அத்தனை ஆரா அமுதினை.'', ''பாதிரிப் புலியூர் அத்தன்.'', ''ஐயன் அணிவயல் ஆரூர்.'', ''பொன் அம்பலத்துள் நின்ற அத்தனை.'', ''சிற்றம்பலத் தெங்கள்

ஐயனை.'', "புரம் மூன்றெய்த அத்தனை.'', "கண்ணுதல் ஐயன் ஆரூர்.'', "எந்தை நீ.'', "திருவீழிமிழலையுள் அத்தனே.'', "எந்தை என்னிடை மருதினில் ஈசனை.'', "ஐயன் ஆவடு தண்டுறையா.'', "ஐயனை அறியார் சிலர் ஆதர்கள்.'', "எந்தை தாய் தந்தை எம்பெருமானாரும்.'', "செம்பொன் பள்ளி ஐயர்.'', "கழிப்பாலை எம் ஐயனே.'', "ஐயனே அழகே.'', "அத்தனை அணியார் கழிப்பாலை எம் சித்தனை.'', "பைஞ்ஞீலி எம் அத்தனை.''; "தேவர் தொழப்படும் அத்தனை.'', "எந்தை ஏகம்பம்.'', "ஏகம்பம் மேவிய ஐயனை.'', "நான்மறை வேதியர் பேணிய அத்தனே.'', "கோளிலி அத்தனை.'', "ஐயனே அரனே என்றரற்றினால் உய்யலாம்.'', "எந்தை ஈசனைக் கண்டிணி தாயிற்றே.'', "குரங்காடு துறையுறை அத்தன்.'', "குரக்குக்கா ஐயனை.'', "திருக்கானூரில் அத்தன்.'', "சேறைச் செந்நெறி மேவிய அப்பனார்.'', "அத்தர் தாமுளார் அஞ்சுவ தென்னுக்கே.'', "ஐயன்எம்பிரான் அன்பிலா லந்துறை மெய்யன்.'', "எந்தை ஈசன்என் றேத்திட.'', "வானவர் ஐயனைத் தொழுவார்.'', "எந்தை ஈசன் என் றேத்தும் இறைவனை.'', "காட்டுப் பள்ளிஎம் ஐயன்.'', "மணஞ்சேரிஎம் அத்தனார்.'', "ஐயன் வெய்ய அழல் நிறவண்ணனை.'', "எந்தை ஏறுகந் தேறெறி வண்ணனை.'', "எந்தை எம்பிரான் என்றவர்.'', "எந்தையே எம்பிரானே என உள்கி.'', "ஐயன் அந்தணன்.'', "எந்தையைக் கண்டு கொண்டதென் உள்ளமே.'', "அத்தன்என் றரியோடு பிரமனும் துத்தியம் செய்.'', "அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன்.'', "எந்தை பெருமானை ஈசன் தன்னை.'', "காமற்காய்ந்த ஐயனே,'', "என் தாதாய் போற்றி.'', "ஆமாத்தூர் ஐய னாரே.'', "எந்தை கழிப்பாலை மேய கபாலப்பனார்.'', "ஈசனை எந்தை தந்தை.'', "ஆரிடத்தில் ஆடல் அமர்ந்த ஐயன்.'', "கருகாவூர் எந்தை தானே.'', "ஆக்கூரில் தான்தோன்றி

யப்பனாரே.'', ''பனை யுரியைத் தன்னுடலிற் போர்த்த எந்தை.''. ''ஐயன்காண் குமரன்காண்.'', ''வானோர் தங்கள் அப்பனை.'', ''அத்தனை ஆரூரில் அம்மான் தன்னை.'', ''ஆரூரெம் ஐயா.'', ''அரநெறியில் அப்பன்.'', ''அமரர்கள்தம் தலைகாத்த ஐயர்.'', ''வெய்ய தீர்க்கும் அத்தனை.'', ''கனலாடும் கையானே ஐயர்.'', ''அத்தனொடும் அம்மையெனக் கானார்.'', ''வானோர் அப்பா.'', ''தென்னானைக் காவுள் மேய ஐயா.'', ''விடையொன்றேறும் எந்தை.'', ''வானவர்க்கும் முதலாய் மிக்க அத்தன்.'', ''எந்தையார் திருநாமம் நமச்சிவாய.'', ''மாதா பிதாவாகி.'', ''அப்பன் நீ அம்மை நீ.'', ''அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும். ''அருட்டுறையுள் அத்தா.'', ''அத்தர் கோயில் எதிர்கொள் பாடி.'', ''அம்மை நமக்கருளும் ஐயர்.'', ''மதியம் சூடும் எந்தை.'' ''ஐயன் மேய பொழிலணி ஆவடுதுறையதே.'' ''துறையூர் அத்தா.'', ''துறையூர் எந்தாய்.'', ''துறையூர் ஐயா.'', ''தாயவளாய்த் தந்தை ஆகி.'', ''திருமேற்றளி உறையும் எந்தாய்.'', ''திருமேற்றளி உறையும் ஐயா.'', ''மழபாடியுள் மாணிக்கமே எந்தாய்.'', ''ஐயா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே.'', ''அத்தா தந்தருளாய்.'', ''ஐயா தந்தருளாய்.'', ''திருக்காளத்தி என் ஐயா.'', ''திருக்கற்குடி மன்னி நின்ற ஐயா.'' ''எந்தாய் எம்பெருமான்.'', ''ஐயா என் அமுதே.'', ''கொகுடிக் கோயில் ஐயனை.'', ''பைஞ்ஞீலி எந்தை.'', ''அத்தன் அம்பொற்கழல்.'', ''மதியம் சடைவைத்த ஐயா.'', ''ஐயனை அத்தனை ஆளுடை ஆமாத்தூர் அண்ணலை.'', ''ஆரூர் அத்தா.'', ''அத்தா ஆலங்காடா.'', ''பழையனூர் மேய ஐயா.'' ''எம்மான் எந்தை மூத்தப்பன்.'' ''பழையனூர் மேய அத்தன்.'', ''எந்தையை எந்தை தந்தை பிரானை.'', ''அத்தன் எந்தை பிரான் எம்பி

ரானை.'', ''அமரர்கள் தலைவா எந்தை.'', ''எந்தை இருப்பதும் ஆரூர்.'', ''தந்தை தாய் உலகுக்கு.'', ''எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.'', ''கூடலை யாற்றூரில் ஐயன்.'', ''அத்தன் இவ்வழி போந்த அதிசயம்.'', ''பனங்காட்டூர் ஐயன்,'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''வேதங்கள் ஐயா என ஓங்கி.'', ''ஐயா போற்றி அணுவே போற்றி.'', ''அத்தா போற்றி அரனே போற்றி.'', ''அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி.'', ''அத்தா போற்றி ஐயா போற்றி.'', ''உத்தமன் அத்தன் உடையான்.'', ''அச்சன் ஆண்பெண் அலி.'', ''எந்தையாய் எம்பிரான் மற்றும் யாவர்க்கும் தந்தை.'', ''ஒப்பில் அப்பனே போற்றி.'', ''எந்தை என்னை ஆண்டு.'', ''ஐய நின்ன தல்லதில்லை மற்றொரு பற்று.'' ''எந்தை யாய நின்னை.'', ''அப்பனே எனக்கமுதனே.'', ''அம்மையொப் பாய்எனக் கத்தன் ஒப்பாய்.'', ''என் அத்தன் ஆனந்தன்.'', ''ஐயா வழியடியோம்.'', ''அப்பார் சடையப்பன்.'', ''அத்தன் ஐயாறன்.'', ''ஐயன் அணி தில்லைவாணன்.'', ''அத்தன் கருணையோடாட.'', ''ஐயனை ஐயர் பிரானை.'', ''என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி.'', ''ஐயா என் ஆருயிரே.'', ''அத்தன் அணிதில்லை அம்பலவன்.'', ''என்னப்பன் எம்பிரான்.'', ''அத்தன் கருணையினால்.'', ''அத்தர் ஆனந்தரால்.'', ''ஐயன் பெருந்துறையான்.'', ''அடியேனுடைய அப்பனே.'', ''எந்தையே ஈசா.'', ''ஐயனே அரசே.'', ''அத்தா காண ஆசைப்பட்டேன்.'', ''அத்தா சால ஆசைப்பட்டேன்.'', ''ஐயா என்றன் வாயால் அரற்றி.'', ''ஒண்மலர்த் திருப்பாதத் தப்பன்.'', ''அத்தன் ஆண்டு.'', ''தாதாய் மூவேழுலகுக்கும்.'', ''குருந்தம் மேவிய சீர் அப்பனே.'', ''ஐயனே அடியேன் ஆதரித்தழைத்தால்.'', ''குருந்தம் மேவிய சீர் அத்தனே.'' ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே.'', ''அத்தனே

அண்டர் அண்டமாய் நின்ற ஆதியே.'', ''அப்பன் என்னை வந்தாண்டு கொண் டருளிய அற்புதம்.'', ''கழல்காட்டி அச்சன்.'', ''அத்தன் மாமலர்ச் சேவடி.'', ''ஞான வாள் ஏந்தும் ஐயர்.'', ''அத்தன் பெருந்துறையான்.'', ''அவி நாசி அப்பா.'', ''எனை ஆண்ட அத்தன்.'' ''ஐயன் எனக்கருளியவாறு.'' என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 29-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

''அழகிய கண்களைப் பெற்றவனாகிய கைலாசபதி ஆலாலசுந்தரன் வேண்டிக்கொண்ட வேண்டுகோளுக்குத் தன்னுடைய திருவருளை வழங்கிய பிறகு அந்த நங்கைகளாகிய இரண்டு பெண்மணிகளோடு நம்பியாகிய ஆலால சுந்தரன் அந்தத் தெற்குத் திசையில் விளங்கும் செந்தமிழ் நாட்டில் தங்கி வாழ்வதற்காக எடுத்த பிறப்பில் சிற்றின்பத்தை நுகர்ந்து பிறகு இந்தக் கைலாய மலையை அடைகிறான்'' என அந்தச் செந்தமிழ் நாட்டில் அந்த ஆலால சுந்தரன் ஆற்றிய செயல்கள் எல்லாவற்றையும் உபமன்னிய முனிவன் திருவாய் மலர்ந்தருளிச் செய்தான்.' பாடல் வருமாறு:

**''அங்க ணாளன் அதற்கருள் செய்தபின்**
**நங்கை மாருடன் நம்பிமற் றத்திசை**
**தங்கு தோற்றத்தில் இன்புற்றுச் சாருமென்**
**றங்க வன்செயல் எல்லாம் அறைந்தனன்.''**

அம்- அழகிய. கணாளன்-கண்களைப் பெற்றவனாகிய கைலாசபதி; இடைக்குறை. கண்; ஒருமை பன்மை மயக்கம். அதற்கு-ஆலால சுந்தரன் வேண்டிக் கொண்ட வேண்டுகோளுக்கு. அருள்-தன்னுடைய திருவருளை. செய்த-வழங்கிய. பின்-பிறகு. நங்கைமாருடன்-அந்த நங்கைமார்களாகிய இரண்டு பெண்களோடும். நம்பி-நம்பியாகிய ஆலால சுந்தரன். மற்று: அசை நிலை. அத்திசை-அந்தத் தெற்குத்

திசையில் விளங்கும் செந்தமிழ் நாட்டில்; இடவாகு பெயர். தங்கு-தங்கி வாழும் பொருட்டு. தோற்றத்தில்-அவன் எடுத்த பிறப்பில். இன்புற்று-சிற்றின்பத்தை நுகர்ந்து. ச்:சந்தி. சாரும்-மீண்டும் இந்தக் கைலாய மலையை அடைகிறான். என்று-என்று உபமன்னிய முனிவன் திருவாய் மலர்ந்தருளிச் செய்து. அவன்-அந்த ஆலாலசுந்தரன் ஆற்றிய. செயல்-செயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றையும். அறைந்தனன் - உபமன்னிய முனிவன் விரிவாக எடுத்துத் திருவாய்மலர்ந்தருளிச் செய்தான்.

அங்கணாளன்: ''அங்கட் கருணை பெரிதா யவனே.'', ''தேஆர் அங்கணன்.'', ''அங்கணா அஞ்சவென்றருள் செய்.'' ''அங்கணாளன் அடிதம் கையால் தொழ.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''அங்கணார் அடியார்க்கருள் நல்குவர்.'', ''அங்கணன் எந்தை.'', ''அங்கணான் அதுவாவவன் தன்மையே.'', ''அங்கணனே அமரர்கள் தம் இறைவா.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''அங்கணனே அருளாய்.'', ''அங்கண் நம்பி.'', ''திருவாவடு துறையுள் அங்கணாளனை.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''அங்கண் அரசை.'', ''அங்கணன் அந்தணனாய்.'', ''அங்கணனே உடையாய்.'', ''குருத்தம் மேவிய சீர் அங்கணா.'', ''அங்கணன் எங்கள் அமரர் பெம்மான்.'' என்று மாணிக்கவாசகரும் பாடி அருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 30-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வேதியர்களும் அவ்விடத்தில் உபமன்னிய முனிவன் திருவாய் மலர்ந்தருளிச் செய்த ஆலாலசுந்தரனுடைய வரலாற்றைக் கேட்டவர்களுமாகிய அவர்கள் ''ஆலால சுந்தரன் பாச பந்தத்தைப் பெற்றதாகிய மனிதப் பிறவியில் பிறந்த செந்தமிழ் நாட்டின் தெற்குத் திசை இந்தச் சிறப்பைக் கொண்ட திசைகளாகிய கிழக்கு; மேற்கு,

வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்னும் எட்டுத் திசைகளைவிட மேம்பாட்டைப் பெற்றதாகி விளங்க அந்தத் திசைகளில் திகழும் ஊர்களில் வாழும் மக்கள் ஆற்றி வந்த புண்ணியச் செயல் எது?'' என்று வேதியர்கள் கேட்கப் பெருமையைப் பெற்ற தவத்தைப் புரிந்தவனாகிய உபமன்னிய முனிவன்.' பாடல் வருமாறு:

**''அந்த ணாளரும் ஆங்கது கேட்டவர்**
**'பந்த மானுடப் பாற்படு தென்திசை**
**இந்த வான்திசை எட்டினும் மேற்பட**
**வந்த புண்ணியம் யா'தென மாதவன்.''**

இந்தப் பாடல் குளகம். அந்தணாளரும்—உபமன்னிய முனிவனோடு இருந்த வேதியர்களும். ஆங்கு-அவ்விடத்தில். அது-உபமன்னிய முனிவன் திருவாய் மலர்ந்தருளிச் செய்த ஆலாலசுந்தரனுடைய அந்த வரலாற்றை. கேட்டவர்-கேட்டவர்களாகிய அந்த வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பந்தம்-பாசபந்தத்தைப் பெற்றதாகிய. மானுடப் பால்-மனிதப் பிறவியில். படு-அகப்பட்டுப் பிறந்த. தென் திசை-செந்தமிழ் நாட்டின் தெற்குத் திசையில் விளங்கும் ஊர்களில் வாழும் மக்கள்; இடவாகு பெயர். இந்த வான்-இந்தச்சிறப்பைக்கொண்ட. திசை எட்டினும்-திசைகளாகிய கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்ற எட்டுத் திசைகளில் விளங்கும் ஊர்களில் வாழும் மக்களைவிட;இடவாகு பெயர். திசை; ஒருமை பன்மை மயக்கம். மேம்பட-மேம்பாட்டைப் பெற்றவர்களாக விளங்க. வந்த-அவர்கள் ஆற்றி வந்த. புண்ணியம்-புண்ணியச் செயல். யாது-எது. என-என்று வேதியர்கள் கேட்க; இடைக்குறை. மா-பெருமையைப் பெற்ற. தவன்-தவத்தைப் புரிந்தவனாகிய உபமன்னிய முனிவன்.

அடுத்து உள்ள 31-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஒப்புக் கூறுவதற்கு அருமையான தவத்தைப் புரிந்தவனாகிய வியாக்கிரபாதனாகும் அருமையாகிய முனிவன் அடியேனுடைய தந்தையாகிய நடராஜப் பெருமானை அருச்சனை புரியும் பெருமையைப் பெற்றது; பல வகைப் பெருமைகள் சேர்ந்திருக்கும் பெரும் பற்றப்பூலியூர் என்று ஒரு வழியில் தங்களுடைய உள்ளங்களை வைத்திருப்பவர்களாகிய பக்தர்கள் வாழும் தலமாகும் நகரம் சிறந்தோங்கி விளங்கும்.' பாடல் வருமாறு:

**''பொருவ ருந்தவத் தான்புலிக் காலனாம்**
**அருமு னிஎந்தை அர்ச்சித்தும் உள்ளது**
**பெருமை சேர்பெரும் பற்றப் புலியூரென்**
**றொருமை யாளர்வைப் பாம்பதி ஓங்குமால்''**

பொரு அரும்-ஒப்பாக வேறு யாரையும் கூறுவதற்கு அருமையாகிய. தவத்தான் - தவத்தைப் புரிந்தவனாகிய. புலிக்காலன்-வியாக்கிரபாதன். ஆம்-ஆகும். அரு-அருமையாகிய. முனி-முனிவன். எந்தை-அடியேனுடைய தந்தையைப் போன்றவனாகிய நடராஜப் பெருமானை. அடியேன் என்றவர் உபமன்னிய முனிவர். அர்ச்சித்தும்-அருச்சனை புரிந்ததுமாகிய பெருமையை. உள்ளது-பெற்று விளங்குவது. பெருமை-பல வகையான பெருமைகளை; ஒருமை பன்மை மயக்கம். சேர்-அடைந்து பொலியும். பெரும் பற்றப்புலியூர் என்று-பெரும்பற்றப்புலியூர் என. ஒருமையாளர் - தங்களுடைய உள்ளங்களை ஒரு வழியில் வைத்து உணரும் பக்தர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வைப்பு-வாழும் சிவத்தலம். ஆம்-ஆகத் திகழும். பதி-நகரம். ஓங்கும்-சிறந்து ஓங்கி விளங்கும். ஆல்: ஈற்றசை நிலை.

ஒருமையாளர்: ''ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்.'', ''புந்தி ஒன்றி நினைவார்.'', ''எண் ஒன்றி நினைந்தவர்.'', ''ஒன்றும் உள்ளம் உடையார்.''

''சித்தம் ஒன்ற வல்லார்க்கருளும் சிவன்'', ''உள்ளம் ஒன்றி உள்குவார் உளத்துளான்.'', ''ஒன்றிய மனத்தடியார்'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''ஒன்றவே உணர்தி ராகில்.'', ''ஒன்றி யிருந்து நினைமின்கள்.'', ''உற்று நோக்கி உள்ளக் கிழியின் உருவெழுதி...உணரப் படுவார்'' என்று திருநாவுக்கரசு நாயனாரும் பாடியருளிய வற்றைக் காண்க.

அடுத்து வரும் 32-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அந்த அழகிய சிவத்தலமாகிய பெரும்பற்றப்புலியூர் என்னும் சிதம்பரத்தில் நம்மைஆட்களாகக் கொண்டவளும், உண்மையான தவத்தைப் புரிந்தவளும், பூங்கொடியைப் போன்றவளும் ஆகிய சிவகாமவல்லி பார்த்து மகிழும் வண்ணம் விருப்பத்தோடு தந்தையைப் போன்ற நடராஜப் பெருமான் நெடுங்காலமாகப் புகழ் பெற்று விளங்கும் திருச் சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்து அருளுவான்; இந்தச் சிறப்பான இயல்பைப் பெறுவதாக உள்ளது வேறு எந்தத் திசை?' பாடல் வருமாறு:

**''அத்தி ருப்பதி யில்நமை ஆளுடை**
**மெய்த்த வக்கொடி காண விருப்புடன்**
**அத்தன் நீடிய அமபலத் தாடும்மற்**
**றித்தி றம்பெற லாம்திசை எத்திசை.''**

அத்திருப்பதியில்-அந்த அழகிய சிவத்தலமாகிய பெரும் பற்றப் புலியூர் என்னும் சிதம்பரத்தில். நமை-எம்மை; இடைக்குறை. ஆளுடை-ஆளாகப் பெற்ற. மெய்-உண்மை யான. த்:சந்தி. தவ-தவத்தைப் புரிந்தவளும்; திணை மயக்கம். க்:சந்தி. கொடி-பூங்கொடியைப் போல விளங்கு பவளும் ஆகிய சிவகாமவல்லி; உவம ஆகு பெயர். காண-பார்த்து மகிழும் வண்ணம். விருப்புடன்-விருப்பத்தோடு. அத்தன்-தந்தையைப் போன்ற நடராஜப் பெருமான். நீடிய-நெடுங்காலமாகப் புகழ்பெற்று விளங்கும். அம்பலத்து—

—திருச் சிற்றம்பலத்தில். ஆடும்—திரு நடனம் புரிந்தருளு வான். மற்று:அசைநிலை. இத்திறம்-இச்சிறப்பான இயல்பை. பெறலாம்-பெற்றதாக இருக்கும். திசை—வேறு திசை. எத்திசை-எந்தத் திசை. இது உபமன்னிய முனிவர் கூற்று.

பெண்மணிகளுக்குப் பூங்கொடி உவமை: ''கொடி யிலங்கும் இடையாள்.'', ''பூங்கொடி மடவாள் உமை.'', என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''கொடி யிடையார் ஏழை.'', என்று திருநாவுக்கரசு நாயனாரும்,'', ''கொடிகொள் பூ நுண் இடையாள்.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும். ''கொடியேரிடையாள் கூறா.'' என்று மாணிக்கவாசகரும், ''வஞ்சிக் கொடி நுடங்கும் நுண்ணிடையாள்.'' என்று சேரமான் பெருமாள் நாயனா ரும் பாடி அருளியவற்றைக் காண்க. தவக்கொடி காண ஆடுபவர்: ''மங்கை காணநின் றாடுகின்றார்.'' என வருவதைக் காண்க.

அடுத்து வரும் 33-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பூதங்கள் யாவற்றிற்குள்ளேயும் மலரும் மலரைப் போல இருக்கு வேதம் யஜுர் வேதம் சாமவேதம் அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களைப் படைத்த மூலமாகிய பரம்பொருள் வெளிப்படும் பூமியாகிய காதலைப் பெற்ற மங்கையினுடைய இருதயமாகிய தாமரை மலராகும் மாதா கிய பார்வதி தேவியைத் தம்முடைய வாமபாகத்தில் கொண்டிருப்பவராகிய வன்மீக நாதர் எழுந்தருளியிருக்கும் ஆலயம் விளங்கும் திருவாரூர் மலர்ச்சியைப் பெற்று விளங் கியது.' பாடல் வருமாறு:

**''பூதம் யாவையின் உள்ளவர் போதென**
**வேத மூலம் வெளிப்படும் மேதினிக்**
**காதல் மங்கை இதய கமலமாம்**
**மாதொர் பாகனார் ஆரூர் மலர்ந்ததால்**

பூதம்—பிரபஞ்சத்தில் உள்ள பிருதுவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பூதங்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

யாவையின்—யாவற்றிலும். உள்-உள்ளே. அலர்-மலரும். போது—மலர். என—போல; இடைக்குறை. வேத—இருக்கு வேதம் யஜுர்வேதம் சாமவேதம் அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மூலம்—படைத்த மூலப் பரம்பொருள். வெளிப்படும்——வெளிப்படையாகத் தோற்றம் அளிக்கும். மேதினி—பூமி யாகிய. க் : சந்தி. காதல்—காதலைக் கொண்ட. மங்கை—மங்கையாகிய தேவியினுடைய. இதய—இருதயமாகிய. கமலம்—தாமரை மலர். ஆம்—ஆக விளங்கும். மாது—மாதாகிய அல்லியங்கோதையை. ஓர்பாகனார்—ஒரு பாகமாகிய வாம பாகத்தில் வைத்திருக்கும் வன்மீக நாதருடைய ஆலயம் புகழ் பெற்று விளங்கும். ஆரூர்—தலமாகத் திருவாரூர். மலர்ந்தது—மலர்ச்சியைப் பெற்றது. ஆல்: ஈற்று அசைநிலை.

வேதமூலம்: ''அங்கமும் வேதமும் ஓது நாவர்.'', ''மறையும் ஓதி.'', ''வேதம் ஓதி.'' ''மறையும் பல பாடி.'', ''அருமறை நான்கும் அருள்செய்து.'', ''அங்கமும் நான்மறையும் அருள் செய்து.'', ''அருமறை அருள் புரிந்தான்.'', ''நான்மறை ஓதி.'', ''நால்வேதம் ஆலின் கீழ் இருந்தருளி.'', ''வேதம் எல்லாம் முறையால் விரித்து, ''மறையும் ஓதுவர்.'', ''வேதமொ டேழிசை பாடுவார்.'' ''மொழியானை முன்னொரு நான்மறை.'', ''மறையார் தரு வாய்மையினாய்.'', ''வேத நாவினர்.'' ''பாடலார் நான்மறையான்.'', ''ஓதி ஆரணமாய நுண்பொருள் அன்று நால்வர் முன்னே கேட்க.'', ''பன்னினார் மறை பாடினார்.'', ''சொற்றரும் மறைபாடினார்.'', ''மறை நின்றிலங்கு மொழியார்.'',''வேதம் ஓதும் நெறியினான்.'', ''மறைகள் ஓதுவர்.'', ''வேதம் ஓதிய நாவுடையான்.'', ''வேதம் நான்கும்.....விரித்தார்க்கு.'', ''பாடினாய் மறையோடு.'', ''வேதம தோதியும்.'', ''விளங்கும் மறை ஓதிய ஒண்பொருள்.'', ''பாடுவர் நான்மறை.'', ''மறை

புனை பாடலர்.'', ''மறைமல்கு பாடலன்.'', ''தொகுத் தவன் அருமறை.'', ''விரித்தவன் அருமறை.'', ''பாடி னார் அருமறை.'', ''மறையணி நாவினான்.'', ''பண்ணி னாரும் மறை பாடினார்.'', ''மறையர் வாயின்மொழி.'', ''வாயிடைம் மறையோதி.'', ''மறையிலங்கு பாடலாய்.'', ''வேதம் பாடும் எனவும்.'', ''மறைமொழி வாய்மையி னான்.'', ''விரித்தவன் நான்மறையை.'', ''மறைக் கண்டத் திறைநாவர்.,' ''விரித்தார்நான் மறைப் பொருளை.'', ''மறைநவின்ற பாடலொடா டலராய்'', ''ஆத்தமென மறைநால்வர்க் கறம்புரிநூல் அன்றுரைத்த.'', ''வேதமொடு..ஓதியும்.'', ''பாடல்மறை.'', ''மறைத் திறம் அறத்தொகுதி கண்டு.'', ''பாடினர் அருமறை முறைமுறை.'', ''மறையொலி பாடி.'', ''வேதம் ஓதுவர்.'', ''ஓதி வாயதும் மறைகளே.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''நாலு கொ லாம்மறை பாடி ன தாமே.'', ''ஓதினார் வேதம் வாயால்.'', ''மறையும் கொப் புளித்த நாவர்.'',''பாடினார் மறைகள் நான்கும்.'', ''அங்கங்கள் ஆறும் நான்கும் அந்தணர்க் கருளிச் செய்து.'', ''அரியன அங்கம் வேதம் அந்தணர்க் கருளும் வைத்தார்.'', ''வேதராய் வேதம் ஓதி.'', ''மறைகள் நான்கும் பாடினார் ஒருவர் போலும்.'', ''மறையது பாடி.'', ''ஓதிய வேத நாவர்.'', ''மாமறைகள் பாடி.'', ''மறையணி நாவி னானை.'', ''மறையுறு மொழியர்.'', ''பன்னிய மறை யர் போலும்.'', ''வேதங்கள் ஓதும்.'', ''மறைநான்கு டன் ஓதியை.'', ''அரிய நான்மறை ஓதிய நாவரோ.'', ''வேதம் ஓதும் விரிசடை அண்ணவார்.'', ''மறையும் ஓதுவர்.'', ''நல்ல நான்மறை ஓதியை'', ''அரிய நான் மறை ஆறங்கமாய் ஐந்து புரியன்.'', ''பண்ணினார் மறை.'', ''ஓது வேதியனார்.'', ''வேதம் ஓதி வந்து.'', ''மறைகொள் வாய்மொழியார்.'' ''பன்மறை ஓதி.'', ''பாடினார் மறை நான்கினொ டாறங்கம்.'', ''நல்ல நான்

மறை ஓதிய நம்பனை.'', ''மறைகொள் நாவினன்.'', ''வேத நாவர்.'', ''வேத நாவன்.'', ''மறைகொள் நாவன்.'', ''மறையும் பாடுதிர்.'', ''வேதங்கள் ஓதி.'', ''மறையார்ந்த வாய்மொழியான்.'', ''வேதங்கள் வேள்வி பயந்தார்.'', ''வேதத்தோ டாறங்கம் சொன்னார்.'', ''வேதத்தை விரிப்பதற்கு முன்னோ.'', ''மறையுடைய வேதம் விரித்தாய்.'', ''விரித்தானை நான்மறை யோ டங்கம் ஆறும்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''மறைநான்கும் கல்லால் நிழற்கீழ்ப் பன்னிய எங்கள் பிரான்.'', ''குறையாத மறைநாவர்.'', ''வேதம் ஓதி வெண்ணீறு பூசி.'', ''திருந்த நான்மறை பாட வல்லானை.'', ''சுருங்கா மறைநான்கினையும் ஓதியன்.'', ''பாடிய நான்மறையான்.'' என்று சுந்தர மூர்த்திநாய னாரும், ''வேத மெய்ந்நூல் சொன்னவனே.'', ''பேசுவ தும் திருவாயால் மறை.'', ''அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி.'', ''வேத மொழியர் வெண்ணீற்றர்.'', என்று மாணிக்கவாசகரும் பாடி யருளியவற்றைக் காண்க.

அடுத்துவரும் 34—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அடியேங்களுடைய தலைவியும், இந்த ஏழு உலகங்களை யும் பெற்றவளுமாகிய காமாட்சி அம்மை தன்னுடைய தலை வனாகிய ஏகாம்பரேசுவரனை ஒப்பற்ற தவத்தைப் புரிந்தத னால் கணவனாக அடைந்து கம்பை நதியின் கரையில் வழி பட்டு வணங்கும் காஞ்சீபுரம் என்று தேவர்கள் வாழ்த்தி வணங்கும் திருத்தலத்தையும் பெற்றது தொண்டை மண்டலம்.' பாடல் வருமாறு:

**''எம்பி ராட்டிஇவ் வேழுல கீன்றவள்**
**தம்பி ரானைத் தனித்தவத் தால்எய்திக்**
**கம்பை யாற்றில் வழிபடு காஞ்சிஎன்**
**றும்பர் போற்றும் பதியும் உடையது.''**

எம்- அடியேங்களுடைய. இவ்வாறு கூறியது உபமன் னிய முனிவர் தம்மையும் தம்மோடு இருந்த வேதியர்களை

யும் சேர்த்து. பிராட்டி - தலைவியும். இவ்வேழுலகு - இந்த ஏழு உலகங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். ஈன்றவள்— பெற்றருளியவளாகிய காமாட்சி அம்மை. தம்பிரானை— தன்னுடைய தலைவனாகிய ஏகாம்பரேசுவரனை. த்: சந்தி. தனி—ஒப்பற்ற. த்: சந்தி. தவத்தால்—தவத்தைப் புரிந்த தால். எய்தி—கணவனாக அடைந்து. க்: சந்தி. கம்பையாற் றில்—கம்பா நதியின் கரையில். வழிபடு—வழிபட்டு வணங் கும். காஞ்சி—காஞ்சிமா நகரம். என்று—என. உம்பர்— தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். போற்றும்—வாழ்த்தி வணங்கும். பதியும் — திருத்தலத்தையும். உடையது— பெற்று விளங்குவது தொண்டை மண்டலம்.

பிறகு உள்ள 35—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அடியேங்களுடைய தலைவனாகும் நந்தி தேவன் தவத்தைப் புரிந்து பொங்கி எழுவதும் நெடுங்காலம் இருப்பதுமாகிய பஞ்சநதீசுவரன் வழங்கிய திருவருளை அடைந்த பெருமையையும் பெற்றது; கங்கையாறு தம்மு டைய தலையில் உள்ள சடா பாரத்தில் மலர்ச்சியைப் பெற, நெருப்பு மலர்ந்து ஒளியை வீசும் செந்தாமரை மலர்களைப் போன்ற திருக்கரங்களைக் கொண்ட பஞ்ச நதீசுவரர் கோயில் கொண்டருளியிருக்கும் திருவையாறு என்ற சிவத்தலமும் விளங்குவது சோழமண்டலம்.' பாடல் வருமாறு:

**நங்கள் நாதனாம் நந்தி தவம்செய்து**
**பொங்கு நீடருள் எய்திய பொற்பது**
**கங்கை வேணி மலரக் கனல்மலர்**
**செங்கை யாளர்ஐ யாறும் திகழ்வது.''**

நங்கள்—அடியேங்களுடைய. நாதனாம்—தலைவ னாக விளங்கும். நந்தி—திருநந்தி தேவன். தவம்—தவத்தை. செய்து—புரிந்து. பொங்கு—பொங்கி எழுவதும். நீடு— நெடுங்காலம் இருப்பதுமாகிய. அருள்—பஞ்சநதீசுவரன்

வழங்கிய திருவருளை. எய்திய—அடைந்த. பொற்பது—சிறப்பைப் பெற்று விளங்குவது. கங்கை—கங்கையாறு. வேணி—தம்முடைய தலையில் உள்ள சடாபாரத்தில். மலர—மலர்ச்சியைப் பெற்றுத் திகழவும். க்:சந்தி. கனல்—நெருப்பு. மலர்—மலர்ந்து ஒளி வீசவும். செம்—செந்தாமரை மலர்களைப் போன்ற. கையாளர்—கைகளைப் பெற்றவராகிய ஐயாறப்பர் கோயில் கொண்டிருக்கும்; கை-ஒருமை பன்மை மயக்கம். ஐயாறும்—திருவையாறு என்னும் சிவத்தலமும். திகழ்வது—விளங்குவது சோழ மண்டலம்.

திருவையாறு: இது சோழநாட்டில் காவிரியாற்றின் கரையில் விளங்கும் சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் செம்பொற் சோதீசுவரர், பஞ்சநதீசுவரர், ஐயாறப்பர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் அறம் வளர்த்த நாயகி, தர்ம சம்வர்த்தனி என்பவை. இந்தத் தலம் தஞ்சை மாநகரத்திற்கு வடக்கில் ஏழு மைல் தூரத்தில் விளங்குவது. பஞ்சநதீசுவரர் திருநாவுக்கரசு நாயனாருக்குக் கைலாச தரிசனத்தை வழங்கியருளிய தலம் இது. இந்த வரலாற்றைக் காட்டும் விழா ஒவ்வோர் ஆண்டும் ஆடி மாதத்து அமாவாசையில் நிகழ்கிறது. அவ்வாறு தரிசனத்தை வழங்கிய மூர்த்தி கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் எழுந்தருளியுள்ளார். அவருக்குத் தனியே சந்நிதி இருக்கிறது. திருநாவுக்கரசு நாயனாருடைய திருவுருவமும் அங்கே உள்ளது. அந்த நாயனார் எழுந்து வந்ததாகக் கூறப்படும் குளம் திருக்கோயிலுக்கு வடமேற்கில் உள்ளது. சப்தஸ்தானங்கள் என்னும் ஏழு சிவத்தலங்களுக்குள் இது முதலாவதாக விளங்குவது. சுந்தரமூர்த்தி நாயனாருக்காகவும் 'சேரமான் பெருமாள் நாயனாருக்காகவும்' பஞ்சநதீசுவரர் காவிரியாற்றின் வெள்ளத்தைத் தவிர்ப்பதற்காக அந்த நாயன்மார்கள் இரண்டு பேர்களும் அடியார்களின் கூட்டத்தோடு காவிரியாற்றைக் கடந்து சென்று ஐயாறப்பனைத் தரிசித்தார்கள்.

தல விநாயகப் பெருமானுடைய திருநாமம் ஆதி விநாயகர். சுந்தரமூர்த்தி நாயனார், காவிரியாற்றின் தென் கரையிலிருந்து ஆற்றில் மிக்க வெள்ளம் ஓடியதால், 'நமக் கடிகளாகிய அடிகள்' என்ற திருப்பதிகத்தைப் பாடியருளி னார். அதில் வரும் முதற் பாசுரம் வருமாறு:

**''பாறு தாங்கிய காடரோபடு தலையரோ மலைப் பாவையோ**
**கூறு தாங்கிய குடிகரோ குழைக் காதரோ குறுங்கோட்டிள**
**ஏறு தாங்கிய கொடிய ரோசுடு பொடியரோ இலங்கும் பிறை**
**ஆறு தாங்கிய சடைய ரோநமக் கடிகளாகிய அடிகளே.''**

இதை அந்த நாயனார் பாடி அழைத்தபோது ஆதி விநாயகர், 'ஓலம், ஓலம்' என்று திருவாய் மலர்ந்தருளிய தாக ஆன்றோர் கூறுவர். இந்த விநாயகருக்கு அருகில் ஆட்கொண்டார் சந்நிதி என்ற ஒன்று உண்டு. ஓர் அந்தணச் சிறுவனை யமன் தொடர்ந்து வந்ததாகவும் பஞ்சநதீசுவரர் சோதி வடிவத்தோடு தோன்றி ஆட்கொண்டமையால் அவருடைய சந்நிதிக்கு எதிரில் ஒரு சிறு குழி உண்டாக்கி அதில் குங்கிலியத்தைப் போட்டுக் கொண்டு வருவதாகவும் கூறுவர். பலர் பிரார்த்தனை புரிந்து அந்தக் குழியில் குங்கிலியத்தை இடுகிறார்கள். இந்திரன், வாலி முதலியவர் கள் வழிபட்ட தலம் இது. ''இந்திரன் உணர்ந்து பணி எந்தையிடம்.'', ''வாலியார் வணங்கி ஏத்தும் திருவையா றமர்ந்த் தேன்.'' என்பவை தேவாரத்தில் வருபவை. இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

**''எழுவாய் இறுவாய் இலாதன எங்கள் பிணிதவிர்த்து**
**வழுவா மருத்துவம் ஆவன மாநர கக்குழிவாய்**
**விழுவா ரவர்தம்மை வீழ்ப்புன மீட்புன மிக்கஅன்போ**
**டழுவார்க் கமுதங்கள் காண்கஐ யாறன் அடித்தலமே.''**

இந்தத் தலத்தைப் பற்றித் தக்க ராகம், வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, இந்தளம் என்னும் பண்களில்

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார்.

அவற்றுள் மேகராகக் குறிஞ்சிப்பண் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

**"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி**
**அறிவழிந்திட் டைம்மேல் உந்தி**
**அலமந்த போதாக அஞ்சேலென்**
**றருள்செய்வான் அமரும் கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட**
**முழவதிர மழையென் றஞ்சிச்**
**சிலமந்தி அலமந்து மரமேறி**
**முகில்பார்க்கும் திருவை யாறே."**

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தாரம், பழந்தக்கராகம் என்ற பண்கள் அமைந்த திருப்பதிகங்களையும், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பவற்றையும் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியுள்ளார். அவற்றில் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

**"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே**
**உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே**
**வாச மலரெலாம் ஆனாய் நீயே**
**மலையான் மருகனாய் நின்றாய் நீயே**
**பேசப் பெரிதும் இனியாய நீயே**
**பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே**
**தேச விளக்கெலாம் ஆனாய் நீயே**
**திருவையா றகலாத செம்பொற் சோதீ."**

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தார பஞ்சமப் பண்ணில் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

**"பரவும் பரிசொன் றறியேன்நான்**
**பண்டே உம்மைப் பயிலாதேன்**
**இரவும் பகலும் நினைந்தாலும்**
**எய்த நினைய மாட்டேன்நான்**
**கரவில் அருவி கமுகுண்ணத்**
**தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை**
**அரவந் திரைக்கா விரிக்கோட்டத்**
**தையா றுடைய அடிகளோ."**

*கனல் மலர் செங்கையாளர்: "வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி.", "கையினார் சுடரெரியரன்.", "அனலும் அன்று கையணி கொள்கையினான்.", "அனற்படு தடக்கை யவர்.", அங்கையின லங்கழல் ஏந்தினானும்.", "கைய தோர் கனவெரிகனல்ஆடுவர்.", "அங்கை யாரழலவன்.", என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், "அங்கையில் அனலெரி ஏந்தி.", "கைஎரி வீசி நின்று கனலெரியாடு மாறே.", "அங்கையில் அனலும் வைத்தார்.", "அங்கை யுள் அனலும் வைத்தார்.", "கைஎரி சூலம் ஏந்தும் கடவுளை.", "கையது காலெரி.", "அங்கை ஆரழல் ஏந்திநின் றாடலன்.", "தீத்திரள் அங்கை ஏந்தி நின் றார்.", "அனல் ஏந்திய கையனே.", "அனல்கை ஏந்தி.", "கையோ டனலேந்தி.", "அங்கைத் தீயர்.", "வெந்தீ ஏந்தும் கையானை.", "கைசேர் அனலேந்தி ஆடி போற்றி.", "கையார் தழலார் விடங்கா போற்றி.", "அனலொரு கையது ஏந்தி.", "மழுவும் அனலும் ஏந்தும் கையானே.", "வெய்யகனல் ஏந்தினான்காண்.", என்று திருநாவுக்கரசு நாயனாரும், "அங்கையி னல்லனல் ஏந்து மவன்." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியருளியவற் றைக் காண்க.*

*பிறகு உள்ள 36—ஆம் பாடலின் கருத்து வருமாறு:*

*'பாரத நாடு முழுவதையும் விளக்கத்தைப் பெறுமாறு செய்த தெற்கில் விளங்கும் செந்தமிழ் நாட்டில் பிரமபுரீசர்*

திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தோணிபுர மாகிய சீகாழியோடு எவ்விடங்களிலும் சிவபெரு மானைப் பூசை புரிவதற்குப் பொருத்தமாக விளங்கும் இடங் கள் பல உள்ளன; சொல்லப்போனால் அந்தத் தெற்குத் திசைக்கு ஒப்பாகமாட்டா மற்றத் திசைகள்.' பாடல் வருமாறு:

**"தேசம் எல்லாம் விளங்கிய தென்திசை**
**ஈசர் தோணி புரத்துடன் எங்கணும்**
**பூச னைக்குப் பொருந்தும் இடம்பல**
**பேச்சில் அத்திசை ஒவ்வா பிறதிசை."**

தேசம்—பாரதநாடு. எல்லாம்—முழுவதையும். விளங் கிய—விளக்கத்தைப் பெறுமாறு செய்த. தென்திசை—தெற்கில் விளங்கும் செந்தமிழ் நாட்டில்; இட ஆகுபெயர். ஈசர்—பிரம புரீசர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக் கும். பிரமபுரி—சீகாழி. தோணி புரத்துடன்—தோணிபுர மாகிய சீகாழியோடு. எங்கணும்—எல்லா சிவத்தலங் களிலும். பூசனைக்கு—சிவபெருமானைப் பூசை புரிவதற்கு. பொருந்தும்—பொருத்தமாக விளங்கும்; ஏற்றவையாக விளங்கும். இடம்—தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல—பல உள்ளன. பேசில்—சொல்லப் போனால். அத்திசை—அந்தத் தெற்குத் திசைக்கு. ஒவ்வா—ஒப்பாக மாட்டா. பிற—வேறு. திசை—திசைகள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 37—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'என இவ்வாறு பெருமையைப் பெற்றவனாகிய உபமன் னிய முனிவன் வன்றொண்டராகிய சுந்தர மூர்த்தி நாயனார் புரிந்தருளிய செயல்களை அன்று ஒரு நாள் திருவாய் மலர்ந் தருளிய வண்ணமாக சிவனடியவர்களுடைய பழைய கீர்த்தி யைக் கூறும் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதி கத்தை முதல் நூலாகக் கொண்டு அதனுடைய விரிநூலாகிய

ஒந்தத் திருத்தொண்டர் புராணத்தை அடியேனுடைய பேராவலால் இப்போது பாடுவேன்.' பாடல் வருமாறு:

**''என்று மாமுனி வன்றொண்டன் செய்கையை**
**அன்று சொன்ன படியால் அடியவர்**
**தொன்று சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி**
**இன்றென் ஆதர வால்இங் கியம்புகேன்.''**

இது சேக்கிழார் கூற்று. என்று—என இவ்வாறு. மா—பெருமையைப் பெற்ற. முனி—உபமன்னிய முனிவன். வன்றொண்டர்—வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனார், செய்கையை—புரிந்தருளிய செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். அன்று—அன்று ஒரு நாள். சொன்னபடியால்—திருவாய்மலர்ந்தருளிச் செய்தபடியால். அடியவர்—சிவனடியார்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். தொன்று—பழைய. சீர்—சீர்த்தியை எடுத்துக் கூறும். த்: சந்தி. திருத்தொண்டத்தொகை—திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகத்தை முதல் நூலாகக் கொண்டு. விரி—அதனுடைய விரி நூலாகிய இந்தத் திருத்தொண்டர் புராணத்தை. 'வழியின் வகையாகிய நால்வகை யாப்பினுள் தொகைவிரி யாப்பு என ஒன்று போந்த தன்றித் தொகை வகை விரி எனப் போந்த தில்லையாலோ எனின், நடுநின்ற வகை பின் நின்ற விரியை நோக்கின் தொகையாகவும், முன் நின்ற தொகையை நோக்கின் விரியாகவும் அடங்குதலின், இது தொகைவிரி யாப்பு என்றதன்பாற் படும் என்க; எனவே தொகைவிரி என இரண்டாய் வரினும், மரத்தினது பராரை யினின்றும் கவடு கோடு கொம்பு வளார்ப் பலவாய் ஒன்றோடு ஒன்று தொடர்பட்டு எழுந்து நிற்றல் போல் தொகை யினின்றும் ஒன்றோடு ஒன்று தொடர்படப் பகுக்கப்பட்டுப் பலவாய் வரினும் தொகைவிரி யாப்பே ஆம் என்க:' என்று சிவ ஞான முனிவர் நன்னூலின் உரையில் எழுதியிருப்பது இங்கே பயன்படும். இன்று—இப்போது. என்—அடியே

னுடைய. ஆதரவால்—பேராவலால். இங்கு—இதற்குமேல். இயம்புகேன்—பாடத் தொடங்குவேன்.

பிறகு வரும் 38—ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'இந்தத் திருத்தொண்டர் புராணத்திற்கு மூலமாக விளங்கும் திருப்பதிகம் வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனார் பாம்புப் புற்றில் இடம்கொண்டு எழுந்தருளியிருக்கும் பழையவராகிய வன்மீகநாதர் வழங்கிய திருவருளால் பாடியருளிய உண்மைகளைக் கூறும் திருத்தொண்டத் தொகை என்று சொல்லப் பெற்ற நல்ல திருப்பதிகம் வணங்கப் பெற்றது ஆகும்.' பாடல் வருமாறு:

**''மற்றி தற்குப் பதிகம்வன் றொண்டர்தாம்**
**புற்றிட த்தெம் புராணர் அருளினால்**
**சொற்ற மெய்த்திருத் தொண்டத் தொகைஎனப்**
**பெற்ற நற்பதி கம்தொழப் பெற்றதாம்.''**

மற்று: அசைநிலை. இதற்கு—இந்தத் திருத்தொண்டர் புராணத்திற்கு. ப்: சந்தி. பதிகம்—மூலமாக விளங்கும் திருப்பதிகம். வன்றொண்டர் தாம்—வன்றொண்டராகிய சுந்தரமூர்த்திநாயனார். புற்றிடத்து-பாம்புப் புற்றாகிய இடத்தில் எழுந்தருளியிருக்கும். எம்-அடியேங்களுடைய தலைவராகிய. இது சேக்கிழார் கூறியது. புராணர்—பழையவராகிய வன்மீக நாதர். அருளினால்—வழங்கிய திருவருளால். சொற்ற—பாடியருளிய, மெய்—உண்மைகளைக் கூறும். ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. திருத்தொண்டத் தொகை என—திருத்தொண்டத் தொகை என்று; இடைக் குறை. ப்: சந்தி. பெற்ற—சொல்லப் பெற்ற. நல்—நல்ல. பதிகம்—திருப்பதிகம். தொழப் பெற்றது—வணங்கப் பெற்றது. ஆம்—ஆகும்.

புராணர்: ''புராணன் அமரர் அதிபதி.'', ''பூதபதியாகிய புராண முனி.'', என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், ''பொதியில் மேய புராணனை.'', ''மிகவும் பழையான்.'' ''பூதங்க ளாய புராணர்.'', ''புத்தேளும்

காண்பரிய புராணன்.'', ''ஆதி புராணனாய் நின்றாய் போற்றி.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''படைப் போற் படைக்கும் பழையோன்.'', ''யாரினும் முன்ன எம்பி ரான்.'', ''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளே,'', ''பாசவே ரறுக்கும் பழம்பொருள்.'' என்று மாணிக்க வாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 39—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த உண்மையான நாயன்மார்களின் வரலாறுகளைக் கூறும் திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகத்தில் கூறப்படும் சிவ பெருமானுடைய அடியவர்களாகிய நாயன் மார்களை நம்முடைய தலைவனாகும் நம்பியாண்டார் நம்பி தன்னுடைய புத்தியில் திருப்தி அடையும் வண்ணம் பாடி யருளிய வகை நூலாகிய திருத்தொண்டர் திரு அந்தாதியின் துணையால் நாயன்மார்கள் இந்தப் பூமண்டலத்தில் திருவவ தாரம் புரிந்தருளிய விதத்தைத் தவறு நேராமல் பாடத் தொடங்குவோம்.' பாடல் வருமாறு:

**''அந்த மெய்ப்பதி கத்தடி யார்களை**
**நந்தம் நாதனாம் நம்பியாண் டார் நம்பி**
**புந்தி ஆரப் புகன்ற வகையினால்**
**வந்த வாறு வழாமல் இயம்புவாம்,''**

இது சேக்கிழார் கூற்று. அந்த மெய்—அந்த உண்மை யான. ப்:சந்தி. பதிகத்து—நாயன்மார்களுடைய வரலாறு களைக் கூறும் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதி கத்தில் கூறப்படும். அடியார்களை—சிவபெருமானுடைய அடியவர்களாகிய நாயன்மார்களை. நந்தம்—நம்முடைய. தம்:அசை நிலை. நாதனாம்—தலைவனாக விளங்கும். நம்பியாண்டார் நம்பி — திருநாரையூரில் திருவவதாரம் செய்தருளிய நம்பியாண்டார் நம்பி என்னும் ஆதி சைவர். புந்தி—தம்முடைய திருவுள்ளம். ஆர — திருப்தியை அடை யும் வண்ணம். ப்:சந்தி. புகன்ற—பாடியருளிய. வகையி னால்—வகை நூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதியின்

துணையினால். வந்த—நாயன்மார்கள் இந்தப் பூமண்டலத்தில் திருவவதாரம் புரிந்தருளிய. ஆறு—விதத்தை. வழாமல்—ஒரு தவறும் நேராமல். இயம்புவாம்—பாடத் தொடங்குவோம்.

அடுத்து வரும் 40—ஆம் பாடல் திருமலைச் சிறப்பு என்னும் பகுதியின் இறுதிப் பாடல். அதன் கருத்து வருமாறு:

'இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையவும், சைவ சமயம் நிலைபெற்று ஓங்கி வளரவும் கணக்கு இல்லாத கீர்த்தியைப் பெற்ற நம்பி ஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனார் பாடியதும், நல்வாழ்வு வாழ்ந்த தொண்டர்களுடைய கூட்டம் நிறைந்து தங்குவதும், பொருந்தியிருக்கும் குளிர்ச்சியைப் பெற்றதும் ஆகிய புனல் நாடாகிய சோழ நாட்டின் சிறப்பை இனிமேல் பாடத் தொடங்குவோம்.' பாடல் வருமாறு:

**''உலகம் உய்யவும் சைவம்நின் றோங்கவும்**
**அலகில் சீர்நம்பி ஆரூரர் பாடிய**
**நிலவு தொண்டர்தம் கூட்டம் நிறைந்துறை**
**குலவு தண்புனல் நாட்டணி கூறுவாம்.''**

உலகம்—இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். உய்யவும்—உஜ்ஜீவனத்தை அடையவும். சைவம்—சைவ சமயம். நின்று—நிலை பெற்று. ஓங்கவும்—ஓங்கி வளரவும். அலகு - கணக்கு. இல்—இல்லாத; கடைக் குறை. சீர்—சீர்த்தியைப் பெற்ற. நம்பி ஆரூரர்—நம்பி ஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனார். பாடிய—பாடியருளியதும்; வினையாலணையும் பெயர். நிலவு—செந்தமிழ் நாட்டில் வாழும். தொண்டர்தம்—திருத்தொண்டர்களினுடைய. தம்: அசைநிலை; ஒருமை பன்மை மயக்கம். கூட்டம்—திருக்கூட்டம். நிறைந்து—நிரம்பியிருந்து. உறை—தங்குவதும்; வினையாலணையும் பெயர். குலவு—மக்கள் மகிழ்ச்சியைப் பெற்று வாழ்வதும். புனல் நாட்டு—புனல் நாடாகியதும் ஆகிய சோழவள நாட்டினுடைய. அணி—சிறப்பை. கூறுவாம்—இனிமேல் பாடத் தொடங்குவோம். இது சேக்கிழார் கூற்று.

# திருநாட்டுச் சிறப்பு

**பெரிய புராணத்தில் 2-ஆவதாக உள்ளது திருநாட்டுச்** *சிறப்பு. அதில் உள்ள முதற் பாடலின் கருத்து வருமாறு:*

*'செய்யுட்களாகிய இயல் தமிழ் மொழியை மக்கள் தாய் மொழியாகக் கொண்டு பேசி வாழும் தமிழ்நாட்டின் எல்லைக்குள் சிகரங்களால் உயர்ந்த இமயமலை என்னும் மலையினுடைய உச்சியில் தங்களுடைய அடையாள இலச்சினையாகிய வளரும் புலியைப் பொறித்த சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்ததும் 'காவிரி ஆறு பாய்வதும் ஆகிய சோழ நாட்டினுடைய சிறப்பை அடியேன் பாடலானேன்.' பாடல் வருமாறு:*

**''பாட்டியல் தமிழுரை பயின்ற எல்லையுட்**
**கோட்டுயர் பனிவரைக் குன்றின் உச்சியில்**
**சூட்டிய வளர்புலிச் சோழர் கா விரி**
**நாட்டியல் பதனையான் நவிலல் உற்றனன்.''**

*பாட்டு—செய்யுட்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். இயல் தமிழ் உரை—இயல் தமிழாகிய மொழியை. பயின்ற—மக்கள் தம்முடைய தாய்மொழியாகக் கொண்டு பே[illegible] வாழுகின்ற. எல்லையுள்—செந்தமிழ் நாட்டின் எல்லை[illegible]*

குள். கோட்டு—சிகரங்களால்; ஒருமை பன்மை மயக்கம். உயர்—உயரமாக உள்ள. பனி வரை—இமயமலை என்னும். க்:சந்தி. குன்றின்—மலையினுடைய. உச்சியில்—தலையில். வளர்—வளரும். புலி—தங்களுடைய அடையாள இலச்சினை யாகிய புலியை. சூட்டிய—பொறித்த. ச்:சந்தி. சோழர்—சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்ததும்; ஒருமை பன்மை மயக்கம். காவிரி—காவிரி ஆறு பாய்வதும் ஆகிய. நாட்டு—சோழவள நாட்டினுடைய. இயல்பதனை—சிறப்பை. அது: பகுதிப் பொருள் விகுதி. யான்—அடியேன்; இது சேக்கிழார் தம்மைச் சொல்லிக்கொண்டது. நவிலல் உற்றனன்—பாடலானேன்.

சோழ மன்னன் இமயமலையின் உச்சியில் புலிப்பொறியைப் பொறித்தது: ''வடமேருப் பொன்மலை மார்பும் புலிபொறித்தோன்.'' (**இராசராச சோழன் உலா**, 17) என வருதல் காண்க. பொறித்தவன் கரிகால் வளவன்.

அடுத்து உள்ள 2—ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'முன் ஒரு காலத்தில் முதல் முனிவனாகிய தவத்தைப் புரிந்த அகத்திய முனிவன் வழங்கிய ஐந்து பூதங்களில் ஒன்றாகிய நீர் நிரம்பிய அவனுடைய கமண்டலத்திலிருந்து பொழியப் பெற்ற காவிரி யாறு அழகைப் பெற்ற பூமிதேவியினுடைய பொலிவைப் பெற்ற மார்பில் தொங்கியதாகிய கடல் நீரில் உண்டாகிய முத்துக்களைக் கோத்த ஒரு மாலையை ஒத்து விளங்கும்.' பாடல் வருமாறு:

**''ஆதிமா தவமுனி அகத்தி யன்தரு**
**பூதநீர்க் கமண்டலம் பொழிந்த காவிரி**
**மாதர்மண் மடந்தைபொன் மார்பில் தாழ்ந்ததோர்**
**ஓதநீர் நித்திலத் தாமம் ஒக்குமால்.'**

ஆதி—முதல். மா—பெருமையைப் பெற்ற. தவ—தவசியாகிய; திணை மயக்கம். முனி அகத்தியன்—அகத்திய முனிவன். தரு—வழங்கிய. பூத—பிருதுவி, அப்பு, தேயு,

வாயு, ஆகாசம் என்னும் ஐம்பெரும் பூதங்களில் ஒன்றாகிய; ஒருமை பன்மை மயக்கம். நீர்—நீர் நிரம்பிய.க்:சந்தி. கமண்டலம்—குண்டிகை. பொழிந்த-விநாயகப் பெருமான் காக்கையின் வடிவத்தில் வந்து கவிழ்த்ததனால் தரையில் விழுந்து ஓடிய. காவிரி—காவிரியாறு; ''அமர முனிவன் அகத்தியன் தனாது, கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை.'' (பதிகம்,—11—12) என்று **மணிமேகலை**யில் வருவதைக் காண்க. மாதர்—காதல் மருவிய. மண்மடந்தை—பூமிதேவியினுடைய. பொன்—பொலிவைக் கொண்ட. மார்பில்—மார்பகத்தில். தாழ்ந்தது—தொங்கியதாகிய. ஓர்—ஒரு. ஓதம்—கடல் அலையில் உள்ள. நீர்—நீரில் பிறந்த. நித்தில—முத்துக்களைக் கோத்த; ஒருமை பன்மை மயக்கம். தாமம்—மாலையை. ஒக்கும்—ஒத்து விளங்கும். ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 3-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தக் காவிரி ஆறு பெருமையைப் பெற்ற சையாத்திரியில் தங்கியிருந்த தலைமையை மிகுதியாகப் பெற்றது; வயல்களைப் பெற்ற பூமி தேவிக்கு ஒரு செவிலித் தாயைப் போல விளங்குவது; இந்தப் பூமியில் வாழும் பல வகையான உயிர்களை வளரச் செய்து ஒவ்வொரு நாளும் உயிரோடு இருக்கும் வண்ணம் நீரைச் சுரந்து உண்ணச் செய்யும் இயல்பைக் கொண்டது.' பாடல் வருமாறு:

> **''சையமால் வரைபயில் தலைமை சான்றது;**
> **செய்யபூ மகட்குநற் செவிலி போன்றது;**
> **வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்**
> **உய்யவே சுரந்தளித் தூட்டும் நீரது.''**

மால்—பெருமையைக் கொண்ட. சைய - சஹ்யமென்னும் குடகு. வரை—மலையில். பயில்—தங்கும். தலைமை—தலைமைப் பதவியை. சான்றது—மிகுதியாக உடையது. செய்ய—பல வகையாகிய வயல்களைப் பெற்ற. அந்த வயல்

களாவன: சம்பா நெற்பயிர் விளையும் வயல், குறுவை நெற்பயிர் வளரும் வயல், கரும்புத் தோட்டம், செவ்வாழை மரத் தோட்டம், கருவாழை மரத் தோட்டம், பச்சை நாடன் வாழை மரத் தோட்டம், பேயன் வாழை மரத்தோட்டம், மொந்தன் வாழை மரத் தோட்டம்,வரகுப் பயிர் விளையும் புன்செய்,தினைப் பயிர் விளையும் புன்செய்; கேழ்வரகுப் பயிர் வளரும் புன்செய் முதலியவை. பூமகட்கு-பூமி தேவிக்கு. நல்-நல்ல. செவிலி—வளர்ப்புத் தாயை. போன்றது—போல விளங்குவது. வையம்—இந்த உலகத்தில் வாழும். பல்—பல வகையான. உயிர்-உயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். அந்த உயிர்களாவன:மனிதர்கள், பலவகை விலங்குகள், பலவகைப் பறவைகள், மரம் செடி கொடி வகைகள், ஊர்வன, நீர்வாழ் பிராணிகள் முதலியவை வளர்த்து-வளரச்செய்து. நாள்தொறும்-ஒவ்வொரு நாளும். உய்ய—உயிரோடு வாழும் வண்ணம். ஏ:அசைநிலை. சுரந்து—நீரைச் சுரந்து. ஊட்டும்—உண்ணச் செய்யும். நீரது—இயல்பைக் கொண்டது.

அடுத்து உள்ள 4—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருமாலினுடைய கொப்பூழ்ச் சுழி யாகிய தாமரை மலரின்மேல் தோன்றும் இயல்பினால், பல உயிர்களைப் படைக்கும் மாட்சிமையினால், அழகை உடைய நல்ல கமண்டலத்தை எடுத்துக் கொண்டிருக்கும் செயலால், அந்தப் பொன்னைக் கொழிக்கும் காவிரியாகிய பெருமையைப் பெற்ற ஆறு நான்கு முகங்களைக் கொண்ட பிரமதேவனையும் போல விளங்குவது.' இந்தப் பாடல் பிரமதேவனுக்கும் காவிரியாற்றுக்கும் சிலேடை. மேலே சொன்னது நான்முகனுடைய இயல்புகளை. இனிக் காவிரியாற்றின் இயல்புக்கு ஏற்றவாறு அமையும் பொருள் வருமாறு:

'பெருமையோடு நீரைத் தள்ளி நீர்ச்சுழிகள் தன்மேல் வருகின்ற இயல்பாலும், பல உயிர்களைத் தன்னிடம் ஓடும் நீரைக் குடித்து வாழச் செய்து காப்பாற்றும் மாட்சியாலும், அழகைப் பெற்ற நல்ல கமண்டலத்தில் முகந்து கொள்ளப்

படும் இயல்பினாலும் காவிரி ஆறு விளக்கத்தைப் பெறும். பாடல் வருமாறு:

**''மாலின்உந் திச்சுழி மலர்தன் மேல்வரும்**
**சால்பினால் பல்லுயிர் தருதன் மாண்பினால்**
**கோலநற் குண்டிகை தாங்கும் கொள்கையாற்**
**போலும்நான் முகனையும் பொன்னி மாநதி,''**

மாலின்—திருமாலினுடைய; பெருமையோடு. உந்தி—கொப்பூழாகிய; நீரைத் தள்ளி. ச்:சந்தி. சுழி மலர்—சுழியாகிய தாமரை மலர்; நீர்ச்சுழிகளும் மலர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தன்மேல்—அதன்மேல்; தன்னுடைய நீரின்மேல். வரும்—தோன்றும்; மிதந்து வரும். சார்பினால்—அமைதியாய். பல உயிர்—பல வகையான உயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். தருதல்—படைத்தலாகிய; தன்னிடம் ஓடிவரும் நீரைக் குடித்து வாழச்செய்து பாதுகாத்தலாகிய. மாண்பினால்—மாட்சிமையால். கோல—அழகைப் பெற்ற. நல்—நல்ல. குண்டிகை—கமண்டலத்தை; அகத்திய முனிவனுடைய கமண்டலம். தாங்கும்—எடுத்துக்கொண்டிருக்கும்: முகந்து கொள்ளப்படும். கொள்கையால்—இயல்பால். பொன்னி-பொன்னைக் கொழிக்கும். மா—பெருமையைப் பெற்ற. நதி—காவிரியாறு; ''பொன்னி பொன்கொழிக்கும்,'' என வருதலைக் காண்க. நான் முகனையும்—நான்கு முகங்களைக் கொண்ட பிரமதேவனையும்; முகன்:ஒருமை பன்மை மயக்கம். போலும்—போல விளங்கும்.

பிறகு வரும் 5-ஆம் பாடல் கங்கையாற்றுக்கும் காவிரியாற்றுக்கும் சிலேடை. அதன் கருத்து வருமாறு:

கங்கையாற்றின் இயல்புகள் வருமாறு: 'பிறைச் சந்திரனைத் தன்னுடைய தலையில் தங்க வைத்திருக்கும் சிவபெருமானுடைய திருமுடியில் பொங்கி யெழும் வெண்மையான நீரின்மேல் உள்ள நுரை மோதிக்கொண்டு ஓடுவதால்.

இனிக் காவிரி யாற்றின் இயல்புக்கு ஏற்ற பொருள் வருமாறு: 'சந்திரனை அளாவிய குடகுமலையின் சிகரத்தின் உச்சியிலிருந்து பொங்கி வருகின்ற வெண்மையான மேற்பக்கத்தைக் கொண்ட நுரை மோதிக்கொண்டு ஓடுவதால், அடியேங்களுடைய தலைவனாகிய சிவபெருமானுடைய தலையிலிருந்து பகீரதனுக்காக இறங்கி வந்து ஓடும் பொன் கொழிக்கும் காவிரியாறாகிய கன்னிகையின் வெள்ளம் கங்கையாற்றின் வெள்ளத்தைப் போல விளங்கும்.' பாடல் வருமாறு:

**''திங்கள்சூ டியமுடிச் சிகரத் துச்சியில்**
**பொங்குவெண் தலைநுரை பொருது போதலால்**
**எங்கள்நா யகன்முடி மிசைநின் றேயிழி**
**கங்கையாம் பொன்னியாம் கன்னி நீத்தமே.''**

திங்கள்—பிறைச் சந்திரன்; சந்திரனை. சூடிய—தன்னுடைய தலையில் தங்க வைத்திருக்கும்; அளாவிய குடகு மலையின். முடி—சிவபெருமானுடைய திருமுடியில்; மேற்பக்கத்தில் உள்ள. ச்: சந்தி. சிகரத்து-உள்ள மகுடத்தினுடைய; மலைமுடியினுடைய. உச்சியில்—உச்சியிலிருந்து. பொங்கு-பொங்கி வரும். வெண்-வெண்மை நிறத்தைக் கொண்ட: தலை-மேற் பக்கத்தைக் கொண்ட. நுரை-நீரின்மேல் மிதக்கும் நுரை. பொருது-கரையை மோதிக் கொண்டு. போதலால்-ஓடுவதால். எங்கள்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் மற்றச் சிவனடியார்களையும் சேர்த்துக் கூறியது. நாயகன்-தலைவனாகிய சிவபெருமானுடைய. முடிமிசை நின்று-தலையின்மேலிருந்து. ஏ:அசைநிலை. இழி-பகீரதனுக்காக இறங்கி ஓடும். கங்கையாம்-கங்கையாற்றைப் போல விளங்கும். பொன்னியாம்-பொன்னைக் கொழிக்கும் காவிரியாறாகும். கன்னி-கன்னிகையின். நீத்தம்-வெள்ளம். ஏ:ஈற்றசை நிலை.

நாயகன்: ''உயிர்கட்கு முன் தலையானவன்,'', ''வினை பொருள்கள் தானாகிய தலைவன்.'', ''மதிபுனைவனை

உமை தலைவனை'', ''தலைவன் தாளிணை சார்வோம்.'', ''சூலம் தாங்கிய தேவர் தலைவர்.'', ''தலைவநின் தாள்நிழற் கீழ் நீங்கி நில்லார் இடர் களையாய்.'', தாழ்சடை இளமதி தாங்கிய தலைவன்.'', ''சிராப்பள்ளித் தலைவரை.'', ''கவிக்காழித் தலைவா.'', ''அவன்எம் தலைமையனே.'', ''நாகேச்சர நகருள் தலைவா.'', ''சாய்க்காட்டெம் தலைவன்.'', ''அரக்கன்தோள் சாய்த்த தலைமகன்.'', ''நோய்கள் தள்ளிப்போக அருளும் தலைவன்.'', ''விடையூர்வார் தலைவர்.'', ''தாயுறு தன்மையாய தலைவன்.'', ''வலஞ்சுழி இடமாக இருந்த நாயகன்.'', ''அருள்செய்த தலைவனார்.'' ' நீள்சடையாய் தலைவா.'', ''விடையானும் எங்கள் தலைவன்.'', ''தாதணி குழலுமை தலைவர்.'', ''தாருடைக் கொன்றையந் தலைவர்.'', ''தக்கநல் வானவர் தலைவர்.'', ''பிறைதானலங்கல் உகந்த தலைவனார்.'',''தண்ணலங்கள் உகந்த தலைவனார்.'', ''போர் விடையன் தலைவன்.'', ''தானவர் முப்புரங்கள் எரிசெய்த தலைமகனே.'', ''தலைவளர் கோலநன் மாலை சூடும் தலைவர்.'', ''இமையோர்கள் தங்களை யாரிடர்தீர நின்ற தலைவர்.'', ''மலையின் தலைவன்.'', ''பூசு பொடித் தலைவர்.'', ''அண்ட நாயகனே.'', தாயினும் நல்ல தலைவர்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''தலையாலே பலிதேரும் தலைவனை.'', ''தானவர் தலைவர் போலும்.'', தாழ்வராம் தலைவன் பாலே.'', ''கருவுள் நாயகன்.'',''பூத நாயகன்.'', ''ஆதி நாயகன் அண்டர்கள் நாயகன், வேத நாயகன் வேதியர் நாயகன், பூத நாயகன்.'', ''தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை.'', சலங்கொள் சடை முடியுடைய தலைவா.'', ''தில்லை நடம்பயிலும் தலைவன்.'', ''சாம்பர் மெய் பூசும் தலைவா.'', ''சங்கை தனைத் தடுத்தாண்ட தலைவன்.'', ''சமையமவை ஆறினுக்கும் தலைவன்.'', ''தலைகலனாகப் பலியேற்ற தலைவன்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''துறையூர்த் தலைவா'', ''தலைவா நின்னினையப் பணித்

தாய்.'', ''வானோர் தலைவா.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''சைவா போற்றி தலைவா போற்றி.'', ''தன்மை பிறரால் அறியாத தலைவா.'', ''கயிலாய மென்னும் மலைத்தலைவா.'', ''நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை.'', ''நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை.'', ''நாயகனுக் கெவ்விடத்தோம்.'', ''எங்கள் நாயகனே.'', செங்கண் நாயகனே'' என்று மாணிக்க வாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 6-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

இந்தப் பாடல் காவிரிக்கும் பார்வதி அம்மைக்கும் சிலேடை.

காவிரியாற்றுக்குப் பொருந்தும் பொருள் வருமாறு:

'நீல வண்ணத்தைப் பெற்றதும் உயரமாக விளங்குவதும் ஆகிய குடகுமலையில் பிறந்து ஓடிவந்த மேம்பாட்டைப் பெற்றமையால், கணக்கு இல்லாத பெரியவையாகிய முப்பத்திரண்டு தருமங்களையும் தன்னிடம் உள்ள நீரினால் வளரச் செய்யும் கொடையால் விளங்குவது காவிரி ஆறு.'

இனி பார்வதி தேவியின் இயல்புக்குப் பொருந்தும் பொருள் வருமாறு:

'அழகியதும் உயரமானதும் ஆகிய இமயமலை யாகிய அரசன் பெற்று வழங்கத் திருவவதாரம் செய்தருளிய மேம்பாட்டாலும் கணக்கு இல்லாத தருமங்களை வளரச்செய்யும் மேம்பாட்டாலும் விளங்குபவள் அந்த அம்மை, தலைவனாகிய கைலாசபதியினுடைய வாம பாகத்தை ஆட்சிபுரியப் பெற்ற தலைவியாகிய பார்வதி தேவியின் திருவுள்ளத்தில் நெகிழ்ச்சியைக் கொண்ட கருணையினுடைய ஓட்டத்தைப் போல விளங்குவது காவிரி ஆறு.' பாடல் வருமாறு:

**வண்ணநீள் வரைதர வந்த மேன்மையால்**
**எண்ணில்பே ரறங்களும் வளர்க்கும் ஈகையால்**
**அண்ணல் பாகத்தை ஆளுடை நாயகி**
**உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.''**

வண்ணம்—நீல நிறத்தைப் பெற்றதும்: அழகிய நிறத்தைப் பெற்றதும். நீள்—உயரமாக விளங்குவதுமாகிய. வரை—குடகுமலை: இமயமலையாகிய அரசன்; திணை மயக்கம். தர—வழங்கியதால்; பெற்றதால். வந்த—சம் பூமிக்கு இறங்கி ஓடிவந்த; திருவவதாரம் செய்தருளிய, மேன்மையால்—மேலான தன்மையால்; மேம்பாட்டினால். எண்—கணக்கு. இல்—இல்லாத; கடைக்குறை.பேறங்களும்- பெருமையைப் பெற்ற முப்பத்திரண்டு தருமங்களையும். வளர்க்கும்—தன்னிடத்தில் ஓடும் நீரால் பயிர்களுக்குப் பாய்ந்து நெல் முதலியவற்றை நன்றாக ஓங்கி வளரச் செய்யும்; பரமேசுவரன் வழங்கிய இரண்டு படிகள் நெல்லைக் கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் வளரும் வண்ணம் செய்தருளும். ஈகையால்—விளைந்த தானியங்களை வழங்குவதற்குக் காரணமாக இருத்தலால்; கொடையால், அண்ணல்—தலைவனாகிய ஏகாம்பரேசுவரனுடைய. பாகத்தை—வாம பாகத்தை. ஆளுடைய.—ஆட்சி செய்யும் இடமாகப் பெற்ற.நாயகி-தலைவியாகிய காமாட்சி அம்மையினுடைய. உள்—திருவுள்ளத்தில். நெகிழ்—நெகிழ்ச் சியைப் பெற்றுத் திகழும். கருணையின்—பேரருளினுடைய. ஒழுக்கம்—இடைவிடாது பெருகுவதை. போன்றது—போல விளங்குவது காவிரி ஆறு.

அடுத்து உள்ள 7-ஆம் பாடல் காவிரி ஆற்றுக்கும் சிவனடியார்களுக்கும் சிலேடை. அதன் கருத்து வருமாறு:

காவிரியாற்றுக்கு ஏற்ற பொருள் வருமாறு: 'நறுமணம் கமழும் பல மலர்கள் மிதந்து வரும் நீரோடு பல ஊர்களின் வழியாக ஓடிச்சிவந்த தங்கம் மிகுதியாக உள்ள தன் கரையில் விளங்கும் கணக்கு இல்லாத திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானாகிய சிவபெருமானை வணங்குபவர்களுக்கும், ஆராதனை செய்பவர்களுக்கும் அபிடேக நீராகவும், பிரசாதந் தீர்த்தமாகவும்

பயன்படுவது குளிர்ச்சியைப் பெற்றதும் பொன்னைக் கொழிப் பதும் ஆகிய காவிரி ஆறு.'

இனிச் சிவனடியவர்களுக்கு ஏற்ற பொருள் வருமாறு, 'நறுமணம் கமழும் மலர்களால் அருச்சனை செய்தும் நீரால் அபிடேகம் புரிந்தும் வணங்கிச் சிவந்த தங்கம் உள்ள நீண்ட காவிரிக் கரையில் விளங்கும் கணக்கு இல்லாத திருக் கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெரு மான்களாகிய சிவபெருமான்களை வணங்குவார்கள். இதனால் குளிர்ச்சியான நீர் ஓடுவதும், பொன்னைக் கொழிப்பதுமாகிய காவிரியாறு தேவர்களின் தலைவ ராகிய சிவபெருமானாருடைய பக்தர்களையும் ஒத்து விளங்கும்.' பாடல் வருமாறு:

**"வம்பு லாமலர் நீரால் வழிபட்டுச்**
**செம்பொன் வார்கரை எண்ணில் சிவாலயத்**
**தெம்பி ரானை இறைஞ்சலின் ஈர்ம்பொன்னி**
**உம்பர் நாயகர்க் கன்பரும் ஒக்குமாம்."**

வம்பு-நறுமணம். உலாம்-மிதந்து வரும்; கமழும். மலர்-பல மலர்கள் மிதந்து வரும்; பலவகை மலர்களால் அருச்சனை புரிந்து- நீரால்-தன்னிடம் ஓடும் நீரினால்; நீரைக் கொண்டு அபிடேகம் செய்து; உருபு மயக்கம், வழிபட்டு-பல ஊர் களின் வழியாக ஓடி; வணங்கி வழிபாட்டைப் புரிந்து. ச் : சந்தி. செம்-சிவந்த; பொன்-தங்கம் உள்ள. வார்-நீள மான. கரை-தன் கரையில் விளங்கும்; காவிரிக்கரையில் உள்ள. எண்-கணக்கு. இல்—இல்லாத; கடைக்குறை. சிவாலயத்து-சிவபெருமான்களின் திருக்கோயில்களில்; ஒருமை பன்மை மயக்கம். எம்பிரானை-எழுந்தருளியிருக்கும் எம் பெருமான்களாகிய சிவபெருமான்களை; ஒருமை பன்மை மயக்கம். இறைஞ்சலின்-வணங்கும் பக்தர்களுக்கும் ஆராதனை செய்யும் சிவாசாரியார்களுக்கும் முறையே பிரசா தத் தீர்த்தமாகவும், அபிடேக நீராகவும் பயன்படுவதனால், ஈர்ம்-குளிர்ச்சியை உடைய நீர் ஓடுவதும். பொன்னி—

பொன்னைக் கொழிப்பதும் ஆகிய காவிரியாறு. உம்பர்—தேவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாயகர்க்கு—தலைவராகிய சிவபெருமானாருடைய; உருபு மயக்கம். அன்பரும்—பக்தர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். ஒக்கும்-காவிரியாறு ஒத்து விளங்கும். ஆல்: ஈற்றசைநிலை.

பிறகு உள்ள 8-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நறுமணம் கமழும் காவிரியாற்றில் ஓடும் நீரில் முழுகித் துளையும் மங்கைப்பருவத்தைப் பெற்ற பெண்மணிகளுடைய கொங்கைகளில் அவர்கள் பூசிக்கொண்டிருந்த குங்குமப் பூவின் குழம்பும் சந்தனமும் வீசுகின்ற தெளிவான அலைகளின்மேல் அவர்களுடைய திருமேனிகளிலிருந்து வழிந்து ஓடுகின்ற ஆற்றின் புனல் ஒளியை உடையது என்றாலும் தெளிவு இல்லாமல் இருப்பது ஆகும்.' பாடல் வருமாறு:

**''வாச நீர்குடை மங்கையர் கொங்கையில்**
**பூசு குங்கும மும்புனை சாந்தமும்**
**வீசு தெண்டிரை மீதிழிந் தோடுநீர்**
**தேசு டைத்தெனி னும்தெளி வில்லதே.''**

வாச-நறுமணம் கமழும். நீர்-காவிரிஆற்றில் ஓடும் நீரில். குடை - முழுகித் துளையும். மங்கையர்—மங்கைப் பருவத்தை அடைந்த பெண்மணிகள். கொங்கையில்—தங்களுடைய கொங்கைகளின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். பூசு—பூசிக்கொண்டிருக்கும்: குங்குமமும்—குங்குமப் பூவின் குழம்பும். புனை—அவர்கள் தங்களுடைய திருமேனிகளின் மேல் அணிந்திருந்த. சாந்தமும்—அரைத்த சந்தனமும். வீசு—வீசுகின்ற. தெண்—தெளிவையுடைய, திரைமீது—ஆற்றின் அலைகளின்மேல்; திரை: ஒருமை பன்மை மயக்கம். இழிந்து—வழிந்து. ஓடு—ஆற்றில் ஓடும். நீர்-புனல். தேசு—ஒளியை; 'தேஜஸ்' என்ற வடசொல்லின் திரிபு. உடைத்து—பெற்றது. எனினும்—என்றாலும்; இடைக்குறை. தெளிவு இல்லது-தெளிவு இல்லாமல் இருப்பது ஆகும். ஏ: ஈற்றசை நிலை.

சந்தனத்தைப் பெண்மணிகள் பூசிக்கொள்ளுதல்: ''சந்தனநேறு தடங்கொள் கொங்கைத் தையல்.'', ''சந்த மார் முலையாள்'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனா ரும், ''சந்தணி கொங்கையாள்'' என்று திருநாவுக்கரசு நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 9—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வண்டுகள் ஒலித்து எழுந்து ரீங்காரம் செய்ய மலை வழங்கிய மலர்கள் விரிந்து ஒழுகச் செய்த புதிய தேன் பொங்கி எழ வாவியினால் விளங்கும் சோழநாடு நீர்வளத் தையும் நிலவளத்தையும் செல்வ வளம் முதலியவற்றையும் வழங்கி வர, காவிரி ஆற்றில் ஓடும் நீர் கால்வாய்களிற் பரவிச் சென்று ஓங்கிச் சிறப்பைப் பெற்றிருக்கும்.' பாடல் வருமாறு:

**''மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு**
**பூவி ரித்த புதுமதுப் பொங்கிட**
**வாவி யிற்பொலி நாடு வளம்தரக்**
**காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால்.''**

மா—வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். இரைத்து—ஒலியைச் செய்து. எழுந்து—தாங்கள் தேனைக் குடித்த மலர்களிலிருந்து எழுந்து. ஆர்ப்ப—ரீங்காரம் செய்ய. வரை—மலையில். தரு—உண்டாகிய. பூ—மலர்கள்; ஒருமைபன்மை மயக்கம். விரித்த—மலர்ந்து ஒழுகச் செய்த. புது—புதிய. மது—தேன். பொங்கிட—பொங்கி எழ. வாவியில்—வாவியினால்; உருபுமயக்கம்; 'வாபீ' என்னும் வடசொல் திரிபு. பொலி—விளங்கும். நாடு—சோழநாடு. வளம்—நீர்வளம், நிலவளம், செல்வவளம் முதலியவற்றை; ஒருமை பன்மை மயக்கம். தர—இடைவிடாமல் வழங்கிவர. க்: சந்தி. காவிரி—காவிரி ஆற்றில் ஓடும். ப்: சந்தி. புனல்—நீர். கால்—கால்வாய்களில்; ஒருமை பன்மை மயக்கம். பரந்து—பரவிச் சென்று. ஓங்கும்—ஓங்கிச் சிறப்பைப் பெற்று விளங்கும். ஆல்: இறுதி அசை நிலை.

அடுத்து வரும் 10—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'காவிரியாற்றினுடைய ஒளியைக் கொண்ட துறையாகிய இடத்திலிருந்து பெரிய மதகுகளின் வழியில் சென்று மிகுதியாகப் பாயும் அந்த ஆற்றில் உள்ள நீர் வயல்களுக்குள் பாய அந்த நீரை எதிர்கொண்டு வரவேற்ற உழவர்கள் தட்டி எழுப்பிய கைகளின் ஒலி சென்று தேவர்கள் வாழும் தேவலோகத்திற்கு அப்புறத்திலும் போய்க் கேட்கும்.' பாடல் வருமாறு:

**"ஒண்து றைத்தலை மாமத கூடுபோய்**
**மண்டு நீர்வய லுட்புக வந்தெதிர்**
**கொண்ட மள்ளர் குரைத்தகை ஓசைபோய்**
**அண்டர் வானத்தின் அப்புறம் சாருமால்."**

ஒண்—காவிரி ஆற்றினுடைய ஒளியைக்கொண்ட. துறை—துறையாகிய. தலை—இடத்திலிருந்து. மா—பெரிய. மதகூடு—மதகுகளின் வழியில்; ஒருமை பன்மை மயக்கம். மதகு—நீர்பாயும் சிறிய கால்வாய். போய்—ஓடிச் சென்று. மண்டு—மிகுதியாகப் பாயும். நீர்—அந்த ஆற்றில் ஓடும் புனல். வயலுள்—வயல்களுக்கு உள்ளே; ஒருமை பன்மை மயக்கம். புக—நுழைந்து பாய. வந்து—அந்த வயல்களுக்கு வந்து. எதிர்கொண்ட—அந்த ஆற்றின் நீரை எதிர் கொண்டு வரவேற்ற. மள்ளர்—உழவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். குரைத்த—தட்டி எழுப்பிய. கை—அவர்கள் கைகளின்; ஒருமை பன்மை மயக்கம். ஓசை—ஒலி. போய்—சென்று. அண்டர்—தேவர்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம், வானத்தின்—தேவலோகத்திற்கு. அப்புறம்—மேலும். சாரும்—போய்க் கேட்கும். ஆல்: ஈற்றசை நிலை.

அடுத்து உள்ள 11—ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'விருப்பம் மருவிய இழிகுலப் பெண்களாகிய பள்ளிகள் நெற்பயிர்களினுடைய நாற்றுக்களைப் பிடுங்குகிறவர்களி

னுடைய பெருமையும், குளிர்ச்சியான நீரில் நாற்றுக்களின் முடிச்சுக்களை வைக்கும் உழவர்களினுடைய செயலும், ஓசையை எழுப்புகிறவர்களாக வயல்களில் உழும் உழவர் களின் செயல்களும் விருப்பத்தை உண்டாக்குவதாகிய ஒரு காட்சி மிகுதியாக இருப்பவை சோழ நாட்டில் உள்ள ஊர்கள்.' பாடல் வருமாறு:

**''மாதர் நாறு பறிப்பவர் மாட்சியும்**
**சீத நீர்முடி சேர்ப்பவர் செய்கையும்**
**ஓதை யார்செய் உழுநர் ஒழுக்கமும்**
**காதல் செய்வதோர் காட்சி மலிந்தே**

மாதர்-விருப்பம் தருவிய இழிகுலப் பெண்களாகிய பள்ளி கள்; ஒருமை பன்மை மயக்கம். நாறு—நெற்பயிர்களினுடைய நாற்றுக்களை; ஒருமை பன்மை மயக்கம். பறிப்பவர்—பிடுங்குகிறவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மாட்சியும்—பெருமையும். சீத—குளிர்ச்சியைக் கொண்ட. நீர்—வயல்களுக்கு ஆற்றிலிருந்து பாய்ந்த நீரில். முடி நாற்றுக்களின் முடிச்சுக்களை; ஒருமை பன்மை மயக்கம். சேர்ப்பவர்—வைக்கும் உழவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். செய்கையும்—செயலும். ஓதையார்—ஓசையை எழுப்புகிறவர்களாக. செய்—வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். உழுநர்—உழும் உழவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஒழுக்கமும்—செயல்களும்; ஒருமை பன்மை மயக்கம். காதல்—விருப்பத்தை. செய்வது—உண்டாக்குவதாகிய. ஓர்—ஒரு. காட்சி—தோற்றம். மலிந்தது-மிகுதியாகப் பெற்று விளங்குபவை சோழநாட்டில் உள்ள ஊர்கள், ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 12—ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'வயல்களில் உழவர்கள் உழுத சால்கள் நன்றாக ஊறித் தெளிவை அடைந்த சேற்றின் குழம்பு உள்ள வயல்களில் மருத நிலத்திற்குரிய தெய்வமாகிய இந்திரனை வணங்கி

விட்டு நெற்பயிர்களின் நாற்றுக்களை நடுபவர்களினுடைய கூட்டமே குற்றம் சிறிதும் இல்லாத காவிரி ஆறு பாயும் சோழநாட்டில் விளங்கிப் பரவிய ஊர்கள் எல்லாவற்றிலும் காணப்படும்.' பாடல் வருமாறு:

**"உழுத சால்மிக ஊறித் தெளிந்தசே**
**றிழுது செய்யினுள் இந்திரத் தெய்வதம்**
**தொழுது நாறு நடுவார் தொகுதியே**
**பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம்."**

உழுத—வல்களில் உழவர்கள் உழவைச் செய்த. சால்—சால்கள்; ஒருமை பன்மை மயக்கம், சால்—ஏர் சென்ற வழி. மிக—நன்றாக. ஊறித் தெளிந்த—ஊறித் தெளிவை அடைந்த. சேறு—சேற்றினுடைய. இழுது—குழம்பு. செய்யினுள்—வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். இந்திரத் தெய்வதம்—மருதநிலத்துக்கு உரிய இந்திரனாகிய தெய்வத்தை. தொழுது—வணங்கிவிட்டு, நாறு—நெற்பயிர் களின் நாற்றுக்களை; ஒருமை பன்மை மயக்கம். நடுவார்—நடும் பள்ளிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தொகுதியே—கூட்டமே. பழுது—ஒரு குற்றமும். இல்—இல்லாத; கடைக்குறை. காவிரி—காவிரி ஆறு பாயும். நாட்டின்—சோழநாட்டில். பரப்பு—விளங்கிப் பரவிய ஊர் கள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்—எல்லாவற்றிலும் காணப்படும்; இடைக்குறை. இந்திரன் மருத நிலத்துக்கு உரிய தெய்வம்; "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்." (**தொல்காப்பியம்,** அகத்திணை இயல், 5) என வருவதைக் காண்க.

அடுத்து வரும் 13—ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மிகுதியாகப் பாய்ந்த காவிரி ஆற்றின் நீர் பரவிய வயல் களில் நெற்பயிர்களாகிய முதல்களின் சுருள்கள் விரிவை அடைய அதைப் பார்த்து உழவர்கள் பக்குவத்தைக் காண்

பிக்கக் களைகளைக் களைந்து எறியும் இழிகுலப் பெண்க ளாகிய பள்ளிகள் குளிர்ச்சியான முத்துக்களை உமிழும் சங்குப் பூச்சிகளை இடறிக் கொண்டு தங்களுடைய இடுப்புக் கள் தளர்ச்சியை அடைந்து சோர்வைப் பெறுவார்கள். வண்டுகள் மொய்த்து அலையும் தங்களுடைய கூந்தல்கள் அசையும் வண்ணம் மெத்தென்ற நடையோடு வயல்களில் உள்ள வரப்புக்களை அடைவார்கள்.' பாடல் வருமாறு:

**"மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்**
**கண்டுழவர் பதம்காட்டக் களைகளையும் கடைசியர்கள்**
**தண்டரளம் சொரிபணிலம் இடறியிடை தளர்ந்தசைவார்**
**வண்டலையும் குழல்அலைய மடநடையின் வரம்பணை**
**வார்."**

மண்டு—மிகுதியாகப் பாய்ந்த. புனல்—காவிரி ஆற்றில் ஓடிய நீர். பரந்த—பரவிய. வயல்—வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். வளர்—வளரும். முதலின்—நெற்பயிர்க ளாகிய முதல்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். சுருள் —சுருள்கள்; ஒருமை பன்மை மயக்கம். விரிய—விரிவை அடைய. க்: சந்தி. கண்டு—அதைப் பார்த்து. உழவர்—உழ வர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பதம்—களைகளைக் களை யும் பக்குவத்தை, காட்ட—காண்பிக்க. க்: சந்தி. களை— களைகளை; ஒருமை பன்மை மயக்கம். களையும்—பிடுங்கி எறியும். கடைசியர்கள்—இழிகுலப் பெண்களாகிய பள்ளி கள். தண்—குளிர்ச்சியைப் பெற்ற. தரளம்—முத்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். சொரி—உமிழும். பணிலம்— சங்குப் பூச்சிகளை; ஒருமை பன்மை மயக்கம். இடறி— தங்கள் கால்கள் இடறி. இடை- தங்களுடைய இருப் புக்கள்; ஒருமை பன்மை மயக்கம் தளர்ந்து—தளர்ச்சியை அடைந்து. அசைவார்-சோர்வை அடைவார்கள்; ஒருமை பன்மை மயக்கம். வண்டு—வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். அலையும்-மொய்த்து அலையும். குழல்-தங்க ளுடைய கூந்தல்கள்; ஒருமை பன்மை மயக்கம். அலைய- அசையும் வண்ணம். மடநடையின்-மெத்தென்ற நடையோடு.

வரம்பு-வயல்களில் உள்ள வரப்புக்களை; ஒருமை பன்மை மயக்கம். அணைவார்-அடைவார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 14ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வயலில் பணி புரியும் இழிகுலப் பெண்களாகிய பள்ளிகள் வயலில் வளர்ந்திருக்கும் செங்குவளை மலர்களைப் பிடுங்கித் தங்களுடைய கருமையான கூந்தல்களின்மேல் அணிந்துகொள்வார்கள். தங்களுடைய கூந்தல்களில் அணிந்திருக்கும் செங்குவளை மலர்களில் மொய்க்கும் சிறகுகளைப் பெற்ற வண்டுகளைத் தங்களுடைய அழகிய கைகளாகிய செந்தாமரை மலர்களைக் கொண்டு ஓட்டி அயலில் பறக்கும் வண்டுகளையும் வரும் வண்ணம் அழைப்பார்கள். சந்திரனைப் போல விளங்கும் தங்களுடைய நெற்றிகளில் வேர்வைத் துளிகள் அரும்புகளைப் போலத் துளிக்க, சிறிய புன்னகை முல்லை மலரைப் போல முகிழ்க்க,அந்த வயல்களில் பொங்கி எழுந்து வளர்ந்த தாமரை மலர்களில் உள்ள புதிய தேனைத் தங்களுடைய வாய்களில் பெய்து சோர்வை அடைவார்கள்.' பாடல் வருமாறு:

**"செங்குவளை பறித்தணிவார் கருங்குழல்மேற்சிறைவண்டை**
**அங்கைமலர் களைக்கொடுகைத் தயல்வண்டும்**
**வரவழைப்பார்**
**திங்கள்நுதல் வெயர்வரும்பச் சிறுமுறுவல் தளவரும்பப்**
**பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார்."**

செங்குவளை—வயல்களில் பணிபுரியும் இழிகுலப் பெண்களாகிய பள்ளிகள் அந்த வயல்களில் வளர்ந்திருக்கும் செங்குவளை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். பறித்து-பிடுங்கி. கரும்-தங்களுடைய கருமையாக உள்ள. குழல்மேல்—கூந்தல்களின்மேல்; ஒருமை பன்மை மயக்கம். அணிவார்—சூடிக்கொள்வார்கள்; ஒருமை பன்மை மயக்கம். சிறை—தங்களுடைய கூந்தல்களில் அணிந்திருக்கும் செங்குவளை

மலர்களில் மொய்க்கும் சிறகுகளைப் பெற்ற; சிறை: ஒருமை பன்மை மயக்கம். வண்டை—வண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். அம்-அழகிய. கை—தங்களுடைய கைக ளாகிய; ஒருமை பன்மை மயக்கம். மலர்களை—செந்தா மரை மலர்களை. க்:சந்தி. கொடு—கொண்டு. கைத்து—அந்த வண்டுகளை ஓட்டி விட்டு. அயல்—பக்கத்தில் பறக்கும் வேறு. வண்டும்—வண்டுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். வரவழைப்பார்—வரும் வண்ணம் அழைப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். திங்கள்—சந்திரனைப் போன்ற. நுதல்—தங்களுடைய நெற்றிகளில். ஒருமை பன்மை மயக்கம். வெயர்வு—வேர்வைத் துளிகள்; ஒருமை பன்மை மயக்கம். அரும்ப—அரும்புகளைப் போலத் துளிக்க. ச்:சந்தி. சிறு-சிறிய. முறுவல்-புன்னகை. தளவு-முல்லை மலரைப்போல. அரும்ப-முகிழ்க்க ப்:சந்தி. பொங்கு-அந்த வயல்களில் பொங்கி எழுந்து வளர்ந்துள்ள. மலர்க் கமலத்தின்-தாமரை மலர்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம்; பின் முன் னாகத் தொக்க தொகை. புது-புதிய. மது-தேனை. வாய்-தங்களுடைய வாய்களில்; ஒருமை பன்மை மயக்கம். மடுத்து-விட்டுக்கொண்டு. அயர்வார்-சோர்வை அடைவார்கள்; ஒருமை பன்மை மயக்கம். பெண்மணிகளின் நெற்றிகளுக்குச் சந்திரன் உவமை: "மதிநுதல் மங்கையோடு.", "வாணிலா மதிபோல் நுதலாள்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "பிறைநுதல் பேதை மாதர் உமை.", "பிறை நுதற் பேதைமாதர் பெய்வளை யார்க்கும்.", "பிறைகொள் ளாள் நுற் பெய்வளைத்-தோளியர்." என்று திருநாவுக்கரசு நாயனாரும்.", "பிறைநுதல் மங்கையொடும்.", "பிறை யணிலாள் நுதலாள் உமையானவள்." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பெண்களின் புன்னகைக்கு முல்லை மலர் உவமை: "முல்லை வெண்ணகை மொய்குழலாய்" என்று திருநாவுக்

கரசு நாயனாரும், ''முல்லை முறுவல் உமை.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து உள்ள 15 ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இவை கரும்புச் செடிகள் அல்ல' நெற்பயிர்கள் என்று சொல்லும் வண்ணமும்,இவை கமுக மரங்கள் அல்ல,கரும்புச் செடிகள் என்று மயங்குமாறும், வண்டுகள் அல்லிமலர்களை உள்ளே புகுந்து குடைந்து வெளிப்படுத்தும் நீல நிறத்தைக் கொண்ட மகரந்தப் பொடிகள் அல்ல, யாவும் பகல் வேளையே ஆகும் என்று மயங்கும் வண்ணமும், இவை அரும்புகள் அல்ல, மகளிரின் கொங்கைகள் என்று கூறும் வண்ணமும் அவை விளங்கும்.இவை அமுதத்துளிகள் அல்ல, பெண்மணிகளின் இனிய சொற்கள் என்று கூறுமாறு திகழும். இவ்வாறு வயல்களுக்குப் பணி புரிய வரும் பல ஆயிரம் இழிகுல மடந்தையர்களாகிய பள்ளிகள் வயல்கள் எல்லாவற்றிலும் காணப்படுவார்கள்.' பாடல் வருமாறு:

**''கரும்பல்ல நெல்லென்னக்**
**கமுகல்ல கரும்பென்னச்**
**சுரும்பல்லி குடைநீலத்**
**துகளல்ல பகலெல்லாம்**
**அரும்பல்ல முலையென்ன**
**அமுதல்ல மொழியென்ன**
**வரும்பல்லா யிரம்கடைசி**
**மடந்தையர்கள் வயலெல்லாம்.**

கரும்பு அல்ல-இவை கரும்புச் செடிகள் அல்ல; ஒருமை பன்மை மயக்கம். நெல்-நெற்பயிர்கள்; ஒருமை பன்மை மயக்கம். என்ன-என்று கூறும்படியும். க்:சந்தி. கமுகு அல்ல-இவை பாக்கு மரங்கள் அல்ல; ஒருமை பன்மை மயக்கம். கரும்பு-கரும்புச் செடிகள்; ஒருமை பன்மை மயக்கம். என்ன-என்று சொல்லுமாறும் ச்:சந்தி. சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். அல்லி-நீலோற்பல மலர்களின் அக இதழ்களை;ஒருமை பன்மை மயக்கம். குடை

-உள்ளே புகுந்து குடைவதனால் வெளிப்படும். நீல-நீல நிறத்தைக்கொண்ட. த்:சந்தி துகள் அல்ல.மகரந்தப் பொடிகள் அல்ல; ஒருமை பன்மை மயக்கம்.பகல் எல்லாம்-இவ்வாறு பகல் நேரம் முழுவதும் தோற்றத்தை அவை அளிக்கும். அரும்பு அல்ல-இவை அரும்புகள் அல்ல: ஒருமை பன்மை மயக்கம்: முலை-இழிகுலப் பெண்க ளாகிய பள்ளிகளின் கொங்கைகள்; ஒருமை பன்மை மயக்கம். என்ன-என்று மயங்கும்படியும். அமுது அல்ல-இவை அமுதத் துளிகள் அல்ல! ஒருமை பன்மை மயக்கம். மொழி-அந்தப் பள்ளிகள் பேசும் இனிய வார்த்தை கள்; ஒருமை பன்மை மயக்கம். என்ன-என்று நவிலும் வண்ணமும். வரும்-வயல்களுக்குப் பணிகளைப் புரிய வரும். பல் ஆயிரம்—பல ஆயிரமாகிய. கடைசி மடந்தையர்கள்—இழிகுலத்தில் பிறந்தவர்களும் மடப்பத்தை உடையவர்களு மாகிய பள்ளிகள். வயல்—வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—எல்லாவற்றிலும் காணப்படுவார்கள்.

பெண்மணிகளின் கொங்கைக்கு அரும்பு உவமை: ''அரும்பும் குரும்பையும்அலைத்தமென் கொங்கை.'',''அரும்பினார் முலை மங்கை.'', ''அரும்பன வனமுலை அரிவையோடு.'', ''அரும்பமர் கொங்கையோர் பால்மகிழ்ந்த.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும். ''அருப்புப் போல் முலையார்'', ''அருப்போட்டு முலைமடவாள்'', என்று திருநாவுக்கரசு நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 16—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கயல் மீன்கள் துள்ளிப் பாயும் பசுமையான நீர் நிறைந்த தடாகத்தில் மாமிசம் அற்றுப் போன சங்காகிய பெருமை யைப் பெற்றதும், கருமையானதும் ஆகிய பானையில் விரி வான வாயைக்கொண்ட வெண்மை நிறம் உள்ள சங்குப் பூச்சிகள் உமிழ்ந்த முத்துக்களாகிய அரிசிகளை மலர்களில் நிரம்பியிருக்கும் தேனாகிய உலையில் இட்டு அங்கே பக்கத்

தில் ஓடும் ஆமையாகிய அடுப்பில் ஏற்றிவைத்துச் செவ்வாம் பல் மலராகிய நெருப்பைத் தங்களுடைய வாய்களால் ஊதுபவர்கள் வயலில் பணிபுரிபவர்களும் ஆகிய இழிகுலப் பெண்களாகிய பள்ளிகளினுடைய சிறிய பெண் குழந்தைகள் புரியும் விளையாட்டு அந்த வயல்களினுடைய வரப்புக்கள் எல்லாவற்றிலும் காணப்படும்.' பாடல் வருமாறு:

**''கயல்பாய்பைந் தடநந்தூன் கழிந்தபெரும் கருங்குழிசி**
**வியல்வாய்வெள் வளைத்தரள மலர்வேரி உலைப்பெய்தங்**
**கயலாமை அடுப்பேற்றி அரக்காம்பல் நெருப்பூதும்**
**வயல்மாதர் சிறுமகளிர் விளையாட்டு வரம்பெல்லாம்.''**

கயல்—கயல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். பாய்—நீரிலிருந்து துள்ளிப் பாயும். பைம்—பச்சை நிறமான நீர் நிரம்பிய. தடம்—தடாகத்தில் வாழும். நந்து—சங்குப் பூச்சிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஊன்—மாமிசம். கழிந்த—அற்ற. பெரும்—பெரிய. கரும்—கருமையான. குழிசி—பானைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வியல்—அகலமான. வாய்—வாய்களில்; ஒருமை பன்மை மயக்கம். வெள்—வெள்ளை நிறத்தைக் கொண்ட. வளை—சங்குப் பூச்சிகள் உமிழ்ந்த; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தரளம்—முத்துக்களாகிய அரிசிகளை; ஒருமை பன்மை மயக்கம். மலர்-மலர்களில் நிரம்பியிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வேரி—தேனாகிய. உலை—உலையில். பெய்து—இட்டு. அங்கு—அந்த வயல்களின். அயல்—பக்கத்தில் ஓடும். ஆமை-ஆமைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். அடுப்பு—அடுப்புக்களில்; ஒருமை பன்மை மயக்கம். ஏற்றி—ஏற்றி வைத்து. அரக்காம்பல் — செவ்வாம்பல் மலர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். நெருப்பு—தீயை. ஊதும்—தங்களுடைய வாய்களால் ஊதும். வயல்—வயல்களில் பணிபுரியும்; ஒருமை பன்மை மயக்கம். மாதர்—விருப்பம் மருவிய இழிகுலப் பெண்களாகிய பள்ளிகள் என்றெடுத்த; ஒருமை

பன்மை மயக்கம். சிறு—சிறிய. மகளிர்—பெண் குழந்தைகள். விளையாட்டு—விளையாடும் பல வகையான விளையாடல்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த விளையாடல்கள் ஆவன: பாண்டி ஆடுதல், கல்லாங்காய் விளையாடுதல், நொண்டி விளையாட்டு முதலியவை. வரம்பு—வயல்களில் உள்ள வரப்புக்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—எல்லாவற்றிலும் காணப்படும்.

பின்பு உள்ள 17—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'காடுகள் எல்லாவற்றிலும் தடிகளைக் கொண்ட கரும்புச் செடிகள் வளர்ந்து ஓங்கி நிற்கும்; சோலைகள் எல்லாவற்றிலும் தழைகளோடு கூடிய அரும்புகள் இருக்கும்; அந்தச் சோலைகளினுடைய பக்கங்கள் எல்லாவற்றிலும் கருங்குவளை மலர்கள் மலர்ந்து விளங்கும்; வயல்கள் எல்லாவற்றிலும் நெருங்கிச் சங்குப் பூச்சிகள் ஊர்ந்து கொண்டிருக்கும்; மரங்களின் கிளைகள் அனைத்திலும் மடப்பத்தைப் பெற்ற அன்னப் பறவைகள் அமர்ந்திருக்கும்; குளங்கள் யாவும் சமுத்திரங்களைப் போல விளங்கும்; வேறு நாடுகள் யாவும் நீர்வளத்தைப்பெற்ற சோழ நாட்டை நலங்கள் எல்லாவற்றிலும் ஒத்து இரா.' பாடல் வருமாறு:

**''காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு,**
**மாடெல்லாம் கருங்குவளை; வயலெல்லாம் நெருங்குவளை,**
**கோடெல்லாம் மடஅன்னம், குளமெல்லாம் கடல்அன்ன;**
**நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலம்எல்லாம்.''**

காடு—காடுகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—எல்லாவற்றிலும். கழை—தடிகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கரும்பு—கரும்புச் செடிகள் வளர்ந்து ஓங்கி நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். கா—சோலைகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—அனைத்திலும். குழைக்கு—தளிர்களோடு கூடிய; ஒருமை பன்மை மயக்கம். தளிர்—முற்றாத இலை. அரும்பு—மொட்டுக்கள் காணப்படும்; ஒருமை பன்மை மயக்கம். மாடு—அந்தச்

சோலைகளின் பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—யாவற்றிலும். கருங்குவளை—கருங்குவளை மலர்கள் மலர்ந்து விளங்கும்; ஒருமை பன்மை மயக்கம். வயல்—வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—முழுவதும். நெருங்கு—நெருங்கியுள்ள. வளை—சங்குப்பூச்சிகள் ஊர்ந்து கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். கோடு—மரங்களினுடைய கிளைகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம் —எல்லாவற்றிலும். மட—மடப்பத்தை உடைய. அன்னம்—அன்னப் பறவைகள் அமர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். குளம்-குளங்கள்; ஒருமை பன்மைமயக்கம். எல்லாம் -யாவும். கடல்—சமுத்திரங்களை; ஒருமை பன்மை மயக்கம். அன்ன—போல விளங்கும். நாடு—வேறு நாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—யாவும். நீர்-நீர்வளத்தைப் பெற்ற. நாடுதனை—சோழ நாட்டை. தன்-அசை நிலை. நலம்—நலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—யாவற்றிலும். ஒவ்வா-ஒத்து இரா.

பிறகு உள்ள 18-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கரும்பு ஆலையில் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சுபவர்கள் பாய்ந்து வரும்போது முழங்கும் முழக்கமும், சோலையில் வண்டுகள் மலர்களை மொய்த்து ஒலியை எழுப்பி அந்த மலர்களிலிருந்து மேலே எழுந்து பறக்கும் ஓசையும், உலகத்தில் சிறந்து ஓங்கி உள்ள இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறைப்படி அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேதியர்கள் ஓதும் வேதகானமும், சமுத்திரத்தில் அலைகள் உண்டாக்கும் ஓசையை விட மிகுதியாகிப் பரவிக் கேட்கும்.'

பாடல் வருமாறு:

**''ஆலை பாய்பவர் ஆர்ப்புறும் ஒலமும்**
**சோலை வாய்வண் டிரைத்தெழு சும்மையும்**
**ஞாலம் ஓங்கிய நான்மறை ஓதையும்**
**வேலை ஓசையின் மிக்கு விரவுமால்.**

ஆலை-கரும்பு ஆலையில். பாய்பவர்-கருப்பஞ் சாற்றைக் காய்ச்சும் மக்களாகிய பாய்பவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்ப்புறும்-முழங்கும். ஓலமும்—முழக்கமும். சோலைவாய்-பூம்பொழிலில். வண்டு-வண்டுகள்: ஒருமை பன்மை மயக்கம். இரைத்து—ரீங்காரம் செய்துகொண்டு, எழு தாங்கள்தேனைக் குடிக்கப் புகுந்த மலர்களிலிருந்து மேலே எழும். சும்மையும்-ஒலியும், ஞாலம்-இந்தப் பூமண்டலத்தில். ஓங்கிய—ஓங்கிச் சிறப்பைப் பெற்ற. நான்மறை—இருக்கு வேதம், யஜுர் வேதம் சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறைப்படி அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேதியர்கள்; திணை மயக்கம். மறை: ஒருமைபன்மை மயக்கம்.ஓதையும்—கானம் செய்யும் இனிய நாதமும். வேலை—சமுத்திரத்தில் வீசும் அலைகள் செய்யும்; இட ஆகு பெயர். ஓசையின்-பேரொலியைவிட, மிக்கு-மிகுதியாகி.விரவும்-பரவிக் கேட்கும். ஆல்:ஈற்றசை நிலை. ஓலம், சும்மை, ஓசை என்பவை ஒரே பொருளை உடைய வேறு வேறு சொற்கள்,இது ஒரு பொருட் பல சொல் அணி.

அடுத்து உள்ள 19—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அன்னப் பறவைகள் நடனம் ஆடும் அகலமான துறையைக் கொண்ட பொய்கையில் நிரம்பியுள்ள நீரில் படியும் எருமை மாடு முழுக, உதைத்துக்கொண்டு துள்ளி எழும் கருவுறாத வாளை மீன்கள் பாக்கு மரத்தின்மேல் பாய்பவை நிலை பெற்று விளங்கும் ஆகாயத்தின்மேல் தோன்றும் வானவில்லைப் போல விளங்கும்.' பாடல் வருமாறு:

**''அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்**
**துன்னும் மேதி படியத் துதைந்தெழும்**
**கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன**
**மன்னு வான்மிசை வானவில் போலுமால்.''**

அன்னம்—அன்னப் பறவைகள்; ஒருமை பன்மை மயக்கம். ஆடும்—நடனம் ஆடும். அகன்—அகலமான.

துறை—துறையைப் பெற்ற. ப்:சந்தி. பொய்கையில்—மனிதர்கள் ஆக்காத நீர் நிலையில். துன்னும்—இறங்கும். மேதி—எருமை மாடு. படிய—படிந்து முழுக. த்:சந்தி. துதைந்து—உதைத்துத் துள்ளிக்கொண்டு. எழும்—நீருக்கு மேல் எழும். கன்னி—கருப்பத்தை அடையாத. வாளை—வாளை மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். கமுகின்மேல்—பாக்குமரத்தின் மேல். பாய்வன—பாய்கின்ற அந்த வாளை மீன்கள். மன்னு—நிலை பெற்று விளங்கும். வான்மிசை—ஆகாயத்தில் தோன்றும். வானவில்-இந்திரவில்லை. போலும்—போலத் தோன்றும். ஆல்:ஈற்றசை நிலை. வாளைமீன் கமுகின்மேற் பாய்தல்: ''நாகிளங் கமுகின் வாளை தாவுறும் கோசல நாடுடை வள்ளல்'' என்று கம்பராமாயணத்தில் வருதலைக் காண்க.

அன்னம் ஆடும் துறை: ''அன்னம் கன்னிப் பேடை யொடாடி யணவு பெருந்துறை யாரே.'',''அன்னம் ஆலும் துறையானும்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''அன்னம் ஆடும் முன்துறை.'' (மிதிலைக் காட்சிப் படலம், 23) என்று கம்பரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து உள்ள 20—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சோலையில் பழகி அலையும் மகிழ்ச்சியைக் கொண்ட வண்டுகளின் கூட்டம் வாவி நீரில் படிந்து அங்கே மலர்ந்திருக்கும் செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், அல்லி மலர், ஆம்பல் மலர், கருங்குவளை மலர், குமுத மலர் முதலிய நீர் மலர்களில் நிரம்பியிருக்கும் தேனை அடைந்து அதைக் குடித்துவிட்டு அந்தத் தடாகத்தின்மேல் எழுந்து பறக்க, துள்ளிப் பாயும் கயல்மீன்கள் தாவி அந்தச் சோலையில் வளர்ந்து நிற்கும் மரங்களிற் பழுத்த பழங்களை அடித்து உதிரச் செய்யும்.' பாடல் வருமாறு:

**''காவி னிற்பயி லும்கனி வண்டினம்**
**வாவி யிற்படிந் துண்ணும் மலர்மது**
**மேவி அத்தடம் மீதெழப் பாய்'கயல்**
**தாவி அப்பொழி லிற்கனி சாடுமால்.''**

*காவினில்—பூஞ்சோலையில். பயிலும்—பழகிப் பறக்கும். வண்டு—வண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இனம்—கூட்டம். வாவியில்—வாவியில் நிரம்பியிருக்கும் நீரில்; இட ஆகு பெயர். படிந்து உண்ணும்—படிந்து குடிக்கும். மலர்—அந்த நீரில் மலர்ந்திருக்கும் செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், அல்லி மலர், ஆம்பல் மலர், கருங்குவளை மலர், செங்குவளை மலர், குமுத மலர் முதலிய நீர்ப்பூக்களில் நிரம்பியிருக்கும். மலர் : ஒருமை பன்மை மயக்கம். மது—தேனை. மேவி—அடைந்து அதைக் குடித்துவிட்டு. தடம்—அந்தத் தடாகத்தின். மீது—மேலே. எழ—எழுந்து பறக்க. ப்:சந்தி. பாய்—துள்ளிப் பாயும். கயல்—கயல்மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். தாவி—தாவிப் போய். அப் பொழிலில்—அந்தச் சோலையில் வளர்ந்து நிற்கும் பல வகையான மரங்களிற் பழுத்த; இட ஆகு பெயர். அந்த மரங்களாவன: மாமரம், தென்ன மரம், பலாமரம், வாழை மரங்கள், வில்வ மரம், விளாமரம் முதலியவை. கனி—பழங்களை; ஒருமை பன்மை மயக்கம். சாடும்—அடித்து உதிரச் செய்யும். ஆல்:ஈற்றசை நிலை.*

*பிறகு வரும் 21—ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:*

*'சாலி நெற்பயிர்கள் வளரும் நீண்ட வயலில் ஓங்கி வளர்ந்து தங்களுக்கு வேறு எந்தப் பயிரும் ஒப்பு இல்லாமல் மிகுதியாக விளங்கித் தூயதாகிய வெள்ளை நிறத்தைக் கொண்ட உண்மையாக இருக்கும் கருவை உடைமையால் உண்டாகும் வளப்பத்தைப் பெற்றவையாகிக் கருப்பம் முதிருவதற்கு அடையாளமாகிய பச்சை நிறத்தைப் பெற்றுப் பூட்டையின் சுருள்களை விரியச் செய்து ஹரனாகிய சிவ பெருமானுடைய பக்தர்களுடைய மகிழ்ச்சியை அடைந்து*

துள்ளிய உள்ளங்களைப் போல நெற்கதிர்கள் யாவும் விரிந்து விளங்கின.' பாடல் வருமாறு:

**''சாலிநீள் வயலின் ஓங்கித் தந்நிகர் இன்றி மிக்கு**
**வாலிதாம் வெண்மை உண்மைக் கருவினால் வளத்த வாகிச்**
**சூல்முதிர் பசலை கொண்டு சுருள்விரித் தரனுக் கன்பர்**
**ஆலின சிந்தை போல அலர்ந்தன கதிர்கள் எல்லாம்.''**

சாலி—சாலி என்னும் சிறந்த நெற்பயிர்கள் வளரும்; ஒருமை பன்மை மயக்கம். நீள்-நீளமாக உள்ள. வயலின்—வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். ஓங்கி-ஓங்கி வளர்ச்சியை அடைந்து. த்:சந்தி. தம்-தங்களுக்கு. நிகர்—வேறு எந்தப் பயிரும் ஒப்பு. இன்றி-இல்லாமல். மிக்கு—மிகுதியாக விளங்கி. வாலிதாம்-தூய்மையைப் பெற்றதாகும். வெண்மை -வெள்ளை நிறத்தைக் கொண்ட. உண்மை—உண்மையாக இருக்கும். க்:சந்தி. கருவினால்—கருப்பத்தை உடைமையால். வளத்த ஆகி—உண்டாகும் வளப்பத்தைப் பெற்றவையாக விளங்கி. ச்:சந்தி. சூல்-கருப்பம். முதிர்-முதிர்ந்ததற்கு அடையாளமாகிய; வினையாலணையும் பெயர். பசலை-பச்சை நிறத்தை. கொண்டு—பெற்று. சுருள்-பூட்டையின் சுருள்களை; ஒருமை பன்மை மயக்கம். விரித்து-விரியச் செய்து. அரனுக்கு-ஹரனாகிய சிவபெருமானுடைய; உருபு மயக்கம். அன்பர்-பக்தர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஆலின-சிவபெருமானைத் தரிசித்ததால் மகிழ்ச்சியை அடைந்து துள்ளிய. சிந்தைபோல-திருவுள்ளங்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். கதிர்கள்-நெற்கதிர்கள். எல்லாம்—யாவும். அலர்ந்தன-விரிந்து விளங்கின. பெண் மணிகள் கருப்பம் முதிர்ந்தால் பச்சை நிறத்தை அடைவது வழக்கம். அதைப்போல இந்த நெற்பயிர்களும் பச்சை நிறத்தைக் கொண்டு விளங்கின.

அடுத்து வரும் 22-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பக்தியின் வசப்பட்டவர்கள் ஆகிப்-பரமேசுவரனுக்கு ஆட்கள் ஆக விளங்கும் அன்பர்கள் தங்கள் தங்களுக்குள்ளே கூடிக் கலந்தவர்கள் ஒருவரை ஒருவர் தலையினால் வணங்கு மாறு போல மிகுதியாக உள்ள வரிசைகளில் முதிர்ச்சியைப் பெற்ற தங்களுடைய தலைகளைச் சாய்த்து வளைந்து அந்த வித்தகர்களாகிய பக்தர்களுடைய இயல்பைப் போல சாலி யென்னும் சிறப்பான நெற்பயிர்கள் யாவும் விளைந்து முதிர்ச்சியைப் பெற்று விளங்கின.'

பாடல் வருமாறு:

**''பத்தியின் பால ராகிப் பரமனுக் காளாம் அன்பர்**
**தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்**
**மொய்த்தநீள் பக்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை**
**வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம்.''**

பத்தியின் பாலர் ஆகி-பக்தியின் வசப்பட்டவர்கள் ஆகி; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பரமனுக்கு-பரமேசுவர னுடைய; உருபு மயக்கம். ஆள்-ஆட்கள்; அடிமைகள்; ஒருமை பன்மை மயக்கம். ஆம்-ஆகி விளங்கும். அன்பர்-பக்தர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தத்தமில்-தங்கள் தங்க ளுக்குள். கூடினார்கள்-கூடிக் கலந்தவர்களாகி; முற்றெச்சம். தலையினால்-தங்களுடைய தலைகளினால்; ஒருமை பன்மை மயக்கம். வணங்குமா போல்-ஒருவரை ஒருவர் பணியு மாறு போல. மொய்த்த-மிகுதியாக; உள்ள. நீள்-நீளமாக உள்ள. பத்தியின்-பயிர்களின் வரிசையில். பால் முதிர்-பால் முதிர்ச்சியைப் பெற்ற. தலை-தங்களுடைய தலை களை; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி-வளைந்து. மற்றை: அசை நிலை. வித்தகர்-அந்த வித்தகர்களாகிய பக்தர்களுடைய. வித்தகர்—கலையில் வல்லவர். தன்மை போல-இயல்பைப்போல. சாலி-சாலி என்னும் சிறந்த நெற் பயிர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-யாவும். விளைந்தன-விளைந்து முதிர்ச்சியைப் பெற்று விளங்கின.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் சந்தித்தபோது ஒருவரை ஒருவர் வணங்கியதைக் காண்க. இந்தச் செய்தியைப் புலப்படுத்தும் இடம் பெரிய புராணத்தில் உள்ளது. அது வருமாறு:

**''திருநாவுக் கரசரெதிர் சென்றிறைஞ்சச்
சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையார்
எதிர்வணங்கி அப்ப ரேநீர்
வருநாளில் திருவாரூர் நிகழ்பெருமை
வகுத்துரைப்பீர் என்று கூற
அருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை
அவரும்எதிர் அருளிச் செய்வார்.''**

பின்பு உள்ள 23-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அரிந்த சம்பா நெற்களினுடைய கதிர்களை அடுக்கி வைத்து அடுக்கலாக உழவர்கள் சேர்த்து வைப்பார்கள்; ஆவல் உண்டாகியதனால் குளத்திலிருந்து வலை போட்டுப் பிடித்துக்கொண்டு வந்து வெட்டிய பல மீன்களைக் குவித்த உயரமான மலையைப்போல அமைப்பார்கள்; வளைந்த மூக்குக்களைப் பெற்ற சங்குப் பூச்சிகள் உமிழ்ந்த முத்துக்களை ஒளி வீசும் பெரிய மலையைப் போல உயரமாகக் குவிப்பார்கள்; மலர்ந்த பல மலர்களினுடைய தொகுதியிலிருந்து தேனைச் சொரிந்து இறங்கும் மலையை வைப்பார்கள்.' பாடல் வருமாறு:

**''அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்;
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடும் குன்று செய்வார்;
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு யர்ப்பார்;
விரிமலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார்.''**

அரிதரு-அறுத்துக்கொண்டு வந்த. செந்நெல்-சம்பா நெற்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். சூட்டின்

கதிர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். அடுக்கிய-ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்த. அடுக்கல்-அடுக்கலை. சேர்ப்பார்-உழவர்கள் சேர்த்து வைப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். பரிவு-ஆவல். உற-உண்டாகியதால். த்:சந்தி. தடிந்த-குளத்திலிருந்து வலைபோட்டுப் பிடித்துக் கொண்டு வந்து வெட்டிய. பல்-பல வகையான. இவை கயல் மீன்கள், வாளை மீன்கள், வரால் மீன்கள்; சுறாமீன்கள் முதலியவை. மீன்-மீன்களை; ஒருமை பன்மை மயக்கம். படர்-குவித்து வைத்த. நெடும்-உயரமாக உள்ள. குன்று-மலையைப்போல. செய்வார்-அந்த உழவர்கள் குவிப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். சுரி-சுழித்த மூக்குகளைப் பெற்ற. வளை-சங்குப் பூச்சிகள்; ஒருமை பன்மை மயக்கம். சொரிந்த-உமிழ்ந்த. முத்தின்-முத்துக்களால்; ஒருமை பன்மை மயக்கம். சுடர்-ஒளியை வீசும். ப்:சந்தி பெரும்-பெரிய. பொருப்பு-மலையைப் போல. உயர்ப்பார்-உயரமாகக் குவித்து வைப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். விரி-மலர்ந்த. மலர்-பல வகையான மலர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கற்றை-தொகுதி. வேரி-தேனை. பொழிந்து-சொரிந்து. இழி-இறங்கி வழியும். வெற்பு-மலர்களை மலையைப் போல. வைப்பார்-அடுக்கி வைப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 24-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'உழவர்கள் அறுத்த சாலி நெற்களின் தொகுதியை அடுக்கி வைத்த விசாலமான மலையைப் போன்ற குவியலினுடைய உச்சியைக் கீழே தள்ளிவிட்டுப் பெரிய கால்களைக் கொண்ட காளை மாடுகளைக் கட்டி ஓட்டும் கரிய பெரிய வண்டிகளினுடைய கூட்டம், முழங்கிய மேகங்கள் சேர்ந்த கூட்டம் ஏறுவதற்கு அருமையாக உள்ள மலையினுடைய சிகரத்தின் சாரலின்மீது வலமாக வந்து சுற்றியிருக்கும் காட்சியினால் மருத நிலம் மிக்க சிறப்பைப் பெற்றதாக விளங்கியது.' பாடல் வருமாறு:

**''சாலியின் கற்றை துற்ற**
**தடவரை முகடு சாய்த்துக்**
**காலிரும் பகடு போக்கும்**
**கரும்பெரும் பாண்டில் ஈட்டம்**
**ஆலிய முகிலின் கூட்டம்**
**அருவரைச் சிமயச் சாரல்**
**மேல்வலம் கொண்டு சூழும்**
**காட்சியின் மிக்க தன்றே.''**

சாலியின்-உழவர்கள் அறுத்த சிறந்தனவாகிய சாலி நெற்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். கற்றை-தொகுதியை. துற்ற-மூட்டைகளாகக் கட்டி அடுக்கி வைத்த. தட-விசாலமான. வரை-மலையைப் போன்ற குவியலினுடைய; உவம ஆகுபெயர். முகடு-உச்சியை. சாய்த்து-தரையில் தள்ளிவிட்டு. க்:சந்தி. கால் இரும்-கருமையான கால்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். பகடு-கர்ளை மாடுகளைக் கட்டி; ஒருமை பன்மை மயக்கம். போக்கும்-ஓட்டச் செய்யும். கரும்-கருமையான. பெரும்-பெரிய. பாண்டில்-வண்டிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஈட்டம்-கூட்டம். ஆலிய-ஆகாயத்தில் முழங்கிய. முகிலின்-மேகங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். கூட்டம்-தொகுதி. அரு-ஏறுவதற்கு அருமையாக உள்ள. வரை-மலையினுடைய. ச்: சந்தி. சிமய-சிகரத்தின். ச்:சந்தி. சாரல்மேல்-பக்கத்தின்மீது. வலம் கொண்டு-வலமாக வந்து. சூழும்-சுற்றியிருக்கும். காட்சியின்-தோற்றத்தைப் போல. மிக்கது-மருத நிலம் மிக்க சிறப்பைப் பெற்றதாக விளங்கியது. அன்று, ஏ: இரண்டும் ஈற்றசை நிலைகள்.

அடுத்து வரும் 25-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'வைக்கோலை ஆராய்ந்து போக்கிவிட்டு வண்டிகளில் வந்த மூட்டைகளை அவிழ்த்து அவற்றில் வைத்துக் கட்டியிருந்த நெற்கள் யாவற்றையும்ஆறப்போட்டு வைத்துப்பிறகு அவற்றை முறங்களில் எடுத்து மழை பெய்வதைப்போலத்

தூற்றிச் சிவந்த தங்கமலையும், கோமேதகம், நீலக்கல், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வயிரம் என்ற நவரத்தின மலையும் இவை ஆகும் என்று கூறும் வண்ணம் கைத்தொழிலில் வல்லமையைப் பெற்றவர்களாகிய உழவர்கள் ஆகாயம் மறையுமாறு அடுக்கி வைத்த நெல் மூட்டைகளினுடைய மலையினால் வளம் சேர்ந்த மலையை உடைய குறிஞ்சி நிலத்தைப் போலத் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் நீர் நிலைகளைப் பெற்ற மருத நிலம் விளங்கும்.' பாடல் வருமாறு:

**''வைதெரிந் தகற்றி ஆற்றி மழைபெயல் மானத் தூற்றிச்**
**செய்யபொற் குன்றும் வேறு நவமணிச் சிலம்பும் என்னக்**
**கைவினை மள்ளர் வானம் கரக்கவாக் கியநெற் குன்றால்**
**மொய்வரை உலகம் போலும் முளரிநீர் மருத வைப்பு.''**

வை-வைக்கோலை. தெரிந்து-ஆராய்ந்து. அகற்றி-போக்கிவிட்டு. ஆற்றி-வண்டிகளில் ஏற்றிக்கொண்டு வந்த மூட்டைகளை அவிழ்த்து அவற்றில் பொதிந்து கட்டியிருந்த நெற்கள் எல்லாவற்றையும் வெயிலில்ஆறப்போட்டு வைத்து. மழை—பிறகு அந்த நெற்களை முறங்களில் வாரி எடுத்து மழை. பெயல்-பெய்வதை. மான-போல. த்:சந்தி. தூற்றி-காற்றில் தூற்றி. ச்:சந்தி. செய்ய-சிவந்த. பொற்குன்றும்-தங்க மலையும். வேறு-வேறாக விளங்கும். நவமணி-கோமேதகம், நீலக்கல், பவளம், மரகதக்கல், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வயிரம் ஆகிய நவரத்தினங்களின். மணி:ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சிலம்பும்-மலையும் இவை ஆகும். என்ன-என்று கூறும் வண்ணம். க்:சந்தி. கைவினை-கைத்தொழிலில் தேர்ச்சியைப் பெற்ற. மள்ளர்-உழவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வானம்-ஆகாயம். கரக்க-மறையுமாறு. ஆக்கிய-அடுக்கி வைத்த நெல்-நெல் மூட்டைகளினுடைய; ஆகுபெயர்; ஒருமை பன்மை மயக்கம். குன்றால்-மலையினால். மொய்-வளம் சேர்ந்த. வரை-மலையைப் பெற்ற. உலகம்-குறிஞ்சி

நிலத்தை. முளரி-தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். நீர்-நிர்நிலைகளைப் பெற்ற. இவை குளம், ஏரி, பொய்கை, கிணறு, குட்டை முதலியன; ஒருமை பன்மை மயக்கம். மருத வைப்பு-மருத நிலம். போலும்-போல விளங்கும்.

அடுத்து வரும் 26-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அரசன் வாங்கும் வரிகளைச் செலுத்திவிட்டு எஞ்சியுள்ள பணத்தை வைத்துக்கொண்டு முப்பத்திரண்டு வகையான தருமங்களையும் செய்து அவற்றைப் பாதுகாத்து வாழ்த்தும் அருமையாக விளங்கும் மருத நிலத்துத் தெய்வமாகிய இந்திரனை வாழ்த்தி வணங்கிவிட்டு, குருமார்களையும் விருந்தாளிகளையும் நல்ல குணத்தோடு சேர்ந்திருக்கின்ற சுற்றத்தார்களையும் தாங்கி விளங்குகின்ற குடிமக்கள் சிறந்து ஓங்கி வாழும் மலைகளைப் போன்ற மாடங்கள் உயரமாக விளங்கித் தலங்கள் எல்லாவற்றிலும் மலர்ச்சியைப் பெற்று விளங்கின.' பாடல் வருமாறு:

**''அரசுகொள் கடன்கள் ஆற்றி**
**மிகுதிகொண் டறங்கள் பேணிப்**
**பரவரும் கடவுட் போற்றிக்**
**குரவரும் விருந்தும் பண்பின்**
**விரவிய கிளையும் தாங்கி**
**விளங்கிய குடிகள் ஓங்கி**
**வரைபுரை மாடம் நீடி**
**மலர்ந்துள பதிகள் எங்கும்.''**

அரசு—அரசன்; திணை மயக்கம். கொள்-வாங்கும். கடன்கள்-வரிகளை. ஆற்றி-இறுத்துவிட்டு. மிகுதி-எஞ்சிய பணத்தை. கொண்டு - வைத்துக்கொண்டு; அறங்கள்-முப்பத்திரண்டு வகையான தருமங்களை; அவையாவன: ஆதுலர் சாலை கட்டுதல், ஓதுவார்க்கு உணவை வழங்குதல், அறுசமயத்தவர்களுக்கு உணவு படைத்தல், பசுவுக்குப் புல் கொடுத்தல், சிறையில் இருப்பவர்களுக்குச் சோற்றை

அளித்தல், இரவலர்களுக்குப் பிச்சை இடுதல், வழிநடப்பவர்களுக்குச் சிற்றுண்டியை வழங்குதல்,குழந்தைகளுக்குச் சோறு அளித்தல், குழந்தைகளைப் பெண்கள் பெறும் வண்ணம் புரிதல், அயலார் குழந்தைகளை வளர்த்து வருதல், குழந்தைகளுக்குப் பசுமாட்டுப் பாலைக் குடிக்கத் தருதல், அநாதைப் பிணங்களை எரியச் செய்வித்தல்,வறுமை அடைந்தவர்களை நிதி வழங்கி மீட்டும் நிலை நிற்கச் செய்தல், வண்ணார்களுக்குத் துணிகளை வெளுத்த கூலியைஅளித்தல், நாவிதர்களுக்கு க்ஷவரம் செய்ததற்குரிய கூலியைக் கொடுத்தல், கன்னிகைகளுக்குத் திருமணம் செய்து வைத்தல், அந்தணச் சிறுவர்களுக்கு உபநயனம் செய்து பிரமசாரிகள் ஆக்குதல், நோயாளிகளுக்கு அவர்களுடைய நோய்களைப் போக்குவதற்கு உரிய மருந்துகளை வாங்கி வழங்குதல், கண்ணாடியை அளித்தல், முகூர்த்த ஓலையை வழங்குதல், கண்நோய் பெற்றவர்களுக்கு மருந்துகளை வாங்கி அளித்தல், மக்களின் தலைகளுக்கு எண்ணெய் வழங்குதல், பெண்களின் சிற்றின்பத்தை ஆடவர்கள் துய்க்கும் வண்ணம் செய்தல், மக்களுக்குச் சமையல் செய்த உணவுகளைப் படைத்தல், இறந்து போன மற்றவர்கள் வைத்துச் சென்ற அறங்களைப் பாதுகாத்தல், தண்ணீர்ப் பந்தலை வைத்தல், துறவிகளுக்கு மடங்களைக் கட்டுவித்து வழங்குதல், தடாகத்தை வெட்டுவித்தல், சோலைகளில் மரங்களை நட்டு வளரச் செய்தல், பசுமாடுகள் தினவு போக்கிக் கொள்ளும் வண்ணம் தறியை நட்டு வைத்தல், காளை மாடுகளை ஓடும்படி விடுதல், கொலைத் தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்காக விலை கொடுத்து வேறு உயிர்களை வாங்கி அந்த உயிர்களை உயிர் பிழைக்குமாறு உதவிபுரிதல் என்பவை ஆகும். பேணி-செய்து பாதுகாத்து. ப்:சந்தி. பரவரும்-வாழ்த்துவதற்கு அருமையாக இருக்கும். கடவுள்-மருத நிலத்துக்கு உரிய தெய்வமாகிய இந்திரனை;"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்." (அகத்திணை இயல், 5) என்று தொல்காப்பியத்தில் வருவதைக் காண்க. போற்றி-வாழ்த்தி வணங்கி விட்டு, க்:சந்தி.

குரவரும்-குருமார்களையும்; ஒருமை பன்மை மயக்கம். விருந்தும்-விருந்தாளிகளையும்; திணை மயக்கம். பண்பின்-நற்குணங்களோடு; ஒருமை பன்மை மயக்கம். விரவிய-தம்மோடு சேர்ந்திருக்கின்ற. கிளையும்-சுற்றத்தார்களையும்; ஒருமை பன்மை மயக்கம். தாங்கி-உதவிகளைப் புரிந்து பாதுகாத்து. விளங்கிய-விளக்கத்தை அடைந்துள்ள. குடிகள்-குடிமக்கள்; 'குடும்பங்கள்' எனலும் ஆம். ஓங்கி-சிறப்பைப் பெற்று உயர்ச்சியை அடைந்து வாழும். வரை-மலையை. புரை-ஒத்த. மாடம்-மாடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். நீடி-உயரமாக விளங்கி. பதிகள்-சிவத்தலங்கள். எங்கும்-எல்லாவற்றிலும். மலர்ந்து-மலர்ச்சியை அடைந்து. உள-இருப்பவையாகத் திகழும்; இடைக்குறை.

பின்பு உள்ள 27-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'வெட்டிய கரும்புகளை வெல்லங்களாகக் காய்ச்சுகின்ற ஏர்க் களத்தில் பணிகளைப் புரியும்' வேலைக்காரர்கள் கரும்பை அரைக்கும் ஆலையில் கமழும் நறுமணத்தை வீசும் புகையோ, அல்லது விருப்பம் மருவிய பெண்மணிகள் வண்டுகள் மொய்த்து மேலே எழுமாறு அகிற் கட்டைகளை இட்ட தூபத்தில் எழும் புகையோ, அல்லது வேள்வித் தூணில் பெருமையையும் நல்ல பெயரையும் பெற்ற யாக சாலை ஒவ்வொன்றிலும் விளங்கி எழுந்த புகையோ, அல்லது ஆகாயத்தில் வரும் கருமையான மேகங்களோ மாடங்களும் சோலைகளும் ஆகிய எந்த இடங்களிலும் சுற்றி விளங்கும்.'

பாடல் வருமாறு:

**'கரும்படு களமர் ஆலைக் கமழ்நறும் புகையோ மாதர்**
**சுரும்பெழ அகிலால் இட்ட தூபமோ யூபவேள்விப்**
**பெரும்பெயர்ச் சாலை தோறும் பிறங்கிய புகையோ வானின்**
**வரும்கரு முகிலோ சூழ்வ மாடமும் காவும் எங்கும்.''**

கரும்பு-வெட்டிய கரும்புத்தடிகளை; ஒருமை பன்மை மயக்கம். அடு-வெல்லங்களாகக் காய்ச்சும். களமர்-ஏர்க் களத்தில் பணிகளைப் புரியும் வேலைக்காரர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆலை-கருப்பங்கழிகளை இட்டுச் சாறு வடிக்கும் ஆலையில். க்: சந்தி. கமழ்-கமழும். நறும் புகையோ-நறுமணம் கொண்ட புகையோ. மாதர் விருப்பம் மருவிய பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். கரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். எழ-மேலே எழுந்து பறக்குமாறு. அகிலால்-தாங்கள் நீராடிய பிறகு தங்களுடைய கூந்தல்களைப் புலர்த்துவதற்காக அகிற் கட்டைகளை; உருபுமயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். இட்ட-கணப்பில் உள்ள நெருப்பில்இட்டதனால் உண்டான. தூபமோ-புகையோ. யூப-தூணை நட்டிருக்கும். வேள்வி-யாகத்தை வேதியர்கள் புரியும். ப்: சந்தி. பெரும்-பெருமையைப் பெற்ற. பெயர்-புகழை அடைந்த, ச்: சந்தி. சாலை-யாகசாலை. தோறும்-ஒவ்வொன்றிலும். பிறங்கிய புகையோ-விளங்கிய புகையோ. வானின்-ஆகாயத்தில். வரும்-மிதந்து வரும். கரு-கருமையான. முகிலோ-மேகங்களோ; ஒருமை பன்மை மயக்கம்.(இவை யாவும்.)மாடமும்-மாடங்களும்; ஒருமை பன்மை மயக்கம். காவும்-பூஞ் சோலைகளும்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-ஆகிய எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம் சூழ்வ-சுற்றி விளங்கும். பெயர்-புகழ்; ''அரும்பெறன் மரபிற் பெரும் பெயர் முருக.'' (269) என்று **திருமுருகாற்றுப்படை**யிலும், ''பெரும்பெயர் இயவுள்.'' (274) என்று அதே நூலிலும், ''பெரும்பெயர் முருக.'' (**பரிபாடல்**, 5:50), ''பெரும் பெயர் வேந்தன்.'' (**புறப்பொருள் வெண்பாமாலை.**), ''பெரும் பெயர்ப் பிரமன்.'' (**சீவகசிந்தாமணி**, 207), ''பெரும் பெயர்க் கடவுளிற் கண்டு.'' (**சிவஞானபோதம்**, சிறப்புப் பாயிரம்) என்று வருவனவற்றைக் காண்க.

பின்பு உள்ள 28-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'எல்லா இடங்களிலும் பல வகை வாழை மரங்களும், செருந்தி மரமும், நறுமணம் கமழும் நாரத்தை மரமும் வளர்ந்து நிற்கும்; இடங்கள் எல்லாவற்றிலும் பூவாமல் காய்க்கும் பலாமரங்கள் முதலியவையும், சால மரமும், தமால மரமும், குளிர்ச்சியைப் பெற்ற மலர்கள் மலரும் குரா மரமும் உயரமாக வளர்ந்து விளங்கும்; வேறு இடங்கள் முழுவதிலும் கருமையான அடியைக் கொண்ட பனமரமும், சந்தன மரமும், குளிர்ச்சியை உடைய மலர்கள் மலரும் சுர புன்னை மரமும் காணப்படும்; மற்ற இடங்கள் யாவற்றிலும் நீளமான இலைகளைப் பெற்ற வஞ்சி மரமும், காஞ்சி மரமும், நிறைந்த மலர்கள் மலர்ந்திருக்கும் கோங்கிலவ மரமும் வளர்ந்து விளங்கும்.' பாடல் வருமாறு:

**''நாளிகே ரம்செருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்;**
**கோளிசா லம்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்;**
**தா ளிரும் போங்து சந்து தண்மலர் நாகம எங்கும்;**
**நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்.''**

நாளிகேரம்-செவ்வாழை மரம், கருவாழை மரம், பச்சை நாடன் வாழை மரம், மொந்தன் வாழை மரம், சுகந்தன் வாழை மரம்,பேயன் வாழை மரம் முதலிய பல வகை வாழை மரங்களும்; ஒருமைபன்மை மயக்கம். செருந்தி-பொன்னைப் போன்ற மலர்கள் மலரும் செருந்தி மரமும்; ''செருந்தி செம்பொன் மலரும் சோலை'' என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளியதைக் காண்க. நறு-நறுமணம் கமழும். மலர்-மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். நரந்தம்-நாரத்தை மரமும். எங்கும்-எந்த இடத்திலும் காணப்படும். கோளி-பூவாதே காய்க்கும் பலாமரம் முதலிய மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். சாலம்-சால மரமும். தமாலம்-தமால மரமும். குளிர்-குளிர்ச்சியைக் கொண்ட. மலர்-மலர்கள் மலரும்; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. குரவம்—குராமரமும்,

எங்கும்-எவ்விடத்திலும் வளர்ந்து நிற்கும். தாள் இரும்-கருமையான அடியைப் பெற்ற. போந்து-பனமரமும். சந்து-சந்தன மரமும். தண்-குளிர்ச்சியை உடைய. மலர்-மலர்கள் மலரும்; ஒருமை பன்மை மயக்கம். நாகம்-சுர புன்னை மரமும். எங்கும்-எந்த இடத்திலும் காணப்படும். நீள்-நீளமான. இலை-இலைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். வஞ்சி-வஞ்சி மரமும். காஞ்சி-காஞ்சி மரமும். நிறை-தேன் நிறைந்த. மலர்-மலர்கள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கோங்கம்-கோங்கிலவ மரமும். எங்கும்-எந்த இடத்திலும் சிறந்து விளங்கும்.

அடுத்து உள்ள 29-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'எந்த இடத்திலும் மாமரமும், பாதிரி மரங்களும் வளர்ந்து நிற்கும்; வேறு இடம் எங்கும் சுரபுன்னை மரமும் புலிநகக் கொன்றை மரமும் வளர்ச்சியைப்பெற்று விளங்கும்; மற்ற இடங்கள் எங்கணும் சாதி மல்லிகைக் கொடியும், சிறு செண்பகச் செடிகளும் வளர்ந்து விளங்கும்; வேறு எந்த இடத்திலும் குளிர்ச்சியையும், முற்றாத இலைகளையும் பெற்ற மயிற்கொன்றை மரம் தோற்றம் அளிக்கும்; வேறாக உள்ள எந்த இடங்களிலும் குருக்கத்திக் கொடியும், சரள தேவதார மரமும் ஓங்கி வளர்ந்து விளங்கும்; மற்ற எந்த இடங்களிலும் மகிழ மரமும் சண்பக மரங்களும்காணப்படும்; வேறு உள்ள இடங்களில் மலர் மலர்ந்த தாழை மரம் இருக்கும்; மற்ற இடங்களில் கமுக மரமும், புன்னாக மரமும் வளர்ந்து நிற்கும்.' பாடல் வருமாறு:

> **''சூதபா டலங்கள் எங்கும்; சூழ்வழை ஞாழல் எங்கும்;**
> **சாதிமா லதிகள் எங்கும்; தண்தளிர் நறவம் எங்கும்;**
> **மாதவி சரளம் எங்கும்; வகுளசண் பகங்கள் எங்கும்;**
> **போதவிழ் கைதை எங்கும்; பூகபுன் னாகம் எங்கும்.''**

சூத-மாமரமும். பாடலங்கள்-பாதிரி மரங்களும். எங்கும்-எந்த இடங்களிலும் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை

மயக்கம். சூழ்-சுற்றியுள்ள இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். வழை-சுரபுன்னை மரமும். ஞாழல்-புலிநகக் கொன்றை மரமும். எங்கும்-எந்த இடங்களிலும் வளர்ந்து விளங்கும்; ஒருமை பன்மை மயக்கம். சாதி-சாதிமல்லிகைக் கொடியும். மாலதிகள்-சிறு செண்பகச் செடிகளும். எங் கும்-எல்லா இடத்திலும் காட்சி அளிக்கும். தண்-குளிர்ச்சி யைக் கொண்ட. தளிர்-முற்றாத இலைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். நறவம்-மயிற்கொன்றை மரமும். எங்கும்-எவ்விடத்திலும் தோற்றம் அளிக்கும். மாதவி- குருக்கத்திக் கொடியும். சரளம்-சரள தேவதார மரமும். எங்கும்-எங்கணும் விளங்கும். வகுள-மகிழ மரமும். சண்ப கங்கள்-சண்பக மரங்களும். எங்கும்-எந்த இடத்திலும் தோற்றம் அளிக்கும். போது-பேரரும்பு. அவிழ்-மலராக மலரும். கைதை-தாழை மரம். எங்கும்-எந்தஇடத்திலும் வளர்ந்து நிற்கும். பூக-கமுக மரமும். புன்னாகம்-புன்னாக மரமும். எங்கும்-எந்த இடத்திலும் காணப்படும்.

அடுத்து உள்ள 30-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'எந்த இடங்களிலும் அந்தணச் சிறுவர்களுக்கு உபநய னம் செய்தல், குழந்தைகளுக்குக் குடுமிகளை வைத்தல், அவர்களுக்கு அன்னப் பிராசனச் சடங்கை நடத்தல் முதலிய மங்கல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்; ஆடவ ருக்கும் பெண்மணிகளுக்கும் திருமணங்களை நடத்தும்போது உண்டாகும் ஆரவாரம் எங்கும் கேட்கும்; எந்த இடத்திலும் தாமரை மலர்களைப் போன்ற பெண்மணிகளினுடைய அழகிய முகங்கள் தோற்றப் பொலிவோடு திகழும்; பண் களைப் போல உள்ள மழலைச் சொற்களைப் பெண்மணிகள் எந்த இடத்திலும் பேசிக்கொண்டிருப்பார்கள்; பிரகாசம் பொங்கி எழும் சிலம்பு, பொன்வளைகள், ஒட்டியாணம், சுட்டி, புல்லாக்கு, காசுமாலை, கைக்காப்பு, வங்கி, மோதி ரம், பீலி முதலிய அணிகலன்கள் எந்த இடத்திலும் ஒளி விட்டுக் கொண்டிருக்கும்; எந்த இடத்திலும் புதிய மலர்

களை மாலையாகக் கட்டித் தொங்கவிட்ட பந்தல்கள் தோற்றம் அளிக்கும்; சிவந்த நிறத்தைக் கொண்ட கயல் மீன்கள் வயல்களில் எல்லா இடங்களிலும் துள்ளிக் குதிக்கும்; எந்த இடமும் திருமகள் நிலையாகத் தங்கும் வாசத் தல மாகச் செல்வத்தைப் பெற்றுத் திகழும்.' பாடல் வருமாறு:

**''மங்கல வினைகள் எங்கும்; மணம்செய்கம் பலைகள் எங்கும்;**
**பங்கய வதனம் எங்கும்; பண்களின் மழலை எங்கும்;**
**பொங்கொளிக் கலன்கள் எங்கும்; புதுமலர்ப் பந்தர் எங்கும்;**
**செங்கயல் பழனம் எங்கும்; திருமகள் உறையுள் எங்கும்.''**

மங்கல வினைகள்-அந்தணச் சிறுவர்களுக்கு உபநயனம் செய்தல், குழந்தைகளுக்குக் குடுமிகளை வைத்தல், அவர் களுக்கு அன்னப்பிராசனச் சடங்கை நடத்தல், ருதுவான பெண்களை நீராட்டுவித்தல், பும்ஸவன சீமந்த முகூர்த் தத்தை நடத்துதல், சாந்தி முகூர்த்தத்தை நடத்தல், கிருகப்பிரவேசம் செய்தல் முதலிய மங்கல காரியங்கள். எங்கும்-எந்த இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மணம் செய்-ஆடவருக்கும் கன்னி கைக்கும் திருமணம் புரியும்போது எழும். கம்பலைகள்—ஆர வார ஒலிகள். எங்கும்—எந்த இடத்திலும் கேட்கும். பங் கய—செந்தாமரை மலரைப்போன்ற. வதனம்-பெண்களின் முகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எல்லா இடத் திலும் தோற்றத்தை அளிக்கும். பண்களின்-பண்களைப் போன்ற. மழலை-பெண்மணிகள்பேசும் மழலைச் சொற்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எந்த இடத்திலும் காது களில் விழும். பொங்கு-பொங்கி எழும். ஒளி-பிரகாசத்தை வீசும். க்: சந்தி. கலன்கள்-சிலம்பு, பொன்வளைகள், கண்ணாடி வளையல்கள், கங்கணங்கள், ஒட்டியாணம், சுட்டி, புல்லாக்கு, காசுமாலை, கைக்காப்புக்கள், வங்கி, மோதிரங் கள், பீலி, மாட்டல், ஜிமிக்கிகள் முதலிய ஆபரணங்கள். எங்கும்-எவ்விடத்திலும் திகழும். புது-புதிய. மலர்-மலர்களைக்

கட்டிய மாலைகளைத் தொங்கவிட்ட; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். ப்: சந்தி. பந்தர்-பந்தல்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எங்கணும் திகழும். செம்-சிவந்த நிறத்தைப் பெற்ற.கயல்-கயல்மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். பழனம்-வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எங்கணும்துள்ளிக் குதிக்கும். திருமகள்-இலக்குமி தேவி. உறையுள்-நிலைபெற்றுத் தங்கும் செல்வம் படைத்த மாளிகைகள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எந்த இடத்திலும் உயர்ந்து விளங்கும்.

பெண்மணிகளின் வாய்மொழிகளுக்குப் பண்கள் உவமை: ''பண்ணி னேர்மொழி மங்கைமார்.'', ''பண்ணி லாவிய மொழியுமை.'', ''பண்ணியா ழனமுரலும் பணிமொழி உமை.'', ''பண்ணி யன்றெழுமென் மொழி யாள்.'', ''பண்ணினேர் மொழியாளையோர் பாகனார்.'', ''பண்தடவு சொல்லின் மலைவல்லி உமை.'', ''பண்ண மரும் மென்மொழியினார்.'', ''பண்டலை மழலை செய்யா மென் மொழிஉமை.'', ''பண்ணினேர் மொழியாள் பாண்டிமா தேவி.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாய னாரும், ''பண்தனை வென்ற இன்சொற் பாவையோர் பங்கா.'',''பண்ணின் இன்மொழி யாளை.'',''பண்தொத்த மொழியாளை.'', ''பண்ணினேர் மொழியாள் உமை பங்கரோ.'', ''பண்ணினேர் மொழியாள்.'', ''பண்மலிந்த மொழியவரும்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''பண்ணார் மொழிப் பாவையர்.'', ''பண்ணேர் மொழி யாளை ஓர் பங்குடையாய்.'', ''பண்மயத்த மொழிப் பரவை.'', ''பண்ணின் நேர்மொழி மங்கை பங்கினன்.'', ''பண்ணியல் மென்மொழியார்'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''பண்ணினேர் மொழியாள் பங்க.'', ''பண் ணார்ந்த மொழிமங்கை பங்கா.'' என்று மாணிக்க வாச கரும் பாடி யருளியவற்றைக் காண்க.

பின்பு உள்ள 31-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'எந்த இடங்களிலும் மேகங்களும் ஆண் யானைகளும் காணப்படும்; வேறு எந்த இடங்களிலும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் ஓதும் வேதபாரர்களின் வேதகானம் கேட்கும்; பல இடங்களில் வேத பாடசாலைகள் விளங்கும்; வேறு எல்லா இடங்களிலும் வேள்வி, உபநயனம்; திருமணம், பும்ஸவன சீமந்த முகூர்த்தம், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் முதலிய சடங்குகள் நடைபெறும்; யோகம் புரிபவர்களும் தலத்தை ஆற்றுபவர்களும் எந்த இடங்களிலும் இருப்பார்கள்; எந்த இடங்களிலும் ஊஞ்சல்களும் தெருக்களும் பொலிவு பெற்று விளங்கும்; வேறு எந்த இடங்களிலும் சிற்றின்பத்தை நுகர்பவர்களும் மகிழ்ச்சியை அடைபவர்களும் தோற்றப் பொலிவோடு விளங்குபவர்களும் காட்சி அளிப்பார்கள்; மற்ற இடங்களில் எல்லாம் புண்ணியச் செயல்களைப் புரிந்த முனிவர்கள் இருப்பார்கள்.' பாடல் வருமாறு:

**மேகமும் களிறும் எங்கும்; வேதமும் கிடையும் எங்கும்;**
**யாகமும் சடங்கும் எங்கும்; இன்பமும் மகிழ்வும் எங்கும்;**
**யோகமும் தவமும் எங்கும்; ஊசலும் மறுகும் எங்கும்;**
**போகமும் பொலிவும் எங்கும்; புண்ணிய முனிவர் எங்கும்'**

மேகமும்-மேகங்களும், ஒருமை பன்மை மயக்கம். களிறும்-அவற்றைப் போலத் தோன்றும் ஆண் யானைகளும்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எவ்விடங்களிலும் காணப்படும்; ஒருமை பன்மை மயக்கம். வேதமும்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் ஓதும் வேத பாரகர்களின் வேத கானம் கேட்கும். வேதம்; ஒருமை பன்மை மயக்கம்; திணை மயக்கம். கிடையும்-பிரமசாரிகள் வேதங்களை அத்தியயனம் செய்யும் வேத பாடசாலைகள் விளங்கும்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-இவை எவ்விடத்திலும் இருக்கும். யாகமும்-வேள்வி புரிபவர்களும்; திணை மயக்கம். சடங்கும்-

உபநயனம், திருமணம், பும்ஸவன சீமந்த முகூர்த்தம், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் முதலிய சடங்குகளும்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்—எவ்விடங்களிலும் நடந்துகொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். இன்ப மும்-சிற்றின்பத்தை நுகர்பவர்களும்; திணை மயக்கம். மகிழ்வும்—பெருமகிழ்ச்சியை அடைபவர்களும்; திணை மயக்கம். எங்கும்—எந்த இடங்களிலும் காட்சி அளிப்பார் கள்; ஒருமை பன்மை மயக்கம். யோகமும்—அஷ்டாங்க யோகத்தைப் புரிபவர்களும்; திணை மயக்கம். தவமும்—தவத்தை ஆற்றுபவர்களும்; திணை மயக்கம். எங்கும்—எந்த இடங்களிலும் தோற்றம் அளிப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஊசலும்—ஊஞ்சல்களில் ஆடுபவர்களும்; திணை மயக்கம். ஊசல்; ஒருமை பன்மை மயக்கம். மறுகும்—நான்கு வருணத்தவர்கள் வாழும் வீதிகளும்; ஒருமை பன்மை மயக்கம். அவர்கள் அரசர்கள், வணிகர்கள், வேளாளர்கள், அந்தணர்கள் என்பவர்கள். எங்கும்-எந்த இடங்களிலும் சிறப்புற்றுத் திகழும்; ஒருமை பன்மை மயக்கம். போகமும்-மாதர்களோடு ஆடவர்கள் துய்க்கும் போகமும். பொலிவும்-பெண்மணிகள் ஆடவர்கள் ஆகியவர்களின் தோற்றப் பொலி வும். எங்கும்-எந்த இடங்களிலும் தோன்றும்; ஒருமை பன்மை மயக்கம். புண்ணிய-புண்ணியச் செயல்களைப் புரியும்; ஒருமை பன்மை மயக்கம். முனிவர்-முனிவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எந்த இடங்களிலும் வீற்றிருப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 32-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பல வகையான பண்களை எழுப்பும் குறிஞ்சி நிலத்துக்குரிய யாழை மீட்டி வாசிப்பவர்கள் எந்த இடங்களிலும் அதை வாசித்துக் கொண்டிருப்பார்கள்; பெண்மணிகள் தங் கள் பாதங்களில் எல்லா வீடுகளிலும் செம்பஞ்சுக் குழம்பைப் பூசிக்கொண்டு விளங்குவார்கள்; வண்டுகள் ரீங்காரத்தை முரலும் வண்ணம் மலர்களைச் சூடிக் கொண்ட கூந்தல்

களைப் பெற்ற பெண்மணிகள் எந்த இடங்களிலும் உலாவு வார்கள்; வேறு எந்த இடங்களிலும் வளருகின்ற சங்கீதத்தை எழுப்பும் புல்லாங் குழல்களை அவற்றை வைத்திருப்பவர்கள் ஊதிக் கொண்டிருப்பார்கள்; சிவபெருமானுடைய தொண் டர்கள் வாழும் திருமாளிகைகள் எந்த இடங்களிலும் உயர்ந்து நிற்கும்; மக்கள் தங்கள் வீடுகளுக்கு வரும் விருந் தாளிகளைப் பார்த்துக் கூறும் வார்த்தைகளாகிய, 'இந்த வீட்டில் தங்கியிருப்பீர்களாக.' என்பவை கேட்கும்; சோலை களில் பலா மரங்களும் எந்த இடங்களிலும் வளர்ந்து நிற்கும்; பல ஆத்தி மரங்களும் எந்த இடங்களிலும் உயர்ந்து விளங் கும்.'

பாடல் வருமாறு:

**''பண்டரு விபஞ்சி எங்கும்; பாதசெம் பஞ்சிஎங்கும்;**
**வண்டறை குழல்கள் எங்கும்; வளரிசைக் குழல்கள் எங்கும்;**
**தொண்டர்தம்இருக்கை எங்கும்;சொல்லுவ திருக்கை எங்கும்**
**தண்டலை பலவும் எங்கும்; தா தகி பலவும் எங்கும்.''**

பண்-பலவகையாகிய பண்களை; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: நட்ட பாடை, குறிஞ்சி, தக்க ராகம், இந்தளம், கௌசிகம், கொல்லி, பியந்தைக் காந் தாரம், பழம் பஞ்சுரம், சீகாமரம், தக்கேசி, காந்தாரம், காந்தார பஞ்சமம், அந்தாளிக் குறிஞ்சி, பஞ்சமம், வியாழக் குறிஞ்சி, செவ்வழி, சா தாரி, பழந்தக்கராகம், நட்டராகம், மேகராகக் குறிஞ்சி, புறநீர்மை, யாழ்மூரி, கொல்லிக் கௌவாணம், செந்துருத்தி முதலியவை. தரு-எழுப்பும். விபஞ்சி-குறிஞ்சி நிலத்துக்குரிய யாழை மீட்டி வாசிப்பவர் கள்; திணைமயக்கம். எங்கும்-எந்த இடங்களிலும் அந்த யாழை வாசித்துக் கொண்டிருப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். பாத-பெண்மணிகள் தங்களுடைய பாதங்களில்; ஒருமை பன்மை மயக்கம். செம்பஞ்சி-செம்பஞ்சுக் குழம்பை. எங்கும்-பூசிக் கொண்டு எந்த இடங்களிலும் விளங்குவார் கள்; ஒருமை பன்மை மயக்கம். வண்டு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். அறை-ரீங்காரம் புரியும். குழல்கள்-

கூந்தல்களைப் பெற்ற பெண்மணிகள்; திணைமயக்கம். எங்கும்-எந்த இடங்களிலும் உலாவிக் கொண்டிருப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். வளர்-வளரும். இசை-சங்கீ தத்தை எழுப்பும். க்: சந்தி. குழல்கள்-புல்லாங்குழல் களை அவற்றை வைத்திருப்பவர்கள்; திணைமயக்கம். எங்கும்-எல்லா இடங்களிலும் அவற்றை ஊதிக் கொண்டிருப் பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். தொண்டர்தம்-சிவ பெருமானுடைய தொண்டர்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம், தம்: அசைநிலை. இருக்கை-திருமாளிகைகள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எந்த இடங்களிலும் உயர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். சொல்லுவது- மக்கள் தங்கள் வீடுகளுக்கு வரும் விருந்தாளிகளை வர வேற்றுச் சொல்லும் வார்த்தைகள்;ஒருமை பன்மை மயக்கம். இருக்கை-இந்த வீட்டில் தங்கி யிருப்பீர்களாக என்பவை. எங்கும்-எந்த இடங்களிலும் காதுகளில் விழும்; ஒருமை பன்மை மயக்கம். தண்டலை-பூஞ்சோலையில். பலவும்- பலாமரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்—எந்த இடங்களிலும் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். தாதசி-ஆத்தி மரங்கள்;ஒருமை பன்மை மயக்கம்.பலவும்-பல மரங்களும். எங்கும்-எந்த இடங்களிலும் தழைத்து ஓங்கி வளரும்; ஒருமை பன்மை மயக்கம்.

பெண்மணிகள் தங்கள் பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பைப் பூசிக் கொள்ளுதல்: ''பஞ்சின் மெல்லடிப் பாவை.'', ''பஞ்சின் மெல்லடி யாளுமை பங்க.'' ''பஞ் சுண்ட மெல்லடியாள் பங்கன்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''பஞ்சின் மெல்லடிப் பாவைமார்.'', ''பஞ்சிச் சீறடி யாளை.'', ''பஞ்சேறும் மெல்லடி யாளை'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''பஞ்சே ரடியாள் பாகத் தொருவா.'', ''பஞ்சின் மெல்லடியாள் பங்க.'', ''பஞ்சாய அடிமடவார்.'', ''பஞ்சாய அடிமட லார் கடைக்கண்ணால்'' என்று மாணிக்கவாசகரும்,

''பஞ்சின் மெல்லடியாள் பாகன்'' என்று கம்பரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 33-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'எந்த இடங்களிலும் காலை நேரத்தில் மேயப்போன பசு மாடுகள் திரும்பி மாலை வேளையில் வரும் வீடுகள் இருக்கும்; வண்டுகள் தேனைக் குடிப்பதற்காகச் சென்று மொய்க்கும் பல வகையான மலர்களாகிய இடங்கள் எவ்விடங்களிலும் விளங்கும்; பெண்மணிகள் பாடி ஆடும் அம்மனைகளின் பாடல் எந்த இடங்களிலும் கேட்கும்; அந்தப் பெண்மணிகள் பழகி விளையாடும் அத்தகைய வீடுகள் எந்த இடங்களிலும் காட்சி அளிக்கும்; உயரமாகக் கட்டியிருக்கும் கொடிகளை எந்த இடங்களிலும் பார்க்கலாம்; பணத்தைச் சேமித்து வைத்திருக்கும் கருவூலங்களையுடைய செல்வர்கள் வாழும் மாளிகைகள் எந்த இடங்களிலும் சிறப்புற்று விளங்கும்; இதழ்களை உடைய மலர்களைக் கட்டிய மாலைகளை அணிந்து கொண்ட ஆடவர்களும் பெண்மணிகளும் எந்த இடங்களிலும் உலாவிக் கொண்டிருப்பார்கள்; திருமணம் ஆன பெண்மணிகள் தங்களுடைய துணைவர்களாகிய கணவர்களைச் சுற்றிக் கொண்டு நிற்கும் வரிசை எந்த இடங்களிலும் காணப்படும்.' பாடல் வருமாறு:

**''மாடுபோ தகங்கள் எங்கும்;**
**வண்டுபோ தகங்கள் எங்கும்;**
**பாடும்அம் மனைகள் எங்கும்;**
**பயிலும்அம் மனைகள் எங்கும்;**
**நீடுகே தனங்கள் எங்கும்;**
**நிதிநிகே தனங்கள் எங்கும்;**
**தோடுசூழ் மாலை எங்கும்;**
**துணைவர்சூழ் மாலை எங்கும்.''**

மாடு—காலை நேரத்தில் மேயப்போய் மாலை வேளையில் பசு மாடுகளும் எருமை மாடுகளும்; ஒருமை பன்மை மயக்கம்.

போது—திரும்பி வரும். அகங்கள்—வீடுகள். எங்கும்—எந்த இடங்களிலும் நிலவும்; ஒருமை பன்மை மயக்கம். வண்டு—வண்டுகள் தேனைக் குடிப்பதற்காக; ஒருமை பன்மை மயக்கம். போது—பறந்து சென்று மொய்க்கும் பல வகையான மலர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். அகங்கள்—இடங்கள். எங்கும்—எந்த இடங்களிலும் இருக்கும். அந்த மலர்களாவன: செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், அல்லி மலர், ஆம்பல் மலர், குமுத மலர், நீலோற்பல மலர், சண்பக மலர், மகிழ மலர், பூவரச மலர், மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், வேங்கை மலர், வாகை மலர், செம்பருத்தி மலர், வில்வ மலர், விளா மலர், செங்கழுநீர் மலர் முதலியவை. பாடும்—பெண்மணிகள் அம்மானைக் காய்களை எறிந்து விளையாடும்போது பாடும். அம்மனைகள்—அம்மானைப் பாடல்கள். எங்கும்-எந்த இடங்களிலும் காதில் விழும்; ஒருமை பன்மை மயக்கம். பயிலும்—அந்தப் பெண்மணிகள் விளையாடிப் பழகும். அம்-அழகிய. மனைகள்-வீடுகள். எங்கும்-எந்த இடங்களிலும் இருக்கக் காணலாம்; ஒருமை பன்மை மயக்கம். நீடு—உயரமாகக் கட்டிய. கேதனங்கள்—துவசங்கள். எங்கும்—எந்த இடங்களிலும் பறந்து கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். நிதி—செல்வத்தைச் சேமித்திருக்கும். நிகேதனங்கள்—கருவூலங்கள். எங்கும்—செல்வர்கள் வாழும் எந்த மாளிகையிலும் இருக்கும். தோடு—இதழ்கள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். சூழ்—மலர்களைச் சுற்றிக் கட்டிய. மாலை—மாலைகளை அணிந்த ஆடவர்களும் பெண்மணிகளும்; திணை மயக்கம். மாலை; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்—எந்த இடங்களிலும் உலவிக் கொண்டிருப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். துணைவர்-திருமணமான பெண்மணிகள் தங்களுடைய வாழ்க்கைத் துணைவர்களாகிய கணவர்களை; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றிக்கொண்டு நிற்கும். மாலை—வரிசை. எங்கும்-எந்த இடங்களிலும் காட்சி அளிக்கும்.

மாடுகள் மேய்ந்துவிட்டு மாலையில் தாங்கள் உள்ள வீடுகளுக்குத் திரும்பி வருதல்: ''சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின், உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள், நடுங்குசுவல் அசைத்த கையள் கைய, கொடுங்கோற் கோவலர் பின்னின்றுய்த்தர, இன்னே வருகுவர் தாயர் என்போன்.'' (12-7) என்று **முல்லைப் பாட்டில்** வருவதைக் காண்க.

பெண்மணிகள் அம்மானை ஆடுதல்: ''பந்தொடம்மானை முற்றில் கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளியதைக் காண்க. திருவாசகத்தில் திரு அம்மானை என்ற பகுதி இருக்கிறது. அதில் பெண்மணிகள் அம்மானை ஆடிக் கொண்டே பாடுவதாக அமைந்த பாடல்கள் இருபது உள்ளன. பெண்பாற் பிள்ளைத் தமிழ் நூல்களில் அம்மானைப் பருவம் என்ற ஒரு பகுதி உண்டு. அதில் பெண்கள் பாடிக்கொண்டு அம்மானைக் காய்களை ஆடுவதாக வரும். ஓர் எடுத்துக்காட்டு வருமாறு: இது திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானாக விளங்கிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழில் வரும் ஒரு பாடல்.

**''சொல்லூர் வயத்த சிவலோகத்**
**தியாகர்தம் தோட்டுணை குழைத்த நாளும்**
**தோலா தெழுந்தநின் துணைமுலைக் குவடுநேர்**
**தோற்றியெழு தோற்றம் நோக்கி**
**வில்லூர் நெடுஞ்சிகர மேருவென் றுரைசெய்வட**
**வேதண்ட முற்ற கொற்ற**
**வீறுமுற் றும்தபப் பொடிசெய்து கடிசெய்து**
**மேவுபலு ருண்டை ஆக்கி**
**எல்லூர் மணிக்கங்க ணக்கரத் தேந்திமேல்**
**எறிவது கடுப்ப வறமுற்**
**றேறுமங் கைத்தலத் துறுசிவப் பேறுவதை**
**எண்ணாது விண்ணாடளாம்**

**மல்லூர் பொழிற்பெரு மணத்தமர் பராபரைபொன்**
**அம்மானை ஆடியருளே**
**அருளின்எம் குடிமுழுதும் அடிமைகொண்**
**டருளும்உமை அம்மானை ஆடியருளே.''**

பிறகு வரும் 34-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சோழ நாட்டில் உள்ள ஊர்களில் இருக்கும் வீதிகளில் விழாவினுடைய ஆரவாரமும், வீடுகளில் விரும்பி வந்தவர் களுக்குப் படைக்கும் விருந்துணவை உண்ணும்போது அவர்கள் சொல்லும் வார்த்தைகளின் பேரொலியும் கேட் கும்; அந்தணர், க்ஷத்திரியர், வைசியர், வேளாளர், பள்ளர், பள்ளிகள், பறையர், பறைச்சிகள், சக்கிலியர், சக்கிலிச்சிகள் முதலிய சாதிகளிற் பிறந்தவர்கள் தங்கள் தங்களுக்குரிய தரும வழிகளிலிருந்து தவறி நடக்க மாட்டார் கள்; புதல்வர்களும் தங்களுடைய வீடுகளில் தவறான செயல்களைச் செய்ய மாட்டார்கள்; பல வகையான பறவை களும், பலவிதமான விலங்கினங்களும் தங்களுடைய நெறி முறைகளில் ஒழுகிவரும்; திருமகள் கூட அந்த நாட்டில் நிலையாக இருந்து வாழ்வதை எண்ணிக்கொண்டிருப்பாள்; சிவ பக்தர்கள் உச்சரித்த நமசிவாய என்ற ஐந்து எழுத்துக் கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும் அவர்கள் உச்சரிப்பதால் அவர்களிடம் வரும் நோய்கள் வருவதற்குப் பயத்தை அடையும்.' பாடல் வருமாறு:

**''வீதிகள் விழவின் ஆர்ப்பும், விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்,**
**சாதிகள் நெறியில் தப்பா; தனயரும் மனையில் தப்பா;**
**நீதிய புள்ளும் மாவும்; நிலத்திருப் புள்ளும் மாவும்;**
**ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும்.''**

வீதிகள்-அந்தச் சோழநாட்டில் விளங்கும் தலங்களில் இருக்கும் தெருக்களில். விழவின்-திருத்தேர் விழா முதலிய விழாக்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஆர்ப்பும்- முழக்கமும் கேட்கும். விரும்பினர்—தங்களுடைய வீடுகளுக்கு விரும்பி வந்தவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். விருந்தின்-

உண்ணும் விருந்தின்போது. ஆர்ப்பும்-பேசும் ஆரவார ஒலியும் கேட்கும். சாதிகள்-அந்தணர், க்ஷத்திரியர், வைசியர், வேளாளர், பள்ளர், பள்ளிகள், பறையர், பறைச்சிகள், சக்கிலியர், சக்கிலிச்சிகள் என்னும் சாதிகளில் பிறந்தவர்கள்; திணை மயக்கம். நெறியில்-தங்கள் தங்களுக்கு உரிய கடமைகளின் வழிகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். தப்பா-தவறி நடக்கமாட்டார்கள்; திணைமயக்கம். தனயரும்-புதல்வர்களும்; ஒருமை பன்மை மயக்கம். மனையில்-தாங்கள் வாழும் வீடுகளில் தங்களுடைய பெற்றோர்கள் கூறும் வார்த்தைகளிலிருந்து;மனையில்: ஒருமை பன்மை மயக்கம்.தப்பா-தவறி நடக்கமாட்டார்கள்; திணை மயக்கம். புள்ளும்-பலவகையான பறவைகளும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: பருந்து, கருடன், கழுகு, குருவி, காகம், சிட்டுக்குருவி, தூக்கணாங் குருவி,நாகணவாய்ப்புள், மீன்கொத்திப்பறவை, புறா, தூதுணம்புறா, குயில் முதலியவை. மாவும்-பல வகையான விலங்குகளும்; ஒருமை பன்மை மயக்கம். அவை யாவன: சிங்கம், யானை, புலி, வேங்கை, சிறுத்தை, ஒட்டகம், பசுமாடு, எருமைமாடு, நாய், கரடி முதலியவை. நீதிய-தங்களுடைய நெறி முறைப்படி நடந்து யாருக்கும் துன்பங்களைச் செய்யா. "காட்டு மாவும் உறுகண் செய்யா." (**பெரும்பாணாற்றுப்படை**, 43) என்று வருவதைக் காண்க. மாவும்-திருமகளும். நிலத்து-இந்த நாட்டில். இருப்பு-நிலையாகத் தங்கியிருப்பதை. உள்ளும்-எண்ணி அவ்வாறே இருப்பாள். ஓதிய-சிவபக்தர்கள் உச்சரித்த. எழுத்து-எழுத்துக்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆம்-ஆகும். அஞ்சும்-ந, ம, சி, வா, ய என்னும் பஞ்சாட்சரமும். உறு பிணி-தங்களை உச்சரித்தவர்களுக்கு வரும் நோய்கள்; ஒருமை பன்மை மயக்கம். வரத்தாம்-வருவதற்குத் தாங்கள். அஞ்சும்-பயப்படும். "இயம்புவராயிடின், எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால், நல்லார் நாமம் நமச்சிவாயவே" என்று வருவதைக் காண்க.

இந்தத் திருநாட்டுச் சிறப்பில் இறுதியாக உள்ள 35-ஆவது பாடலின் கருத்து வருமாறு:

'நல்ல செந்தமிழ் நிலத்தில் சிறப்புற்று ஓங்கி விளங்குவதும், நாம் புகழ்ந்து பாடும் அழகிய சோழநாட்டை எக்காலத்திலும் தன்னுடைய பொலிவைப் பெற்ற விசாலமான தோள்களால் உலகத்தில் வாழும் மக்களைப்பொதுவாக இல்லாமல் விலக்கித் தனக்கே உரியவர்களாகக் கொண்டு இனிமை உண்டாகும் வண்ணம் அரசாட்சி புரிந்து பாதுகாக்கும் மன்னனாகிய அனபாய சோழ மாமன்னனுடைய தங்க மாலைகளைத் தொங்கவிட்ட வெண்கொற்றக் குடையின் நிழலில் குளிர்ச்சியை அடைந்திருப்பதும் சோழநாடு என்று சொன்னால் இனி வேறாக அந்த நாட்டின் பெருமைகள் நம்பால் ஓர் எல்லை கட்டிப் பாடுவது என்பது முடியும் செயலா?'

பாடல் வருமாறு:

**' நற்றமிழ் வரைப்பில் ஓங்கு**
**நாம்புகழ் திருநா டென்றும்**
**பொற்றடந் தோளால் வையம்**
**பொதுக்கடிந் தினிது காக்கும்**
**கொற்றவன் அநபா யன்பொற்**
**குடைநிழற் குளிர்வ தென்றால்**
**மற்றதன் பெருமை நம்மால்**
**வரம்புற விளம்ப லாமோ?''**

நல்-நன்மைகள் பலவற்றைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். தமிழ் வரைப்பில்-செந்தமிழ் நிலத்தில். ஓங்கு-சிறப்புற்று ஓங்கி விளங்குவதும். 'நாம்' என்பவர் சேக்கிழார். புகழ்-புகழ்ந்து பாடிய. திரு-செல்வம் படைத்தவர்கள் வாழும்; திணைமயக்கம். நாடு—சோழநாடு. என்றும்-எந்தக் காலத்திலும். பொன்-தன்னுடைய தோற்றப் பொலிவைக் கொண்ட. தடம்-விசாலமாக உள்ள.

தோளால்-தோள்களால்; ஒருமை பன்மை மயக்கம். வையம்-இந்தப் பூமண்டலத்தை. பொது-பிற மன்னர்களுக் கும் பொதுவானது. க்: சந்தி. கடிந்து-என்று கூறுவதைப் போக்கித் தனக்கே உரியதென்று சொல்லுமாறு. இனிது-இனிமையோடு. காக்கும்-அரசாட்சி புரிந்து பாதுகாக்கும். கொற்றவன்-மன்னனாகிய. அநபாயன்-அநபாயச் சோழ மாமன்னன். பொன்-தங்க மாலைகளைத் தொங்கவிடப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். குடை-வெண்கொற்றக் குடையின். நிழல்-நிழலில். குளிர்வது-குளிர்ச்சியை அடை வது. என்றால்-என்று கூறினால். மற்று-வேறாக. அதன்-அந்த நாட்டினுடைய. பெருமை-பெருமையைப் பெற்ற தன்மை. நம்மால்-சேக்கிழாராகிய எம்மால். வரம்பு உற-ஊர் எல்லைக்குள் அடங்கும் வண்ணம். விளம்பல்-பாடுதல். ஆமோ-இயலுமோ; இயலாது என்பது கருத்து.

பொதுக்கடிந்து காத்தல்: ''பொதுச்சொற் பொறான்.'' (8:2) என்னும் புறநானூற்றில் வரும் சொற்றொடரும், அதற்கு அதன் உரையாசிரியர், 'பூமி பிற வேந்தருக்கும் பொது என்னும் வார்த்தைக்குப் பொறாது' என்று எழுதி யிருப்பதையும், ''தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்'' (**புறநானூறு**, 51:5), ''தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி, வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்.'' (ஷ 189 : 1-2), ''பொதுமொழி, பிறர்க்கின்றி முழுகாளும் செல்வர்க்கு,'' (**கலித்தொகை**, 68), ''அரசன் போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறானாய்?'' (**நெடுநல்வாடை** அவதாரிகை), ''கொடியும் முரசும் கொற்றவெண் குடையும், பிறர்கொளப் பொறாஅன் தானே கொண்டு.'' (**சிதம்பரமும் மணிக்கோவை, 25**) என வருவனவற்றைக் காண்க.

# திருநகரச் சிறப்பு

பெரிய புராணத்தில் மூன்றாவதாக விளங்குவது திருநகரச் சிறப்பு. அதில் வரும் முதற் பாடலின் கருத்து வருமாறு:

'இது வரையில் நாம் பாடிய சோழ நாட்டில் பழமையினால் மிக்க சிறப்பைப் பெற்றதாக விளங்குவது நிலைபெற்ற அழகைக் கொண்டவளும், பெருமையைப் பெற்றவளும், செந்தாமரை மலரில் வீற்றிருப்பவளும் ஆகிய திருமகள் வழிபட்ட சிவத்தலம், வன்னிபத்திரத்தையும், கங்கையாற்றையும், பிறைச் சந்திரனையும் தங்க வைத்த தம்முடைய சிவந்த சடாபாரத்தைக் கொண்ட திருமுடியை உடையவராகிய வன்மீகநாதர் கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பது திருவாரூர் என்னும் அழகிய நகரம்.' பாடல் வருமாறு:

**''சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது<br>மன்னு மாமல ராள்வழி பட்டது<br>வன்னி ஆறு மதிபொதி செஞ்சடைச்<br>சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்.''**

சொன்ன—இது வரையில் நாம் பாடிய. 'நாம்' என்றவர் சேக்கிழார். நாட்டிடை-சோழநாட்டில். த்:சந்தி. தொன்

மையில்—பழமையால்; உருபு மயக்கம். மிக்கது—மிக்க சிறப்பைக் கொண்டதாக விளங்குவது. மன்னு-நிலை பெற்ற அழகை உடையவளும்; திணை மயக்கம். மா—பெருமையைப் பெற்றவளும்; திணை மயக்கம். மலராள்—செந்தாமரை மலரில் வீற்றிருப்பவளும் ஆகிய திருமகள்.வழிபட்டது-வழிபட்டுப் பேறு வெற்ற சிவத்தலம். வன்னி—வன்னி பத்திரத்தையும். ஆறு—கங்கையாற்றையும். மதி—பிறைச் சந்திரனையும். பொதி-தங்க வைத்த. செம்—தங்கத்தைப் போலச் சிவந்த. சடை—சடாபாரத்தைப் பெற்ற. ச்:சந்தி. சென்னியார்-தலையைக்கொண்ட வன்மீக நாதர்.திருவாரூர்-கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவாரூர் என்னும்-த்:சந்தி. திரு-அழகிய. நகர்—பெரிய தலம்.

வன்னி பத்திரத்தைத் தலையில் அணிந்தவர்: ''வன்னி கொன்றை...சூடும் வலிவலம் மேயவனை,'', ''வன்னி கொன்றை......சடையிற் பொலிவித்த புராணனார்.'',''வன்னியும் மந்தமும் மதிபொதி சடையினன்.'', ''வன்னி கொன்றை......சென்னிவைத்த பிரான்.'' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளியவற்றைக் காண்க.

தங்கத்தைப் போன்ற சடா பாரத்தைப் பெற்றவர்: ''பொன்திரண் டன்ன புரிசடை.'',''பொன்னியன்ற சடை'', ''பொன்னீ ரபுன்சடையான்.'',''பொன்தயங்கிலங் கொளிந் நலம் குளிர்ந்த புன்சடை.'', ''பொன்போலும் சடைமேற் புனல் தாங்கிய புண்ணியனே.'',''பொன்னைப் புரிதரு சடையினர்.'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''பொன்னவில் புன்சடையான்.'', ''படர்பொற் சடையும்.'', ''பொன்னன லார்சடைக் கொன்றையினாய்.'', ''பொன்னக்கன்ன சடை.'', ''பொன்னுள் ளத்திரள் புன்சடை.'', ''செம்பொனாற் செய்தழகு பெய்தாற் போலும் செஞ்சடைஎம் பெருமானே.'', ''பொன்னேர் சடைமுடியாய்.' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''செம்பொனேர் சடையாய்'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும்

''பொன்னை வென்றதோர் புரிசடை முடி'' என்று மாணிக்க வாசகரும் பாடி யருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 2-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம்,அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் வேத பாரங்கதர் கள் ஓதும் கானமும், வீணையை வாசிப்பவர் அதை மீட்டிப் பாடும் இனிய நாதமும், ஒளி படைத்த திருமேனிகளைக் கொண்ட தேவர்கள் வன்மீகநாதரைத் தோத்திரம் புரியும் பாடல்களின் இனிய ஒலியும், விருப்பம் மருவிய பெண்மணி கள் நடனம் ஆடும்போது தட்டி முழக்கும் அழகிய மத்தளத் தின் சத்தமும், சங்கீத வித்துவான்கள் பாடும் இசைப் பாடல்களின் இனிய ஒலியுமாக நிறைந்து அந்தத் திருவாரூர் என்னும் நகரத்தில் கிளர்ச்சியைப் பெற்று விளங்கின.' பாடல் வருமாறு:

> **''வேத ஓசையும் வீணையின் ஓசையும்**
> **சோதி வானவர் தோத்திர ஓசையும்**
> **மாதர் ஆடல் மணிமுழ வோசையும்**
> **கீத ஓசையு மாய்க்கிளர் வுற்றவே ''**

வேத -இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் வேத பாரங்கதர்கள் ஓதும்; ஒருமை பன்மை மயக்கம். ஓசையும்-கானமும். வீணையின்—வீணையை வாசிப்பவர் அந்த இசைக் கருவியை மீட்டிப்பாடும்; திணை மயக்கம். ஓசையும்-இனிய நாதமும். சோதி—ஒளியைப் பெற்ற திருமேனிகளைக் கொண்ட; ஆகுபெயர். வானவர்—தேவலோகத்தில் வாழும் தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தோத்திர—வன்மீக நாதரைத் தோத்திரம் புரியும் பாடல்களின்; ஒருமை பன்மை மயக்கம். ஓசையும்—இனிய ஒலியும். மாதர்—விருப்பம் மருவிய பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். ஆடல்-நடனம் ஆடும்போது தட்டி முழக்கும். மணி-அழகிய. முழவு-

மத்தளத்தின். ஓசையும்-சத்தமும். கீத-சங்கீத வித்து வான்கள் தங்கள் வாய்களாற் பாடும் இசைப் பாடல்களி னுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஓசையுமாய்—இனிய ஒலியுமாக நிறைந்து. க்:சந்தி. கிளர்வு—அந்தத் திருவாரூர் என்னும் நகரத்தில் கிளர்ச்சியை. உற்ற-பெற்று விளங்கின. ஏ:ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 3-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'பல வகையான வாத்தியங்களை வாசிக்கும் வாத்தியக் காரர்கள் வாசிக்கப் பரவி அமைந்த இனிய நாதத் தோடு செல்வர்கள் வாழும் வீதியில் செழுமையைப் பெற் றதும் அடிக்கும் மணியைக் கட்டியதும் ஆகிய தேர் ஓடும் போது உண்டாகும் சத்தமும், வளப்பத்தைக் கொண்ட யானை பிளிறும் ஓசையோடு குதிரை கனைக்கும் சத்தமும் ஒரு வரம்பு இல்லாமல் திருவாரூரில் எந்த இடங்களிலும் எழுந்து முழங்கினவையாக இருக்கின்றன.' பாடல் வருமாறு:

**''பல்லி யங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை ஒலியுடன் மாவொலி
எல்லை இன்றி எழுந்துள எங்கணும்.''**

பல்-பல வகையாகிய. இயங்கள்—வாத்தியங்கள். அவை யாவன: நாகசுரம், ஒத்து, கஞ்சதாளம், மத்தளம், வீணை, யாழ், சல்லரி, ஊதுகொம்பு, பேரிகை, முரசம், முகவீணை முதலியவை. பரந்த-அவற்றை வாத்தியக்காரர்கள் வாசிக்கும் பரவி அமைந்த. ஒலியுடன்—இனிய நாதத்தோடு. செல்வ-செல்வம் படைத்தவர்கள் வாழும்; திணை மயக்கம். வீதி-தெருவில். ச்:சந்தி. செழு-செழிப்பானதும். மணி-அடிக் கும் மணியைக் கட்டியதும் ஆகிய. த்:சந்தி. தேர்-தேர் ஓடும் போது உண்டாகும்; ஆகுபெயர். ஒலி—சடசட சத்தமும். மல் லல்-வளப்பத்தைக் கொண்ட. யானை-யானை பிளிறும். ஒலி யுடன்-ஓசையோடு. மா—குதிரை. ஒலி-கனைக்கும் சத்தமும்.

எல்லை—ஒரு வரம்பு. இன்றி—இல்லாமல். எங்கணும்-திருவாரூரில் எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். எழுந்து—மேல் எழுந்து. உள—இருக்கின்றன; இடைக்குறை.

பின்பு வரும் 4-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மாடங்கள், மாளிகைகள், மேல் மாடிகள், மண்டபங்கள், கூடங்களைப் பெற்ற சாலைகள், கோபுரங்கள், திண்ணைகள், நீளமான சன்னல்கள், நெடுங்காலமாக விளங்கும் நடன சபைகள் ஆகிய எந்த இடங்களிலும் நடனமாடும் விருப்பம் மருவிய நடனப் பெண்மணிகள் தங்கள் கால்களில் அணிந்திருக்கும் சிலம்புகள் முழக்கத்தைச் செய்பவைகளாக விளங்கும்.' பாடல் வருமாறு:

> **''மாடம் மாளிகை சூளிகை மண்டபம்**
> **கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்**
> **நீடு சாளரம் நீடரங் கெங்கணும்**
> **ஆடல் மாதர் அணிசிலம் பார்ப்பன.''**

மாடம்-மாடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். மாளிகை-திருமாளிகைகள்; ஒருமை பன்மை மயக்கம். சூளிகை-மேல் மாடிகள்; ஒருமை பன்மை மயக்கம். மண்டபம்—மண்டபங்கள்; ஒருமை பன்மை மயக்கம். கூட-பள்ளிக் கூடங்கள் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். சாலைகள்-வீதிகள். கோபுரம்-ஆலயங்களின் முன்னால் உயர்ந்து நிற்கும் கோபுரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். தெற்றிகள்-வீடுகளில் உள்ள திண்ணைகள். நீடு-நீளமான. சாளரம்-சன்னல்கள்; ஒருமை பன்மை மயக்கம். நீடு-நெடுங்காலமாக விளங்கும். அரங்கு-நடனசபைகள் ஆகிய; ஒருமை பன்மை மயக்கம். எங்கணும்-எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். ஆடல்-நடனம் புரியும். மாதர்-விருப்பம் மருவிய நடனமாடும் பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். அணி-தங்கள் கால்களில் அணிந்த. சிலம்பு-சிலம்பு

கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்ப்பன-முழக்கத்தைச் செய்பவைகளாக விளங்கும்.

அடுத்து வரும் 5-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அந்த நகரத்தினுடைய சிறப்பைப் பாடுவதற்கு என்ன அளவு இருக்கிறது? அந்தத் திருவாரூரில் திருமணம் செய்து கொண்ட கணவர்கள் இல்லாதவர்களாகிய பரத்தையர் களுடைய திருமாளிகைகளுக்குள் ஒன்றாக விளங்குவது, சம்புவாகிய சிவபெருமானுடைய வாமபாகத்தில் எழுந்தருளி யிருக்கும் பார்வதி தேவியினுடைய அழகிய தோழியும் பரவை நாச்சியாரும் ஆகும் மங்கைப் பருவத்தினர் திருவவ தாரம் புரிந்தருளிய திருமாளிகை,' பாடல் வருமாறு:

**''அங்கு ரைக்கென் அளவப் பதியிலார்**
**தங்கள் மாளிகை யின்னொன்று சம்புவின்**
**பங்கி னாள்திருச் சேடிபர வையாம்**
**மங்கை யார்அவ தாரம்செய் மாளிகை.''**

அங்கு-அந்தத் திருவாரூரினுடைய சிறப்பை; ஆகுபெயர். உரைக்கு-பாடுவதற்கு. என்-என்ன. அளவு-அளவு இருக் கிறது? அப்பதியிலார்- தங்களுக்குத் திருமணம் செய்து கொண்ட கணவர்கள் இல்லாதவர்களாகிய அந்தப் பரத்தை யர்கள்; ஒருமை பன்மை மயக்கம். இலார்: இடைக்குறை, தங்கள்- தங்களுடைய. மாளிகையின்- திருமாளிகைகளுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். ஒன்று-ஒன்றாக விளங்குவது. சம்புவின்-சுகத்தைச் செய்பவனாகிய வன்மீகநாதனுடைய. பங்கினாள்-வாம பாகத்தில் எழுந்தருளிய நீலலோசனி யினுடைய. திரு-அழகிய. ச்; சந்தி. சேடி-தோழியாகிய. பரவையாம்-பரவை நாச்சியாராகும்; ஒருமை பன்மை மயக்கம். மங்கையார்—மங்கைப் பருவத்தைப் பெற்றவர். அவதாரம் செய்—திருவவதாரம் செய்தருளிய. மாளிகை— திருமாளிகை.

பிறகு உள்ள 6—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'படர்ந்து அமைந்த பெரிய பிரகாசம் வீசும் அந்தப் பல அழகிய வீதிகளில் நிலத்தைப் பன்றியின் உருவத்தை எடுத்து திருமால் திருவடிகளையும், பிரமதேவன் அன்னப் பறவை யின் உருவத்தை எடுத்துக் கொண்டு திருமுடியையும் தேடியவராகிய வன்மீகநாதர் தம்மைத் தொடர்ந்து பற்றிக் கொண்ட வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனாருக் காகத் தூதுவராக எழுந்தருளி நடந்த செந்தாமரை மலர் களைப் போன்ற திருவடிகளின் நறுமணம் கமழும்.' பாடல் வருமாறு:

**''படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபார்**
**இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்**
**தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்**
**நடந்த செந்தா மரையடி நாறுமால்.''**

படர்ந்த—விரிவாக அமைந்த. பேரொளி—பெரிய பிரகா சத்தை வீசும். ப்: சந்தி. பல்—பல. மணி—அழகைப் பெற்ற வீதி—திருவாரூரில் உள்ள தெருக்கள்; ஒருமை பன்மை மயக்கம். பார்—தரையை. இடந்த—சிவபெருமா னுடைய திருவடிகளைக் காணும் பொருட்டுத் தோண்டிய. ஏனமும்—பன்றியின் வடிவத்தை எடுத்துத் தேடிய திரு மாலும். அன்னமும்—திருமுடியைக் காண்பதற்காக அன்னப் பறவையின் வடிவத்தை எடுத்துக் கொண்டு தேடிய பிரம தேவனும். தேடுவார்—தேடியவராகிய வன்மீக நாதர். தொடர்ந்து—ஒரு முறை, இரு முறை தொடர்ச்சியாக. கொண்ட—தாம் தடுத்து ஆட்கொண்ட,வன்தொண்டர்க்கு- வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனாருக்காக. த்: சந்தி. தூது—பரவை நாச்சியாரிடம் தூதுவராக; திணை மயக்கம். போய்—எழுந்தருளி. நடந்த—அந்த நாச்சியா ருடைய திருமாளிகைக்கு நடந்த, செந்தாமரை—செந்தா மரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். அடி—திருவடிகளின் மணம்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். நாறும்—கமழும். ஆல்: ஈற்றசைநிலை.

ஏனமும் அன்னமும் தேடுவார்: ''பணியுடை மாறும் மலரினோனும் பன்றியும் வென்றிப் பறவையாயும் நணுக லரிய நள்ளாறுடைய நம்பெருமான்.'', ''ஏனம் அன்னமும் ஆனவருக் கெரியான வண்ணத்தெம் அண்ணலார்'',''இடந்த பெம்மான் ஏனமதாயும் அனமாயும் தொடர்ந்த பெம் மான்.'',''தேனமர் தரு மலரணைபவன் வலிமிகும்ஏனமதாய் நிலம் அகழரி அடிமுடி தானணையா உருஉடையவன்.'', ''பன்றிக் கோலம் கொண்டிப்படித் தடம் பயின்றிடப் பானாம்மால் தானா மேயப் பறவையின் உருவு கொள ஒன்றிட்டே யம்புச்சேர் உயர்ந்த பங்கயத்தவனோ தான: துணைரா துருவின தடிமுடியும் சென்றிட்டே வந்திப்ப.'', ''பூமகள் தன்கோன் அயனும் புள்ளினொடு கேழலுரு வாகிய புக்கிட் டாமளவும் சென்று முடியடி காணா வகை நின்றான்.'', ''பூவார்பொற் றவிசின்மிசை இருந்த வனும் பூந்துழாய் புனைந்த மாலும் ஓவாது கழுகேனமாயு யர்ந் தாழ்ந்துள நாடி உண்மை காணாத் தேவ்ரும் திருவுரு வன்.'', ''செந்தளிர்மா மலரோனும் திருமாலும் ஏன மோ டன்ன மாகி அந்தமடி காணாதே அவரேத்த.'', ''உழுது மாநிலத் தேனமாகி மால் தொழுதுமா மலரோனும் காண்கிலார்.'', ''பருத்துருவ தாகி விண்ணடைந்தவன் ஓர் பன்றிப் பெருத்துருவதாய் உலகிடந்தவனும் என்றும் கருத்துரு வொணாவகை நிமிர்ந்தவன்.'', ''ஏனம் கழுகான வர் உன்னை முனென்கொல் வானம் தவம் அண்டியும் கண்டிலா வாறே.'', ''வண்டு சென்றணை மலர்மிசை நான் முகன் மாய னென்றிவ ரென்றுகண்டுகொள்ளாவோ ரனமோ டன்னமாய்க் கிளறியும் பறந்தும் தாம் பண்டு கண்டது காணவே நீண்டஎம் பசுபதி.'', ''கிண்டு புக்கார் பறந்தார் அயர்ந்தார் கேழல் அன்னமாய்க் காண்டும் என்றார்.'', ''நீல வரைபோல நிகழ் கேழலுரு நீள்பறவை நேருருவமாம் மாலு மலரானும் அறியாமை வளர் தீயுருவமான வரதன்.'', ''ஏனவுருவாகி மண்இடந்த இமையோனும் எழில் அன்ன

உருவம் ஆனவனும்ஆதியி னொடந்தம் அறியாத அழல்மேனி யவன்.'', ''பன்றியர் பறவையர் பரிசுடை வடிவொடு படர்தர அன்றிய அவரவர் அடியொடு முடியவை அறிகி லார்.'', ''வெல்பறவைக் கொடிமாலும் மற்றை விரைமலர் மேலயனும் பல்பறவைப் படியாய் உயர்ந்தும் பன்றியதாய்ப் பணிந்தும் செல்வற நீண்டெம் சிந்தைகொண்ட செல்வர்.'', ''ஏன மாலயனவர் காண்பரியார்.'', ''துன்று பூமகன் பன்றியானவன் ஒன்றும் ஓர்கிலா மிழலையான்.'', ''காய மிக்கதொரு பன்றியே கலந்த நின்ன வுரு பன்றியே ஏய விப்புவி மயங்கவே இருவர்தாம்மனம் மயங்கவே தூய மெய்த்திரள கண்டனே.'' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், ''பானமர் ஏன மாகிப் பாரிடந் திட்ட மாலும் தேனமர்ந் தேறும் அல்லித் திசைமுக முடைய கோவும் தினரைத் தியக் கறுத்த திருவுருவுடையர்.'', ''ஏனமாய் இடந்த மாலும் எழில்தரு முளரி யானும் ஞானந்தான் உடைய ராகி நன்மையை அறிய மாட்டார்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''திருநெடு மாலன் றடிமுடி அறியும் ஆதரவத னிற் கடுமுரண் ஏனம் ஆகி முன்கலந் தேழ்தலம் உருவ இடந்து பின்னெய்த் தூழி முதல்ல சயசய என்று வழுத்தியும் காணா மலரடி யிணைகள்.'', ''திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை.'' என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 7-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சிவந்த கண்களையுடையவர்களாகிய விருப்பம் மரு விய பெண்மணிகள் திருவாரூரில் உள்ள வீதிகளில் தெளித்த சிவந்த குங்குமப் பூவை அரைத்த குழம்பை அந்தப் பெண் மணிகளுடைய கூந்தல்களில் அணிந்த நறுமணம் பொங்கி எழும் மாலைகளில் கட்டியிருக்கும் மலர்களில் உள்ள மகரந் தப் பொடிகள் தரையில் விழுந்து உடனே அந்தத் தரையில் சேர்ந்து அந்தக் குழம்பாகிய சேற்றை உலரச் செய்யும்.' பாடல் வருமாறு:

**''செங்கண் மாதர் தெருவில் தெளித்தசெங்**
**குங்கு மத்தின் குழம்பை அவர்குழல்**
**பொங்கு கோதையிற் பூந்துகள் வீழ்ந்துடன்**
**அங்கண் மேவி அளறு புலர்த்துமால்.''**

செம்-சிவந்த. கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மாதர்-விருப்பம் மருவிய பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். தெருவில்-திருவாரூரில் உள்ள வீதிகளில்; ஒருமை பன்மை மயக்கம். தெளித்த-தங்களுடைய கைக ளால் தெளித்த. செம்-சிவந்த. குங்குமத்தின்-குங்குமப் பூவினுடைய. குழம்பை-அரைத்த குழம்பை. அவர்-அந்தப் பெண்மணிகளுடைய; ஒருமை பன்மை மயக்கம். குழல்-கூந்தல்களில் அணிந்த; ஒருமை பன்மை மயக்கம். பொங்கு-நறுமணம் பொங்கி எழும். கோதையில்-மாலைகளில் கட்டி யிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பூம்-மலர்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். துகள்-மகரந்தப்பொடி களின் தொகுதி; ஒருமை பன்மை மயக்கம். வீழ்ந்து-தரை யில் விழுந்து. உடன்-உடனே. அங்கண்-அந்தத் தரை யாகிய இடத்தில். மேவி-படிந்து. அளறு-குங்குமப்பூவி னுடைய குழம்பாகிய சேற்றை. புலர்த்தும்-உலரச் செய்யும், ஆல்: ஈற்றசை.

அடுத்து உள்ள 8-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'தாம் ஏறி நடத்துகின்ற இடப வாகனத்தைப் பெற்ற வள்ளலாராகிய தியாகராஜப்பெருமானார் கோயில்கொண்டு வீற்றிருக்கும் திருவாரூரின் பக்கங்கள் எல்லாவற்றிலும் தெளிவாக இருக்கும் இனிய ஒலியைக் கொண்ட தேவாரத் திருப்பதிகங்களைப் பச்சைக் கிளிகள் பாடிக்கொண்டிருக்கும்; அந்தப் பதிகங்களை நாகணவாய்ப்புட்கள் கேட்டுக் கொண் டிருக்கும்; இந்தக் காட்சியைக் கண்டு தம்முடைய உள்ளத் தில் உருக்கத்தை அடையாதவர் யார்?' பாடல் வருமாறு:

**''உள்ளம் ஆர்உரு காதவ ? ஊர்விடை**
**வள்ளலார் திருவா ரூர்மருங் கெலாம்**
**தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்**
**கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்.''**

இந்தப் பாடல் விற்பூட்டுப் பொருள் கோள் அமைந்தது. ஊர்-தாம் ஏறி ஓட்டும். விடை-இடப வாகனத்தைப் பெற்ற. வள்ளலார்-வள்ளலாராகிய தியாகராஜப் பெருமானார் வீற்றிருக்கும். திருவாரூர்-திருவாரூரின். மருங்கு—பக்கங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்-எல்லாவற்றிலும்; இடைக்குறை. தெள்ளும்—தெளிவாக விளங்கும். ஓசை—இனிய ஒலியைக் கொண்ட. திருப்பதிகங்கள்—தேவாரத் திருப்பதிகங்களை. பைங்கிள்ளை—பச்சைக்கிளிகள்; ஒருமை பன்மை மயக்கம். பாடுவ-பக்தர்கள் பாடுவதைக் கேட்டு அவ்வாறே பாடிக்கொண்டிருப்பவையாக விளங்கும். பூவைகள்—நாகணவாய்ப் புட்கள். கேட்பன—அந்தத் திருப்பதிகங் களைக் கேட்டு மகிழ்பவைகளாகத் திகழும். உள்ளம்—இந்தக் காட்சியைக் கண்டு தம்முடைய உள்ளத்தில். உருகாதவர் — உருக்கத்தை அடையாதவர். ஆர்—யார் இருக்கிறார்.

வள்ளலார்: ''வள்ளல் ஆரூரை.'', ''வள்ளல்மா மழ பாடியுள் மேய மருந்தினை.'', ''ஆமாத்தூர் அம்மான் எம் வள்ளல்,'', ''வள்ளல் இருந்த மலை.'', ''வள்ளல் வலஞ் சுழி வாணன்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''காயந் தன்னுள் புண்டரீ கத்திருந்த வள்ளலை.'', ''ஆரூர் அமர்ந்த எம் வள்ளல்.'', ''உரைக்கும் திருப்பெயர் வள்ளல்.'', ''ஆறை வடதனி வள்ளலை.'', ''புள்ளிருக்கு வேளூர் வள்ளல்.'', ''வள்ள லாகிய வான்மியூர் ஈசனே.'', ''மணஞ்சேரிஎம் வள்ளலார்.'', ''வள்ளலே போற்றி மணாளா போற்றி.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''வள்ளல் எந்த மக்கே துணை.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''வள்ளல் வரவர வந்தொழிந்தான் என் மனத்தே.'', ''வான்பழித்திம் மண்புகுந்து மனிதரை ஆட்

கொண்ட வள்ளல்.'', ''பரியின்மேல் வந்த வள்ளல்'' என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

பின்பு உள்ள 9-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பிரகாசம் மிகுதியாக உள்ள அணிகலன்கள் விரவி இருப்பதாலும், அசைத்தல் இல்லாத பெரிய ஆரவாரத் தாலும், விற்கப்படும் பலவகைப்பொருள்கள் வளப்பத்தோடு பல வகைகளில் வந்து சேர்வதாலும், திருவாரூரில் உள்ள கடை வீதிகள் சமுத்திரத்தைப் போல விளங்கின.' பாடல் வருமாறு:

**''விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்**
**துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்**
**வளத்தொ டும்பல வாறு மடுத்தலால்**
**அளக்கர் போன்றன ஆவண வீதிகள்.''**

விளக்கம்—ஒளி. மிக்க—மிகுதியாக உள்ள. கலன்கள்—ஆபரணங்கள். விரவலால்—நகைக் கடைகளில் பரவியிருப்ப தாலும். அந்த ஆபரணங்களாவன: ஒட்டியாணம், தங்கச் சங்கிலி, காறை, கைக்காப்பு, பொன் வளையல், கங்கணம், காலாழி, பீலாழி, மோதிரம், உச்சிப்பூ, மெட்டி, சுட்டி, ஜிமிக்கி, கம்மல், வைர அட்டிகை, புல்லாக்கு, வங்கி முதலி யவை. துளக்கு—மாற்றுதல். இல்—இல்லாத; கடைக் குறை. பேரொலியால்—பண்டங்களை விற்பவர்களும் அவற்றை வாங்குபவர்களும் செய்யும் பெரிய ஆரவாரத்தா லும். துன்னு—கடைகளுக்கு வந்து சேரும். பண்டங்கள்—பொருள்கள். அவையாவன:அரிசி, துவரம் பருப்பு, உளுந்து, கொத்துக் கடலை, வெந்தயம், மிளகு, சீரகம், வெல்லம், கற்கண்டு, சர்க்கரை, பயிறு, சுக்கு, இஞ்சி, நிலக்கடலை, ஏலம், இலவங்கம், கிராம்பு, ஜாதிக்காய், கடுக்காய் முதலி யவை. வளத்தொடும்—வளப்பத்தோடும். பலவாறு—வண்டி களிலும், ஆட்களின் தலைகளிலும், ஒடங்களிலும் ஆகிய பல வகைகளில். மடுத்தலால்—கடைகளுக்கு வந்து சேர்வதா லும். ஆவண வீதிகள்—திருவாரூரில் இருந்த கடை வீதிகள். அளக்கர்—சமுத்திரத்தைப் போன்ற—போல விளங்கின.

அடுத்து உள்ள 10-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திருவாரூரில் விளங்கும் வீதிகளில் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் கற்றுத் தேர்ச்சி பெற்ற வேதியர்கள் கானம் செய்யும் இனிய ஒலிகளே அல்ல; அந்தத் தெருக்களில் போகும் யானைகளும் மாறி மாறிப் பிளிறல்களை உண்டாக்கும்; சிறப்போடு கூடிய தேவர்கள் வன்மீக நாதரைத் தரிசிக்கும் பொருட்டு வருவார்கள்; அவர்களுடைய வருகையல்லாமல் அங்கங்கே கட்டிய தோரணங்களில் தொங்கும் மலர் மாலைகளும் சுற்றிலும் விளங்கும்.' பாடல் வருமாறு:

**''ஆரணங்க ளேஅல்ல மறுகிடை**
**வார ணங்களும் மாறி முழங்குமால்;**
**சீர ணங்கிய தேவர்க ளேயலால்**
**தோர ணங்களில் தாமமும் சூழுமால்.''**

மறுகிடை—திருவாரூரில் உள்ள வீதிகளில்; ஒருமை பன்மை மயக்கம். ஆரணங்களே—இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களையும் அத்தியயனம் செய்து தேர்ச்சி பெற்ற வேத பாரங்கதர்கள் அந்த வேதங்களை ஓதும் இனிய கானமே; திணை மயக்கம். அல்ல-அல்லாமல். வாரணங்களும்-அந்த வீதிகளில் போகும் யானைகளும். மாறி—மாறி மாறி. முழங்கும்—பிளிறும். ஆல்; அசை நிலை. சீர்—சீர்த்தியை. அணங்கிய—பெற்ற. தேவர்களே—வன்மீக நாதரைத் தரிசிக்கும் பொருட்டுத் தேவலோகத்திலிருந்து வரும் தேவர்களே. அலால்—அல்லாமல்; இடைக்குறை. தோரணங்களில்—அந்த வீதிகளில் கட்டித் தொங்கவிடப்பட்ட தோரணங்களில். தாமமும்—பூமாலைகளும்; ஒருமை பன்மை மயக்கம். சூழும்—சுற்றிலும் விளங்கும். ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 11-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'அந்தப் பழமையான நகரமாகிய திருவாரூர், தொங்கிய சடாபாரத்தைத் தங்கள் தலைகளில் பெற்றவர்களும், சைவ சமயத்தைச் சார்ந்த பக்தர்களும், தவமாகிய செல்வத்தைப் படைத்த தவசிகளும், மகிழ்ச்சியைக் கொண்ட உள்ளங்களைப் பெற்ற முனிவர்களும், வேதங்களை முற்றும் அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேதியர்களும், தாங்கள் விரும்பிய சிற்றின்பத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களும் சுற்றி வாழும் பலவேறு இடங்களைப் பெற்று விளங்குவது.' பாடல் வருமாறு:

**''தாழ்ந்த வேணியர், சைவர், தபோதனர்,**
**வாழ்ந்த சிந்தை முனிவர், மறையவர்,**
**வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்**
**சூழ்ந்த பல்வே றிடத்தத் தென்னகர்.''**

இந்தச் செய்யுள் விற்பூட்டுப் பொருள்கோள் அமைந்தது.

அத்தொல்—அந்தப் பழமையாகிய. நகர்—திருவாரூராகிய நகரம். நகர்—பெரிய தலம். தாழ்ந்த—தொங்கிய. வேணியர்—சடாபாரத்தைத் தங்கள் தலைகளில்பெற்றவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். சைவர்—சைவ சமயத்தைச் சார்ந்த பக்தர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தபோதனர்—தவத்தையே செல்வமாகக் கொண்ட தவசிகளும்; ஒருமை பன்மை மயக்கம். வாழ்ந்த — மகிழ்ச்சியை அடைந்த. சிந்தை—உள்ளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். முனிவர்—முனிவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். மறையவர்—நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேதியர்களும்; ஒருமை பன்மை மயக்கம். வீழ்ந்த—தாங்கள் விரும்பிய. இன்பத்துறையுள்—சிற்றின்பத் துறைகளில்; ஒருமை பன்மை மயக்கம். விரவுவார்—ஈடுபட்டிருக்கும் ஆடவர்களும் பெண்மணிகளும்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்ந்த சுற்றி வாழும். பல்—பல. வேறு—வேறாகிய. இடத்தது—இடங்களைப் பெற்று விளங்குவது; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 12-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பூ மடந்தைக்கு அழகு நிறைந்த செல்வம் நெடுநாளாகப் பெற்று விளங்கும் நெற்றியில் இட்டுக்கொண்ட திலகத்தைப் போல விளங்குவது சோழ மன்னர்கள் இராசதானி நகர மாகக் கொண்டு ஆட்சிபுரிந்த தலம்; செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளுக்குச் செந்தாமரை மலரைப்போல மலர்ச்சியைப் பெற்றதாகக் கணக்கு இல்லாத சீர்த்தியைக் கொண்ட திருவாரூர் சிறப்புற்று விளங்கும்.' பாடல் வருமாறு:

**''நிலம கட்கழ கார்திரு நீன்றுதல்**
**திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி**
**மலர்ம கட்குவண் தாமரை போல் மலர்ந்**
**தலகில் சீர்த்திரு வாரூர் விளங்குமால்.''**

நிலமகட்கு-பூமடந்தைக்கு. அழகு ஆர்-எழில் நிறைந்த. திரு—செல்வத்தைப் போல. நீள் – உள்ள அகலமான. நுதல்-நெற்றியில் இட்டுக்கொண்ட. திலகம்-திலகத்தை. ஒப்பது-போன்று விளங்குவது. செம்பியர்—சிபிச்சக்கரவர்த்தியின் பரம்பரையில் பிறந்த சோழ மன்னர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ''புறவின் அல்லல் சொல்லிய கறையடி, யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக், கோணிறை துலா அம் புக்கோன் மருக''. (**புறநானூறு**, 39; 1-3), ''புள்ளுறு புன்கண் தீர்த்த வென்வேற், சினங்கெழு தானைச் செம்பியன் மருக.'' (**புறநானூறு**, 37: 5-6) என வருபவற்றைக் காண்க. வாழ்—ஆட்சிபுரிந்து வாழும். பதி—இராசதானி நகரம். மலர்மகட்கு— செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளுக்கு. வண்—வளப்பத்தைக் கொண்ட. தாமரை—செந்தாமரை மலரை. போல்-போல. மலர்ந்து-மலர்ச்சியை அடைந்து. அலகு—கணக்கு. இல்—இல்லாத; கடைக்குறை. சீர்—சீர்த்தியைப்பெற்ற. த்: சந்தி. திருவாரூர்—திருவாரூர் என்ற நகரம். விளங்கும்—சிறப்புற்று விளங்கும். ஆல்:

ஈற்றசை நிலை. ''நிலமகள் முகமோ திலகமோ'', திருமகட் கினிய மலர்கொலோ'' (**கம்ப ராமாயணம்**, நகரப்படலம், 2.) என்பது இங்கே ஒப்பு நோக்குதற்கு உரியது.

பிறகு வரும் 13-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அத்தகைய பழைய நகரத்திற்கு மன்னனாக விளங்கு பவன், வானத்தில் உதயமாகும் சிவந்த கிரணங்களை வீசும் சூரியனுடைய குலத்தில் பிறந்தவனும் நிலைபெற்ற கீர்த்தி யைப் பெற்றவனுமாகிய அநபாயச் சோழ மன்னனுடைய பரம்பரையில் உதித்த முதல்வன், மின்னும் பெருமையைக் கொண்ட மாணிக்கங்களைப் பதித்த ஆபரணங்களை அணிந்த மனுவேந்தன் என்பவன்.'

பாடல் வருமாறு:

**''அன்ன தொன்னக ருக்கர சாயினான்**
**துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்**
**மன்னு சீர்அந பாயன் வழிமுதல்**
**மின்னும் மாமணிப் பூண்மனு வேந்தனே.''**

அன்ன—அத்தகைய சிறப்பைப் பெற்ற. தொல்—பழமையாகிய. நகருக்கு—நகரமாகிய திருவாரூருக்கு. அரசு—மன்னன்; திணை மயக்கம். ஆயினான்—ஆக விளங்கு பவன். துன்னு—வானத்தில் உதயமாகும். செம்—சிவந்த. கதிரோன்—கிரணங்களை வீசும் சூரியனுடைய. கதிர்; ஒருமை பன்மை மயக்கம். வழி—குலத்தில். த்: சந்தி. தோன் றினான்—பிறந்தவன். மன்னு—நிலை பெற்று விளங்கும். சீர்—சீர்த்தியைப் பெற்ற. அநபாயன்—அநபாயச் சோழ மன்னனுடைய. வழி—பரம்பரையின். முதல்—முதல்வன்; திணை மயக்கம். மின்னு—மின்னலைப் போல ஒளியை வீசும். மா—பெருமையைப் பெற்ற. மணி—மாணிக்கங்களைப் பதித்த; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. பூண்—மகுடம், அங்க வலயம் முதலிய ஆபரணங்களை அணிந்து விளங்கும்;

ஒருமை பன்மை மயக்கம். மனு வேந்தன்—மனுநீதிச் சோழ மன்னன். ஏ:ஈற்றசை நிலை. அநபாயச் சோழன் என்பவன் இரண்டாம் குலோத்துங்க சோழமன்னன். இவன் தன் தந்தையாகிய விக்கிரம சோழனால் கி.பி. 1133-ஆம் ஆண்டில் இளவரசனாக நியமிக்கப் பெற்றவன். இவனுடைய சாசனங்களில் உள்ள மெய்க்கீர்த்திகள், 'திருமன்னி விளங்கு', 'பூமியும் திருவும்', 'பூமருவிய திருமடந்தையும்.', 'திருமன்னிவரை இருகுவடனைய.', 'புகழ்மாது விளங்க.'' 'வீரமே துணை.', 'பூமே லரிவையும்.', 'பூமேவி வளர.', 'பூமாது வளர.', 'திருமகள் சயமகள்' என்பவை போலப் பல தொடக்கங்களைக் கொண்டவை. இந்த மன்னன் கி.பி.1150-ஆம் ஆண்டு வரையில் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. இவனைப் பற்றி ஒட்டக்கூத்தர் ஓர் உலாவும், ஒரு பிள்ளைத் தமிழும் பாடியிருக்கிறார். இது, ''பாடிய வெள்ளைக் கவியுலா மாலையொடு மீண்டுமவன், பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்.'' (**சங்கர சோழன் உலா**, 245) என்பதனால் விளங்கும்.

அடுத்து உள்ள 14-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இந்தப் பூமண்டலத்தில் வாழ்ந்து நிலைபெற்ற உயிர்கள் எல்லாவற்றிற்கும் கண்ணையும் உயிரையும் போல விளங்குபவனும், பெருமை பெற்றவனுமாகிய அரசன் தேவலோகத்தில் வாழும் தேவர்கள் மகிழ்ச்சியை அடையும் வண்ணம் கணக்கு இல்லாத பல யாகங்ளை மாட்சி அமையுமாறு செய்தான்.' பாடல் வருமாறு:

**''மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்**
**கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்**
**விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்**
**எண்ணி லாதன மாண இயற்றினான்.''**

மண்ணில்—இந்தப் பூமண்டலத்தில். வாழ்தரு—வாழும். மன்—நிலைபெற்ற. உயிர்கட்கு எலாம்—எல்லா உயிர்களுக்

கும்...எலாம்: இடைக்குறை. கண்ணும்— கண்ணையும். ஆவியும்—உயிரையும். ஆம்—போல விளங்குபவனாகும். காவலான்—அரசனாகிய மனுநீதிச் சோழ மன்னன். விண்—தேவலோகத்தில். உளார்—வாழும் தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை. மகிழ்வு—மகிழ்ச்சியை. எய்திட—அடையும் வண்ணம். வேள்விகள்—யாகங்கள். எண்—கணக்கு. இலாதன—இல்லாதவற்றை; இடைக்குறை. மாண—மாட்சி அமையுமாறு. இயற்றினான்—புரிந்தான்.

அரசன் உயிர்களுக்கு உயிரைப் போன்றவன்: ''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்.'' (**புறநானூறு**, 186:2), ''உலகிற் கோருயிர்ப்பெற்றியான் பயாபதி என்னும்பேருடை, வெற்றிவேல் மணிமுடி வேந்தர் வேந்தனே'' (**சூளாமணி**, நகரப் படலம். 16), ''மன்னுயிர் ஞாலக் கின்னுயிர் ஒக்கும் இறை.'' (**பெருங்கதை**, 2:11;17-8), ''உலகினுக் குயிராய் இருந்தனன் இறைகுலோத் துங்கன்.'' (**திருவிளையாடற் புராணம்**, பழியஞ்சின படலம், 44), ''மல்லலங் களிற்று மாலை வெண்குடை மன்னர் சண்டாய்.'', ''நல்லுயிர் ஞாலந் தன்னுள் நாமவேல் நம்பி என்றான்.'' (**சீவக சிந்தாமணி**, 2908) என வருபவற்றைக் காண்க.

பிறகு உள்ள 15-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'மன்னர்களுக்குரிய ஆக்ஞா சக்கரம் உலகம் முழுவதையும் சூழும் வண்ணமும், சோழ நாட்டைச் சுற்றிலும் உள்ள குறு நிலங்களை ஆட்சி புரியும் குறுநில மன்னர்கள் செலுத்தும் கப்பத்தைச் செலுத்த வந்தவர்கள் தன்னுடைய அரண்மனையின் வாசலில் சுற்றி நிற்கவும், பகைவர்களுடைய பகைமையைப் போர்புரிந்து போக்கிவிட்ட சிறந்த பண்புகளால் உண்மையான பழைய மனுவேந்தனால் புரியப் பெற்ற நீதியையும் தன்னுடைய மனுநீதிச் சோழன் என்ற பெயரையும் உண்டாக்கினான்.' பாடல் வருமாறு:

**''கொற்ற ஆழி குவலயம் சூழ்ந்திடச்**
**சுற்று மன்னர் திறைகடை சூழ்ந்திடச்**
**செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்**
**பெற்ற நீதியும் தன்பெயர் ஆக்கினான்.''**

கொற்ற—மன்னர்களுக்கு உரிய. ஆழி—ஆக்ஞா சக்கரம். குவலயம்—உலகம் முழுவதையும். சூழ்ந்திட—சூழும் வண்ணமும்; சூழ்ந்து ஆட்சி புரியும் வண்ணமும். ச்:சந்தி. சுற்று—சோழநாட்டைச் சுற்றிலும் உள்ள குறுநிலங்களை; ஒருமை பன்மை மயக்கம். மன்னர்—குறுநில மன்னர்கள்; ஒருமை பன்மை மயக்கம். திறை-கப்பத்தைச் செலுத்தும் பொருட்டு. கடை—அரண்மனையின் வாசலில். சூழ்ந்திட—சுற்றிக் காத்து நிற்கவும். ச்:சந்தி. செற்றம்—தன்னுடைய பகை மன்னர்களுடைய பகைமையை. நீக்கிய—போர் புரிந்து வென்று போக்கிவிட்ட. செம்மையின்—சிறந்த பண்புகளால்; ஒருமை பன்மை மயக்கம். மெய்—உண்மையான பழைய. ம்:சந்தி. மனு—மனுவேந்தனால். பெற்ற—இயற்றப்பெற்ற. நீதியும்-நீதி சாத்திரத்தில் விதிக்கப் பெற்ற நீதிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். தன்—தன்னுடைய. பெயர்—மனுநீதிச் சோழன் என்ற பெயரையும். ஆக்கினான்—தன்னுடையவை யாக ஆக்கிக்கொண்டான்.

அடுத்து வரும் 16-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அழகு பொங்கி எழுகின்றதும் பெருமையைப் பெற்றதும் வேதங்களின் வடிவமானதும் ஆகிய பாம்புப்புற்றைத் தாம் எழுந்தருளும் இடமாகக் கொண்ட வன்மீக நாதரும், எல்லா இடங்களிலும் வியாபித்தவரும் ஆகி அமர்ந்தவருடைய பூசைக்கு அவருடைய ஆலயமாகிய அந்த இடத்தில் வேண்டியவற்றிற்கு உரிய கட்டளைகளை ஆராய்ந்து பரிசுத்தமாகிய சைவ ஆகமம் விதித்த முறையின்படியே பார்த்து அமைத்திருப்பவன் மனுநீதிச் சோழ மன்னன்.

பாடல் வருமாறு:

**''பொங்கு மாமறைப் புற்றிடம் கொண்டவர்**
**எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்**
**கங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்**
**துங்க ஆகமம் சொன்ன முறைமையால்.''**

திரு ஆரூர்: இது சோழநாட்டில் புகழ்பெற்று விளங்கும் சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திரு நாமங்கள் வன்மீக நாதர், புற்றிடங் கொண்ட நாதர், வீதி விடங்கர் என்பவை. அம்பிகை அல்லியங்கோதை. தீர்த்தங் கள் கமலாலயம் முதலியவை. இது நாகப்பட்டினத்துக்கு மேற்கில் 13-மைல் தூரத்தில் உள்ளது. ''நிறை செல்வத் திருவாரூர்'' என்று இந்தத்தலம் சிறப்பிக்கப்பெறும். இந்தத் தலத்தில் விளங்கும் திருக்கோயிலுக்குத் திருமூலட்டானம், பூங்கோயில் என்ற திருநாமங்கள் உண்டு. இது திருமகள் வழிபட்ட தலம்; பிறந்தவர்களுக்கு முக்தி அளிக்கும் பெருமையைப் பெற்றது. மனுநீதி கண்ட சோழமன்னர் ஆட்சி புரிந்த தலைநகரம். சிதம்பரம் திருக்கோயிலில் புதைக் கப் பட்டிருந்த தேவாரத் திருப்பதிகங்களைக் கண்டுபிடித்து அவற்றை எடுத்து ஏழு திருமுறைகளாக வகுத்து அவற்றை யும், எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தையும் திருக் கோவையாரையும், ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப் பாவையும் திருப்பல்லாண்டையும், பத்தாம் திருமுறை யாகிய திருமந்திரத்தையும், பதினோராந் திருமுறையாகிய திருவாலவாயுடையார் அருளிச் செய்த திருமுகப் பாசுரம், காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த திரு வாலங்காட்டு மூத்த திருப்பதிகம், மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பவற் றையும், ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச்செய்த க்ஷேத்திரத் திருவெண்பாவையும், சேரமான் பெருமாள் நாயனார் அருளிச் செய்த பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கைலாய ஞான உலா என்பவற்றையும், நக்கீர தேவ நாயனார் அருளிச் செய்த

கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, திருஈங்கோய் மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுகூற் றிருக்கை, பெருந்தேவ பாணி, கோபப் பிரசாதம், கார் எட்டு, போற்றித் திருக்கலி வெண்பா, திருமுருகாற்றுப் படை, திருக்கண்ணப்பதேவர் திருமறம் என்பவற்றையும், கல்லாடதேவ நாயனார் அருளிச் செய்த திருக்கண்ணப்ப தேவர் திருமறம் என்பதையும்,கபில தேவநாயனார் அருளிச் செய்த மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெரு மான் திருவிரட்டை மணிமாலை,சிவபெருமான் திருவந்தாதி என்பவற்றையும், பரணதேவ நாயனார் அருளிச்செய்த சிவ பெருமான் திருவந்தாதி என்பதையும், இளம்பெருமான் அடி கள் அருளிச் செய்த சிவபெருமான் திருமும்மணிக்கோவை என்பதையும்,அதிரா அடிகள் அருளிச் செய்த மூத்த பிள்ளை யார் திருமும்மணிக்கோவை என்பதையும், பட்டினத்துப் பிள்ளையார் அருளிச் செய்த கோயில் நான்மணி மாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடை மருதூர் மும் மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திரு வொற்றியூர்ஒருபாஒருபது என்பவற்றையும், நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை, கோயில் திருப்பண்ணியர் விருத்தம், திருத் தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் திருவந் தாதி,ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம்,ஆளு டைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை,ஆளுடையபிள்ளையார் திருக் கலம்பகம்,ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை,திருநாவுக் கரசு தேவர் திருவேகாதச மாலை என்பவற்றையும் செப் பேடுகளில் பொறிக்கச் செய்து தியாகேசப் பெருமானுடைய சந்நிதியில் ஏற்றுவித்த அபய குலசேகரச் சோழமாமன்னரும், அந்தப் பதினொரு திருமுறைகளுக்குப் பின்னால் சேக்கிழார் நாயனார் அருளிச் செய்த பெரிய புராணத்தைப் பன்னிரண் டாம் திருமுறை என்று வகுத்து அதனையும் செப்பேடுகளில் வரையச் செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்த

அனபாய சோழமா மன்னரும்ஆட்சி புரிந்த தலைநகரம் இது. சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்த தேவாசிரயன் என்னும் ஆயிரக்கால் மண்டபமும், அந்த நாயனார் விருத்தாசலத்தில் மணிமுத்த நதியில் இட்ட பொன்னைப் பரவை நாச்சியாருக்கு எடுத்து அளித்த கமலாலயம் என்னும் திருக்குளமும் விளங்கும் தலம் இது. சுந்தரமூர்த்தி நாயனாருக்காகத் தியாகேசர் நடுஇரவில் பரவை நாச்சியாரிடம் தூது சென்ற தலமும் இது. "அடியேற் கெளிவந்த தூதனை" என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளியுள்ளார். காஞ்சீபுரத்தில் ஒரு கண்ணின் பார் வையைப் பெற்ற அந்த நாயனார், திருவாரூரைப் பற்றிச் செந்துருத்திப் பண்ணில் ஒரு திருப்பதிகத்தைப் பாடியருளி மற்றொரு கண்ணின் பார்வையையும் பெற்றார். அந்தத் திருப்பதிகத்தில் உள்ள முதற் பாசுரம் வருமாறு:

**"மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்**
**பிறரை வேண்டாதே**
**மூளாத் தீப்போல் உள்ளே கனன்று**
**முகத்தால் மிகவாடி**
**ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்**
**அல்லல் சொன்னக்கால்**
**வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்**
**வாழ்ந்து போதீரே."**

சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி நாயனா ரோடு நட்புக்கொண்ட தலம் இது. விறன்மிண்ட நாய னார், நமிநந்தியடிகள் நாயனார், செருத்துணை நாயனார், தண்டியடிகள் நாயனார், கழற்சிங்க நாயனார் ஆகிய நாயன் மார்கள் வழிபட்டு முக்தியை அடைந்த தலம் இது. சப்த விடங்கத் தலங்களுக்குள் இது முதலாவது. 'திருவாரூர்த் தேரழகு' என்பது ஒரு பழமொழி. இந்தத் தலத்தில் திருக் கோயில், குளம், செங்கழுநீர் ஓடை என்பவற்றில் ஒவ்வொன் றும் ஐந்து ஐந்து வேலிகளின் பரப்புடையது என்பர்.

"அஞ்சணை வேலி ஆரூர் ஆதரித் திடங்கொண் டாரே."
என்று தேவாரத்தில் வருவதைக் காண்க.

ஆடகேசுவரம் என்ற தனிக்கோயில் இந்த ஆலயத்துக்குள் உள்ளது. பிலம் புற்றிடம் கொண்டாருடைய திருக்கோயிலுக்குத் தென் கிழக்கில் இருக்கிறது. அதற்கு நாக பிலம் என்று பெயர். அதைக் கல்லினால் மூடியிருக்கிறார்கள். அந்தப் பிலத்தில் எழுந்தருளியுள்ள ஆடகேசுவரரைத் தரிசனம் செய்து யாவரும் சுவர்க்க பதவியை அடைந்தமையால் சுவர்க்க லோகத்தில் இடம் இல்லாமற் போனதை அறிந்த இந்திரன் அரதன சிருங்கம் என்னும் மலையினால் அந்தப் பிலத்தை மூடி அடைத்து விட்டான் என்று ஒரு வரலாறு வழங்குகிறது. இந்தச் செய்தியைத் திருவாரூர்ப் புராணத்தால் உணரலாம். இந்த ஊரில் கமலாம்பாளுடைய சந்நிதி தனியாக அமைந்துள்ளது. நீலோற்பலாம்பாள், அல்லியங்கோதை என்ற திருநாமங்களைக் கொண்ட அம்பிகையின் சந்நிதி தனியாக இருக்கிறது. மேற்குக் கோபுரத்துக்கு எதிரில் மாற்றுரைத்த பிள்ளையார் திருக்கோயில் என்ற ஓர் ஆலயம் இருக்கிறது. தெற்குக் கோபுரத்திற்கு அருகில் பரவை நாச்சியார் திருக்கோயில் உள்ளது. மனுச்சோழ மன்னனுடைய புதல்வன் தேரில் ஏறிச் சென்றதும், ஒரு பசுவின் கன்று தேர்க்காலில் சிக்கி இறந்ததும், தன்னுடைய புதல்வன்மேல் மனுச்சோழன் தன் தேரை விட்டதும் ஆகிய ஐதிஹ்யங்களை புலப்படுத்துவதற்காகக் கல்லினால் தேர் முதலியவை செய்யப் பெற்றுள்ளன. இவை கிழக்குக் கோபுரத்துக்கு அருகில் உள்ளன. கமலாலயம் என்னும் பெரிய திருக்குளத்தின் நடுவில் ஒரு சிறு கோயில் விளங்குகிறது. திரு ஆரூரைப்பற்றிக் குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, காந்தாரம், நட்டராகம், கௌசிகம் என்ற பண்களில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் வியாழக் குறிஞ்சிப் பண் அமைந்த பாசுரம் ஒன்று வருமாறு:

''பாடலன் நான்மறையன் படிபட்ட கோலத்தன் திங்கள்
சூடலன் மூவிலைய சூலம் வலனேந்திக்
கூடலன் மூவெயிலும் எரியுண்ணக் கூரெரிகொண்
டெல்லி
ஆடலன் ஆதிரையன் ஆரூர் அமர்ந்தானே.''

இந்தத் தலத்தைப் பற்றிக் காந்தாரம், சீகாமரம், குறிஞ்சி என்னும் பண்கள் அமைந்த திருப்பதிகங்களையும், திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பவை அடங்கிய திருப்பதிகங்களையும் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

''பிறப்போ டிறப்பென்றும் இல்லாதான்காண்;
பெண்ணுருவோ டாணுருவம் ஆயி னான்காண்;
மறப்படுமென் சிந்தைமருள் நீக்கி னான்காண்;
வானவரும் அறியாத நெறிதந் தான்காண்;
நறப்படுபூ மலர்தூபம் தீபம் நல்ல
நறுஞ்சாந்தம் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்பொடு பூசிக்கும் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெம் செல்வன் தானே.

இந்தத் தலத்தைப் பற்றிச் சுந்தரமூர்த்தி நாயனார் ஆறு திருப்பதிகங்களைப் பாடியருளியிருக்கிறார். அவற்றுள் ஒரு திருப்பதிகத்தில் உள்ள ஒரு பாசுரம் வருமாறு:

''இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை
பற்றியான் நோக்கி னேற்குத்
திறைகொணர்ந் தீண்டித் தேவர்
செம்பொனும் மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்
அப்பனே அஞ்சி னேனே.''

பொங்கும்—அழகு பொங்கி எழும். மா—பெருமையைப் பெற்ற. மறை—நான்கு வேதங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். புற்று—பாம்புப் புற்றை. இடம்—தாம் எழுந்தருளும் இடமாக. கொண்டவர்—கொண்ட வன்மீக நாதரும். எங்கும்—எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். ஆகி—வியாபித்தவராகி. இருந்தவர்—இருந்த வன்மீக நாதருடைய. பூசனைக்கு—பூசைக்காக. அங்கண்—அந்தத் திருவாரூரில். வேண்டும்—இன்றியமையாமல் இருக்கும். நிபந்தம்—அறக்கட்டளைகளை; ஒருமை பன்மை மயக்கம். ஆராய்ந்து—ஆராய்ச்சி செய்து, துங்க—பரிசுத்தமாகிய. ஆகமம்—சைவாகமம். சொன்ன—விதித்த. முறைமையால்—முறையின்படி. உளான்—அமைத்திருக்கிறவன் மனுநீதிச் சோழன்; இடைக்குறை.

எங்கும் ஆகி இருந்தவர்: ''பூமியும் விண்ணும் உடன் பொருந்தச் சீதமும் வெம்மையு மாகிச் சீரொடு நின்ற எம் செல்வர்,'', ''பல்கதிரோன் மதிபார் என்று நீர் தீக்காலும் மேலை விண்ணிய மான னோடு மற்று மாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள் முற்று மாகி.'', ''தீயொடு நீருடன் வாயுவாம் தெரியில் வானு மாம்.'',''நீருளான் தீயுளான் அந்த ரத்துள்ளான் நினைப்பவர் மனத்துளான் நித்தமா ஏத்தும் ஊருளான்.'', ''புவி முதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்க் கரணம் நான்காய் அவையவைசேர் பயனுருவாய் அல்ல உருவாய் நின்றான்.'', ''விண்ணாகி மண்ணோடெறி காற்றுமாய் ஆதியாகி நின்றானும்.'', ''மண்ணொடுநீர் அனல்காலொ டாகாயம் மதி இரவி எண்ணில் வருமிய மானன் இகபரமும் எண்டிசையும் பெண்ணினோடாண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்.'', ''நிலம்நீரொ டாகாசம் அனல்காலாகி நிறைந்து புலம் நீர்மை புறம்கண்டார்.'', ''பாரும் நீரொடு பல்கதிர் இரவியும்.'', ''பனிமதி ஆகாசம் ஒரும் வாயுவும் ஒண்கனல் வேள்வியிற் றலைவனுமாய் நின்றார்.'', ''மண்ணர் நீரர்

வண் காற்றினர் ஆற்றலாம் எரியுரு.'', ''காலமும் ஞாயிறும் தீயு மாயவர்.'', ''மண்ணர் நீரர் ஆரழலார் மலி காலி னார்.'', ''மண்ண கத்திலும் வானிலும் எங்குமாம் திண் ணகத் திரு ஆலவாயாய்.'', ''வினிதரு நீரும் மண்ணும் விசும்போடனல் காலுமாகி.'', ''ஊழியும் இன்பமும் கால மாகி உயரும் தவமாகி ஏழிசையின் பொருள் வாழும் வாழ்க்கை வினையின் புணர்ப்பாகி நாழிகையும் பல ஞாயிறும் ஆகி.'', ''கழியுளா ரெனவும் கடலுளா ரெனவும் காட்டு ளார் நாட்டுளா ரெனவும் வழியுளா ரெனவும் மலையுளா ரெனவும் மண்ணுளார் விண்ணுளா ரெனவும் சுழியுளா ரென வும்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''அண்டமாய் ஆதியாய் அருமறையோ டைம்பூதப் பிண்ட மாய்.'', ''நீரானே தீயானே நெறியானே கதியானே ஊரானே உலகானே உடலானே உயிரானே.'', ''காலமும் நாள்கள் ஊழி படையாமுன் ஏக உருவில் மூலர் உருவில் சாலவுமாகி மிக்க சமயங்கள் ஆறின் உருவாகி நின்ற கழலோன் ஞாலமும் மேலை விண்ணொடுல கேழும்.'', ''ஞாயிறாய் நமனு மாகி வருணனாய்ச் சோம னாகித் தீயறா நிருதி வாயுத் திப்பிய சாந்த னாகி.'', ''நீரவன் தீயி னோடு நிழலவன் எழிலதாய பாரவன் விண்ணின் மிக்க பரமவன்.'', ''மாயனாய் மாலய னாகி மலரவ னாகி மண்ணாய்த் தேய மாய்த் திசைஎட் டாகித் தீர்த்தமாய்த் திரிதர்கின்ற காய மாய்க் காயத் துள்ளார்'' ''கடலகம் ஏழினோடும் புவனமும் கலந்த விண்ணும் உடலகத் துயிரும் பாரும் ஒள்ளழ லாகி நின்று தடமலர்க் கந்த மாலை தண்மதி பகலு மாகி.'', ''இரவியும் மதியும் விண்ணும் இருநிலம் புனலும் காற்றும் உரகமார் பவனம் எட்டுத் திசையொளி உருவ மானாய்.'', ''கனலைக் காற்றைக் கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற பெரியானை.'', ''மதியமும் ஞாயிறும் காற்றும் தீயும் அந்தரமும் அலைகடலும் ஆனான்.'', ''எல்லாம் சிவ னென்ன நின்றாய் போற்றி எரிசுடராய் நின்ற இறைவா போற்றி.'', ''பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றி

னுள்ளான்.'', ''மண்ணிலங்கு நீரனல்கால் வானுமாகி மற்ற வற்றின் குணமெலா மாய்நின் றாரும்.'', ''ஒன்றா உலக னைத்தும் ஆனார் தாமே ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே நின்றாகி எங்கும் நிமிர்ந்தார்தாமே நீர்வளிதீ ஆகாசம் ஆனார் தாமே.'', ''விண்ணாகி நிலனாகி விசும்புமாகி வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற எண்ணாகி எழுத் தாகி.'', ''தடவரைகள் ஏழுமாய்க் காற்றாய்த் தீயாய்த் தண்விசும்பாய்த் தண்விசும்பின் உச்சியாகிக் கடல்வலயம் சூழ்ந்ததொரு ஞால மாகிக் காண்கின்ற கதிரவனும் மதியு மாகி.'', ''நீணிலவும் அந்தீயும் நீரும் மற்றை நெறியிலங் கும் மறுகாலும் ஆகாசமும் வாணிலவு தாரகையும் மண்ணும் விண்ணும் மன்னுயிரும்.'', ''இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாய்எரியும் காற்று மாகி அருநிலைய திங்க ளாய் ஞாயி றாகி ஆகாசமாய் அட்ட மூர்த்தி யாகிப் பெரு நலமும் குற்றமும் பெண்ணும் ஆணும் பிறருருவும் தம்முருவும் தாமே யாகி நெருநலையாய் இன்றாகி நாளை யாகி நிமிர் புன் சடையடிகள் நின்ற வாறே.'', ''நிற்பனவும் நடப்பன வும் நிலனும் நீரும் நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''ஊனாய் உயிர் ஆனாய் உடல்ஆனாய்உல கானாய் வானாய் நிலனா னாய் கடல்ஆனாய் மலைஆனாய்.'', ''மண்ணீர் தீவெளி கால் வருபூதங்கள்ஆகி மற்றும் பெண்ணோ டாணலியாய்.'', ''ஊனாய் உயிர்புகவாய் அகலிடமாய் முகில்பொழியும் வானாய் அதன்மதியாய்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனா ரும், ''பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி, நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி, தீயிடை மூன்றாய்த் திகழ்ந் தாய் போற்றி, வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி, வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி.'', ''ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி.'', ''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி, ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையு மாய்க், கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு, வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.'', ''ஈசனே நீ அல்ல தில்லை இங்கும் அங்கும்.'', ''பெண்ணாகி

ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர், விண்ணாகி மண்ணாகி.", "பூதங்கள் தோறும் நின்றாய்.", "பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப் பரப்பே, நீருறு தீயே.", "பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே." என்று மாணிக்கவாசகரும், "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தி யாகி அருளொடு நிறைந்ததெது.", "பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணானந்தமே.", "எங்கணும் வியாபி நீ.", "விண்ணே விணே தியாம் பூதமே.", "அண்ட பகிரண்டமும் அடங்கஒரு நிறைவாகி ஆனந்தமான பரமே", "எங்கும்நிறை கின்றபொருளே.", "சர்வபரி பூரண அகண்ட தத்துவமான சச்சிதானந்த சிவமே.", "மண்ணொடைந்தும் வழங்குயிர் யாவுமே அண்ண லேநின் அருள்வடி வாகுமே.", "வடிவெலாம் நின்வடிவென.", "பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கால் அப்பரத்தின் சீராக நிற்கும் திறம்கண்டாய்.", "அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக் கப்பாலும் கொண்ட நின்னை.", "மண்ணாதி பூதமெல்லாம் வைத்திருந்த நின்நிறைவை.", "எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபகமாய் உள்ள ஒன்றை.", "எங்கெங்கும் பார்த்தாலும் இன்புருவாய் நீக்கமின்றித் தங்கும் தனிப்பொருளை.", "அங்கும் இங்கும் எங்கும் நிறை அற்புதனார்" என்று தாயுமானவரும் பாடியருளிய வற்றைக் காண்க.

அடுத்து உள்ள 17-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மனுநீதிச் சோழ மன்னன் அறம், பொருள், இன்பம் என்பவற்றைத் தரும வழியிலிருந்து தவறாமல் அடைந்து பாவச் செயல்களைப் போக்கி மற்ற நாடுகளை ஆட்சிபுரியும் மன்னர்கள் வாழ்த்துக்களைக் கூறிப் பாராட்டும் வண்ணம் உலகத்து மக்களைப் பாதுகாத்து வரும் காலத்தில் அந்த மன்னன் முன்பிறவியில் புரிந்த சிறப்பைப் பெற்ற நல்ல தவத்தின் பயனால் அவனுடைய பட்டமகிஷியினுடைய அழகிய

மாணிக்கத்தைப் போன்ற வயிற்றிலிருந்து ஒரு புதல்வன் பெருமையைப் பெற்ற சிங்கக்குட்டியைப் போன்றவன் பிறந்தான்.' பாடல் வருமாறு:

**''அறம்பொருள் இன்ப மான**
**அறநெறி வழாமற் புல்லி**
**மறம்கடிந் தரசர் போற்ற**
**வையகம் காக்கும் நாளில்**
**சிறந்தநல் தவத்தால் தேவி**
**திருமணி வயிற்றில் மைந்தன்**
**பிறந்தனன் உலகம் போற்றப்**
**பேரரிக் குருளை அன்னான்.''**

*அறம்—தருமம். பொருள்—செல்வம். இன்பம்—மனைவியோடு கூடிப் பெறும் இன்பம். ஆன—ஆகிய மூன்றையும். அறநெறி—தருமத்தின் வழியிலிருந்து. வழாமல்—தவறாமல். புல்லி—மனுநீதிச் சோழன் அடைந்து. மறம்—பாவச் செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். கடிந்து—போக்கிவிட்டு. அரசர்—வேறு நாடுகளை ஆட்சி புரியும் மன்னர்கள்; ஒருமை பன்மை மயக்கம். போற்ற—தன்னை வாழ்த்தி வணங்கும் வண்ணம். வையகம்—இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்களை; இட ஆகுபெயர். காக்கும்—ஆட்சிபுரிந்து பாதுகாக்கும். நாளில்—காலத்தில். சிறந்த—சிறப்பை அடைந்ததும்; வினையாலணையும் பெயர். நல்—நல்லதும் ஆகிய. தவத்தால்—முன்பிறவியில் புரிந்த தவத்தின் பயனால்; ஆகுபெயர். தேவி—அந்தச் சோழமன்னனுடைய பட்டமகிஷியின். திரு—அழகிய. மணி—மாணிக்கத்தைப் போன்ற. வயிற்றில்—வயிற்றிலிருந்து; உருபு மயக்கம். மைந்தன்—ஒரு புதல்வன். பேர்—பெருமையைப் பெற்ற. அரிக்குருளை-சிங்கக்குட்டியை. அன்னான்—போன்றவன். உலகம்—உலகத்தில் வாழும் மக்கள்; இடஆகு பெயர். போற்ற—வாழ்த்தும் வண்ணம். ப்:சந்தி. பிறந்தனன்—உதித்தான். மணி வயிறு: ''மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாழ்த்*

தவனே.'' என்று திவ்வியப் பிரபந்தத்தில் வருவதைக் காண்க. அரிக்குருளை அன்னான்: ''சிறுவனோர் சிங்க ஏற்றை சீவக சாமி என்பான்.'' (**சீவக சிந்தாமணி**, 665), ''ஏறூர்ந்தான் ஏறே,'' (**திருமுருகாற்றுப்படை**, இறுதி வெண்பா.) என வருவனவற்றைக் காண்க.

பிறகு உள்ள 18-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மனுநீதிச் சோழ மன்னன் தவத்தைப் புரிந்து அதன் பயனாக அருமையாகப் பெற்ற ஒப்பற்ற இளமையையுடைய புதல்வனாகிய இளைஞன் ஒவ்வொரு நாளும் சிவபெருமானை வணங்கி முயற்சிசெய்து அடைவதற்குரியவை ஆக இருக்கும் தெய்வத் தன்மையைக் கொண்ட பல கலைகளாக உள்ள அறுபத்து நான்கையும் திருத்தம் அமையுமாறு கற்று, வேக மாகத் தாவும் குதிரை ஏற்றம், யானை ஏற்றம், தேரை ஓட்டுதல், வாள், வில், ஈட்டி, அம்பு, முதலிய பல வகையான ஆயுதங்களைப் பிரயோகம் புரியும் வேலைகளை உரிய ஆசிரி யர்களிடம் கற்றுத் தேர்ச்சியைப் பெற்று, இந்தப் பிறப்பை எடுத்ததும் நல்ல பாக்கியமே என்று கூறும் வண்ணம் அமை யும் நல்ல குணங்களில் மிகுதியான சிறப்பைப் பெற்று விளங் கினான்.' பாடல் வருமாறு:

**''தவம்முயன் றரிதிற் பெற்ற தனிஇளங் குமரன் நாளும்**
**சிவம்முயன் றடையும் தெய்வக் கலைபல திருந்த ஓதிக்**
**கவனவாம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் கற்றுப்**
**பவமுயன் றதுவும் பேறே எனவரும் பண்பின் மிக்கான்.''**

தவம்—தவத்தை. முயன்று—மனுநீதிச் சோழன் இடை விடாமல் செய்து. அரிதில்—அருமையாக. பெற்ற—புதல்வ னாக அடைந்த. தனி—ஒப்பற்ற. இளம்—இளமைப் பரு வத்தைக் கொண்ட. குமரன்—இளைஞன். நாளும்—ஒவ் வொரு நாளும். சிவம்—சிவபெருமானை. முயன்று—இடை விடாமல் வணங்கி. அடையும்—அடைவதற்கு உரியவையாக இருக்கும். தெய்வ—தெய்வத் தன்மையை உடைய. க்:சந்தி.

கலை பல-பலவாகிய அறுபத்து நான்கு கலைகளை; கலை: ஒருமை பன்மை மயக்கம். அந்தக் கலைகளாவன: அக்கர இலக்கணம், இங்கிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதி சாத்திரம், சோதிட நூல், தரும சாத்திரம், யோக நூல், மந்திர சாத்திரம், சகுன நூல், சிற்ப சாத்திரம், மருத்துவ நூல், உருவ சாத்திரம், இதிகாசம், காவியம், அலங்கார நூல், மதுர பாஷணம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை வாசித்தல், வேணுகானம், மிருதங்கம் வாசித்தல், தாளக்கலை, அஸ்திரப்பரீட்சை, கனகப்பரீட்சை, இரதப் பரீட்சை, கஜப்பரீட்சை, குதிரைப் பரீட்சை, இரத்தினப்பரீட்சை, பூமிப் பரீட்சை, சங்கிராம இலங்கணம், மல்யுத்தம், ஆகருஷணம், உச்சாடனம், விந்துவேஷணம், மதன சாத்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவ வக்தம், பைபீல வாதம், கவுத்துக வாதம், காதுவாதம், காருடம், நாட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம், ஆகாய கமனம், பரகாயப் பிரவேசம், அதிருசியம், இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம், அக்கினி ஸ்தம்பம், ஜலஸ்தமபம், வாயு ஸ்தம்பம், திருஷ்டி ஸ்தம்பம், வாக்கு ஸ்தம்பம், சுக்கில ஸ்தம்பம், சகனன ஸ்தம்பம் கட்க ஸ்தம்பம், அவஸ்தைப் பிரயோகம் என்பவை. திருந்த—திருத்தமாக அமையுமாறு. ஓதி—ஆசிரியர்களிடம் கற்றுக்கொண்டு.க்:சந்தி. கவன—வேகமாக. வாம்—தாவி ஓடும். புரவி—குதிரை ஏற்றம்; ஆகுபெயர். யானை—யானை ஏற்றம்; ஆகுபெயர். தேர்—தேரை ஓட்டுதல்; ஆகுபெயர். படை—வில், அம்பு, ஈட்டி, வாள் முதலிய ஆயுதங்களைப் பிரயோகம் செய்யும்; ஒருமை பன்மை மயக்கம். தொழில்கள்—வேலைகளை. கற்று—உரிய ஆசிரியர்களிடம் பயின்று. ப்:சந்தி. பவம்—இந்த மனிதப் பிறவியை. முயன்றதுவும்—அடைந்ததும். பேறே—பாக்கியமே. என—என்று கூறும் வண்ணம்; இடைக்குறை. வரும்—அமையும். பண்பின்—நல்ல குணங்களில்; ஒருமை பன்மை மயக்கம். மிக்கான்—அந்த இளைஞன் மிகுதியான சிறப்பைப் பெற்று விளங்கினான்.

அடுத்து உள்ள 19-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தக் குமரன் அவ்வாறு கணக்கு இல்லாத பழைய கலைகளைக் கற்று நிறைவேற்றித் தன்னை அருமையாகப் பெற்றவராகிய தந்தையார் மிகுதியாகத் தம்முடைய உள்ளத்தில் மகிழ்ச்சியையும் வாத்ஸல்யத்தையும் அடையும் வண்ணம் சிறப்புற்று ஓங்கியுள்ள நல்ல குணங்களோடு நெடுங்காலமாக வளர்ந்து இளவரசன் என்று சொல்லும் பான்மையை அடைவதற்குச் சமீபத்தில் உள்ளவனாகி வளரும் பால சூரியனைப் போல விளங்கி வாழ்ந்து வருங்காலத்தில், ஒருநாள் அந்த இளமையைப் பெற்ற இளைஞன்.' பாடல் வருமாறு:

**''அளவில்தொல் கலைகள் முற்றி**
**அரும்பெறல் தந்தை மிக்க**
**உளம்மகிழ் காதல் கூர**
**ஓங்கிய குணத்தால் நீடி**
**இளவர சென்னும் தன்மை**
**எய்துதற் கணிய னாகி**
**வளரிளம் பரிதி போன்று**
**வாழும்நாள் ஒருநாள் மைந்தன்.''**

இந்தப் பாடல் குளகம். அளவு—அந்தக் குமரன் அவ்வாறு கணக்கு. இல்—இல்லாத; கடைக்குறை. தொல்—பழமையான. கலைகள்—கலைகளை. முற்றி—கற்று நிறைவேற்றி. அரும்பெறல்—தன்னை அருமையாகப் பெற்றவராகிய; திணை மயக்கம். தந்தை—தந்தையார்; ஒருமை பன்மை மயக்கம், தந்தையார்-மனுநீதிச் சோழ மன்னராகிய தந்தையார். உளம்—தம்முடைய உள்ளத்தில்; இடைக்குறை, மகிழ்-மகிழ்ச்சியையும்; முதல்நிலைத் தொழிற்பெயர். காதல்_ வாத்ஸல்யத்தையும். கூர—மிகுதியாக அடையும் வண்ணமும். ஓங்கிய—சிறப்புற்று ஓங்கியுள்ள. குணத்தால்—நல்ல குணங்களோடு; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். நீடி-நெடுங்காலம் வளர்ந்து, இளவரசு—இளவரசன்; திணை

மயக்கம். என்னும்-என்று கூறும். தன்மை-பிராயத்தின் இயல்பை. எய்துதற்கு-அடைவதற்கு. அணியனாகி-சமீபித்தவனாகி. வளர்-வளரும். இளம் பரிதி-பாலசூரியனை. போன்று-போல விளங்கி. வாழும்-வாழ்ந்து வரும். நாள்-காலத்தில். ஒரு நாள்—ஒரு தினம். மைந்தன்—அந்த வலிமையைப் பெற்ற குமரன். மைந்து—வலிமை. இளம் பரிதி போன்றவன்: ''கூடம் சேர்த்தினார் இளங் கதிர்கொலோ இருந்த தென்னவே.'' (**சீவக சிந்தாமணி**, 2420), ''செங்கதிர் ஞாயிற்றுத் திகழொளி'' (**சிலப்பதிகாரம்**, 11:2) என்பதற்கு அடியார்க்கு நல்லார், 'இளஞாயிற்றினது ஒளியினும் ஒளி சிறப்ப' என்று எழுதிய உரையைக் காண்க. ''இளங்கதிர் ஞாயிறெள்ளும் தோற்றத்து விளங் கொளி மேனி'' (**மணிமேகலை**, பதிகம், 1-2) என வருவதையும் காண்க.

பிறகு வரும் 20-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சந்திரவட்டக் குடையைப் பிடித்த மனுநீதிச் சோழ வேந்தனுடைய செல்வம் மேன்மேலும் ஓங்கி வளரும் அரண்மனையிலிருந்து மேகத்தை அளாவும் மாடங்கள் ஓங்கி நிற்கும் தெருவில் அரசர்களுடைய புதல்வர்களாகிய இளவரசர்கள் தன்னைச் சுற்றித் தங்களுடைய வாகனங்களில் ஏறிக்கொண்டு வர, தேன் நிரம்பிய மலர்களைக் கட்டிய மாலை தங்கியுள்ளவையும், குங்குமப்பூவின் குழம்பு பூசி விளங்குபவையுமாகிய தோள்களைப் பெற்றவனாகி, வீரம் பொங்கி எழுந்த சேனை வீரர்கள் தன்னைச் சுற்றிவரத் தேரின்மேல் தோற்றப் பொலிவை அடைந்து இளவரசன் சென்றான்.' பாடல் வருமாறு:

**''திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயில் நின்று**
**மங்குல்தோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்**
**கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமம் குலவு தோளான்**
**பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து**
**போந்தான்**

திங்கள் வெண் கவிகை—வெண்மை நிறத்தைக் கொண்ட சந்திர வட்டக் குடையைப் பிடித்த. மன்னன்-மனுநீதிச் சோழ வேந்தன். திரு-செல்வம். வளர்-மேலும் மேலும் வளரும். கோயில் நின்று-மனுநீதிச் சோழனுடைய அரண் மனையிலிருந்து. மங்குல்-மேகத்தை. தோய்-அளாவிய. மாட-மாடங்கள் உயர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். வீதி-தெருவில். மன்-வேறு மன்னர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இளங்குமரர்-இளைய புதல்வர் களாகிய இளவரசர்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ-தங் கள் தங்கள் வாகனங்களில் ஏறிக்கொண்டு தன்னைச் சுற்றி வர. க்: சந்தி. கொங்கு-தேன் நிரம்பிய. மலர்-மலர்களைக் கட்டிய; ஒருமை பன்மை மயக்கம். மாலை-தார். தாழ்ந்த-தங்கிய. குங்குமம்-குங்குமப்பூவின் குழம்பு; ஆகுபெயர். தோளான்-பூசிய தோள்களைப்பெற்ற அந்த மன்னனுடைய. பொங்கிய-வீரம் பொங்கி எழுந்த. தானை-சேனை வீரர்கள்; ஆகுபெயர். சூழ-தன்னைச் சுற்றிவர. த்:சந்தி. தேர் மிசை-தேரின்மேல். ப்: சந்தி. பொலிந்து-தோற்றப் பொலிவை அடைந்து. போந்தான்-இளவரசன் சென்றான்.

அடுத்து வரும் 21-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அரசரைப் புகழ்கின்றவர்களாகிய மங்கலப் பாடல் களைப் பாடுகிறவர்களும், நின்று கொண்டே துதிப்பவர் களும், அமர்ந்து கொண்டு அரசருடைய புகழைப் பாடுபவர் களும் ஒரு பக்கம் இருந்தார்கள்; மற்றொரு பக்கத்தில் வாசனை கமழும் கூந்தல்களைப்பெற்ற பெண்மணிகள் இருந் தார்கள்; வேறு ஒரு பக்கத்தில் பெண்மணிகள் நழுவவிடும் வெள்ளை நிறத்தை உடைய சங்கு வளையல்கள் காட்சி அளிக்கும்; மிகுதியாக உள்ள முரசத்தோடு சங்க வாத்திய மும் ஆரவாரம் செய்வதனால் முழங்கும் ஓசையும் ஒரு பக்கத்தில் கேட்கும்; இவ்வாறு வெற்றியைப்பெற்ற இள வரசனாகிய இளைஞன் தேரில் ஏறிச் செல்லும் அலங்காரத் தைப் பெற்றவையும் மாணிக்கங்களைப் பதித்தவையும்

ஆகிய மாடங்கள் உயர்ந்து நிற்கும் தெரு விளங்கும்.' பாடல் வருமாறு:

**''பரசுவந் தியர்முன் சூதர் மாகதர் ஒருபால், பாங்கர்**
**விரைநறும் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால், மிக்க**
**முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால், வென்றி**
**அரசிளங் குமரன் போதும் அணிமணி மாட வீதி.''**

பரசு-மனுநீதிச் சோழனைப் புகழும். வந்தியர்-மங்கலப் பாடல்களைப் பாடுகிறவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். முன்-முன்னால். சூதர்-நின்றுகொண்டே துதிப்பவர்களும், ஒருமை பன்மை மயக்கம். மாகதர்-அமர்ந்து கொண்டே புகழைப் பாடுபவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். ஒரு பால்-ஒரு பக்கத்தில் இருந்தார்கள். பாங்கர்-மற்றொரு பக்கத்தில். விரை-வாசனை. நறும்-கமழும். குழலார்-கூந்தலைப் பெற்ற பெண்மணிகள். சிந்தும்-இளவரசனுடைய அழகைப் பார்த்து உடம்புகள் மெலிந்து தங்களுடைய கைகளிலிருந்து நழுவவிடும். வெள்வளை-சங்கு வளையல்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஒருபால்-ஒரு பக்கத்தில் குவிந்து கிடக்கும். மிக்க-மிகுதியாக உள்ள. முரசொடு-முரசத்தைக் கொட்டும் ஓசையோடு; ஆகுபெயர். சங்கம்-சங்கவாத்தியங்கள், ஒருமை பன்மை மயக்கம். ஆர்ப்ப-ஊதுபவர்கள் ஊதி ஒலியை எழுப்ப. முழங்கு-முழங்கும். ஒலி ஒரு பால்-ஓசை ஒரு பக்கத்தில் கேட்கும். வென்றி-பகைவர்களோடு போரிட்டு வெற்றியைப் பெற்ற. அரசிளங்குமரன்-இளவரசனாகிய இளைஞன். போதும்-தேரில் ஏறிச் செல்லும். அணி-அலங்காரம் செய்யப்பெற்ற. **மணி**-மாணிக்கங்களைப் பதித்த; ஒருமை பன்மை மயக்கம். மாட-மாடங்கள் ஓங்கி நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். **வீதி**-திருவாரூரில் உள்ள தெரு இவ்வாறு விளங்கும்.

அடுத்து வரும் 22-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஒப்பற்றதும் பெருமையைப் பெற்றதுமாகிய தரும தேவதை சிறிதளவும் தயைஇல்லாமல் சேனையைக்கொண்ட

மனுநீதிச் சோழ வேந்தனுடைய நடுக்கம் இல்லாத உள்ளத்தில் இருக்கும் உண்மையினுடைய தன்மையைச் சோதித்தாற்போல மனிதர்கள் தான் வருவதைப் பாராதவாறு ஓர் அழகிய நல்ல பசுமாட்டினுடைய ஈன்றணிமையான கன்றுக் குட்டி துள்ளிக்கொண்டு அந்தத் தெருவில் வந்தது.' பாடல் வருமாறு:

**''தனிப்பெருந் தருமந் தானோர்**
**தயாஇன்றித் தானை மன்னன்**
**பனிப்பில்சிந் தையினில் உண்மைப்**
**பான்மைசோ தித்தால் என்ன**
**மனித்தர்தன் வரவு காணா**
**வண்ணமோர் வண்ணம் நல்ஆன்**
**புனிற்றிளங் கன்று துள்ளிப்**
**போந்ததம் மறுகி னூடே.''**

தனி-ஒப்பற்ற. ப்:சந்தி. பெரும்-பெருமையைப் பெற்றிருக்கும். தருமம்தான்-தருமதேவதைதான். ஓர்-சிறிதளவும். தயா-தயை. இன்றி-இல்லாமல். த்:சந்தி. தானை-சேனையைப் பெற்ற. மன்னன்-மனுநீதிச் சோழவேந்தனுடைய. பனிப்பு-நடுக்கம். இல-இல்லாத; கடைக்குறை. சிந்தையினில்-உள்ளத்தில் உள்ள. உண்மை-மெய்யான. ப்:சந்தி. பான்மை-தன்மையை. சோதித்தால் என்ன-சோதனை செய்தாற் போல. மனித்தர்-மனிதர்கள்; 'மனிதர்' என்பது 'மனித்தர்' என எதுகை நோக்கி வந்தது, ''மனித்தப் பிறவியும்'' என்பதைப்போல. தன்-தன்னுடைய. வரவு-வருகையை. காணாவண்ணம்-பாராதவாறு. ஓர் வண்ணம்-ஒரு வகையாக. நல்-நல்ல. ஆன்-பசுமாட்டினுடைய. புனிறு-ஈன்றணிமையாகிய. இளம்-இளம் பருவத்தை உடையதாக இருக்கும். கன்று-கன்றுக்குட்டி. துள்ளி-துள்ளிக்கொண்டு. ப்:சந்தி. அம் மறுகினூடு-இளவரசன் தேரில் ஏறிக்கொண்டு போகும் அந்தத் தெருவில். ஏ: ஈற்றசைநிலை. போந்தது-ஓடி வந்தது. பரமேசுவரனே

ஒரு பசு மாடாகவும், யமதருமன் அதன் கன்றுக்குட்டியாகவும் உருவங்களை எடுத்துக் கொண்டு வந்தார்கள் என்று ஒரு தனிப்பாடல் தெரிவிக்கிறது. அந்தப் பாடல் வருமாறு:

**''ஈசன் பசுவாகி ஏமனிளங் கன்றாகி**
**வீசுபுகழ் ஆரூர் வீதிவந்தார் அம்மானை;**
**வீசுபுகழ் ஆரூர் வீதிவந்தா ராமாயின்**
**காசளவு பாலும் கறவாதோ அம்மானை?**
**கன்றை உதைகாலி கறக்குமோ அம்மானை?''**

அடுத்து வரும் 23-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த அழகிய ஈன்றணிமையான பசுமாட்டினுடைய கன்றுக்குட்டி ஓர் அபாயமான இடத்தின் வழியே ஓடிச் சென்று சிவந்த தங்கத்தால் செய்யப்பட்டதும், அரசிளங் குமரன் ஏறிக் கொண்டு வந்ததும் ஆகிய தேரின் சக்கரத்தின் மேல் வேகத்தோடு ஓடிப்போகப்பட்டு இறந்து மேலே உள்ள சொர்க்கலோகத்தை அடைய, அதைப் பார்த்து அந்தத் தெருவில் இருந்து உருக்கத்தை அடைந்த தாய்ப்பசுமாடு சுழன்று ஓடிப்போய்த் தன்னுடைய மனத்தில் வெப்பத்தை அடையும்; அலறிக் கொண்டிருக்கும்; சோர்வை அடையும்; தன்னுடைய உடம்பில் நடுக்கத்தை அடைந்து தரையில் விழும்.' பாடல் வருமாறு:

**''அம்புனிற் றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு போகிச்**
**செம்பொனின் தேர்க்கால் மீது விசையினால்**
**செல்லப் பட்டே**
**உம்பரின் அடையக் கண்டங் குருகுதாய் அலமந் தோடி**
**வெம்பிடும்; அலறும்; சோரும்; மெய்ந்நடுக் குற்று வீழும்.''**

அம்-அந்த அழகிய. புனிற்றாவின்-ஈன்றணிமையானதும் பசுமாட்டினுடையதும் ஆகிய. கன்று-கன்றுக்குட்டி. ஓர் அபாயத்தின் ஊடு-ஓர் அபாயமான இடத்தின் வழியே. போகி-ஓடிச் சென்று. ச்: சந்தி. செம்-சிவந்த. பொனின்-தங்கத்தாற் செய்யப் பெற்ற; இடைக்குறை. தேர்-இளவர

சன் ஏறிக் கொண்டு வந்த தேரினுடைய. க்:சந்தி. கால் மீது-சக்கரத்தின்கீழ். விசையினால்-வேகத்தோடு; உருபு மயக்கம். செல்லப்பட்டு-ஊழ்வசத்தால் செலுத்தப்பட்டு. ஏ: அசைநிலை. உம்பரின்-மேலே உள்ள சுவர்க்கலோகத்தை. அடைய-இறந்துபோய் எய்த. க்:சந்தி. கண்டு-அதைப் பார்த்து. அங்கு-அந்தத் தெருவில். உருகு-உருக்கத்தை அடைந்த. தாய்-தாய்ப்பசுமாடு. அலமந்து-சுழன்று. ஓடி-ஓடிச் சென்று. வெம்பிடும்-உள்ளக்கொதிப்பை அடையும். அலறும்-அலறிக் கொண்டிருக்கும். சோரும்-சோர்வை அடையும். மெய்-தன்னுடைய உடம்பில். ந்:சந்தி. நடுக்கு-நடுக்கத்தை. உற்று-எய்தி. வீழும்-தரையில் விழும். கன்றை இழந்த பசுமாடு வருந்துவது உவமையாக வரும். எடுத்துக்காட்டு வருமாறு: ''கன்றுபிரி காராவின் துயருடைய கொடி.'' (**கம்பராமாயணம்**, குகப்படலம், 21) என வருதல் காண்க.

பிறகு உள்ள 24-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அதைப் பார்த்து வலிமையைப் பெற்ற இளவரசன்', ''இந்த இடத்தில் ஓர் அபாயமான செயல் வந்துவிட்டது?'' என்று எண்ணித் தான் பேசும்வார்த்தைகள் தடுமாற்றத்தை அடைந்து தன்னுடைய உள்ளத்தில் துயரத்தால் வருந்தித் தன்னுடைய அறிவு கெட்டுப்போய், ''இந்தப் பசுமாடும் கன்றுக்குட்டியும் இன்றைக்கு என்னுடைய உணர்ச்சி என்னும் பெரிய குணம் அழியுமாறு கொன்றுவிட்டன; இதற்கு நான் என்ன பரிகாரம் செய்வேன்!'' என்று எண்ணித் தான் ஏறிக்கொண்டிருந்த தேரிலிருந்து இறங்கி வந்து தரையில் விழுந்தான்.' பாடல் வருமாறு:

**''மற்றது கண்டு மைந்தன், 'வந்ததிங் கபாயம்.' என்று**
**சொற்றடு மாறி நெஞ்சில் துயருழந் தறிவ ழிந்து,**
**'பெற்றமும் கன்றும் இன்றென் உணர்வெனும் பெருமை மாளச்**
**செற்ற; என் செய்கேன்?' என்று தேரினின் றிழிந்து வீழ்ந்தான்**

மற்று: அசைநிலை. அது-கன்றுக்குட்டி இறந்ததையும், தாய்ப்பசுமாடு அலறுவதையும்; ஒருமை பன்மை மயக்கம். கண்டு-பார்த்து. மைந்தன்-வலிமையைப் பெற்ற இளவரசன். இங்கு-இந்தத் தெருவில். அபாயம்-ஓர் அபாயமான செயல். வந்தது-நடந்துவிட்டது. என்று-என எண்ணி. சொல்-தான் பேசும் வார்த்தைகள்; ஒருமை பன்மை மயக்கம். தடுமாறி-தடுமாற்றத்தை அடைந்து. நெஞ்சில்-தன்னுடைய உள்ளத்தில். துயர்-துயரத்தால். உழந்து-வருத்தத்தை அடைந்து. அறிவு-தன்னுடைய அறிவு. அழிந்து-கெட்டு. பெற்றமும்-இந்தப் பசுமாடும். கன்றும்-கன்றுக் குட்டியும். இன்று-இன்றைக்கு. என்-என்னுடைய. உணர்வு-உணர்ச்சி. எனும்-என்று பாராட்டப்படும்; இடைக்குறை. பெருமை-பெருந்தகைமை. மாள-கெட்டுப்போகுமாறு. ச்:சந்தி. செற்ற-அழித்துவிட்டன. என்-இனிமேல் நான் என்ன? செய்கேன்-செய்வேன். என்று-என எண்ணி. தேரினின்று-தான் ஏறிக்கொண்டு வந்த தேரிலிருந்து. இழிந்து-இறங்கி வந்து. வீழ்ந்தான்-தரையில் விழுந்தான்.

பிறகு உள்ள 25-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அலறுகின்ற பெருமையைப் பெற்ற பசுமாட்டைப் பார்த்து அந்த இளவரசன் தன்னுடைய அருமையாக உள்ள உயிர் பதைபதைக்கச் சோர்வை அடைவான்; தரையின் மேல் இறந்து கிடந்த கன்றுக்குட்டியைப் பார்த்து நீண்ட நேரம் பெருமூச்சுவிட்டுக் கொண்டு வருந்தி நின்று கொண்டிருப்பான்; "அகன்ற இடத்தை உடைய இந்தப் பூ மண்டலத்தை ஆட்சி புரிந்து பாதுகாக்கும் மனுநீதிச் சோழன் என்னும் அடியேனுடைய தந்தையாகிய மன்னனுக்கு உலகத்தில் இந்தக் கொலைப்பழி வந்து அடையுமாறு நான் ஒருவன் பிறந்தவாறு என்ன பாவம்!" என்று கூறுவான்.' பாடல் வருமாறு:

**"அலறுபே ராவை நோக்கி ஆருயிர் பதைத்துச் சோரும்;**
**நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்;**
**'மலர்தலை உலகம் காக்கும் மனுவெனும் என்கோ மானுக்**
**குலகில்இப் பழிவந் தெய்தப் பிறந்தவா ஒருவன்?**
**என்பான்.'"**

*அலறு—தன் கன்றுக் குட்டியை இழந்து அலறும். பேர்-பெருமையைப் பெற்ற. ஆவை-பசுமாட்டை. நோக்கி-பார்த்து. ஆருயிர்-தன்னுடைய அருமையான உயிர். பதைத்து-பதைபதைப்பை அடைந்து. ச்:சந்தி. சோரும்-சோர்வை அடைவான். நிலமிசை-தரையின்மேல். க்:சந்தி. கன்றை-இறந்து கிடந்த கன்றுக்குட்டியை. நோக்கி-பார்த்து. நெடிது-நெடுநேரம். உயிர்த்து-பெருமூச்சை விட்டுக் கொண்டு. இரங்கி-கழிவிரக்கத்தை அடைந்து. நிற்கும்-நின்றுகொண்டே இருப்பான். மலர்-அகன்ற. தலை-இடத்தைக் கொண்ட. உலகம்-இந்தப் பூ மண்டலத்தில் வாழும் உயிர்களை; இட ஆகுபெயர். காக்கும்-ஆட்சி புரிந்து பாது காக்கும். மனு-மனுநீதிச் சோழன். எனும்-என்று பாராட்டப் பெறும்; இடைக்குறை. என்-அடியேனுடைய. கோமானுக்கு-தந்தையாகிய மன்னனுக்கு. உலகில்-இந்தப் பூமியில். இப்பழி-இந்தக் கொலையினால் உண்டாகிய பழி. வந்து எய்த-வந்து அடையுமாறு. ப்: சந்தி. ஒருவன்-நான் ஒரு புதல்வன். பிறந்தவா-பிறந்தவாறு என்ன பாவம்! என்பான்-என்று கூறுவான்.*

*அடுத்து உள்ள 26-ஆம் பாடலின் கருத்து வருமாறு:*

*'எனக்கு உண்டான இந்தப் பழியை மாற்றுவதற்கு உரியதாகும் விதத்தை இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களாகிய சாத்திரங்களின் உண்மையை அறிந்த வேதியர்கள் இதற்குப் பரிகாரமாக விதித்த வழியின்படியாகச் செய்வது தருமம் ஆக இருக்குமானால், என்னுடைய தந்தையாகிய மனுநீதிச் சோழன் இதனைத் தெரிந்து கொள்வதற்கு முன்பே அந்தப்*

பரிகாரத்தைச் செய்வேன்'' என்று எண்ணிய வலிமையைப் பெற்ற இளவரசன் தன்னுடைய உள்ளத்தில் உண்டான கொடிய துயரத்தைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு அழகிய வேதியர்களுக்கு முன்னால் போனான்.' பாடல் வருமாறு:

**'வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை**
**அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவ தறமே ஆகில்**
**எந்தைஈ தறியா முன்னம் இயற்றுவன் என்று மைந்தன்**
**சிந்தைவெந் துயரம் தீர்ப்பான் திருமறை யவர்முன் சென்றான்**

வந்த—எனக்கு உண்டாகி வந்த. இப்பழியை—இந்தக் கோஹத்தியாகிய பழியை. மாற்றும்-போக்கிக் கொள்ளும். வகையினை-விதத்தை. மறை-இருக்கு வேதம், யஜுர்வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். நூல்-சாத்திரங்கள் எடுத்துக் கூறும்; ஒருமை பன்மை மயக்கம். வாய்மை-உண்மையை அறிந்திருக்கும். அந்தணர்-வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். விதித்த-இந்தப் பாவத்துக்குப் பரிகாரமாக விதித்த. ஆற்றால்-வழியில்; உருபு மயக்கம். ஆற்றுவது—அந்தப் பரிகாரத்தை நான் செய்வது. அறமே-தருமமே. ஆகில்-ஆக இருக்குமானால். எந்தை-என்னுடைய தந்தையாகிய மனுநீதிச் சோழ மன்னன். ஈது-இதனை. அறியா முன்னம்—தெரிந்து கொள்ளாததற்கு முன்பே. இயற்றுவன்-அந்தப் பரிகாரத்தைச் செய்வேன். என்று-என எண்ணி. மைந்தன்-வலிமையைப் பெற்ற இளவரசன். சிந்தை-தன்னுடைய உள்ளத்தில் உள்ள. வெம்-கொடுமையாகிய. துயரம்-துயரத்தை. தீர்ப்பான்-போக்கிக் கொள்ளும் பொருட்டு. திரு-அழகிய. மறையவர்-திருவாரூரில் வாழும் வேதியர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். முன்—முன்னால். சென்றான்-போனான்.

அடுத்து வரும் 27-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தன்னுடைய உயிரைப் போன்ற கன்றுக்குட்டி இறந்துபோக அதனால் தளர்ச்சியை அடைந்த தாய்ப் பசுமாடு துயரத்தைச் சகிக்க முடியாததாகி முகத்துக்கு முன்னால் தீயைப் போலப் பெருமூச்சு விட்டுக்கொண்டு விம்மி விம்மித் தன்னுடைய முகத்தில் உள்ள கண்களிலிருந்து துயர நீர் சொரிய இந்த உலகத்தில் நிலைபெற்று வாழும் பல வகையான உயிர்களை ஆட்சி புரிந்து பாதுகாக்கும் செங்கோலை ஏந்திய மனுநீதிச் சோழ மன்னனுடைய தோற்றப் பொலிவைப் பெற்ற அரண்மனையின் வாசலில் கட்டித் தொங்கவிட்ட தங்கத்தால் செய்த அழகிய ஆராய்ச்சி மணியைப் போய்த் தன்னுடைய கொம்புகளால் அடித்தது.' பாடல் வருமாறு:

**''தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தஆத் தரியா தாகி**
**முன்நெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார**
**மன்னுயிர் காக்கும் செங்கோல் மனுவின் பொற் கோயில் வாயில்**
**பொன்னணி மணியைச் சென்று கோட்டினாற் புடைத்த தன்றே.''**

தன்-தன்னுடைய, உயிர்க் கன்று-உயிரைப் போன்ற கன்றுக்குட்டி. வீய-இறந்து போக. த்:சந்தி. தளர்ந்த-அதனால் தளர்ச்சியை அடைந்த. ஆ-தாய்ப் பசுமாடு. த்:சந்தி. தரியாதாகி-துயரத்தைச் சகிக்க முடியாததாகி. முன்-தன் முகத்துக்கு முன்னால். நெருப்பு-தீயைப்போல. உயிர்த்து—பெருமூச்சு விட்டுக்கொண்டு. விம்மி-விம்மி விம்மி அழுது. முகத்தினில்-தன்னுடைய முகத்தில் உள்ள. கண்-கண்களிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். நீர்-துயரத்தைப் புலப்படுத்தும் நீர். வார-சொரிய. மன்-இந்த உலகத்தில் நிலைபெற்ற. உயிர்-பல வகையான உயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். காக்கும்-ஆட்சி புரிந்து பாதுகாக்கும். செங்கோல்-செங்கோலை ஏந்திய. மனுவின்-மனுநீதிச் சோழமன்னனுடைய. பொன்-தோற்றப் பொலிவை உடைய; 'தங்கத்தைப் பதித்த' எனலும் ஆம், கோயில்-அரண்மனையி

னுடைய. வாயில்-வாசலில் கட்டித் தொங்கவிடப்பட்ட. பொன்-தங்கத்தால் செய்யப் பெற்ற. அணி-அழகைஉடைய. மணியை-ஆராய்ச்சி மணியை. ச்:சந்தி. சென்று-அந்த அரண்மனையின் வாசலுக்குப் போய். கோட்டினால்-தன்னுடைய இரண்டு கொம்புகளினாலும்; ஒருமை பன்மை மயக்கம். புடைத்தது-அடித்தது. அன்று, ஏ: இரண்டும் ஈற்றசை நிலைகள்.

அரசர்களுடைய அரண்மனைகளின் வாசல்களில் ஆராய்ச்சி மணிகளைக் கட்டித் தொங்கவிட்டிருத்தல் மரபு. அது பின் வருவனவற்றாலும் விளங்கும். ''ஆடும் கடைமணி நாஅசை யாமல் அகிலமெல்லாம், நீடும் குடையில் தரித்த பிரான்...குலோத்துங்க சோழன்.'' (**குலோத்துங்க சோழன் உலா**, இறுதிப்பாடல், 2), ''கடைமணியின் குரல் காண்பென்.'' (**சிலப்பதிகாரம்**, 20:3) என வருவனவற்றைக் காண்க.

அடுத்து உள்ள 28-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

''பழியை எடுத்துக்கூறி அடிக்கும் பறையின் முழக்கமோ? பேரொலியை எழுப்பும் பாலத்தின் சத்தமோ? மனுநீதிச் சோழ மன்னனுக்குப் பிறகு அரசாட்சியைப் பெறுவதற்கு உரியவனும் வலிமையைப் பெற்றவனும் ஆகிய இளவரசனுடைய உயிரைக் கொண்டு போக வரும் யமனுடைய வாகனமாகிய எருமை மாட்டினுடைய கழுத்தில் அணிந்த மணியினுடைய முழக்கமோ?'' என்று எண்ணி மனுநீதிச் சோழமன்னன் தன்னுடைய அரண்மனை வாசலுக்கு முன்னால் தொங்கிய ஆராய்ச்சி மணியினது ஓசையைக் கேட்டு, முழங்கி எழுந்த அந்த மணியின் ஒலி அந்தச் சோழமன்னனுடைய காதுகளாகிய இந்திரியங்களில் நுழைந்த சமயத்தில்.' பாடல் வருமாறு:

"பழிப்பறை முழக்கோ, ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ, வேந்தன்
வழித்திரு மைந்தன் ஆவி கொளவரும் மறலி ஊர்திக்
கழுத்தணி மணியின் ஆர்ப்போ, என்னத்தன் கடைமுன் கேளாத்
தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்கபோது."

இந்தப் பாடல் குளகம். பழி-பழியை எடுத்துக்கூறி அடிக்கும். பறை-பறையினுடைய. முழக்கோ-முழக்கமோ. ஆர்க்கும்-ஆரவாரம் செய்யும், பாவத்தின்-பாவங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஒலியோ-சத்தமோ. வேந்தன்-மனுநீதிச் சோழமன்னனுக்கு. வழி-பின்னால் ஆட்சி புரிவதற்கு உரிய. த்:சந்தி. திரு-அழகிய. மைந்தன்-வலிமையைப் பெற்ற இளவரசனுடைய. ஆவி-உயிரை, கொள-கொண்டு போகும் பொருட்டு; இடைக்குறை. வரும் மறலி-வரும் யமனுடைய. ஊர்தி-வாகனமாகிய எருமை மாட்டினுடைய. க்:சந்தி. கழுத்து-கழுத்தில். அணி-அணிந்த, மணியின்-வெண்கல மணியினுடைய. ஆர்ப்போ-பேரொலியோ. என்ன-என்று. த்:சந்தி. தன்-தன்னுடைய. கடை-அரண்மனை வாசலுக்கு. முன்-முன்னால் கட்டித் தொங்க விட்டிருந்த ஆராய்ச்சி மணியினுடைய ஓசையை. கேளா-கேட்டு. த்:சந்தி. தெழித்து எழும்-முழங்கி எழுந்த. ஓசை-அந்த மணியின் ஒலி. மன்னன்-மனுநீதிச் சோழவேந்தனுடைய. செவி-காதுகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புலம்-இந்திரியங்களுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். புக்க-நுழைந்த. போது-சமயத்தில்.

யமனுடைய வாகனம் எருமை மாடு, "கரிய பெரிய எருமை கடவு கடிய கொடிய திரிசூலன்.", "ஒரு மகிடமிசையேறி அந்தகனும் எனைஅடர்ந்து வருகையில்." என்று **திருப்புகழிலும்**, "பட்டிக் கடாவில் வரும் அந்தகா.", "வெட்டும் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன்" என்று **கந்தர் அலங்காரத்**திலும், "கார்மாமிசை காலன்வரின்" என்று **கந்தர் அநுபூதி**யிலும் வருவனவற்றைக் காண்க.

அடுத்து வரும் 29-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்தப் பசுமாடு தன்னுடைய கொம்புகளால் தன்னுடைய அரண்மனை வாசலில் கட்டித் தொங்கவிடப் பட்டிருந்த ஆராய்ச்சி மணியை அடித்த ஒலியைக் கேட்ட மனுநீதிச் சோழ மன்னன் சிங்காதனத்திலிருந்து இறங்கி வந்து சென்று அழகிய துவசத்தைக் கட்டியிருக்கும் அரண் மனை வாசலை அடைய, அங்கே இருந்த வாயில் காவலர்கள் அந்த அரசனுக்கு எதிரில் அவனை வாழ்த்தி வணங்கிவிட்டு, ''இந்த இடத்தில் இதோ ஒரு பசுமாடு வந்து சேர்ந்து, அரசனே, உன்னுடைய அரண்மனை வாசலில் கட்டித் தொங்கிய ஆராய்ச்சி மணியைத் தன்னுடைய இரண்டு கொம்புகளாலும் அசைத்து அடித்தது'' என்று கூறினார் கள்.' பாடல் வருமாறு:

**''ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை இழிந்து போந்து**
**பூங்கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி,**
**'ஈங்கிதோர் பசுவந் தெய்தி இறைவநின் கொற்ற வாயில்**
**தூங்கிய மணியைக் கோட்டால் துளக்கிய' தென்று**
**சொன்னார்.''**

ஆங்கு-அவ்வாறு. அது-அந்தப் பசுமாடு. தன்னுடைய கொம்புகளால் தன்னுடைய அரண்மனை வாசலில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை அடித்த ஒலியை. கேட்ட வேந்தன்-கேட்ட மனுநீதிச் சோழமன்னன். அரியணை-தன்னுடைய சிங்காதனத்திலிருந்து. இழிந்து-. இறங்கி வந்து. போந்து-சென்று. பூங்கொடி-பூத்தொழில் செய்யப் பெற்ற துவசத்தைக் கட்டியுள்ள. வாயில்-அரண் மனை வாசலை. நண்ண-அடைய. க்:சந்தி. காவலர்-அந்த இடத்தில் இருந்த வாயில் காவலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எதிர்-அரசனுக்கு எதிரில். ஏ:அசைநிலை. போற்றி-அவனை வாழ்த்தி வணங்கிவிட்டு. ஈங்கு-இந்த அரண்மனை வாசலில். இது-இதோ, ஓர்-ஒரு. பசு-பசுமாடு. வந்து எய்தி-வந்து சேர்ந்து. இறைவ-அரசனே. நின்-

உன்னுடைய. கொற்ற வாயில்-வெற்றியை உடைய அரண் மனை வாசலில். தூங்கிய-கட்டித் தொங்கிய. மணியை-ஆராய்ச்சி மணியை. க்:சந்தி. கோட்டால்-தன்னுடைய இரண்டு கொம்புகளாலும்; ஒருமை பன்மை மயக்கம். துளக் கியது-அசைத்து அடித்தது. என்று-என. சொன்னார்-அர சனிடம் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 30-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'மனுநீதிச் சோழவேந்தன் அரண்மனை வாயில் காவலர் கள் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்டு, வருத்தத்தை அடைந்திருந்த பசு மாட்டைப் பார்த்து, ''இதற்கு என்ன துன்பம் வந்தது?'' என்று கூறித் தன்னுடைய மந்திரிமார் களை இகழ்வாக அமைந்த பார்வையோடு பார்க்க, முன்பு உண்டாகி நடந்தவை எல்லாவற்றையும் தெரிந்து கொண்டி ருப்பவனும், நல்ல நூல்களைக் கேட்ட கேள்வியில் பழுத்துள் ளவனும், பழைய நியாய வழிகளை அறிந்து கொண்டவனு மாகிய ஒரு மந்திரி மனுநீதிச் சோழனுடைய இரண்டு திருவடிகளையும் வணங்கிவிட்டுக் கூறலானான்.' பாடல் வருமாறு:

**''மன்னவன் அதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி,**
**'என்இதற் குற்ற' தென்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்க**
**முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித்**
**தொன்னெறி அமைச்சன் மன்னன் தாளிணை தொழுது சொல்வான்.**

மன்னவன்-மனுநீதிச் சோழ வேந்தன். அதனை-தன் னுடைய அரண்மனை வாயில் காவலர்கள் கூறிய அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேளா-கேட்டு. வருந்திய-வருத்தத்தை அடைந்திருந்த. பசுவை-பசுமாட்டை. நோக்கி-பார்த்துவிட்டு. என்-என்ன. இதற்கு-இந்தப் பசு மாட்டுக்கு. உற்றது-உண்டான துன்பம். என்பான்-என்று

கேட்பவனாகி; முற்றெச்சம். அமைச்சரை-தன்னுடைய மந்திரிகளை; ஒருமை பன்மை மயக்கம். இகழ்ந்து-இகழ்வாக அமைந்து இருக்கும். நோக்க-பார்வையோடு பார்க்க. முன்-முன்னால். உற-உண்டாகிய. நிகழ்ந்த-நடந்தவை. எல்லாம்-எல்லாவற்றையும். அறிந்துளான்-தெரிந்து கொண்டிருப்பவனும். உளான்: இடைக்குறை. முதிர்ந்த-முதுமையை அடைந்தவனும்; வினையாலணையும் பெயர். கேள்வி-நல்ல நூல்களைத் தக்கார் வாயிலாய்க் கேட்ட கேள்வியைப் பெற்றவனும்; திணைமயக்கம். த்:சந்தி. தொல்-பழங்காலத்திலிருந்து வரும். நெறி-நீதிமுறைகளை அறிந்தவனும்; திணைமயக்கம். நெறி:ஒருமை பன்மை மயக்கம். அமைச்சன்-ஆகிய ஒரு மந்திரி. மன்னன்-மனு நீதிச் சோழ வேந்தனுடைய. தாளிணை-இரண்டு திருவடிகளையும்; தாள்: ஒருமை பன்மை மயக்கம். தொழுது-வணங்கிவிட்டு. சொல்லான்-பின்வருமாறு கூறுவானானான்.

அடுத்து உள்ள 31-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சோழ மாமன்னனே, உன்னுடைய மகன் அந்த வீதியில் அடிக்கும் மணிகளைக் கட்டிய ஓர் உயரமான தேரின் மேல் ஏறிக்கொண்டு கணக்கு இல்லாத தேர்களும், படை வீரர்களும் தன்னைச் சுற்றிவர, அரசர்கள் போகும் வீதியில் போகும் சமயத்தில், இளமைப் பருவத்தைப் பெற்ற பசுமாட்டினுடைய கன்றுக்குட்டி வந்து அந்தத் தேரின் சக்கரங்களினிடையே நுழைந்து இறந்து விட்டது; ஆகையினால் தளர்ச்சியை அடையும் இந்தத் தாய்ப் பசுமாடு வந்து இத்தகைய செயலை உண்டாக்கியது.'' என்று அந்த முதிய அமைச்சன் கூறினான்.' பாடல் வருமாறு:

**''வளவ,நின் புதல்வன் ஆங்கோர் மணிநெடும் தேர்மேல் ஏறி**
**அளவில்தேர்த் தானை சூழ அரசுலாம் தெருவிற் போங்கால்**
**இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்த தாகத்**
**தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்ததித் தன்மை**
**என்றான்.''**

வளவ-சோழ மகாராஜனே. நின்-உன்னுடைய. புதல்வன்-குமாரன். ஆங்கு-அந்தத் தெருவில். ஓர்-ஒரு. மணி-அடிக்கும் மணிகளைக் கட்டிய: ஒருமை பன்மை மயக்கம். நெடும்-உயர மாக இருக்கும். தேர்மேல்-தேரின்மீது. ஏறி-ஏறிக்கொண்டு. அளவு-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. தேர்-தேர்களும்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தானை-படை வீரர்களும்; இட ஆகுபெயர். சூழ-தன்னைச் சுற்றிவர. அரசு-அரசர்கள்; திணைமயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். உலாம்-தேர்களின்மேல் ஏறிக்கொண்டு உலாவரும். தெருவில்-வீதியில். போம்-போகும். கால்-சமயத்தில். இளைய-ஒன்றும் அறியாத இளம்பருவத்தைக் கொண்ட, ஆன்கன்று-பசுமாட்டினுடைய கன்றுக்குட்டி. தேர்-தேரினுடைய. கால் இடை-சக்கரங்களுக்கு நடுவில். கால்:ஒருமை பன்மை மயக்கம். புகுந்து-தானே நுழைந்து. இறந்தது-இறந்து விட்டது. ஆக-ஆகையினால். த்:சந்தி. தளர்வு-தளர்ச்சியை. உறும்-அடையும். இத்தாய்-இந்தத் தாய்ப் பசுமாடு. இத் தன்மை-இத்தகைய செயலை. விளைத்தது-செய்தது. என்றான்-என்று அந்த முதிய அமைச்சன் கூறினான்.

அந்த அமைச்சன் கூறியது இளவரசன்மேல் குற்றம் சிறிதும் இல்லை என்றும், கன்றுக்குட்டி தானே வந்து தேரினுடைய சக்கரங்களின் இடையே புகுந்து இறந்துவிட்டது என்றும் தோன்றும்படி இருக்கிறது. 'நின் புதல்வன்' என்றது, 'உனக்கு ஒரே புதல்வன் இருக்கிறான்.' என்பதைச் சுட்டிக் காட்டியது, 'தேரில் பல மணிகளைக் கட்டியிருந்ததனால் அவற்றின் ஒலியைக் கேட்டுக் கன்றுக்குட்டி வெளியில் ஓடியிருக்கலாம்' என்ற கருத்தை, 'மணி' என்ற சொல் குறிக்கிறது. 'தேர் உயரமாக இருந்ததனால் அது வரும்போது தூரத்திலிருந்தே அதனைப் பார்க்க முடியும்; ஆனால் கன்றுக்குட்டி அதையும் கவனிக்கவில்லை.' என்பதை, 'நெடுந் தேர்' என்பது குறிக்கிறது. 'இளவரசனோடு வேறு பல தேர்களும் சேனை வீரர்களும் செல்லும்போது அவர்களைக்

கடந்து தேருக்கு அடியில் புகுவது நடவாத காரியம். ஆனால் இந்தக் கன்றுக்குட்டி அந்தக் கூட்டத்தை எல்லாம் தாண்டி வந்து வேண்டுமென்றே தேரின் சக்கரத்துக்குள் சிக்கியிருக்க வேண்டும்' என்பதை, 'அளவில் தேர்த் தானை சூழ' என்பது குறிப்பாற் புலப்படுத்துகின்றது. 'இளவரசன் அரசர்கள் உலா வரும் வீதியில்தான் தன் தேரை ஓட்டிச் சென்றான்; அந்த வீதியில் இந்தப் பசுமாட்டுக்கும் கன்றுக்குட்டிக்கும் என்ன வேலை?' என்று நினைக்கும்படியாக, 'அரசுலாம் தெருவில் போங்கால்' என்று அவன் கூறியது இருக்கிறது. 'அந்தக் கன்றுக்குட்டி இளங்கன்று பயம் அறியாது என்பதற்கு ஏற்பத் தன்னுடைய பேதைமையால் தேர்ச்சக்கரங்களில் மாட்டிக் கொண்டுவிட்டது' என்ற குறிப்பை அவன் கூறிய, 'இளைய ஆன்கன்று' என்பது புலப்படுத்துகிறது. இவற்றால், 'உன்னுடைய புதல்வன்மேல் யாதொரு குற்றமும் இல்லை' என்பது படச் சமற்காரமாக அந்த முதிய மந்திரி கூறினான்.

பிறகு உள்ள 32-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'அந்த முதிய அமைச்சன் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்ட மனுநீதிச் சோழ மன்னன் அந்தப் பசுமாடு அடைந்த துயரத்தைப் போலத் துயரத்தை அடைந்து கொடிய பாம்பின் நஞ்சு தன்னுடைய தலைக்கு ஏறினாற் போல வேதனை தன்னுடைய உள்ளத்தில் மிகுதியாக உண்டாகி, "இந்த இடத்தில் இந்தப் பாதகச் செயல் நடந்தவாறு என்ன காரணம்?" என்று எண்ணித் துன்பத்தை அடைவான்; கழிவிரக்கத்தை அடைவான்; ஏக்கத்தைப் பெறுவான்; "என்னுடைய செங்கோல் மிக அழகாக இருக்கிறது!" என்று கூறுவான்; மனச் சுழற்சியை அடைவான்; பிறகு தெளிவை அடைவான்; இவ்வாறு ஒரு வகையிலும் தெளிவுபடாமல் அந்த மன்னன் குழப்பத்தை அடைந்தான்.' பாடல் வருமாறு:

**''அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயரம் எய்தி**
**வெவ்விடம் தலைக்கொண் டாற்போல் வேதனை அசத்து மிக்'கிங்**
**கிவ்வினை விளைந்த வா'றென் றிடருறும் இரங்கும் ஏங்கும்**
**'செவ்விதென் செங்கோல்!' என்னும், தெருமரும், தெளியும் தேறான்.''**

அவ்வுரை-அந்த முதிய அமைச்சன் கூறிய அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்ட வேந்தன்-கேட்ட மனுநீதிச்சோழ மன்னன். ஆ-அந்தப் பசுமாடு. உறு-அடைந்த. துயரம்-துயரத்தைப் போன்ற துயரத்தை. எய்தி-அடைந்து. வெவ்விடம்-கொடிய பாம்பின் நஞ்சு. தலைக்கொண்டாற்போல்-தன்னுடைய தலைக்கு ஏறினாற்போல. வேதனை-துன்பத்தை. அசத்து-தன்னுடைய உள்ளத்தில். மிக்கு-மிகுதியாக அடைந்து. இங்கு-இந்தத் திருவாரூரில். இவ்வினை-இந்தப் பாதகச் செயல். விளைந்தவாறு-நடந்த வண்ணத்துக்கு. என்-என்ன காரணம். என்று-என்று எண்ணி. இடர்-துன்பத்தை. உறும்-அடைவான். இரங்கும்-கழிவிரக்கத்தை அடைவான். ஏங்கும்-ஏக்கத்தைப் பெறுவான். என்-என்னுடைய. செங்கோல்-செங்கோல் ஆட்சி. செவ்விது-மிக அழகாக இருக்கிறது; அழகாக இல்லை என்பது குறிப்பு. என்னும்-என்று கூறுவான். தெருமரும்-மனச்சுழற்சியை அடைவான். தெளியும்-பிறகு ஒருவாறு தெளிவை அடைவான். தேறான்-இவ்வாறு ஒரு வகையிலும் தெளிவுபடாமல் அந்த மன்னன் குழப்பத்தை அடைந்தான்.

அடுத்து உள்ள 33-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'மனுநீதிச் சோழன், ''உலகத்தில் நிலைபெற்று வாழும் உயிர்களை அரசாட்சி செய்து உலகம் பல மன்னர்களுக்கும் பொதுவானது என்பதைப் போக்கிவிட்டு எனக்கே உரியதாகச் செய்து தருமங்களில் நெடுங்காலமாக ஈடுபட்டிருக்கும் என்னுடைய நீதி முறையின் வழி நன்றாக இருக்கிறது!''

என்று கூறுவான்; ''இந்தப் பாவம் என்ன பரிகாரத்தைப் புரிந்தால் போகும்?'' என்று சொல்வான்; தன்னுடைய இளமைப் பருவத்தைப் பெற்ற கன்றுக்குட்டியைப் பாராமல் வருந்தி அலறும் தாய்ப் பசுமாட்டினுடைய முகத்தைப் பார்த்துச் சோர்வை அடைவான்; அந்த நிலையில் அந்தச் சோழமன்னன் அடைந்த துயரம் ஓர் அளவுக்குள் அடங்குவது அன்று.' பாடல் வருமாறு:

**'' 'மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தில் நீடும்**
**என்னெறி நன்றால்!' என்னும்; என்செய்தால் தீரும்?'**
**என்னும்;**
**தன்னிளங் கன்று காணாத் தாய்முகம் கண்டு சோரும்;**
**அந்நிலை அரசன் உற்ற துயரம்ஓர் அளவிற் றன்றால்.''**

மன்-இந்தப் பூமண்டலத்தில் நிலைபெற்று வாழும். உயிர்-பல வகையாகிய உயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: மக்கள், பல வகை விலங்குகள், பல வகையான பறவைகள், ஊர்வன, நீர்வாழ் பிராணிகள் முதலியவை. புரந்து-ஆட்சி புரிந்து பாதுகாத்து. வையம்-உலகம். பொது-பல மன்னர்களுக்கும் பொது என்பதை. க்:சந்தி. கடிந்து-மாற்றித் தனக்கே உரியதாகக் கொண்டு. பொதுக் கடிதல்: ''போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅது.'' (**புறநானூறு**, 8:2), ''வழுகி, தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன். (ஷை. 51:4-5),'' தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி, வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்.'' (ஷ. 189:1-2), ''பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளும் செல்வர்க்கு,'' (**கலித்தொகை**, 68), 'அரசன் போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறானாய்.' (**நெடுநல்வாடை**, அவதாரிகை), ''கொடியும் முரசும் கொற்றவெண் குடையும், பிறர்கொளப் பொறாஅன் தானே கொண்டு.'' (**சிதம்பரமும்மணிக்கோவை**, 25), 'ஞாலம் பொதுஎனப் பொறா அரசர்.' (**திருக்குறள்**, 492, பரிமேலழகர் உரை), ''பூவலயம் பொது நீக்கி ஆண்டருளி.'' (**பெரிய புராணம்**, கோச்செங்கட் சோழ

நாயனார் புராணம், 17), 'தனி கோலுகையாவது பூசக்கரம் பொதுக் கடிதல்.'' (**தக்கயாகப் பரணி**, 2, உரை) என வருபவற்றைக் காண்க. அறத்தில்-முப்பத்து இரண்டு வகை யான தருமங்களில்; இவை இன்ன என்பதை முன்பே ஓரிடத் தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. நீடும்-நெடுங்கால மாகச் சிறப்பை அடைந்து விளங்கும். என்-என்னுடைய. நெறி-நீதி முறையின் வழி. நன்று-நன்றாக இருக்கிறது; 'நன்றாக இல்லை' என்பது குறிப்பு. ஆல்:அசைநிலை. என்னும்-என்று தன்னையே நொந்து கொண்டு கூறுவான். என்-என்ன பரிகாரத்தை. செய்தால்-நான் புரிந்தால். தீரும்-இந்தக் கோஹத்தியால் உண்டான பாவம் போகும். என்னும்—என்று சொல்வான். தன்—தன்னுடைய. இளம்-இளம் பருவத்தைப் பெற்ற. கன்று-கன்றுக் குட்டியை. காணா-பாராமல் அலறும். த்:சந்தி. தாய்-தாய்ப் பசு மாட்டினுடைய. முகம்-முகத்தை. கண்டு-பார்த்துப் பார்த்து. சோரும்-சோர்வை அடைவான். அந்நிலை-அத்தகைய நிலைமையில். அரசன்-மனுநீதிச் சோழன். உற்ற-அடைந்த. துயரம்-வேதனை. ஓர் அளவிற்று-ஓர் அளவுக்குள் அடங்குவது. அன்று-அல்ல. ஆல்: ஈற்றசைநிலை.

பிறகு வரும் 33-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அமைச்சர்கள் மனுநீதிச் சோழமன்னன் வருந்திய அந்த வருத்தத்தைப் பார்த்து அந்தச் சோழ மன்னனுடைய திருவடிகளைப் பணிந்து, ''தாங்கள் தங்களுடைய திருவுள் ளத்தில் தளர்ச்சியை அடைந்தருளுதல் இந்தப் பாவத்திற் குப் பரிகாரம் அல்ல; கொத்துக்கள் மலர்ந்திருக்கும் மாலையை அணிந்த தங்களுடைய வலிமையைப் பெற்றுள்ள புதல்வனை முன் காலத்தில் கோஹத்தியைச் செய்தவர் களுக்கு இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர் வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியுள்ள வேதியர்கள்

விதித்த முறையின் வழியில் நிற்கச் செய்வதே தருமம் என்று கூறினார்கள்.' பாடல் வருமாறு:

**''மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடிவணங்கிச்**
**சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால்;**
**கொந்தலர்த்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை**
**அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம்,' என்றார்.''**

மந்திரிகள்-அமைச்சர்கள். அது-மனுநீதிச் சோழ மன்னன் வருந்திய அந்த வருத்தத்தை. கண்டு-பார்த்து. மன்னவனை-அந்த மனுநீதிச் சோழ வேந்தனுடைய; உருபு மயக்கம். அடி-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி-பணிந்துவிட்டு. ச்:சந்தி. சிந்தை-தங்களுடைய திருவுள்ளத்தில். தளர்ந்தருளுவது—தளர்ச்சியை அடைந்தருளுதல். மற்று: அசைநிலை. இதற்கு—இந்தக் கோஹத்தியால் உண்டான பாவத்திற்கு. த்:சந்தி. தீர்வு—பரிகாரம். அன்று—அல்ல. ஆல்:அசைநிலை. கொந்து—கொத்துக்களாக உள்ள; ஒருமை பன்மை மயக்கம். அலர்—மலர்களைக் கட்டியிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். தார்—மாலையை அணிந்திருக்கும். மைந்தனை-வலிமையைப் பெற்ற தங்களுடைய புதல்வனை. முன்-முன் காலத்தில். கோவதை—கோஹத்தியை. செய்தார்க்கு—செய்தவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய; ஒருமை பன்மை மயக்கம். அந்தணர்கள்-வேதியர்கள். விதித்த முறை வழி-விதித்த நீதி முறையின் வழியில். நிறுத்தல்-நிற்கச் செய்தல். அறம்-தருமம் ஆகும். என்றார்-என்று அந்த அமைச்சர்கள் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம். கோஹத்தியால் உண்டாகும் பாவத்துக்குப் பரிகாரம் உண்டு: ''ஆன்முலை அறுத்த அறனி லோர்க்

கும்...வழுவாய் மருங்கிற் கழுவாயும் உள." (**புறநானூறு**, 1-4) என்பதையும், அதற்கு உரையாசிரியர், 'கோவதை முதலாயின வாக்காற் சொல்லவும் படாமையின், "ஆன் முலை அறுத்த." எனவும்....மறைத்துக் கூறப்பட்டன. என்று எழுதிய உரையையும் காண்க. "ஆவைப் பாலரை.... வதைபுரி குநர்க்கும் உண்டாம் மாற்றலா மாற்றல்." (**கம்பராமாயணம்**, கிட்கிந்தைப் படலம், 62) என்பதையும் காண்க.

அடுத்து உள்ள 35-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நீங்கள் இது பழைய காலத்திலிருந்து வரும் வழக்கம் என்று கூறினால் அந்த வழக்கம் வலிமையை அடைந்து இளைய கன்றுக்குட்டியை இழந்து அலறி அழும் தாய்ப் பசு மாடு அடைந்த வருத்தமாகிய வியாதிக்குப் பரிகாரமாக உள்ள மருந்து ஆகுமா? என்னுடைய வலிமையைப் பெற்ற புதல்வனை நான் இழக்கிறேன் என்று எண்ணி நீங்கள் எல் லோரும் கூறிய இந்த வஞ்சகமான பரிகாரத்தைச் செய்வ தற்கு நான் சம்மதித்தால் தருமமானது சலிப்பை அடை யாதோ?' பாடல் வருமாறு:

**"வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்**
**குழக்கன்றை இழந்தலறும் கோவுறுநோய் மருந்தாமோ?**
**இழக்கின்றேன் மைந்தனைஎன் றெவ்வீரும் சொல்லியஇச்**
**சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ?"**

இது மனுநீதிச்சோழ மன்னன் தன்னுடைய மந்திரி களிடம் கூறியது. வழக்கு-இதுதான் பழங்காலம் முதல் இருந்து வரும் வழக்கம். என்று-என. நீர்-மந்திரிகளாகிய நீங்கள். மொழிந்தால்-கூறினால். மற்று; அசைநிலை. அது-அந்தப் பரிகாரம். தான்: அசைநிலை, வலிப்பட்டு-வலிமையைப் பெற்று. க்:சந்தி. குழக்கன்றை-தன்னுடைய இளைய கன்றுக்குட்டியை. இழந்து-இழந்து விட்டு-அலறும்-அலறி அழும். கோ-தாய்ப்பசுமாடு. உறு-அடைந்த.

நோய்-உருத்தமாகிய வியாதிக்கு. மருந்து-பரிகாரமாகிய மருந்து. ஆமோ-ஆகுமோ? மைந்தனை-வலிமையைப் பெற்ற என்னுடைய புதல்வனாகிய இளவரசனை. இழந்தின்றேன்-இழந்துவிடுகிறேன். என்று-என எண்ணி,எவ்வீரும் நீங்கள் எல்லோரும். சொல்லிய-கூறிய. இச்சழக்கு இந்த வஞ்சகமான சமாதானத்துக்கு. நான்-யான். இசைந்தால்-சம்மதித்தால். தருமம்-தருமதேவதை. தான்; அசை நிலை. சலியாதோ-சலிப்பை அடையாதோ?

அடுத்து வரும் 36-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'பெரிய நாட்டை அரசாட்சி புரிந்து பாதுகாக்கும் அரசனாகிறவன் நிலை பெற்ற உயிர்களைப் பாதுகாக்கும் காலத்தில், அந்த உயிர்களுக்குத் துன்பம் தன்னாலும், தன் பரிவார மக்களாலும், குற்றவு மிகுதியாக உள்ள பகைவர்களின் திறத்தாலும், கள்வர்களாலும், பல வகை உயிர்களாலும் உண்டான அச்சங்கள் ஐந்தையும் போக்கித் தருமத்தைப் பாதுகாப்பவன் அல்லனோ?' பாடல் வருமாறு:

**''மாநிலம்கா வலன்ஆவான் மன்னுயிர்காக் கும்காலைத்**
**தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்**
**ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்**
**ஆனபயம் ஐந்தும்தீர்த் தறங்காப்பான் அல்லனோ?''**

இது மனு நீதிச்சோழன் தன்னுடைய அமைச்சர்களைப் பார்த்துக் கூறியது. மா-பெரிய. நிலம்-நாட்டை. காவலன்-ஆட்சி செய்து பாதுகாக்கும் வன்மையைப் பெற்ற மன்னன். மன்-நிலைபெற்ற. உயிர்-மக்கள், பலவகை விலங்குகள், பலவகைப் பறவைகள், ஊர்வன, நீர் வாழ் பிராணிகள் முதலிய உயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். காக்கும்—பாதுகாக்கும். காலை-காலத்தில். தான் என்றது அரசனை. அதனுக்கு-அந்த உயிர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். இடையூறு-துன்பங்கள்; ஒருமை பன்மை மயக்கம். தன்னால்-

அரசனாகிய தன்னாலும். தன்-தன்னுடைய. பரிசனத்தால்-பரிவார மக்களாலும்; ஒருமை பன்மை மயக்கம். ஊனம்—குறைபாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். மிகு-மிகுதியாக உள்ள. பகை-பகைவர்களினுடைய; திணைமயக்கம். த்:சந்தி. திறத்தால்-வகையினாலும். கள்வரால்-திருடர்களாலும்; ஒருமை பன்மை மயக்கம். உயிர்தம்மால்-மக்கள், பல வகைப் பறவைகள், ஊர்வன, புழுக்கள், பூச்சிகள், பல வகையான விலங்குகள், நீர்வாழ் பிராணிகள் முதலிய உயிர்களாலும். உயிர்; ஒருமை பன்மை மயக்கம். தம்; அசைநிலை. ஆன-உண்டான. பயம்-அச்சங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஐந்தும்-ஐந்தையும். தீர்த்து-போக்கி. அறம்-தருமத்தை. காப்பான்-பாதுகாப்பவன். அல்லனோ-அல்லவோ? திணைமயக்கம்.

அடுத்து உள்ள 37-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

''என்னுடைய புதல்வன் புரிந்த பாதகத்துக்காகப் பெரிய தவங்களைப் புரியச் சம்மதித்து அயலான் ஓர் உயிரைக் கொலை செய்துவிட்டால் அதற்காக அந்த அயலானை நான் கொலை செய்வேனானால் பழைய மனு இயற்றிய மனுநீதி சாத்திரமாகிய சுலோகங்களைப் பெற்ற நூல் இந்த மனுநீதிச் சோழ மன்னனால் அழிக்கப்பட்டது என்னும் வார்த்தைகள் நிலை பெற்று விளங்கும் இந்தப் பூமண்டலத்தில் நான் அடையும் வண்ணம் கூறினீர்கள்; வழக்கம் என்று அமைச்சர்களே, சொன்னீர்கள்'' என்று மனுநீதிச்சோழன் தன்னுடைய மந்திரிகளைப் பார்த்துக் கூறினான்.'

பாடல் வருமாறு;

**'' என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செய**
**இசைந்தே**
**அன்னியன்ஓர் உயிர்கொன்றால் அவனைக்கொல்**
**வேனானால்**

**தொன்மனுநூல் தொடைமனுவால் துடைப்புண்ட தெனும்
வார்த்தை**

**மன்னுலகில் பெறமொழிந்தீர், மந்திரிகள், வழக்
கென்றான்.''**

இதுவும் மனுநீதிச் சோழ மன்னன் தன்னுடைய மந்திரிகளைப் பார்த்துச் சொன்னது. என்-என்னுடைய. மகன்-புதல்வன். செய்-புரிந்த. பாதகத்துக்கு-கொலை பாதகச் செயலினால் உண்டான பாவத்தைப் போக்கிக் கொள்வதற்கு. இரும்-பெரிய. தவங்கள்-தவங்களை. செய-புரிவதற்கு; இடைக்குறை. இசைந்து-நான் சம்மதித்து. ஏ; அசைநிலை. அன்னியன்-அயலான் ஒருவன். ஓர் உயிர்—ஓர் உயிரை. கொன்றால்-கொலை செய்தால். அவனை—அந்த அயலானை. க்:சந்தி. கொல்வேன் ஆனால்-நான் கொலை செய்வேனானால். தொல்- பழமையான. மனு நூல்-மனு இயற்றிய சாத்திரமாகிய. தொடை-சுலோகங்களால் அமைந்த மனுதர்ம சாத்திரம்; தொடை; ஒருமை பன்மை மயக்கம். மனுவால்—இந்த மனு நீதிச்சோழமன்னனால். துடைப்புண்டது-அழிக்கப்பட்டது. எனும்-என்று கூறும்; இடைக்குறை. வார்த்தை—வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். மன்-நிலை பெற்று விளங்கும். உலகில்-இந்தப் பூமண்டலத்தில். பெற-நான் பெறுமாறு. மந்திரிகள்-அமைச்சர்களே, மொழிந்தீர்-நீங்கள் கூறினீர்கள், ஒருமை பன்மை மயக்கம். வழக்கு-பழைய வழக்கம் என்று சொன்னீர்கள். என்றான்—என்று மனுநீதிச் சோழன் கூறினான்.

அடுத்து உள்ள 38-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'என்று இவ்வாறு மனுநீதிச்சோழ மன்னன் தன்னுடைய அமைச்சர்களை இகழ்ந்து பேச, அவனுடைய எதிரில் நின்று கொண்டிருந்த அறிவு பெற்ற ஒரு மந்திரியார், ''நிலைத்து நின்றதாகிய இந்த நீதி முறையின் வழி இந்த உலகத்தில் இதைப்போல முன் காலத்தில் நடை பெற்றிருக்கிறது;

உன்னுடைய புதல்வனை இறக்கும் வண்ணம் புரிதல் வழக்கம்அன்று; இருக்கு வேதம், யஜுர்வேதம், சாமவேதம் அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும் விதித்துக் கூறிய தருமத்தைச் செய்தல் பழைய காலம் தொட்டு வரும் வழி அன்றோ? பழமையான சோழநாட்டை ஆட்சி புரிந்து பாதுகாக்கும் மனுநீதிச்சோழ மன்னனே என்று கூறினார்.'' பாடல் வருமாறு:

**''என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதிஅமைச்சர்**
**நின்றநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால்;**
**பொன்றுவித்தல் மரபன்று; மறைமொழிந்த அறம்புரிதல்**
**தொன்றுதொடு நெறியன்றோ? தொல்நிலம்கா வலை,**
**என்றார்.**

என்று—என இவ்வாறு. அரசன்—மனுநீதிச் சோழ மன்னன். இகழ்ந்து—தன்னுடைய அமைச்சர்களை இகழ்ச்சி செய்து. உரைப்ப-பேச. எதிர்- அந்த மன்னனுடைய எதிரில். நின்ற-நின்று கொண்டிருந்த. மதி-சிறந்த அறிவைப் பெற்ற. அமைச்சர்-மந்திரியார் ஒருவர். நின்ற-நிலைத்து நின்ற. நெறி—நீதிமுறையின் வழி. உலகின்கண்—இந்தப் பூமியில். இதுபோல்—இதைப் போல. முன்—முன் காலத்தில். நிகழ்ந்தது—நடைபெற்றது உண்டு. ஆல்; அசைநிலை. பொன்றுவித்தல்—உன்னுடைய புதல்வனை இறக்குமாறு செய்தல். மரபு-வழக்கம். அன்று—அல்ல. மறை—இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்று நான்கு வேதங்களும்; ஒருமை பன்மை மயக்கம். மொழிந்த—விதித்துக் கூறிய. அறம்—தருமத்தை. புரிதல்—செய்தல். தொன்றுதொடு—தொன்று தொட்டு வந்த. நெறி—நீதி முறையின் வழி. அன்றோ—அல்லவோ. தொல்—பழமையான. நிலம்—சோழநாட்டை. காவலை—ஆட்சி புரிந்து பாதுகாக்கும் மனுநீதிச் சோழ மன்னனே. என்றார்—என்று கூறினார்.

அடுத்து வரும் 39—ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு தன்னை வணங்கி விட்டுக் கூறிய மந்திரி களை அவர்களுடைய முகங்களைப் பார்த்து உண்மையின் இயல்பை ஆராய்ந்து தெரிந்து கொண்ட மனுநீதிச் சோழன் என்று பாராட்டப்படும் வெற்றியைப் பெற்ற மன்னன் ''இவ்வாறு நீங்கள் குற்றமான வார்த்தைகளைக் கூறினீர் கள்'' என்று நெருப்பின் நடுவில் விழுந்த சிவந்த நிறத்தைக் கொண்ட தாமரை மலரைப்போலத் தன்னுடைய முகம் உலர்ந்து போய்க் கோபம் அடைந்து கூறுவானானான்.' பாடல் வருமாறு:

**'' அவ்வண்ணம் தொழுதுரைத்த அமைச்சர்களை முகம் நோக்கி**
**மெய்வண்ணம் தெரிந்துணர்ந்த மனுவென்னும் விறல் வேந்தன்**
**'இவ்வண்ணம் பழுதுரைத்தீர்' என்றெரியின் இடைத் தோய்ந்த**
**செவ்வண்ணக் கமலம்போல் முகம்புலர்ந்து செயிர்த் துரைப்பான்.''**

அவ்வண்ணம்—அவ்வாறு. தொழுது—தன்னை வணங்கிவிட்டு. உரைத்த—கூறிய. அமைச்சர்களை—மந்திரி களை. முகம்—அவர்களுடைய முகங்களை; ஒருமை பன்மை மயக்கம். நோக்கி—பார்த்து. மெய்—உண்மையினுடைய. வண்ணம்—இயல்பை. தெரிந்து—ஆராய்ந்து. உணர்ந்த- தெரிந்து கொண்ட. மனு-மனுநீதிச் சோழமன்னன். என் னும்—என்று பாராட்டப்பெறும். விறல்—பகைவர்களைப் போரில் வெல்லும் வீரத்தைப் பெற்ற. வேந்தன்—மன்னன். இவ்வண்ணம்—இவ்வாறு. பழுது—குற்றமான சமாதானங் களை; ஒருமை பன்மை மயக்கம். உரைத்தீர்—நீங்கள் கூறினீர்கள்; ஒருமை பன்மை மயக்கம். என்று—என. எரியின்—நெருப்பின். இடை-நடுவில். த்:சந்தி. தோய்ந்த—

விழுந்த. செவ்வண்ண-சிவந்த நிறத்தைக்கொண்ட.க்:சந்தி. கமலம்—தாமரைமலரை. போல்—போல. முகம்—தன்னுடைய அழகிய முகம். புலர்ந்து—உலர்ந்து; வாட்டத்தை அடைந்து. செயிர்த்து-கோபம் மூண்டு. உரைப்பான்—கூறுவானானான்.

பின்பு உள்ள 40—ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'மந்திரிகளே, அவ்வாறு நீங்கள் கூறிய வார்த்தைகளில் குறிப்பிட்டவையாகிய தொன்று தொட்டு வரும் நீதி முறையின் வழிகளாகிய அவை இருக்கட்டும்; கருமத்தின் வழியினுடைய செம்மையாகிய மெய்யின் இயல்பை நீங்கள் சிறிதளவேனும் சிந்தித்துப் பாராமல் பேசுகிறீர்கள்; எந்த உலகத்தில் எந்தப் பசுமாடு இத்தகையதாகும் துன்பத்தால் வெப்பமான பெரு மூச்சை விட்டுக்கொண்டு கதறி யழுது ஆராய்ச்சி மணியை அடித்து விட்டுத் தரையில் விழுந்தது? சொல்லுங்கள்; கேட்கிறேன்.' பாடல் வருமாறு:

**'' அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க; அறநெறியின்**
**செவ்வியஉண் மைத்திறம்நீர் சிந்தைசெயா துரைக்கின்றீர்;**
**எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாம்இடரால்**
**வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் தது?' விளம்பீர்.''**

அவ்வுரையில்—மந்திரிகளே, அவ்வாறு நீங்கள் கூறிய வார்த்தைகளில்: ஒருமை பன்மை மயக்கம். வரு—தொன்று தொட்டு வரும். நெறிகள்—நீதி முறையின் வழிகளாகிய. அவை நிற்க—அவை இருக்கட்டும். அற—தருமத்தின். நெறியின்—வழியினுடைய. செவ்விய—செவ்வையாக உள்ள. உண்மை—மெய்யினுடைய. த்:சந்தி. திறம்—வகைகளை; ஒருமை பன்மை மயக்கம். 'இயப்பை' என்றும் ஆம். நீர்—மந்திரிகளாகிய நீங்கள் யாவரும்; ஒருமை பன்மை மயக்கம்,

சிந்தை செயாது—சிறிதளவேனும் சிந்தனை செய்யாமல், செயாது: இடைக்குறை. உரைக்கின்றீர்—வார்த்தைகளைக் கூறுகிறீர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எவ்வுலகில்—எந்த உலகத்தில். எப்பெற்றம்—எந்தப் பசுமாடு. இப்பெற்றித்து-இத்தகையது. ஆம்—ஆகும். இடரால்—துன்பத்தால். வெவ்வுயிர்த்து—வெப்பமாகப் பெருமூச்சுவிட்டுக் கொண்டு. க்:சந்தி. கதறி—கதறி அழுது. மணி—ஆராய்ச்சி மணியை. எறிந்து—அடித்து விட்டு. விழுந்தது-தரையில் விழுந்தது. விளம்பீர்—அதைக் கூறுங்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 41—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வாழ்த்துக்களைக் கூறி இந்திரன், திருமால், பிரம தேவன் முதலிய தேவர்கள் புகழ்களைக் கூறி வணங்க அமர்ந்திருந்த பெருமானாராகிய தியாகராஜர் விரும்பி எழுந்தருளித் தங்கியிருக்கும் திருவாரூரில் பிறப்பைப் பெற்ற ஓர் உயிரை இவன் கொலை செய்து விட்டான். ஆகையினால் தீர்மானம் செய்த என் கருத்து யான் துயரத்தைப் பொறுத்துக் கொள்ளலும், அந்த என் புதல்வனைக் கொலை செய்தலும் ஆகிய அதுவே ஆகும் என்று நீங்கள் எண்ணுங்கள்.' பாடல் வருமாறு:

**''போற்றிசைத்துப் புரந்தரன்மால்**
**அயன்முதலோர் புகழ்ந்திறைஞ்ச**
**வீற்றிருந்த பெருமானார்**
**மேவியுறை திருவாரூர்த்**
**தோற்றமுடை உயிர்கொன்றான்;**
**ஆதலினால் துணிபொருள்தான்**
**ஆற்றவும்மற் றவற்கொல்லும்**
**அதுவேயாம் எனநினைமின்.''**

இதுவும் மனுநீதிச் சோழ மன்னன் தன்னுடைய அமைச்சர்களைப் பார்த்துக் கூறியது. போற்று—வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். இசைத்து—கூறி.

ப்: சந்தி. புரந்தரன்—இந்திரன். மால்—திருமால். அயன்—பிரமதேவன். முதலோர்—முதலிய தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். புகழ்ந்து—புகழ்களைக் கூறி வியந்து. இறைஞ்ச-வணங்கும் வண்ணம். வீற்றிருந்த—அமர்ந்திருந்த. பெருமானார்—பெருமானாராகிய தியாகராஜர். மேவி—விரும்பி. உறை—தங்கியருளும். திருவாரூர்—திருவாரூரில். த்: சந்தி. தோற்றம்—பிறப்பை. உடை—பெற்ற. உயிர்—கன்றுக்குட்டியின் உயிரை. கொன்றான்—என்னுடைய புதல்வன் கொலை செய்து விட்டான். ஆதலினால்—ஆகையால். துணி—நான் தீர்மானித்த. பொருள்—கருத்து. தான்: அசைநிலை. ஆற்றவும்—என்னுடைய புதல்வன் இறப்பதனால் உண்டாகும் துயரத்தைப் பொறுத்துக் கொள்ளவும். மற்று: அசைநிலை. அவன்—அந்த என்னுடைய குமாரனை. கொல்லும்—கொலை செய்யும். அதுவே—அந்தச் செயலே. ஆம்—ஆகும். என—என்று; இடைக்குறை. நினைமின்—அமைச்சர்களாகிய நீங்கள் எண்ணுங்கள்.

இந்திரன், திருமால், பிரமதேவன் முதலிய தேவர்கள் வணங்குதல்: ''நெடுமால் வணங்கு நிமிர்சடையார்'', ''மாலும் அயனும் வணங்கி.'', ''விண்ணோரொடு மண்ணோர்தொழு.'', ''இமையவர் தொழு கழுமல மமர் இறைவன்.'', ''எந்தை யென்றங் கிமையோர் புகுந்தீண்டிக் கந்தமாலை கொடுசேர் காழியார்.'', ''முறையாலே தேவரெல்லாம் வணங்கும் திருப்புன்கூர் ஆவரென்னும் அடிகள்.'', ''பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்.... அடிகள்.'', ''வெறியார் மலர்த் தாமரையானொடு மாலும் ...ஏத்த.'', ''கரியவன் நான்முகன் கைதொழு தேத்த.'', ''விண்ணோர் பரவ நின்றாடும் வீரட்டானத்தே.'', ''மன்னு மாலொடு சோமன் பணிசெயும் மன்னுமாற்பேற் றடிகளை.'', ''பொய்யா வேத நாவினானும் பூமகள் காதலனும் கையால் தொழுது கழல்கள் போற்ற.'', ''புகழ்வார்

வானோர்கள்.'', ''எந்தம் பெருமான் இமையோ ரேத்த உமையோ டிருந்தானே.'', ''கோணா கணையானும் குளிர் தா மரையானும்....சுழலேத்த.'', ''பாரோர் தொழவிண் ணோர் பணிய.'', ''திருமால் அடிவீழத் திசை நான்முகன் ஏத்தப் பெருமா னெனநின்ற பெம்மான்.'', ''இமையோர் தொழுதேத்தும் நங்கள் பெருமானை.'', ''திருமால் அடி வீழ.'', ''வண்ணநன் மலருறை மறையவனும் கண்ணனும் கழல்தொழ.'', ''விண்ணுல காள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும் புண்ணிய ரென்றிரு போதும் தொழப்படும் புண் ணியரே.'', ''விண்ணவர் தம்மொடு வெங்கதிரோனல எண்ணிலி தேவர்கள் இந்திரன் வழிபட.'', ''பயின்று நின்ற உம்பர் அப்பாலே சேர்வாய் ஏனோர் கான்பயில் கண முனிவர்களும் சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின் மங்கை தன் னொடும் சேர்வார்.'', ''பிரமனும் திருமாலும் கை தொழ.'', ''மலர்மேவயன் ஓத வண்ணன்....தொழ.'', ''பூ அவர்ந்தன கொண்டு முப்போதும்உம் பொற்கழல் தேவர் வந்து வணங்குமிகு தெளிச்சேரியீர்.'', ''நெடிய மாலொடயன் ஏத்த நின்றார்.'', ''வான நாடர்கள் கை தொழும் மாமழபாடி எம்கோனை.'', ''விண்ணவர் தாம் தொழும் வெண்ணியில் அண்ணலை.'', ''விண்ணவர் ஏத்தி விரும்புஞ்சீர் மண்ணானே.'', ''இமையோர்களும் போற்றானே.'', ''தேவர்கள் ஏத்தானே.'', ''திருமா லொடு நான்முகனும் புகழும் பெருமான்.'', ''பூவினா லொடு மாலும் போற்றுறும் தேவன்.'', ''வானோர் மறை மாதவத்தோர் வழிபட்ட....செல்வா.'', ''கோனென்று பலகோடி உருத்திரர் போற்றும்....செல்வா.'', ''தேவர் தலைவணங்கும் தேவர்க்கும் தேவனே.'', ''அண்ட வாணர் தொழும் ஆமாத்தூர் அம்மானே.'', ''வம்பவர் மலர்தூவி நின்னடி வானவர் தொழ.'', ''பாருளோர் களும் விண்ணுளோர் தொழ.'', ''எந்தை இவனென் றிரவி முதலா இறைஞ்சுவார்.'', ''புரந்தரன் தன்னொடு

வானோர் போற்றி என்றேத்த நின்றாரும்.'', ''பொய்யா மறையானும் பூமி அளந்தானும் போற்ற மன்னி.'', ''மருவு நான்மறையோனும் மாமணிவண்ணனும் இருவர்கூடி இசைந் தேத்தவே.'', ''மாமலரானும் செங்கண்மால் என்றிவர் ஏத்த.'', ''மா மலரோனும் விரிகடல் துயின்றவன் தானும் என்றும் ஏத்துகை உடையார்.'', ''விண்களார் தொழும் விளக்கினை.'', ''மாயனும் மலரானும் கைதொழ ஆய அந்தணன்.'', ''பூவினானும் விரிபோதின் மல்கும் திருமகள் தனை மேவினானும் வியந்தேத்த.'', ''பாதம் விண்ணோர் பலரும் பரவிப் பணிந்தேத்தவே.'', ''நேமியானும் முகம் நான்குடை யந்நெறி அண்ணலும் ஆழிதென்றும் தகைந் தேத்த,'', ''புரவி ஏழும் மணி பூண்டியங்கும் கொடித் தேரினான் பரவிநின்று வழிபாடு செய்யும் பரமேட்டி.'', ''நாகத் தணையானும் பைந்தாமரையின்மிசை இடங்கொள் நால்வேதனும் ஏத்த நின்ற இறைவன்.'', ''கீண்டு புக் கார் பறந்தார் அயர்ந்தார் கேடில் அன்னமாய்க் காண்டும் என்றார் கழல்பணிய நின்றார்.'', ''நாமம் நூறாயிரம் சொல் வானோர் தொழும் நாதனும்.'', ''வரை குடையா மழை தாங்கினானும் வளர்போதின்கண் புரைகடிந் தோங்கிய நான்முகத்தான் புரிந்தேத்தவே.'', ''வேதியன் விண்ணவர் ஏத்த நின்றான்.'', ''விண்ணவர் வணங்க வைகலும் எண் ணிய தேவர்கள் இறைஞ்சும் எம்இறை.'', ''விண்ணவர் தொழுதெழு.'', ''வைகலும் வானவர் தொழுகழல்.'' ''விண்ணோர் தொழும் மையணி கண்டனார்.'', ''விண்ணி லார் இமையவர் மெய்ம்மகிழ்ந் தேத்தவே.'', ''செங்கண் மால் திகழ்தரு மலருறை திசைமுகன் தம்கையால் தொழு தெழ.'', ''சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும் இந்தி ரன் வழிபட இருந்தஎம் இறையவன்.'', ''அயனும் மாலும் பல பத்தர்கள் தொண்டுரைத்தும் மலர் தூவித் தோத்திரம் சொல.'', ''வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட.'', ''இமையவர் தொழ உமை கூறினார்.'',

''மலர்கொடு வானவர் வணங்கி.'', ''திருவின் நாயகனும் செழுந்தாமரை மருவினானும் தொழ.'', ''வேத முதல் வன் முதலாக விளங்கி வையம் ஏதப்படா வகை உலகத்தவர் ஏத்தல் செய்ய.'', ''இமையோர் தொழுதேத்த நின்ற கறையணி கண்டன்.'', ''விண்ணும் மண்ணும் தொழ நின்ற வன்.'', ''இந்திரனும் முதலா இமையோர்கள் தொழு திறைஞ்ச.'', ''விண்ணோரும் மண்ணோரும் வியந்தேத்த அருள்செய்வார்.'', ''இறைஞ்சி இமையோர் வந்து துதி செய்ய.'', ''விண்ணவர் தொழுதெழு.'', ''இமையவர் தொழுதெழும்.'', ''நான்முகனும் திருமால் நயந்தேத்த.'', ''வானுளார் பரச அந்தரத் தமரர்கள் போற்ற.'', ''அரு வரை பொறுத்த ஆற்றலினானும் அணிகிளர் தாமரை யானும் இருவரும் ஏத்த.'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''புள்ளுயர்த்தான் மணிநாகப் பள்ளியான் தொழுதேத்த இருக்கின்ற பழனத்தான்.'', ''எத்திசையும் வானவர்கள் எம்பெருமான் எனஇறைஞ்சும் அத்திசையாம் ஐயாறர்க்கு.'', ''இந்திரன் ஆதி வானவர் சித்தர் எடுத் தேத்தும் அந்திரன்.'', ''பாதம் வானவர் பரவி ஏத்த.'', ''வாமனை வணங்க வைத்தார்.'', ''இந்திர னோடு தேவர் இருடிகள் ஏத்து கின்ற சுந்தர மானார்.'', ''விண்ணவர் பரவி ஏத்த.'', ''ஆதித்தன் அங்கி சோமன் அயனொடு மால் புதனும் போதித்து நின்றுலகிற் போற்றிசைந்தார்.'', ''வானவர் வணங்கி ஏத்தி வைகலும் மலர்கள் தூவத் தான வர்க் கருள்கள் செய்யும் சங்கரன்.'', ''வானவர் வணங்க வைத்தார்.'', ''மண்ணுளார் விண்ணு ளாரும் வணங்கு வார் பாவம் போக.'', ''மாலும் நான்முகனும் கூடி மலரடி வணங்க.'', ''அண்ட வானவர்கள் ஏத்தும் ஐயன்.'', ''விண்ணிடை விண்ணவர்கள் விரும்பி வந்திறைஞ்சி வாழ்த்த.'', ''வானவர்கள் வலங்கொடு வந்து போற்ற.'', ''தேவர் சோத்தம் எம்பெருமான் என்று தொழுது தோத்தி ரங்கள் சொல்ல.'', ''வணங்கி முன் அமரர் ஏத்த.'',

''முந்தி வானோர்கள் வந்து முறைமையால் வணங்கி ஏத்த.'', ''விண்ணவர் அண்ணா என்றென் றோதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காண.'', ''இந்திரன் பிரமன் அங்கி எண்வகை வசுக்க ளோடு மந்திர மறையதோதி வானவர் வணங்கி ஏத்த.'', ''விண்ணவர் மகுடகோடி மிடைந்தசே வடியார்.'', ''அமரர்கள் நீள்முடி சாய்த்து நிமிர்ந்து குத்த பைம்போ துழக்கிப் பவளம் தழைப்பன...ஐயாறன் அடித்தலமே.'', ''வானவர் தானவர் வைகல் மலர் கொணர்ந்திட் டிறைஞ்சி.'', ''அயனொடு மால் இந்திரன் சந்திராதித்தர் அமரர் எல்லாம் சயசய என்று முப்போதும் பணிவன...இன்னம்ப ரான்றன் இணையடியே.'', ''வானுலகத்துள தேவர்கள் தொழுதும் போற்றியும்.'', ''முப்போதும் பிரமன் தொழ நின்றவன்.'', ''வானவர் தாங்கள் வணங்கவே.'', ''வானவர் வந்து வழிபடும் ஆலையார்.'', ''இமையோர் தொழு பைங்கழல் நன்பொனே.'', ''விண்ணுளார் தொழும் வீழி மிழலையுள் அண்ணலே.'', ''இமையோர் தொழு பைங்கழல் மறவனார்.'', ''பெருந்தேவர் தொழப்படும் அத்தனை.'', ''அமரர் அயன்மாலொடு திருந்த நின்று வழிபடத் தேவியோ டிருந்தவன்.'', ''விண்ணினார் பணிந்தேத்த.'', ''சந்திரனொடு சூரியர் தாமுடன் வந்து சீர்வழி பாடுகள் செய்த.'', ''பலதேவர் பணிபவர்.'', ''விண்ணுளார் தொழுதேத்தும் விளக்கினை.'', ''அரவணைப் பயில் மாலயன் வந்தடி பரவனை.'', ''நாரணனொடு நான்முகன் இந்திரன் வாரணன்கும ரன்வணங் கும்கழற் பூரணன்.'', ''பாம்பணைப் பள்ளி கொண்ட பரமனும் பூம்பணைப் பொலிகின்ற புராணனும் தாம்பணிந்து.'', ''சித்தர்தேவர்கள் மாலொடு நான்முகன்புத்தர் தேரமண் கையர்புகழவே.'', ''அமரர் தொழப்படும் பண்டத்தானை.'', ''அமரர்தொழப்படும் நீதியானை.'', ''ஓத வண்ணனும் ஒண்மலர்ச் செல்வனும் நாதனே அருளாயென்று நாடொறும் காதல் செய்து கருதப்படுமலர்.'', ''வானவர்கள் எப்பொழுதும் வணங்கி

ஏத்தப் பெற்றானை.'', ''அமரர்கணம் முடிவணங்க ஆடு கின்ற பெருமானை.'', ''இந்திரனும் வானவரும் தொழச் செல்வானை.'', ''அரவணையான் சிந்தித் தரற்றும் அடி அருமறையான் சென்னிக் கணியாம் அடி.'', ''இமையவர் தம்சிரத்தின் மேலான்.'', ''இமையோர் ஏத்த.'', ''இமையவர்கள் தொழுதேத்தும் இறைவனார்.'', ''மன்ன வரும் வானவரும் மற்றை யோரும் மறையவரும் வந்தெதிரே வணங்கி ஏத்த.'', ''விண்ணப் பலிச்சாதூரர்கள் ஏத்த.'', ''வானோர் இனம்துருவி மணிமகுடத் தேறித் துற்ற இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி நனைந்தனைய திருவடி.'', ''நின்றருளி அடிஅமரர் வணங்க வைத்தார்.'', ''வானோர் தாம்பரவும் திருவடி.'', ''அருமறையால் நான்முகனும் மாலும் போற்றும் சீரானை.'', ''வானவர்கள் முற்றும் கூடி முடியால் உறவணங்கி முற்றம் பற்றி அழுது திரு வடிக்கே பூசை செய்ய இருக்கின்றான்.'', ''பரவுவார் அமரர்களும் அமரர் கோனும்.'', இமையோர் ஏத்தும்... செல்வன்.'', ''வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி.'', ''இமையோர் ஏத்தும் அருந்தவனை.'', ''மலரிட் டணித்து வானோர் தத்துவனை,'', ''மாயவனும் மலரவனும் வானோர்ஏத்த.'', ''இமையோர் ஏத்த அருளியனை'', ''வான வரும் மாலயனும் கூடித் தங்கள் சுருதங்களால் துதித்துத் தூநீ ராட்டித் தோத்திரங்கள் பலசொல்லித் தூபம் காட்டிக் கருதுங்கொல் எம்பெருமான் செய்குற் றேவல் என்பார்க்கு வேண்டும்வரம் கொடுத்து வீகிர்தங்களா நடப்பர்.'', ''பூமவரான் ஏத்தும் புனிதன்.'', ''வானோர் உலகம் எல்லாம் வந்திறைஞ்சி மலர்கொண்டு நின்று போற்றும் வித்தானை,'', ''வானோர் வணங்கும் பொன்னித் தென்னவனே,'', ''வானவர்கள் எல்லாம் கூடி வணங்குவார் வாழ்த்துவார்.'', ''மண்ணவரும் விண்ணவரும் வணங்கி ஏத்தும் ஆண்டானை.'', ''வானவர்கள் வணங்கி ஏத்தும் வலிவலத்தான்.'', ''இமையோர்கள் ஏத்த நின்று.''

''பொன்னுலகத் தவர்போற்றும் பொருளுக் கெல்லாம் தக் கானை.'', ''விண்ணோர்கள் எல்லாம் விரும்பி ஏத்த வீழி மிழலையே மேவி னாரே.'', ''விரும்பமரர் இரவுபகல் பரவி ஏத்த.'', ''விண்ணவர்கள் போற்ற இருக்கின் றான்.'' ''எத்தேவும் ஏத்தும் இறைவன்.'', ''பேரா யிரம்பரவி வானோர் ஏத்தும் பெம்மானை.'', ''வானத்தார் போற்றும் மருந்தே போற்றி.''

''தேவாதி தேவர்தொழும் தேவே.'', ''வானோர் வணங்கப் படுவாய் போற்றி.'', ''பாரோர் விண்ஏத்தப் படு வாய்.'', ''மண்ணளந்த மணிவண்ணர் தாமும் மற்றை மறையவனும் வானவரும் சூழ நின்று கண்மலிந்த திரு நெற்றி உடையார் ஒற்றைக் கதநாகம் கையுடையார் காணீ ரென்றே பண்மலிந்த மொழியாலரும் யானு மெல்லாம் பணிந்திறைஞ்சி.'', ''இமையோர் இறைஞ்சி ஏத்த.'', ''புரிந்தமரர் இறைஞ்சி ஏத்த.'', ''வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தும் ஈசன்.'', ''வானவர்கள் தாம்வணங்கும் மாதேவன்.'', ''எத்திசையும் வானவர்கள் தொழநின் றானை.'' ''இமையவரும் உமையவளும் இறைஞ்சி ஏத்த.'',''அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன்.''. ''அமரர்கணம் வணங்க நின்றார்.'', ''புரிந்தமரர் தொழு தேத்தும் புகழ்தக்கோன்.'', ''ஏடேறு மலர்க்கமலத் தயனும் மாலும் இந்திரனும் பணிந்தேத்த இருக்கின்றான்.'', ''போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்.'', ''வானோர் வணங்கப் படுவார் தாமே.'', ''அமரர்ஏத்தும் திறத்தானை.'', ''அமரர்கணம் தொழுதேத்தும் அம்மான்.'', ''விண்ணோர் பரவ நஞ்சுண்டார்.'', ''விண்ணோரும் பரசும் பாசூர்ப் பரஞ்சுடரை.'', ''வானவர் கள் தானவர்கள் வணங்கி ஏத்தும் பண்டரங்க வேடனை.'', ''பரிந்திமையோர் தொழுதேத்திப் பரனே என்று சென்னி மிசைக் கொண்டணி சேவடியி னானை.'' ''பிறையெயிற்று வெள்ளைப் பன்றி பிரியாது பலநாளும் வழிபட் டேத்தும் சீர்வனி.'', ''அமரர்தொழும் கழலானை.'', ''மதிகதிரும்

வானவரும் மாலும் போற்றும் கலையானை.'', ''தேவர் போற்றும் கானவனை.'', ''இமையோர் ஏத்தும் திக ழெறும்பியூர் மலைமேல் மாணிக்கத்தை.'', ''பிரமனோடு மாலவனும் இந்திரனும் மந்திரத்தால் ஏத்தும் சீரெறும் பி யூர்மலைமேல் மாணிக்கத்தை.'', ''அடிஅமரர் தொழவும் கொண்டார்.'',''தேவர்களும் மிக்கோரும் சிறந்து வாழ்த்தும் செம்பவளத் திருமேனிச் சிவனே.'',''தேவரெல்லாம் திருவடி மேல் அலரிட்டுத் தேடி நின்று நாவார்ந்த மறைபாடி நட்டம் ஆடி நான்முகனும் இந்திரனும் மாலும் போற்ற.'', என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''வணங்கித் தொழுவாரவர் மால்பிரமன் மற்றும் வானவர்.'', ''நெடி யான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும் முடியால் வந்திறைஞ்ச முதுகுன்றம் அமர்ந்தவனே.'', ''முறையால் வந்தமரர் வணங்கும் முதுகுன்றர்.'', ''வானவரும் தொழு தேத்தி வணங்க நின்ற இறைவா.'', ''பாரார் விண்ணவரும் பரவிப் பணிந்தேத்த நின்ற சீரார் மேனியனே.'', ''அயன் மாலவன் போற்றி செய்யும் கனலே.'' ''தேவர்கள் ஏத்தி வானவர்தாம் தொழும்.'', ''விண்ணோர்கள் ஏத்த உழிதர்வீர்.''; ''இறைவனென்றெம் பெருமானை வானவர் ஏத்த.'', ''நாரணன் பிரமன் தொழும் கறையூரிற் பாண்டிச் கொடுமுடிக் காரணா.'', ''வானவர்தாம் தொழுமுருகன் பூண்டி மாநகர்வாய்ப் பந்தணை விரற் பாவை தன்னைப் பாகம் வைத்தவனை.'', ''வானவர் கூடித் தொழுதேத்தும் முழுமுதலை.'', ''இயக்கர் கின்னரர் யமனொடு வருணர் இயங்கு தீவளி ஞாயிறு திங்கள் மயக்கம் இல்புலி வானரம் நாகம் வசுக்கள் வானவர் தானவர் எல்லாம் அயர்ப்பொன் றின்றிநின் திருவடி யதனை அர்ச்சித்தார்.'',''எங்கள்பிரான் என்று வானோர் தொழநின்ற திமில் ஏறுடையானை.'', ''நாள் நாளும் அமரர் தொழுதேத்தும்.'', ''விண்ணவர் தொழுதேத்த நின்றானை.'', ''விண்ணு ளாரொடு மண்ணு ளார்பரசும்.'',''இந்திரன் வழிபட மகிழ்ந்து.'',''அளவிறந்த பல தேவர்கள் போற்றும் சோத்தானை.'', ''வானவர்

வணங்க நின்றானை.'', ''எவ்வெவர் தேவர் இருடிகள் மன்னர் எண்ணிறந் தார்கள்மற் றெங்கும்நின் றேத்த.'' ''விண்பணிந் தேத்தும் வேதியா.'', ''சம்புவே உம்பரார் தொழுதேத்தும் தடங்கடல் நஞ்சுண்ட கண்டா.'', ''இமை யோர் தொழுதேத்தும் விகிர்தனே.'', ''இமையோர் தொழு கோவே.'' ''விண்ணவர் ஏத்தும் எந்தை.'', ''திருமால் பிரமன் கூடித் தேவர் வணங்கும் அமரன்.'', ''திருவனார் பணிந்தேத்தும் திகழ்திரு வாஞ்சியத் துறையும் ஒருவனார்.'', ''நாளும் வணங்கி மாலொடு நான்முகன் சிந்தை செய்த மலர்கள்.'', ''தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்.'',''விண்ணவரும் மண்ணவரும் தொழநற் சோதிய துருவாகி.'', ''விண்ணவரொடு மண்ணவர் தொழ அண்ணல் ஆகி நின்றார்.'', ''உம்பரார் தொழுதேத்த.'', ''மால் அயன்ஏத்த அந்தண் வீழி கொண்டீர்.'', ''தேவர் தொழநின்ற சுந்தரச் சோதியாய்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய்.'', ''வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்.'', ''பரவுவார் இமையோர்கள்.'', ''வணங்கும் நின்னை மண்ணும் விண்ணும்.'', ''நின்வெறி மலர்த்தாள் தொழுது செல் வானத் தொழும்பர்.'', ''விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்.'', ''அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும் விண்ணோர்.'', ''புரந்த ராதியர் அயன் மால் போற்றிசெயும் பித்தன்.'', ''பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும் பரனே.'', ''அல்லிக் கமலத் தயனும் மாலும் அல்லா தவரும் அமரர் கோனும் சொல்லிப் பரவும் நாமத் தானை.'', ''பாடிமால் புகழும் பாதமே.'', ''மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.'', ''மாயவன் வானவர் கோனும் வந்து வணங்க அவர்க்கருள் செய்த ஈசன்.'', ''வந்திமையோர்கள் வணங்கி ஏத்த மாக் கருணைக் கடலாய்.'', ''தேவர்தொழும் பதம்வைத்த ஈசன்.'' என்று மாணிக்க வாசகரும் பாடியருளிய வற்றைக் காண்க.

அடுத்து உள்ள 42-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மனுநீதிச் சோழமன்னன் என்று இவ்வாறு கூறிவிட்டு, ''இந்தக் கோஹத்தியினால் வந்த பாவத்தைப் போக்கிக் கொள்வதற்கு இனிமேல் பரிகாரமாகச் செய்வதற்குரிய செயல் இந்தப் பசுமாடு தன்னுடைய உள்ளத்தில் வருந்தும் துயரத்தைப் போக்க முடியாத நான் வருத்தத்தை அடையும் இந்த நிலை இந்தப் பசுமாடு அடையும் பெரிய துன்பத்தை நானும் ஏற்றுக் கொண்டு அடைவதே என்னுடைய கடமை'' என்று கூறிப் பாவம் இல்லாதவனாகிய அந்தச்சோழமன்னன் யாராலும் செய்வதற்கு அருமையான ஒரு காரியத்தைச் செய்யத் துணிந்துவிட்டான்; அதை அறிந்த அவனுடைய மந்திரிகளும் பயத்தை அடைந்தவர்களாகி அரண்மனையை விட்டு விட்டுப் போனார்கள்.' பாடல் வருமாறு :

**''எனமொழிந்து, 'மற்றிதனுக்**
**கினியிதுவே செயல்இவ்வான்**
**மனம்அழியும் துயர்அகற்ற**
**மாட்டாதேன் வருந்தும்இது**
**தனதுறுபே ரிடர்யானும்**
**தாங்குவதே கருமம்; என**
**அனகன்அரும் பொருள்துணிந்தான்;**
**அமைச்சரும்அஞ் சினர்அகன்றார்.''**

என-மனுநீதிச்சோழன் என்று இவ்வாறு; இடைக்குறை. மொழிந்து-கூறிவிட்டு. மற்று; அசைநிலை. இதனுக்கு-இந்தக் கோஹத்தியினால் வந்த பாவத்தைப் போக்கிக் கொள்வதற்கு. இனி-இனிமேல். இதுவே-இதுதான். செயல்-பரிகாரமாகச் செய்வதற்குரிய காரியம். இவ்வான்-தன்னுடைய கன்றுக்குட்டியை இழந்து நிற்கும் இந்தப் பசுமாடு. மனம்-தன்னுடைய உள்ளத்தில். அழியும்-வருத்தத்தை அடையச்செய்யும். துயர்-துயரத்தை. அகற்ற-போக்க. மாட்டாதேன்-முடியாத நான். வருந்தும்-

வருத்தத்தை அடையும். இது-இந்த நிலை. தனது-பசுமாட்டினுடைய. உறு-அடைந்த. பேரிடர்-பெரிய துன்பத்தை. யானும்-நானும். தாங்குவதே-ஏற்றுக்கொண்டு அடைவதே. கருமம்-என் கடமை. என-என்று கூறி; இடைக்குறை. அனகன்-பாவம் இல்லாதவனாகிய அந்தச் சோழமன்னன். அரும்-யாராலும் செய்வதற்கு அருமையாக உள்ள. பொருள்-ஒரு காரியத்தை. துணிந்தான்-செய்யத் துணிந்து விட்டான். அமைச்சரும்-அந்த மன்னனுடைய மந்திரிகளும்; ஒருமை பன்மை மயக்கம். 'உம்மை' அங்கே இருந்த மற்றவர்களையும் குறித்து நின்றது. அஞ்சினர்-பயத்தை அடைந்தவர்களாகி; ஒருமை பன்மை மயங்கம்; முற்றெச்சம். அகன்றார்-அரண்மனையிலிருந்து போய் விட்டார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 43-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'மனுநீதிச் சோழமன்னன் தன்னுடைய புதல்வனைத் தான் இருக்கும் அந்த இடத்திற்கு அழைத்துக்கொண்டு வரச்செய்து தன்னுடைய அமைச்சன் ஒருவனைப் பார்த்து, ''நீ முன்னால் இந்த இளவரசனைப் பசுமாடு தன்னுடைய கன்றுக்குட்டியை இழந்த அந்தத் தெருவுக்கு அழைத்துக் கொண்டு போய் வலிமையைப் பெற்ற தேரினுடைய சக்கரங்களை அவன்மேல் ஏறும் வண்ணம் செய்வாயாக'' என்று கூற, அந்த அமைச்சனும் அந்தக் காரியத்தைச் செய்ய மனம் இல்லாதவனாகிப் புறப்பட்டுச் சென்று தன்னுடைய அருமையான உயிரை விட்டுவிட, அதனை அறிந்த அந்தச் சோழ மன்னன் தன்னுடைய குடும்பத்தில் பிறந்த புதல்வனைத் தானே தேரில் அழைத்துக் கொண்டு அந்த வீதியை அடைந்தான்.' பாடல் வருமாறு:

**'மன்னவன்றன் மைந்தனைஅங்**
**கழைத்தொருமந் திரிதன்னை**
**'முன்னிவனை அவ்வீதி**
**முரண்தேர்க்கால் ஊர்க' என**

அன்னவனும் அதுசெய்யா
தகன்றுதன் ஆருயிர்துறப்பத்
தன்னுடைய குலமகனைத்
தான்கொண்டு மறுகணைந்தான்.''

மன்னவன்-மனுநீதிச் சோழ வேந்தன். தன்-தன்னுடைய. மைந்தனை-வலிமையைப் பெற்ற புதல்வனை. அங்கு-தான் இருந்த இடத்திற்கு. அழைத்து-அழைத்துக் கொண்டு வரச் செய்து. ஒரு மந்திரிதன்னை-தன்னுடைய அமைச்சன் ஒருவனை. தன்-அசைநிலை. முன்-முன்னால். இவனை-இந்த என்னுடைய புதல்வனை. அவ்வீதி-பசுமாடு தன்னுடைய கன்றுக்குட்டியை இழந்து நிற்கும் அந்தத் தெருவுக்கு அழைத்துச் சென்று. முரண்-வலிமையைப் பெற்ற. தேர்-ஒரு தேரில் நீ ஏறிக்கொண்டு போய். க்:சந்தி. கால்-அதனுடைய சக்கரங்களை; ஒருமை பன்மை மயக்கம். ஊர்க-அவன்மேல் செலுத்தி ஓட்டுவாயாக. என-என்று சோழ மன்னன் ஏவ; இடைக்குறை. அன்னவனும்-அந்த அமைச்சனும். அது-அந்தக் காரியத்தை. செய்யாது-புரிய மனம் இல்லாமல். அகன்று-அந்த இடத்தை விட்டுச்சென்று. தன்-தன்னுடைய. ஆருயிர்—பெறுவதற்கு அருமையாகிய உயிரை. துறப்ப-விட்டுவிட்டு இறக்க. த்:சந்தி. தன்னுடைய-சோழ மன்னன் தன்னுடைய. குல-குடும்பத்தில் பிறந்த. மகனை-புதல்வனை. த்:சந்தி. தான்-தானே. கொண்டு-ஒரு தேரில் ஏற்றி அழைத்துக் கொண்டு. மறுகு- அந்தத் தெருவை. அணைந்தான்—அடைந்தான்.

அடுத்து உள்ள 44-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தன்னுடைய குடும்பத்துக்கு ஒரு புதல்வனே இருக்கிறான் என்பதை மனுநீதிச் சோழன் எண்ணிப் பார்க்கவில்லை; தருமம் தன் வழியில் நடக்குமாறு செய்வதே தன்னுடைய கடமை என்று எண்ணித் தன்னுடைய புதல்வனுடைய

மார்பின்மேல் தான் ஏறிக் கொண்டு வந்த தேரினுடைய சக்கரங்கள் பதியுமாறு அந்தத் தேரை ஓட்டினான்; மனு நீதிச் சோழ மன்னனுடைய அருமருந்தன்ன அரசாட்சி அருமையானதோ? அன்றி எளியதுதானோ?' பாடல் வருமாறு:

> ''ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான்என் பதும்
> உணரான்;
> தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
> மருமம்தன் தேராழி உறஊர்ந்தான்; மனுவேந்தன்
> அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்?''

தன்-தன்னுடைய. குலத்துக்கு-குடும்பத்துக்கு; பரம்பரைக்கு, எனலும் ஆம். ஒரு மைந்தன்-ஒரு புதல்வனே. உள்ளான்-இருக்கிறான். என்பதும்-என்பதையும். உணரான்-மனுநீதிச் சோழன் எண்ணிப் பார்க்கவில்லை. தருமம்-அறம். தன்-தன்னுடைய. வழி-வழியில். ச்:சந்தி. செல்கை-நடக்குமாறு செய்வதே. கடன்-தன்னுடைய கடமை. என்று-என்று எண்ணி. தன்-தன்னுடைய. மைந்தன்-புதல்வனுடைய. மருமம்-மார்பின்மேல். தன்-தான் ஏறிக் கொண்டு வந்த தன்னுடைய. தேர்-தேரினுடைய. ஆழி-சக்கரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உற-பதியும் வண்ணம். ஊர்ந்தான்-அந்தத் தேரை ஓட்டினான். மனுவேந்தன்-மனுநீதிச் சோழனுடைய. அருமந்த-அருமருந்தன்ன. மரூஉமொழி; மருந்து-அமிர்தம். அரசாட்சி-அரசை ஆளும் முறை. அரிதோ-அருமையாக உள்ளதோ? மற்று-அன்றி. எளிதோதான்-எளிமையானது தானோ? மிக மிக அரியது என்பது கருத்து.

அடுத்து வரும் 45-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"குளிர்ச்சியைப் பெற்ற அருளை உடையவனும், வெள்ளை நிறத்தைக் கொண்ட சந்திரவட்டக் குடையைப் பிடித்தவனுமாகிய மனுநீதிச் சோழமன்னன் புரிந்த அருமையான செயலைப் பார்த்துச் சகிக்காமல் இந்தப் பூமண்டலத்

தில் வாழும் மக்கள் தங்களுடைய கண்களிலிருந்து மழை யைப் போல நீரைச் சொரிந்தார்கள்; தேவலோகத்தில் வாழும் தேவர்கள் மனுநீதிச் சோழமன்னன் செய்த செய லின் அருமைப்பாட்டை எண்ணி மலர்மாரியைப் பொழிந் தார்கள்; தலைவனாகிய அந்தச் சோழ மன்னனுடைய கண்களுக்கு எதிரில் அலங்காரம் செய்யப் பெற்ற அந்தத் தெருவில் இளமையை உடைய இடப வாகனத்தின்மேல் தேவர்கள் வணங்குமாறு வீதிவிடங்கப் பெருமான் எழுந் தருளி வந்து நின்றான்.' பாடல் வருமாறு:

**''தண்ணளிவெண் குடைவேந்தன்**
**செயல்கண்டு தரிய து**
**மண்ணவர்கண் மழைபொழிந்தார்;**
**வானவர்பூ மழைசொரிந்தார்;**
**அண்ணலவன் கண்ணெதிரே**
**அணிவீதி மழவிடைமேல்**
**விண்ணவர்கள் தொழநின்றான்**
**வீதிவிடங் கப்பெருமான்.''**

தண்-குளிர்ச்சியைப் பெற்ற. அளி-அருளை உடையவ னும்; திணைமயக்கம். வெண்-வெள்ளை நிறத்தைக் கொண்ட. குடை-சந்திர வட்டக் குடையைப் பிடித்தவனும் ஆகிய; திணைமயக்கம். வேந்தன்-மனுநீதிச் சோழமன்னன். செயல்-செய்த அரிய செயலை. கண்டு-பார்த்து. தரியாது-சகிக்காமல். மண்ணவர்-இந்த மண்ணுலகத்தில் வாழும் மக் கள்; ஒருமை பன்மை மயக்கம். கண்-தங்களுடைய கண்களி லிருந்து; ஒருமை பன்மை மயக்கம். மழை-மழையைப் போல. பொழிந்தார்- நீரைச் சொரிந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். வானவர்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பூமழை-மலர் மாரியை. சொரிந்தார்-பொழிந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். அண்ணல்-தலைவனாகிய; 'பெருமையை உடை யவன்' எனலும் ஆம். அவன்-அந்தச் சோழமன்னனுடைய.

கண்-கண்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். எதிர்-எதிரில். ஏ: அசைநிலை. அணி-அலங்காரம் செய்யப் பெற்ற. வீதி- திருவாரூர்த் தெருவில். மழ-இளமையைப்பெற்ற. விடை மேல்-இடப வாகனத்தின்மேல். விண்ணவர்கள்-தேவலோ கத்திலிருந்து தேவர்கள். தொழ-தன்னை வணங்கும் வண் ணம். வீதிவிடங்கப் பெருமான் நின்றான்-வீதிவிடங்கப் பெருமானாகத் தியாகேசன் எழுந்தருளி வந்து நின்றான்.

அடுத்து வரும் 46-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தன்னுடைய சடாபாரத்தின் ஒரு பக்கத்தில் இளைய பிறைச்சந்திரனும், தனியான கண்ணையுடைய அழகிய நெற்றியும், வாமபாகத்தில் உமாதேவியும், எந்தப் பக்கங் களிலும் பூதகணங்களும் தன்னுடைய பக்கத்தில் நெருங்கி யிருக்கும் பெருமையைப் பெற்ற வீதிவிடங்கப் பெருமானைத் தன் முன்னால் தரிசித்து மனுநீதிச் சோழமன்னன் வாழ்த்துக் களைச் சொல்லி வணங்க, இடப வாகனத்தின்மேல் எழுந் தருளியிருக்கும் அந்தப் பெருமானும் பகைவர்களைப் போரில் வெல்லும் வெற்றியைப் பெற்ற அந்தச் சோழமன்ன னுக்குத் தன்னுடைய திருவருளை வழங்கினான்.' பாடல் வருமாறு:

**''சடைமருங்கில் இளம்பிறையும்**
**தனிவிழிக்கும் திருநுதலும்**
**இடமருங்கில் உமையாளும்**
**எம்மருங்கும் பூதகணம்**
**புடைநெருங்கும் பெருமையும்முன்**
**கண்டரசன் போற்றிசைப்ப**
**விடைமருவும் பெருமானும்**
**விறல்வேந்தற் கருள்கொடுத்தான்.''**

சடை-தன்னுடைய சடாபாரத்தில். மருங்கில்-ஒரு பக்கத்தில். இளம்பிறையும்-இளைய பிறைச் சந்திரனையும். தனி-தனியாக. விழிக்கும்-ஒரு கண் விழித்துப் பார்க்கும். திரு-அழகிய. நுதலும்-நெற்றியையும். இடமருங்கில்—

வாமபாகத்தில். உமையாளும்-உமாதேவியையும். எம்மருங்கும்-எந்தப் பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். பூதகணம்-பூதங்களின் கூட்டம். புடை-தன் பக்கத்தில். நெருங்கும்-நெருங்கியிருக்கும். பெருமையும்-பெருமையையும். முன்-தன்னுடைய முன்னால். கண்டு-தரிசித்து. அரசன்-மனுநீதிச் சோழமன்னன். போற்று-வாழ்த்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். இசைப்ப-கூறி வணங்க. விடை-இடபவாகனத்தின்மேல். மருவும்-எழுந்தருளியிருக்கும். பெருமானும்-வீதிவிடங்கப்பெருமானும். விறல்-போரில் பகைவர்களை வென்று பெறும் வெற்றியைஉடைய. வேந்தற்கு-மனுநீதிச் சோழனுக்கு. அருள்-தன்னுடைய திருவருளை. கொடுத்தான்-வழங்கினான்.

பூதகணம் சூழ இருத்தல்: ''பூத நாதர்.'',''குண்டைக் குறட்பூதம் குழும.'', ''பூதம் புடைசூழ.'', ''பூதம் பாடப் புறங்காட்டிடை ஆடி.'' ''பூதம்பல் படையாக்கிய காதலான்.'', ''பூதம் சூழப் பொலிய வருவார்.'', ''பந்தம் உடைய பூதம் பாட.'', ''பூதவினப் படை நின்றிசை பாடவும் ஆடுவர்.'', ''படைப்பூதத்தான்.'', ''குலவு பாரிடம் போற்ற வீற்றிருந்து.'', ''பூதமொடு பேய்கள்பல பாட நடமாடி.'', ''பூதத்தின் படையினீர்.'', ''பல்பூதங்கள் துதிசெய.'', பூதம் சேர்ந்திசை பாடலர்.'', ''பூதம் சூழப் பொலிந்தவன்.'', ''பாரிடம் பணிசெயும்.'', ''பூதங்கள் பலவுடைய புனிதர்.'', ''பூதம் முன்னியல்புடைப் புனிதர்.'', ''பூதமுதல்வன்.''' ''பாரிடம் பணிசெய்ய ஏதமில பூதமொடு.'', ''பூதமொ டடியவர் புனைகழல் தொழுதெழு புகழினர்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''பாடிளம் பூதத்தி னானும்.'', ''பக்கமே பாரிடங்கள் சூழ.'', பூதம் சூழப் புலியுரியதளனார்.'', ''பூதங்கள் பாடியாடல் உடையவன்.'', ''பாடிய பூதம் சூழ.'', பூதங்கள் பலவும் வைத்தார்.'', ''பூதத்தின் படையர்.'', ''படைகொள் பூதங்கள்.'', ''பூதத்தான் என்பார்.'', ''பூதம் பாட நின்றாடும் புனிதனார்.''

''பூத நாதனைப் பூம்புக லூரனை.'', ''பக்கம் பூதங்கள் பாடப் பலிகொள்வான்.'', ''பூத நாயகன்.'', ''பெரும் படைப் பூதநாதன்.'' ''பூதநாயகன் பொற்கயிலைக் கிறை.'', 'படையும் பூதமும்.'', பூதநாதன் புலியத ளாடையன்.'', ''பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே.'', ''ஆதிரை நாயகன் பூத நாயகன்.'',''பூதங்கள் சூழப் புலித் தோல் வீக்கி.'', ''பலயூ தத்தர் பாடல்.'', ''பூதப்படை யுடையார்.'', ''புடை சூழ்ந்த பூதங்கள் வேதம் பாட.'', ''பூதப்படையாய் புனிதா போற்றி.'', ''பூதகணநாதன் காண்.'', ''பூதப் படையான் புனிதர் போலும்.'', ''பாரிடங்கள் உடன்பாட.'', ''பாரிடங்கள் பல கருவி பயிலக் கொண்டார்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''பாரிடமும் பாதம் போற்ற.'', ''புற்றில் வாளர வார்த்த பிரானைப் பூதா தனை.'' என்று சுந்தரமூர்த்தி நாயனா ரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 47-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த நிலையில் தன்னுடைய உயிர் உடம்பை விட்டுப் பிரிந்து போன பசுமாட்டினுடைய கன்றுக்குட்டியும், அந்த மனுநீதிச் சோழனுடைய புதல்வனும், அவனுக்குப் பிறகு மன்னனாகும் உரிமையைப் பெற்ற ஒப்பற்ற கன்றுக்குட்டி யைப் போன்றவனும் ஆகிய இளைஞனும் தன்னுடைய உயிரை விட்டுவிட்ட அமைச்சனும் ஒருங்கே தங்களுடைய உயிர்களை மீண்டும் பெற்று எழுந்தவுடன் மனுநீதிச் சோழ னும் தான் இத்தகையஇயல்புடையவன் ஆனான் என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை; யாவருக்கும் முதல்வனாகிய சிவ பெருமானே முன்னால் நிற்பானானால் நிறைவேறாத செயலும் இருக்கிறதோ?' பாடல் வருமாறு :

**'அந்நிலையில் உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்**
**மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன்எழலும்**
**இன்னபரி சானான்என் றறிந்திலன்வேந் தனும்; யார்க்கும்**
**முன்னவனே முன்நின்றால் முடியாத பொருள்உளதோ?''**

அந்நிலையில்-வீதிவிடங்கப் பெருமான் தன்னுடைய திருவருளை வழங்கிய அந்த நிலையில். உயிர் பிரிந்த-தன்னுடைய உயிர் உடம்பை விட்டுப் பிரிந்து போன. ஆன்-பசு மாட்டினுடைய. கன்றும்-கன்றுக் குட்டியும். அவ்வரசன்-அந்த மனுநீதிச் சோழ மன்னனுக்கு. மன்-பிறகு மன்னன் ஆகும். உரிமை-உரிமையைப் பெற்ற. த்:சந்தி. தனி—ஒப்பற்ற. க்:சந்தி. கன்றும்-கன்றுக்குட்டியைப் போன்ற இளவரசனும். மந்திரியும்-தன்னுடைய உயிரை விட்டு விட்ட அமைச்சனும். உடன்-ஒருங்கே. எழலும்-தங்களுடைய உயிர்களை மீண்டும் பெற்று எழுந்தவுடன். வேந்தனும்-மனுநீதிச் சோழ மன்னனும். இன்ன-இத்தகைய. பரிசு ஆனான்-இயல்பைப் பெற்றவன் ஆனான். என்று-என. அறிந்திலன்-தெரிந்து கொள்ளாத இன்ப மயக்கத்தில் இருந்தான். யார்க்கும்-எல்லோருக்கும். முன்னவனே-முதல்வனாக விளங்கும் சிவபெருமானே. முன் நின்றால்-ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்கு முன்வந்து நின்றால். முடியாத-நிறைவேறாத. பொருள்-காரியம் ஏதேனும் உளதோ-இருக்கிறதோ? இடைக்குறை. இல்லை. என்றபடி. இது வேற்றுப் பொருள் வைப்பணி.

இளைஞனுக்குக் கன்றுக்குட்டி உவமை: "தெருட்கலை ஞானக் கன்றும்.", "புண்ணியக் கன்றனையவர்.", "தெய்வஞானக் கன்றினை.", கண்டகவு ணியக்கன்றும்.", "மழவிடையிளங் கன்றொன்று." என்று பெரிய புராணத்தில் வருவனவற்றைக் காண்க.

பிறகு உள்ள 48-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தன்னுடைய திருவடிகளை வணங்கிய அழகிய புதல்வனைத் தன்னுடைய மார்பில் அணையுமாறு தன்னுடைய கைகளில் எடுத்துத் தழுவிக் கொண்டு நீண்ட நேரம் மகிழ்ச்சியை அடைந்து போக்குவதற்கு அருமையாக இருந்த சோழ மாநிலத்தை ஆட்சி புரியும் மனுநீதிச் சோழ மன்னன் தன்னுடைய துயரத்தைப் போக்கிவிட்டான்; தன்னுடைய மடியி

லிருந்து சுரந்து பொழிந்த இனிய பாலை ஓடிவரும் கன்றுக் குட்டி மகிழ்ச்சியை அடைந்து குடித்துத் தரை நனையுமாறு வரும் பசுமாடும் தன்னுடைய துன்பத்திலிருந்து விடுபட்டது.' பாடல் வருமாறு:

**''அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம் நீங்கினான் நிலவேந்தன்;
மடிசுரந்து பொழிதீம்பால் வரும்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல்நீங் கியதன்றே.''**

அடி-தன்னுடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பணிந்த-வணங்கிய. திரு-அழகிய. மகனை-தன்னுடைய புதல்வனை. ஆகம்-தன்னுடைய மார்பில். உற—அணையுமாறு. எடுத்து-தன்னுடைய கைகளில் எடுத்து. அணைத்து-தழுவிக் கொண்டு. நெடிது-நீண்ட நேரம். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. அரும்-போக்குவதற்கு அருமையாக இருக்கும். துயரம்-தன்னுடைய துயரத்தை. நில-சோழமாநிலத்தை. வேந்தன்-ஆட்சிபுரியும் மனுநீதிச் சோழமன்னன். நீங்கினான்-போக்கிவிட்டான். மடி-தன்னுடைய மடியிலிருந்து. சுரந்து பொழி-சுரந்து பொழிந்த. தீம்-இனிய சுவையைப் பெற்ற. பால்-பாலை. வரும்—அந்தப் பசுமாட்டினிடம் ஓடிவரும். கன்று-கன்றுக்குட்டி. மகிழ்ந்து-பெருமகிழ்ச்சியை அடைந்து. உண்டு-குடித்து. படி-தரை. நனைய-ஈரமாகும் வண்ணம். வரும்-ஓடிவரும். பசுவும்-பசுமாடும். பருவரல்-தன்னுடைய துன்பத்திலிருந்து நீங்கியது-விடுபட்டது. அன்று, ஏ:இரண்டும் ஈற்றசை நிலைகள்.

அடுத்து உள்ள 49-ஆம் பாட்டின் கருத்து வருமாறு:

'தங்கத்தைப் பதித்து விளங்கும் திருமதில் சூழ்ந்த திருவாரூரில் விளங்கும் பூங்கோயிலில் வீற்றிருந்தருளும் தலைவனாகிய தியாகராசப் பெருமான் போரில் பகைவர்களை வன்ற வெற்றியைப் பெற்ற மனுநீதிச் சோழ மன்னனுக்குத் திருவாரூரில் உள்ள ஒரு தெருவில் தன்னுடைய திருவருளை

வழங்கிவிட்டுப் போயருளும் பெருமையைப் பெற்ற கருணை யினுடைய இயல்பைப் பார்த்துத் தன்னுடைய அடியவர் களுக்கு எந்தக் காலத்திலும் எளியவனாக எழுந்தருளி வரும் பெருமையை ஏழு உலகங்களிலும் வாழும் மக்கள் மேலாக எடுத்துத் துதிப்பார்கள்.' பாடல் வருமாறு:

**''பொன்தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான்**
**வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்**
**சென்றருளும் பெருங்கருணைத் திறம்கண்டு தன் அடியார்க்**
**கென்றும்எளி வரும்பெருமை ஏழுலகும் எடுத்தேத்தும்.''**

பொன்-தங்கத்தைப் பதித்து. தயங்கு-விளங்கும் மதில்-திருமதில் சூழ்ந்த. ஆரூர்-திருவாரூரில் உள்ள. ப்: சந்தி. பூங்கோயில்-பூங்கோயில் என்னும் ஆலயத்தில். அமர்ந்த-வீற்றிருந்தருளியுள்ள. பிரான்-உபகாரியாகிய தியாகராஜப் பெருமான். வென்றி-போரில் வெற்றியைப் பெற்ற. மனுவேந்தனுக்கு-மனுநீதிச் சோழ மன்னனுக்கு. வீதியிலே-ஒரு தெருவிலேயே. அருள்-தன்னுடைய திரு வருளை. கொடுத்து-வழங்கி. ச்:சந்தி. சென்றருளும்—போயருளும். பெரும்-பெருமையைப் பெற்றிருக்கும். கருணை-கருணையினுடைய. த்:சந்தி. திறம்-இயல்பை; 'ஆற்றலை' எனலும் ஆம். கண்டு-பார்த்து. தன்-தன்னு டைய. அடியார்க்கு-அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். என்றும்-எந்தக் காலத்திலும். எளிவரும்-எளியவ னாக எழுந்தருளி வரும். பெருமை-பெருமையை. ஏழ்-ஏழு. உலகும்-உலகங்களில் வாழும் மக்களும்; இட ஆகுபெயர். உலகு:ஒருமை பன்மை மயக்கம். எடுத்து-மேலாக எடுத்துப் பாராட்டி. ஏத்தும்-துதிப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 50-ஆம் பாடல் திருநகரச் சிறப்பில் உள்ள இறுதிப் பாடல். அதன் கருத்து வருமாறு:

'இத்தகைய விதத்தில் தரும வழியில் கணக்கைக் கடந்த மக்களுக்குத் தன்னுடைய திருவருளை விரும்பி வழங்கி எல்லாத் தேவர்களுக்கும் முதல்வராகிய அந்தத் தியாகராஜப் பெருமானார் மகிழ்ச்சியை அடைந்து தம்முடைய திருவருளை வழங்கும் பேற்றைப் பெற்றிருப்பதாகிய பழைய தலத்தின்மேல் அடியேன் வனைந்து பாடும் பாடல்கள் எம்முடைய அளவுக்குள் பாடுவதாகும் இயல்பைப் பெற்றதோ? அத்தகைய திருவாரூருக்கு இதயதாமரை மலராக விளங்கும், தருமங்களின் வடிவமான வன்மீகநாதர் எழுந்தருளியுள்ள பூங்கோயில் என்னும் ஆலயம்.' பாடல் வருமாறு:

**''இனையவகை அறநெறியில் எண்ணிறந்தோர்க் கருள் புரிந்து**
**முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேல்**
**புனையும்உரை நம்மளவில் புகலலாம் தகைமையதோ?**
**அனையதனுக் ககமலராம் அறவனார் பூங்கோயில்.''**

இனைய-இத்தகைய. வகை-விதத்தில். அற நெறியில்-தரும வழியில். எண்-கணக்கை. இறந்தோர்க்கு-கடந்த தம்முடைய பக்தர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அருள்-தம்முடைய திருவருளை. புரிந்து-விரும்பி வழங்கி. முனைவர்-எல்லாத் தேவர்களுக்கும் முதல்வராகிய. அவர் அந்தத் தியாகராஜப் பெருமானார். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. அருள-திருவருளை வழங்க. ப்:சந்தி. பெற்று-அதைப் பெரிய பாக்கியமாக அடைந்து. உடைய-புகழை உடையதாகிய; பெயரெச்ச வினையாலணையும் பெயர். மூதூர்மேல்-பழைய தலத்தின்மேல். புனையும்-வனையும். உரை-பாடல்கள்; ஒருமை பன்மை மயக்கம். நம்-எம்முடைய; இது சேக்கிழார் தம்மைக் குறித்தது. அளவில்—அறிவின் அளவுக்குள். புகலலாம்-பாடுதலாகும். தகைமையதோ-தன்மையைப் பெற்றதோ? பெற்றதன்று என்பது கருத்து. அனையதனுக்கு-அத்தகைய திருவாரூருக்கு. அக

மலராம்-இருதயத்தாமரை மலராகும். அறவனார்—தருமங்களின் வடிவமாக விளங்கும் வன்மீகநாதருடைய' பூங்கோயில்-பூங்கோயில் என்னும் ஆலயம்.

முனைவர்: ''விளைபொருள்கள் தானாகிய தலைவன்.'', ''புளமங்கை ஆதியவர்.'', ''ஆதி சோற்றுத் துறை.'', ''ஆதியு மாகிய அண்ணல்.'', ''ஆதிநீ அருள்.'', ''தேவர்கள் தேவர் எம்பெரு மானார்.'', ''மூவரிலும் முதலாய்.'', ''தேவர்கள் தேவரோ.'', ''அருத்த னாய ஆதி தேவன்.'', ''பராய்த்துறை ஆதியாய அடிகளே.'' ''திருவான்மியூர் ஆதிஎம் பெருமான்.'', ''ஆதியாகி நின்றானும்.'', ''வெண்ணீ றணிந்திட்ட எம் ஆதியை.'', ''ஆதியார் அந்தம் ஆயினார்.'', ''கருவூருள் ஆனிலை ஆதியார்.'', ''ஆதி அடியைப் பணிய.'', ''ஆதியே அரனே.'', ''முக்கண் ஆதி.'', ''தேவூர் ஆதி.'', ''உம்பர் நாதன்.'', ''ஏற தேறிய ஆதியான்.'', ''புலியூர் தனுள் ஆதி.'', ''தில்லை தன்னுள் ஆதியாய்க்கு.'', ''வீழி மிழலை விரும்பிய ஆதியை.'', ''திருக்கோட்டாற்றுள் ஆதியை.'', ''வெண்காடு மேவிய ஆதியை.'', ''உலகாதியு மாயினான்.'', ''ஆதியே திருஆலவாய் அண்ணலே.'', ''ஆதியந்தம் ஆயினாய்.'', ''திருவான்மியூர் உறையும் ஆதி.'', ''ஆதியாய் நின்ற பெம்மான்.'', ''ஆதியன் ஆதிரையன்.'', ''முதலாதி பெருமான்.'', ''ஆதி எமை ஆளுடைய அரிவையொடு பிரிவிலி.'', ''ஆதியாய் இருப்பார்.'', ''ஆதியாய் நடுவாய் அந்தமாய் நின்ற அடிகளார்'' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், ''அண்டமாய் ஆதியாய்.'', ''முன்னெறியாகிய முதல்வன்.'', ''ஆதி ஆரூர் ஆதிரை நாளால்.'', ''ஆதியும் ஈறும் ஆனார்.'', ''ஆதியே அலந்து போனேன்.'', ''தேவர்கள் தேவர் போலும்.'', ''ஆதியாய் அந்தம் ஆனார்.'' ''ஆதியும் அறிவு மாகி.'', ''ஆதியே ஆல வாயில் அப்பனே.'', ''ஆதியே அமரர் கோவே.'', ''மூவர்க்கும்

முதல்வன்.'', ''அளக்க லாகா ஆதியை.'', ''அந்தமும் ஆதியும் ஆகி நின்றீர்.'', ''செம்பொனின் அம்பலத் தாதியை.'', ''ஆதி யாகி நின்றார்.'', ''திருவீழியுள் ஆதியே.'', ''ஆதி ஆவடு தண்டுறை மேவிய சோதியே.'', ''ஆதி சேவடிக் கீழ்நாம் இருப்பதே.'', ''ஆதியான் அண்ட வாணர்க் கருள்நல்கும் நீதியான்.'', ''ஆதியார் அயனோ டமரர்க் கெலாம்.'', ''சங்கரன் ஆதியை.'', ''ஆதி நாதன் அமரர்கள் அர்ச்சிதன்.'', ''ஆதி நாதன் அடல் விடை மேலமர் பூத நாதன்.'', ''ஆதி நாயகன் அண்டர்கள் நாயகன்.'', ''ஆதியும் அரனாய்.'', ''ஆதி யானை அமரர் தொழப்படும் நீதியானை.'', ''ஆதிப்பால் அட்ட மூர்த் தியை.'', ''ஆதி யாயவன் ஆரு மிலாதவன்.'', ''ஆதி நாய கன் ஆதிரை நாயகன்.'', ''தேவர்கள்தம் கோனை.'', ''குமரன்தாண் ஆதியான்காண்.'', ''ஆதியாய் அந்தமாய் நின்றான்.'', ''ஆதியனை அரநெறியில் அப்பன் தன்னை.'', ''விண்ணோர் தலைவனே.'', ''ஆதி புராண னாய் நின்றாய்.'', ''ஆதியனை எறிமணியின் ஓசை யானை.'', ''மூவரினும் முதலானான்.'', ''அயனொடு மால் அறியாத ஆதியானை.'', ''விண்ணோர்க்கெல்லாம் ஆதியனை.'', ''ஆதியான் அரிஅயனென் றறிய வொண்ணா அமரர்தொழும் கழலானை.'' என்று திரு நாவுக்கரசு நாயனாரும், ''அருட்டுறையுள் ஆதி.'', ''ஆதியே அற்புதனே.'', ''வானோர் தலைவா.'', ''ஆலந்தான் உகந்தமுது செய்தானை ஆதியை.'', ''அமரர் நாதனை.'', ''திருஆவ்டு துறையுள் ஆதியே.'', ''ஆதி இருப்பதும் ஆரூர்.'', ''கூடலை யாற்றூரில் ஆதி.'', ''மிழலையுள் ஆதி.'', ''ஆதியன் ஆதிரையன்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''ஆதியனே அந்தம் நடுவாகி.'', ''தேவ தேவன் திருப்பெயர்.'', ''ஆதி போற்றி அறிவே போற்றி.'', ''தேவர்கோ அறியாத தேவ தேவன்.'', ''மூவர்கோ னாய்நின்ற முதல்வன்.'', ''ஆதி திறம்

பாடி.'', ''ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு.'', ''விண் ணோர் முழுமுதல்.'', ''தேவர்பிரான்.'', ''முழு முதலே.'', ''சொல்லுதற் கரிய ஆதியே.'', ''நிரந்தர மாய் நின்ற ஆதி.'',''தேவர்தம் தேவே சிவபுரத் தரசே.'', ''குருந்தம் மேவியசீர் ஆதியே.'', ''உம்பர்கட் கரசே.'', ''அண்டர் அண்டமாய் நின்ற ஆதியே.'', ''தேவ தேவன் மெய்ச்சேவகன்.'', ''அமரர் பெம்மான்.'', ''ஆதிஎனக் கருளியவா றார்பெறுவார்.'' என்று மாணிக்க வாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

அறவனார்: ''அருத்தனை அறவனை'' என்று திரு ஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளியதைக் காண்க.

# திருக்கூட்டச் சிறப்பு

**பெரிய புராணத்தில் 4-ஆவதாக உள்ளது திருக்கூட்டச்** *சிறப்பு. அதில் வரும் முதற் பாடலின் கருத்து வருமாறு:*

*'பூதங்களுக்குத் தலைவரும், பாம்புப் புற்றைத் தாம் எழுந்தருளியிருக்கும் இடமாகக் கொண்டவரும், எல்லாத் தேவர்களுக்கும் முதல்வராகிய மகாதேவரும் ஆகிய வன்மீக நாதர் விரும்பி எழுந்தருளியிருக்கும் திருவாரூரில் விளங்கும் ஆலயமாகிய பூங்கோயிலில் ஒளி வெள்ளம் வீசும் பெருமையைப் பெற்ற மாணிக்கங்களின் நீளமான பிரகாசம் வீசும் முற்றத்தைச் சூழ்ந்துள்ள பழைய திருமதிலை யடுத்த அழகிய திருவாசலுக்கு முன்னால் விளங்குவது.' பாடல் வருமாறு:*

**''பூத நாயகர் புற்றிடம் கொண்டவர்**
**ஆதி தேவர் அமர்ந்தபூங் கோயிலிற்**
**சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ்**
**மூதெ யில்திரு வாயில்முன் னாயது.''**

*இது தேவாசிரய மண்டபத்தைப் பற்றிக் கூறும் பாடல்:*

*பூத—பூதகணங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாயகர்—தலைவரும். புற்று—பாம்புப் புற்றை. இடம்—தாம் எழுந்தருளியிருக்கும் இடமாக. கொண்டவர்-கொண்ட*

வன்மீக நாதரும். ஆதி—எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய. தேவர்—மகாதேவரும் ஆகிய வன்மீகநாதர். அமர்ந்த—விரும்பி எழுந்தருளியிருக்கும்; கால மயக்கம். பூங்கோயிலில்—திருவாரூரில் விளங்கும் ஆலயமாகிய பூங் கோயிலில். சோதி—ஒளி வெள்ளத்தை வீசுவதும். மா—பெருமையைப் பெற்றதும். மணி—மாணிக்கங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நீள்—நீண்ட. சுடர்—ஒளி வீசுவதும் ஆகிய. முன்றில்—ஆலயத்தின் முற்றத்தை; முன்றில்—இல்முன்; முன்பின்னாகத் தொக்க தொகை. சூழ்-சூழ்ந்திருக்கும். மூதெயில்—பழமையான திருமதிலை அடுத்து. திருவாயில்—ஆலயத்தின் அழகிய கோபுர வாசலுக்கு. முன்—முன்னால். ஆயது—இருப்பது.

பூதநாயகர்: இந்தக் கருத்தைப் புலப்படுத்தும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. ஆதி தேவர்: இந்தக் கருத்தைப் பற்றி உள்ள இடங்களையும் முன்னரே ஓரிடத்தில் தெரிவித்தோம்; அங்குக் கண்டுணர்க.

பிறகு உள்ள 2-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் நான்கு திசைகளைப் பார்க்கும் முகங்களைப் பெற்ற பிரமதேவன், தேவர்களினுடைய அரசனாகிய இந்திரன், செந்தாமரை மலரின் மேல் அமர்ந்திருக்கும் திருமகள் வாழும் மார்பைக் கொண்ட திருமால் முதலிய தேவர்கள் ஆகியவர்களும் இடைவிடாமல் எந்தத் தேவர்களும் நிறைய இருந்து தங்கியிருப்பது தேவாசிரயன் என்னும் பெயரைப் பெற்ற அழகிய காவணம்.' பாடல் வருமாறு:

> **''பூவார் திசைமுகன் இந்திரன் பூமிசை**
> **மாவாழ் அகலத்து மால்முதல் வானவர்**
> **ஓவா தெவரும் நிறைந்துறைந் துள்ளது**
> **தேவா சிரயன் எனும்திருக் காவணம்.''**

பூ—தாமரை மலரில். ஆர்—அமர்ந்திருக்கும். திசை—கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்னும் நான்கு திசைகளையும் பார்க்கும்; ஒருமை பன்மை மயக்கம். முகன்—முகங்களைப் பெற்ற பிரமதேவன்; ஒருமை பன்மை மயக்கம். இந்திரன்—தேவர்களினுடைய அரசனாகிய இந்திரன். பூமிசை—செந்தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும். மா—திருமகள். வாழ்—வாழும். அகலத்து—திருமார்பைக் கொண்ட. மால்—திருமால். முதல்—முதலிய. வானவர்—தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஓவாது—இடைவிடாமல். எவரும்—எந்த வகையான தொண்டர்களும்; ஒருமை பன்மை மயக்கம். நிறைந்து—கூட்டமாக நிரம்பி. உறைந்து—தங்கி. உள்ளது—இருக்கும் இடம். தேவாசிரயன் எனும்—தேவாசிரயன் என்னும் பெயரோடு விளங்கும்; இடைக்குறை. திருக்காவணம்-அழகிய காவணம். காவணம்-பெரிய கல் தூண்கள் அமைந்த மேற்கட்டி இல்லாத பந்தல். தேவாசிரயன்—தேவர்களால் ஆசிரயக்கப்படுவது.

பிறகு வரும் 3-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'துன்பத்தைப் போக்கும் சிவபெருமானுடைய அடியவர்களின் திருமேனிகளின்மேல் முழுவதும் பூசிய விபூதி வீசும் பிரகாசத்தாலும், அவர்களிடம் நிரம்பியிருக்கும் பரிசுத்தத்தாலும், அவர்கள் பாதுகாத்து உச்சரிக்கும் ந, ம, சி, வா, ய என்னும் பஞ்சாட்சரத்தினுடைய ஒலி விளங்குவதாலும், பரவியிருக்கும் ஆயிரம் பாற்கடல்கள் அலைகளை எழுப்புவதனால் எழும் ஒலியைப் போலக் கேட்கும் இடம் அந்தத் தேவாசிரயன் என்னும் காவணம்.' பாடல் வருமாறு:

**''அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்**
**நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்**
**புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்**
**பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது.''**

அரந்தை—துன்பத்தை. தீர்க்கும்—போக்கும். அடியவர் —சிவபெருமானுடைய அடியவர்களின்; ஒருமை பன்மை மயக்கம். மேனிமேல்—திருமேனிகளின்மீது; ஒருமை பன்மை மயக்கம். நிரந்த—முழுவதும் பூசிக்கொண்ட. நீற்று—விபூதி யினுடைய. ஒளியால்—பிரகாசத்தாலும். நிறை—அவர்களி டம் நிரம்பியிருக்கும். தூய்மையால்—பரிசுத்தத்தினாலும். புரந்த—அவர்கள் பாதுகாத்து உச்சரிக்கும். அஞ்சு—ந, ம, சி, வா, ய என்ற ஐந்து. எழுத்து—எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தின்; ஒருமை பன்மை மயக்கம். ஓசை—இனிய ஒலி. பொலிதலால்—விளங்குவதாலும். பரந்த-பரவியுள்ள. ஆயிரம்—ஆயிரக்கணக்கான. பாற்கடல்—திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடல்களின் அலைகள் எழுப்பும் ஒலியை; ஒருமை பன்மை மயக்கம். போல்வது—பெற்றுப் போல விளங்குவது அந்தத்தேவாசிரயன் என்னும் காவணம்.

திருமேனி முழுவதும் விபூதியைப் பூசிக்கொள்ளுதல்: ''செய்ய மேனி வெளிய பொடிப் பூசுவர்.'', ''நீறேறிய திரு மேனியர்.'', ''நீறுமெய் பூசி.'', ''நீறடைந்த மேனியின் கண்.'',''நீறுசேர் திருமேனியர்.'',''பொடிகொள் உருவர்.'' ''மேனி நீறது பூசி.'' ''வெண்ணீ றுடைக்கோல மேனியர்.'', ''நீறுமெய் பூசி.'', ''ஏறுமொன் றேறி நீறு மெய்பூசி.'', ''நீறணி மேனியனாய்.'', ''நீறணி மேனியன்.'', ''மேனி நீறது வாடவோன்.'', ''பொடியார்மெய் பூசினும்.'', ''நீறு சேர்வதொர் மேனியர்.'',''விரவி நீறுமெய் பூசுவர்.'' ''நீறார்தரும் மேனியர்.'',''பவள மேனி ஒளி நீறணிந்து.'', ''நீறு பூசிய உருவர்.'', ''பொடிகொள் மேனி வெண்ணூ லினர்.'', ''பொடிகொள் மேனியர்.'', ''பொடியணி வடி வொடு.'', ''பொடியிலங்கும் திருமேனியாளர்.'' ''வெந்த நீறு மெய்யிற் பூசுவார்.'', ''மேனிமே நீறனார்.'', ''பொடி மெய் பூசி.'', ''வெந்த நீறு மெ பூசிய வேதியன் ''நீறு பட்ட மேனியார்.'',''நீறுதிரு மே மிளிசத்தொளிபெறத் தடவி.'',''சோதிமிகு நீறதுமெய் பூ

"நீறு திருமேனி மிசையாடி நிறைவார்." "பொடிகொள் மாமேனியர்.", "நீற்று மேனியராயினர்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "நீறுமெய் பூசவல்லானும்." "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்.", "நீறேறு திருமேனி நின்மலனை.", "நீறேற்ற மேனி யனாய்.", "நீறுமெய் பூசி நின்று.", "நீறுமெய் பூசினானே.", "பொடியணி மெய்யர் போலும்.", "நீறுடை உருவர் போலும்." "பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்.", "முழுத் தழல்மேனி தவளப் பொடியன்.", "வெந்த நீறு மெய் பூசுநன் மேனியர்,", "சுட்ட நீறுமெய் பூசி.", "செய்ய மேனி வெண்ணீறணி வான்.", "நீற்றினார் திருமேனியன்.", "மேனியிற் கோலம தாகிய நீற்றன்." "நீற லைத்ததோர் மேனி.", "நீறேறு மேனியார்.", "பொடிநாறு மேனியர்.", "பொடி யேறு மேனியராய்.", "அணிகொள் மேனி நீறு மலிந்து.", "பொடியாரும் மேனியர் பூதிப் பையர்.", "பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்.", "மெய்ப்பால் வெண்ணீ றணிந்த மேனி யானை.", "பொடியேறு திருமேனி உடை யாய்.","சுடர்ப்பவளத் திருமேனி வெண்ணீற் றானை.", "நீறு சேர் திருமேனி நிமல.", "நீறேறு திருமேனி உடை யான் கண்டாய.", "நீறேறி நிழல்திகழும் மேனியான்.", "நீறணிந்த திருமேனி நிமலர்.","நீறேறு மேனி உடையாய் போற்றி.", "வெண்ணீற்றை மெய்யிற் பூசி.", "கன பவளச் செம்மேனி கலந்த வெள்ளை நீற்றவன்காண்,", "பொடியாடு மேனிப் புனிதன்.", "நீறலைத்த திரு வுருவம்.", "நெருப்புருவு திருமேனி வெண்ணீற் றானை.", "நீறேற்ற மேனியாகி.", "நீறுடைய திருமேனி பாக முண்டோ.", "நீறேறு திருமேனி நிகழக் கண்டேன்.", "பொன்னொத்த மேனிமேற் பொடியும் கண்டேன்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "முழுநீறுமெய்பூசுதிர்.", "பொடித்தான் கொண்டு மெய்ம்முற்றும் பூசிற்றென்னே.",

''நீறார் மேனியனே.'', ''பொடியார் மேனியனே.'', ''நீற்றாரும் மேனியராய்.'', ''பொடியேறு திருமேனிப் பெருமானை.'', ''நீறுநுந் திருமேனி நித்திலம்.'', ''முழுநீறு பூசிய முனிவர்.'', ''பொடியாடு மேனியன்.'', ''வெந்த நீறு மெய் பூச வல்லானை.'', ''மெய்யை முற்றப் பொடிப் பூசியோர் நம்பி.'', ''செம்பொன் மேனி வெண்ணீறணி வானை.'', ''முழுநீறணி மேனியன்.'',''வெண்பொடி மேனியினான்'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''நீறு பட்டே ஒளிகாட்டும் பொன்மேனி நெடுந்தகையே.'', ''நீற்றார்தரு திருமேனி நின்மலனே.'' என்று மாணிக்க வாசகரும் ''நீறுபெறும் திருமேனி'' என்று கபிலதேவநாயனாரும், ''நீறடுத்த செந்தாழ்வரையின் திரள்போல் திருமேனி'' என்று இளம்பெருமான் அடிகளும், ''பொடியேர்தரு மேனியன்.'' என்று நம்பியாண்டார் நம்பியும் பாடியருளியவற்றைக் காண்க.

பின்பு வரும் 4-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அகிலாண்டங்களைப் படைக்கும் மூலகாரணராகிய சிவபெருமானாருடைய திருவடிகளை வணங்கும் அடியவர்கள் எல்லா உலகங்களையும் ஆட்சி புரிவதற்கு உரிமையை உடையவர்கள் என்று எண்ணி எல்லா உலகங்களிலும் வாழும் மக்கள் அடைவதால் அந்தத் தேவாசிரயன் என்னும் காவணம் எல்லா உலகங்களையும் போல விளங்குவது; அந்தக் காவணத்தில்.' பாடல் வருமாறு:

**''அகில காரணர் தாள்பணி வார்கள்தாம்**
**அகில லோகமும் ஆளற் குரியர்என்**
**றகில லோகத்து ளார்கள் அடைதலின்**
**அகில லோகமும் போல்வ ததனிடை.''**

இந்தப் பாடல் குளகம். அகில—அகிலாண்டங்களைப் படைக்கும்; ஒருமை பன்மை மயக்கம். காரணர்-மூலகாரணராகிய சிவபெருமானாருடைய. தாள்-திருவடிகளை;

ஒருமை பன்மை மயக்கம். பணிவார்கள்தாம்-வணங்குபவர் கள்; தாம்: அசை நிலை. அகில-எல்லா லோகமும்-உலகங் களையும்; ஒருமை பன்மை மயக்கம். ஆளற்கு-ஆட்சி புரிவ தற்கு. உரியர்- உரிமையைப் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். என்று-என எண்ணி. அகில-எல்லா. லோகத்து-உலகங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். உளார்கள்-வாழும் மக்கள்; இடைக்குறை. அடைதலின்- வந்து சேர்வதால். அகில-எல்லா; லோகமும்-உலகங்களை யும்; ஒருமை பன்மை மயக்கம். போல்வது-போல விளங் குவது அந்தத் தேவாசிரயன் என்னும் காவணம். அதனிடை- அந்தக் காவணத்தில்.

அகில காரணர்: ''விண்முதல் பூதலம் ஒன்றிய இரு சுட ரும்பர்கள் பிறவும் படைத்து.'', ''உரைசேரும் எண்பத்து நூறாயிரமாம் யோனி பேதம் நிரைசேரப் படைத்து.'', ''பேருலகம் படைத்தளிக்கும் பெருமான்.'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''மூன்றாய் உலகம் படைத்துகந்தான்.'',''முந்தி உலகம் படைத்தான்.'' ''சென்றுருளும் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார் திசை பத்தும் இருநிலத்தில் திருந்த வைத்தார்.'', ''படைத் தானாம் பாரை.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''படைத்தாய் ஞாலமெலாம்.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''அனைத்துலகும் ஆக்குவாய்.'', ''முழுவதும் படைப்போற் படைக்கும் பழையோன்.'', ''படைப்பாய் காப்பாய் துடைப்பாய்.'',''காப்பாய் படைப் பாய் கரப்பாய் முழுதும்.'' என்று மாணிக்கவாசகரும் பாடி யருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 5-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'தந்தையாரைப் போன்றவராகிய வன்மீக நாதர் தாமே விரும்பி முன்பு ஆட்களாகக் கொள்ளப் பெற்றவர்கள் பக்தியினால் உண்மை பேசுவதில் தழைப்பை அடைந்து

நடுக்கத்தைப் பெற்ற திருவுள்ளங்களைக் கொண்டவர்கள், தங்களுடைய கைகளால் பல வகையான திருத்தொண்டு களைப் புரியும் கடமையை மேற்கொண்டவர்கள்; இத் தகைய இயல்புகளைப் பெற்றவர்கள் அல்லாமலும் வேறு கணக்கில்லாத தொண்டர்கள் ஆகிய யாவரும் அந்தத் தேவாசிரயன் என்னும் காவணத்தில் இருந்தார்கள்." பாடல் வருமாறு :

**''அத்தர் வேண்டிமுன் ஆண்டவர் அன்பினால்**<br>
**மெய்த்த ழைத்து விதிர்ப்புறு சிந்தையார்**<br>
**கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினார்**<br>
**இத்தி றத்தவர் அன்றியும் எண்ணிலார்.''**

அத்தர்—தந்தையாரைப் போன்றவராகிய வன்மீக நாதர். வேண்டி—தாமே விரும்பி. முன்—முன்பு. ஆண்ட வர்—ஆட்களாகக் கொள்ளப் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அன்பினால்—பக்தியினால். மெய்—உண்மை பேசு வதில். த்:சந்தி. தழைத்து—தழைப்பை அடைந்து. விதிர்ப் புறு—என்ன அபசாரம் நேர்ந்துவிடுமோ என்று நடுக்கத்தை அடையும். சிந்தையார்—திருவுள்ளங்களைப் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கை—தங்களுடைய கைகளால்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திருத்தொண்டு—பல வகையான திருத்தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். அந்தத் திருத்தொண்டுகளாவன: ஆலயத்தைப் பெருக்கி மெழுகிக் கோலம் போட்டு வைத்தல், பக்தர்களை அழைத்து வந்து வன்மீக நாதரைத் தரிசனம் செய்ய உதவுதல், அவர் களுக்குப் பிரசாதங்களை வழங்குதல் முதலியவை. செய்—புரியும். கடப்பாட்டினார்—கடமையை மேற்கொண்டவர் கள்; ஒருமை பன்மை மயக்கம். இத் திறத்தவர்—இத்தகைய இயல்புகளைப் பெற்றவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். அன்றியும்—இவர்களை அல்லாமலும். எண்-கணக்கு. இலார்-இல்லாத தொண்டர்களும் அந்தத் தேவாசிரயன் என்னும்

காவணத்தில் இருந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். இலார்: இடைக்குறை.

அத்தர்: ''புளமங்கை அத்தன்'', ''எந்தாய் எனஇருந்தான்.'', ''எந்தையென்றங் கிமையோர் புகுந்தீண்டிக் கந்த மாலை கொடுசேர் காழியார்.'', ''வெண்ணீற் றப்பர்.'', ''வேத முதல்வன் எந்தை.'', ''தாயும் நீயே தந்தையும் நீயே சங்கரனே.'', ''பல்லவனீச் சரத்தெம் அத்தன்.'', ''எந்தையார் வளநகர் இலம்பையங் கோட்டூர்.'',''கொன்றை கமழ்புன் சடைவைத்த எந்தை.'', ''அத்தன் அறவன்.'', ''அத்தன் ஆரூரை.'',''அத்தன் முது குன்றை.'', அந்த மில்புகழ் எந்தை.'',''எந்தை மருதரை.'', ''அத்தர் அன்னியூர்ச் சித்தர்.'', ''தந்தை அன்னியூர் எந்தையே.'', ''எந்தைதன் வளநகர் இடைமருதே.'', ''எந்தைதன் கழலடி.'', ''சிவபுர நகருறை எந்தையை.'', ''எந்தை மேவியஏகம்பம்.'',''அனேகதங் காவதம்எந்தை.'', ''எந்தையான் இமையாத முக்கண்ணினன்.'', ''மங்கலக் குடி மன்னிய எந்தையை.'', ''கோழம்பம் மேவிய அத்தனை.'', வெண்ணியில் அத்தனை.'',''தாயானே தந்தையு மாகிய தன்மைகள் ஆயானே.'', ''மருகல் எந்தாய்.'', ''அத்தா அருளாய்.'',''கருவூருள் ஆனிலை அத்தர்.'',''கரு வூருள் ஆனிலை எந்தையை.'', ''அத்தன் எமை ஆளுடைய அண்ணல்.'',''எந்தை இரும்பூளையிடம் கொண்ட ஈசன்.'', ''நாலூர் மயானத்தென் அத்தன்.'', ''கவிக்காழி அத்தனே அரனே.'', ''இமையோர் பரவிடும் அத்தனே.'', ''எந்தை இவனென் றிரவி முதலா இறைஞ்சுவார்.'', ''வேத கீதர் எந்தை.'',''தேலூர் அத்தன்.'',''எந்தை திண்டிறல் இருங்களி றுரித்த எம்பெருமான்.'', ''எந்தை ஈசன் எம்பெருமான்.'', ''மாதோட்டத் தத்தர்.'', எந்தை பெம்மான்.'', ''விடை யூர்தியான் எந்தை.'', ''எந்தை பெம்மான் இடம் எழில் கொள் சோலை யிரும்பை.'', ''எந்தை ஈசன் இருக்கும் உலகு.'',எந்தை மூக்கீச்சரத் தடிகள்.'',''எந்தாய் உன்னடி

யலால் ஏத்தாதென் நா.'', ''அப்பா உன் அடியலால் அரற்றாதென் நா.'', ''அத்தா உன்னடியலால் அரற்றா தென் நா.'', ''இருவர் மருவொணா அத்த னானவன்.'', ''அத்தனார் உறைவிடம் அணிமழ பாடியே.'', ''காளத்தி எந்தையார்.'', ''அத்தன்தன் காளத்தி.'', ''காழியுள் எந்தையார்.'', ''திருஆரூர் எம் எந்தை.'', ''கருகாவூர் அத்தர்.'', ''கருகாவூர் எம் எந்தை.'', ''யானையி னீருரி மூடிய அத்தனே.''. ''மழபாடியுர் எந்தை.'', ''திருஆல லாய் மேவிய அத்தனே.'', ''அப்பன் ஆலவாய் ஆதி.'', ''எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ.'', ''கயிலாய மலைமேல் எந்தை,'', ''எந்தை பெருமகான் இறைவன்.'', ''கொச்சை மேய எந்தையார்.'', ''குரங்காடுதுறை எந்தை யார்.'',''அத்தனார் உமையோ டின்புறு கின்ற ஆலவாய்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''அத்தன் ஆரூர்.'',''தில்லை அம்பலத் தாடுகின்ற அத்தா.'',''எந்தை நீ அருளிச் செய்யாய்.'',''தங்தையும் தாயு மாகி.'',''தந்தை யாய்த் தாயு மாகி.'', ''எந்தையார் எம்பிரானார்.'', ''எந் தையே ஏக மூர்த்தி.'',''எந்தையும் எந்தை தந்தை தந்தையு மாய ஈசர்.'' பழனை மேய அத்தனார்.'',''அச்சனாய் ஆதி மூர்த்தி.'', ''அத்தனை நினைந்த நெஞ்சம் அழகித்ாம்.'', ''அத்தனை ஆரா அமுதினை.'', ''ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய்.'', ''பாதிரிப்புலியூர் அத்தன்.'', ''அத்தா அடியேன் அடைக்கலம்.'', 'செம்பொன் அம்பலத்துள் நின்ற அத்தனை.'', ''புரம்மூன் றெய்த அத்தனை.'', ''எந்தை நீ.'', ''திருவீழி மிழலையுள் அத்தனே.'', ''எந்தை என் னிடை மருதினில் ஈசனை.'', ''எந்தை தாய்தந்தை எம்பெரு மானுமே,'', ''முடிவொன்றிலா மூர்த்தியை அத்தனை.'', ''பைஞ்ஞீலி எம் அத்தனை.'', ''தேவர் தொழப்படும் அத்தனை.'',''எம் எந்தை ஏகம்பம்.'',''நான் மறை வேதியர் பேணிய அத்தனை.'', ''கோனிலி அத்த னை.'',''கடுவாய்க்கரைத் தென்புத்தூர் எந்தை ஈசனை.'',

''குரங்காடு துறை அத்தன்.'',''திருக்கானூரில் அத்தன்.'', ''சேறைச் செந்நெறி மேவிய அப்பனார்.'', ''எத்தை ஈசன் என்றேந்திட.'',''எந்தை ஈசனென் றேத்தும் இறைவனை'', ''மணஞ்சேரி எம் அத்தனார்.'', ''எந்தை ஏறுகந் தேறெரி வண்ணனை.'', ''எந்தை எம்பிரான் என்றடி சேர்வரே.'', ''எந்தையே எம்பிரானே என உள்கி.'',''எந்தையைக் கண்டு கொண்டதென் உள்ளமே'', ''அத்தனென் றரியோடு பிரம னும் துத்தி யம்செய நின்றநற் சோதியே.'', ''அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன்.'', ''எந்தை பெருமானை ஈசன் றன்னை.'', ''ஆக்கூரில் தான்தோன்றி யப்ப னாரே.'', ''வானோர் தங்கள் அப்பனை.'', ''அத்தனை ஆரூரில் அம்மான் தன்னை.'',''எந்தாய் எம்பிரா னானாய் நீயே.'', ''வெய்ய தீர்க்கும் அத்தனை.'', ''அத்தனொடும் அம்மை எனக் கானார்.'',''திருவானைக் காவுடையசெல்வாஎன் றன் அத்தா.'', ''வானோர் அப்பா,'', ''விடையொன் றேறும் எந்தை,'', ''வானவர்க்கும் முதலாய் மிக்க அத்தன்.'', ''எந்தையார் திருநாமம் நமச்சிவாய.'', ''மாதா பிதா வாகி.'',''அப்பன்நீ அம்மைநீ.'', ''அத்தா உன் அடியேனை அன்பால் ஆரித்தாய்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''அருட்டுறையுள் அத்தா.'', ''அத்தர் கோயில் எதிர்கொள் பாடி.'',''மழுவாளுடைய அத்தன்.'',''துறையூர் அத்தா.'', ''துறையூர் எந்தாய்.'' ''தாயயவளாய்த் தத்தை ஆகி.'', ''திருமேற்றளி உறையும் எந்தாய்.'',''மழபாடியுள் மாணிக் கமே எந்தாய்.'', ''திருக்கற்குடி மன்னி நின்ற எந்தாய்.'', ''பைஞ்ஞீலி எந்தை.'',''அத்தன்அம்பொற் கழல்,'',''ஆரூர் அத்தா.'', ''அத்தா ஆலங்லாடா.'', ''எந்தை நீ.'', ''எந்தையை எந்தை தந்தை பிரானை.'', அக்தன் எந்தை பிரான் எம்பிரானை.'', ''அமரர்கள் தலைவா எந்தை.'', ''எந்தை இருப்பதும் ஆரூர்.'', ''தந்தை தாய் உலகுக்கு.'', ''எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.'', ''கூடலை யாற்றூரில் அத்தன்.'' என்று சுந்தரமூர்த்தி நாய

னாரும்.'', ''ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி'' ''ஆற்றின்ப வெள்ளமே அத்தா.'',''அத்தா போற்றி அரனே போற்றி.'', ''இடைமரு துறையும் எந்தாய் போற்றி.'', ''ஏகம் பத்துறை எந்தாய்.'', ''ஈங்கோய் மலைஎம் எந்தாய் போற்றி.'', ''அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி.'', ''அத்தா போற்றி ஐயா போற்றி.''. ''உத்தமன் அத்தன் உடையான்.'', ''ஆவ எந்தாய்.'', ''ஈசனே எந்தாய் எந்தை பிரானே.'',''இமையோர் கூட்டம் எய்துமா றறியாத எந்தாய்.'' ''எந்தையைப் பந்தனை அறும்பானை'', ''எந்தை யா யெம்பிரான் மற்றுமி யாவர்க்கும் தந்தை.''. ''பொன்னே திகழும் திருமேனி எந்தாய்.'', ''எந்தாய் அந்தோ தரியேனே.'', ''எந்தை என்னை ஆண்டு.'', ''எந்தை பாதம் எய்தவே.'', ''எந்தை யாய நின்னை.'', ''அப்பனே எனக்கமுதனே.'', ''அன்னை ஒப்பாய்எனக் கத்தன் ஒப்பாய்.'', ''தாமரை மேனி அப்பா.'', ''எந்தாய் களையாய் களையாய குதுகுதுப்பே.'', ''அத்தன் ஆனந்தன் அமுதன்.'', ''அப்பார் சடையப்பன்.'', ''அத்தன் ஐயாறன்.'', ''அத்தன் கருணையொ டாட ஆட.'', ''என்னுடைய ஆரமு தெங்கள் அப்பன்.'', ''என்அப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி.'', ''பிறப்பறுத்த அத்தன்.'', ''என்அப்பன் எம்பிரான்.'', ''செய்தனவே தவமாக்கும் அத்தன்.'', ''என்அத்தன் என்னையும்ஆட் கொண்டான்.'', ''பெருந்துறை அத்தர்.'', ''அடியனேனுடைய அப்பனே.'', ''எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்.'', ''அருட்பெருங் கடலே அத்தனே.'', ''ஆழியப்பா உடையாய்.'', ''அப்பா காண ஆசைப்பட்டேன்.'', ''அத்தா சால ஆசைப்பட்டேன்.'', ''ஒண்மலர்த்திருப் பாதத்தப்பன்.'', ''அத்தன் ஆண்டு.'', ''தாதாய் மூவேழுலகுக்கும்.'', ''குருந்தம் மேவியசீர் அப்பனே.'' ''குருந்தம் மேவியசீர் அத்தனே.'', ''அம்மையே அப்பா ஒப்பிலா மணியே.'', ''அத்தனே அண்டர்

அண்டமாய் நின்ற ஆதியே.'', ''அப்பன் என்னை வந்தாண்டுகொண் டருளிய அற்புதம்.'', ''அச்சன் என்னை ஆண்டு.'', ''அத்தன் மாமலர்ச் சேவடி.'', ''அத்தன் பெருந்துறையான்.'', ''அத்தன்எனக் கருளியவா றார் பெறுவார்'' என்று மாணிக்கவாசகரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 6-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அழுக்குச் சிறிதளவும் இல்லாதவையும், உருத்திராக்க மணி மாலைகளை அணிந்து விளங்குபவையும் ஆகிய தங்களுடைய திருமேனிகளின்மேல் பூசிக்கொள்ளும் விபூதி தூய்மையுடையதாக இருப்பதைப்போலத் தங்களுடைய திருவுள்ளங்களிலும் தூய்மையைப் பெற்றவர்கள்; தங்களுடைய திருமேனிகளில் வீசும் ஒளியினால் எல்லாத் திசைகளையும் விளக்கத்தை அடையுமாறு செய்பவர்கள்; சொல்லுவதற்கு முடியாத பெருமையோடு விளங்கினார்கள் அந்தத் தேவாசிரயன் என்னும் காவணத்தில் இருந்த தொண்டர்கள்.' பாடல் வருமாறு:

**''மாசி லாத மணிதிகழ் மேனிமேற்**
**பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்**
**தேசி னால்எத் திசையும் விளக்கினார்**
**பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்.''**

மாசு-அழுக்குச் சிறிதளவும். இலாத-இல்லாதவையும்; இடைக்குறை. மணி-உருத்திராக்க மணிமாலைகள்; ஒருமை பன்மை மயக்கம். திகழ்-விளங்குபவையும் ஆகிய; பெயரெச்ச வினையாலணையும் பெயர். மேனிமேல்-தங்களுடைய திருமேனிகளின்மீது; ஒருமை பன்மை மயக்கம். பூசும்-பூசிக்கொள்ளும். நீறுபோல்-விபூதி தூய்மை உடையதாக இருப்பதைப் போல. உள்ளும்-தங்களுடைய திருவுள்ளங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். புனிதர்கள்-தூய்மையைப் பெற்றவர்கள். தேசினால்-தங்களுடைய திருமேனிகள் வீசும் ஒளியினால். தேசு-'தேஜஸ்' என்ற வடசொல்

லின் திரிபு. எத்திசையும்-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்னும் எட்டுத் திசைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். விளக்கினார்-விளக்கத்தை அடையுமாறு செய்பவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பேச-எடுத்துக் கூற. ஒண்ணா-முடியாத. ப்:சந்தி. பெருமை-பெருமையோடு. பிறங்கினார்-அந்தத் தேவாசிரயன் என்னும் காவணத்தில் இருந்த தொண்டர்கள் விளங்கினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

நீறு தூயது: ''தூவண நீறகலம் பொலிய'' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், ''தூயவெண் ணீற்றினன்'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''தூய வெண்ணீறு துதைந்தெழு துளங்கொளி.'', ''தூயவெள்ளை நீறணி எம்பெருமான்'' என்று மாணிக்கவாசகரும், ''தூய நீறு பொன்மேனியில் விளங்க.'', ''தூய சுடர்த்திருநீறு விரும்பு தொழும்புள்ளார்.'', ''பூதி யாகிய புனித நீறாடி.'', ''தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும்.'', ''தூய நீறு தங்கள் திருமுடியில் வாங்கித் தொழுதணிந்து'' என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பின்பு உள்ள 7-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து பூதங்களும் தங்களுக்கு இயல்பாக உள்ள நிலையிலிருந்தும் கலக்கத்தை அடைந்தாலும், விருப்பம் மருவிய உமாதேவியைத் தம்முடைய ஒப்பற்ற வாமபாகத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் வன்மீக நாதருடைய செந்தாமரைமலர்களைப் போன்ற திருவடிகளை மறவாதவர்கள்; பிறர் பாராட்டிப் பேசும் வன்மீக நாதரைப் பணியும் விருப்பத்தில் உரமுடைய வழியில் நின்றவர்கள்; சிறிதளவும் குற்றம் இல்லாத குணங்களில் பெருமையைப் பெற்றுக் குன்றைப் போல விளங்குபவர்கள் அந்தத் தேவாசிரயன் என்னும் காவணத்தில் இருந்த தொண்டர்கள்.'

பாடல் வருமாறு:

**''பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார்.''**

பூதம் ஐந்தும்—பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து பூதங்களும்; பூதம்; ஒருமை பன்மை மயக்கம். நிலையின்-இயல்பாக உள்ள தங்களுடைய நிலைகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். கலங்கினும்—கலக்கத்தை அடைந்தாலும். மாது-விருப்பம் மருவிய அல்லியங் கோதையை. ஓர்-ஒப்பற்ற. பாகர்-வாமபாகத்தில் எழுந் தருளச் செய்த வன்மீகநாதருடைய. மலர்-செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தாள்—திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். மறப்பு-எக்காலத்திலும் மறத்தலை. இலார்-இல்லாதவர்கள்; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை. ஓது-பிறர் பாராட் டிக் கூறும். காதல்-வன்மீக நாதரை வணங்கும் விருப்பத்தி னுடைய. உறைப்பின்-உறுதியாகிய. நெறி-வழியில். நின்றார்-நிலைத்து நின்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கோது-சிறிதளவு குற்றமும். இலாத-இல்லாத; இடைக்குறை. குண்-நல்ல குணங்களில்; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. பெரும்-பெருமையைப் பெற்ற. குன்று-மலையை. அனார்-அந்தத் தேவாசிரயன் என்னும் காவணத்தில் உள்ள தொண்டர்கள் போல விளங்குபவர்கள்; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை.

பூதங்கள் கலங்கினாலும் இறைவன் திருவடிகளை மறக்காதவர்கள்; ''வானம் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானம் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண், டூனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே'' என்று திருநாவுக்கரசு நாயனார் பாடி யருளியதைக் காண்க.

குணப்பெருங் குன்றனார்.'', குணம்என்னும் குன்றேறி நின்றார்.'' (**திருக்குறள்**, 29), ''குன்றுபோற் குணத் தான்.'' (**கம்பராமாயணம்**, வேள்விடப்படலம், 58,) ''மாயமில் குணக்குன் றன்ன மாதவர்க் கிறைவன் வந்தான்.'' (**யசோதர காவியம்**, 23) என வருவனவற்றைக் காண்க.

அடுத்து வரும் 8-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இழப்பும் ஊதியமும் இல்லாத செல்வத்தைப் பெற்ற வர்கள்; உடைந்த பானையின் ஓட்டையும் சிவந்த தங்கத் தையும் ஒரே சமமாகப் பார்க்கிறவர்கள்; தங்களுடைய திருவுள்ளங்களில் சேர்ந்து விளங்கும் பக்தியினால் வன்மீக நாதரைத் தங்களுடைய கைகளைக் குவித்துக் கும்பிடுவதை யும் வணங்குவதையும் அல்லாமல் முக்தியையும் விரும்பாத வீரத்தோடு அந்தத் தேவாசிரயன் என்னும் காவணத்தில் இருந்த தொண்டர்கள் விளங்கினார்கள்.' பாடல் வருமாறு:

**''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்;**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;**
**கூடும் அன்பினிற் கும்பிட லேஅன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.''**

கேடும்-இழப்பும்; நஷ்டமும். ஆக்கமும்-ஊதியமும்; லாபமும்; 'செலவும் வரவும்' எனலும் ஆம். கெட்ட-இல் லாமற் போன. திருவினார்-செல்வத்தைப் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ''சென்றடை யாத திருவுடை யானை'' என வருதல் காண்க. ஓடும்-மண்பானை உடைந்த ஓட்டாஞ் சில்லையும். செம்பொனும்-சிவந்த தங்கத்தையும். பொனும்:இடைக்குறை. ஓட்டை முன் னால் சொன்னார், அதைப் பார்த்து ஒதுக்கித் தள்ளுவதைப் போலத் தங்கத்தையும் ஒதுக்கித் தள்ளிவிடுவார்கள் என்ப தைக் குறிக்க. ஒக்கவே-சமானமாகவே. நோக்குவார்-பார்ப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். ''செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கவையும் உம்பர்பிரான் திரு

மூன்றில் உருள்பருக்கை யுடனொக்க எம்பெருமான் வாகீசர் உழவாரத் தினில்ஏந்தி வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புகஎறிந்தார்.'', ''புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும் சொல்லோடும் வேறுபா டிலாநிலைமை துணிந்திருந்த நல்லோர்'' என்று திருநாவுக்கரசுநாயனார் இருந்த நிலையைச் சேக்கிழார் பாடுவது இங்கே உணரத் தக்கது. கூடும்-தங்களுடைய திருவுள்ளங்களின் சேர்ந்திருக் கும். அன்பினில்-பக்தியின் வலிமையினால். கும்பிடலே— தங்களுடைய கைகளைக் குவித்து வன்மீகநாதரைக் கும் பிட்டு வணங்குவதையே. அன்றி-அல்லாமல். வீடும்-முக்தி யையும். வேண்டா-விரும்பாத. விறலின்-வீரத்தோடு. விளங்கினார்-அந்தத் தேவாசிரயன் என்னும் காவணத்தில் இருந்த தொண்டர்கள் விளங்கினார்கள்; ஒருமை பன்மை மயக்கம். ''நின்னைத், துன்னித் துன்னி வழிபடுவதன் பயம், இன்னும் அவையாகுக.'' (**பரிபாடல்,** 14:29-31) என வருதல் இங்கே உணர்தற்குரியது.

பிறகு உள்ள 9-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'அவர்கள் அணிந்து கொள்ளும் மாலை உருத்திராக்க மணி மாலையே; அவர்கள் உடுக்கும் உடையும் கந்தல் துணியே; அவர்கள் தாங்கும் பொறுப்புப் பரமேசுவரராகிய வன்மீக நாதருடைய திருப்பணியே; அதனை அன்றி வேறு ஒரு பொறுப்பும் இல்லாதவர்கள் அந்தத் தேவாசிரயன் என்னும் காவணத்தில் உள்ள திருத்தொண்டர்கள்; குளிர்ச்சி யைப் பெற்ற பக்தியை உடையவர்கள் அவர்கள்; எதனா லும் ஒரு குறைவும் இல்லாதவர்கள்; அவர்களுடைய வீரம் அடியேனால் பாடும் இயல்புக்குள் அடங்குவதோ?' பாடல் வருமாறு:

**''ஆரம் கண்டிகை, ஆடையும் கந்தையே,**
**பாரம் ஈசன் பணிஅல தொன்றிலார்,**
**ஈர அன்பினர் யாதும் குறைவிலார்**
**வீரம் என்னால் விளம்பும் தகையதோ?''**

ஆரம்-அந்தத் தொண்டர்கள் அணிந்து கொள்ளும் மாலை. கண்டிகை-உருத்திராக்க மணிமாலையே. ஆடையும்-அவர்கள் உடுக்கும் உடையும். கந்தையே-கந்தல் துணியே. பாரம்-அவர்கள் தாங்கும் பொறுப்பு. ஈசன்— பரமேசுவரனாகிய வன்மீகநாதனுடைய. பணி-திருப் பணியை. அலது-அல்லாமல்; இடைக்குறை. ஒன்று- வேறு ஒன்றும். இலார்-இல்லாதவர்கள்; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை. வீரம்-அந்தத் தொண்டர்களுடைய வீரம். என்னால்-அடியேனால். இது சேக்கிழார் தம்மைக் குறித்துக் கூறியது. விளம்பும்-பாடும். தகையதோ- தகுதிக்குள் அடங்கியதோ.

வீரம்; "புலனைந்தும் வென்றான்தன் வீரமே வீரம்" என வருதலைக் காண்க.

அடுத்து வரும் 10-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் தொண்டர்கள் தாங்கள் வேண்டிய வண்ணம் விருப்பத்தோடு எடுத்துக் கொள்ளும் வேடங்களை உடையவர்கள்; ஆனந்தத்தாண்டவம் புரிந்தருளும் பெருமானாகிய தியாகேசனுடைய ஒப்பற்ற திருத்தொண்டர்கள்; நெடுங் காலமாக விளங்கும் பழைய புகழைப் பெற்றவர்கள்; அவர்களுடைய சிறந்த நிலையை இவ்விடத்தில் வாழ்த்துகிறேன்; எதைத் தெரிந்து கொண்டு துதிப்பேன்?' பாடல் வருமாறு :

**"வேண்டு மாறு விருப்புறும் வேடத்தர்;**
**தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்;**
**நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை**
**ஈண்டு வாழ்த்துகேன் என்னறிந் தேத்துகேன்."**

வேண்டுமாறு-அந்தத்தொண்டர்கள்தாங்கள் வேண்டிய வண்ணம். விருப்புறும்-விருப்பத்தோடு எடுத்துக் கொள்ளும். வேடத்தர்-வேடங்களை உடையவர்கள்; ஒருமை பன்மை மயக்கம், தாண்டவ—ஆனந்தத்தாண்டவம் புரிந்தருளும். ப்:சந்தி. பெருமான்-பெருமானாகிய தியாகேசனுடைய. தனி-ஒப்பற்ற. த்:சந்தி. தொண்டர்கள்- திருத்தொண்டர்கள். நீண்ட-நெடுங்காலமாக விளங்கும்.

தொல்-பழைய. புகழார்தம்-புகழ்களைப் பெற்றவர் களுடைய; ஒருமை பன்மை மயக்கம். தம் : அசைநிலை. நிலைமையை-சிறப்பான நிலையை. என்-என்ன வகையில். அறிந்து-தெரிந்து கொண்டு. ஏத்துகேன்-அடியேன் துதிப்பேன். இது சேக்கிழார் தம்மைக் குறித்தது.

இந்தத் திருக்கூட்டச் சிறப்பில் இறுதியில் உள்ள 11-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இத்தகைய பெருமையைப் பெற்றவர்களாகிய தவசிகளினுடைய திருக்கூட்டத்தை அடியேங்களுடைய தலைவனும், முடிவு இல்லாத புகழைப் பெற்றவனும், ஆலால சுந்தரனும் ஆகிய சுந்தரமூர்த்தி பாடியருளிய அழகான திருத்தொண்டத் தொகை என்னும் செந்தமிழ்த் திருப்பதிகத்தைத் திருவாரூருக்கு எழுந்தருளி வந்து பாடியருளியவாறு பாடுவோம்'

பாடல் வருமாறு:

**"இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்**
**அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்**
**சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ணம் உரைசெய்வாம்."**

இந்த-இத்தகைய சிறப்புகளைப் பெற்ற. மா-பெருமையை உடைய. தவர்- தவசிகளாகிய திருத்தொண்டர் களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். கூட்டத்தை-திருக்கூட்டத்தை. எம்பிரான்-அடியேங்களுடைய தலைவனும். அந்தம்-முடிவு. இல்-இல்லாத; கடைக்குறை. புகழ்-புகழைப் பெற்றவனும்; திணைமயக்கம், ஆலால சுந்தரன்-ஆலால சுந்தரனும் ஆகிய சுந்தர மூர்த்தி. சுந்தர-அழகைக் கொண்ட; சந்தி. திருத்தொண்டத் தொகை-திருத் தொண்டத் தொகை என்னும். தமிழ்-செந்தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகத்தை; ஆகு பெயர். வந்து-திருவாரூருக்கு எழுந்தருளி. பாடிய வண்ணம்-பாடியருளியவாறே. உரைசெய்வாம்-யாம் பாடுவோம்; இது சேக்கிழார் கூற்று.

சிறப்புப் பெயர் முதலியவற்றின்

# அகராதி

(எண்—பக்க எண்)


அகத்திய முனிவன், 158, 161
அகத்தியன், 40, 41
அகஸ்திய பக்த விலாஸம், 3
அகில காரணர், 299, 300
அங்கணாளன், 138-9
அசைநிலை, 53, 55, 57 -9, 85, 89, 112, 123, 131, 138, 142, 154-6, 160, 162, 179, 184, 201, 221, 246, 253, 260, 266, 270, 279, 281, 284, 300, 312
அஞ்செழுத்து, 296-7
அடியவர்களின் வீரம், 311
அடியார்க்கு நல்லார், 241
அணிகலன்களின் வகை, 196
அத்தர், 107-8, 302-6
அதிபத்த நாயனார், 21
அதிரா அடிகள், 229
அந்தி வான்மதி சூடிய அண்ணல், 113
அநபாய சோழ மகாராஜா, 11
அநபாயச் சோழ மன்னன் (மன்னர்), 43, 56-7, 87, 224, 230
அப்பாலும் அடிச்சார்ந்தார், 21
அப்பூதியடிகள் நாயனார், 20
அபய குலசேகரச் சோழ மன்னர், 229
அபயகுல சேகர மன்னன், 87
அபயகுல சேகரன், 14
அபயன், 87
அம்பல வாணர், 18, 34, 37, 44
அம்மனைகள், 202
அம்மானைப் பருவம், 204
அம்மானைப் பாடல்கள், 203
அமர்நீதிநாயனார், 21
அரசர்களுடைய அரண்மனைகளின் வாசல்களில் ஆராய்ச்சி மணிகளைக் கட்டித் தொங்கவிட்டிருத்தல், 251
அரசன் உயிர்களுக்கு உயிரைப் போன்றவன், 226
அரதன சிருங்கம், 231

அரிக்குருளை அன்னான், 238
அரிவாட்டாயநாயனார்,13,21
அருட்பா, 10
அருமந்த, 282
அருள்மொழித் தேவர், 13-4
அல்லியங்கோதை, 144, 228, 231, 308
அவையடக்கம், 52
அழகைப் பெற்றவர், 88
அற்புதத்திருவந்தாதி, 35, 228
அறக்கட்டளைகள், 233
அறம் வளர்த்த நாயகி, 148
அறவனார், 293
அறுபத்து மூன்று நாயன் மார்கள், 43
அன்னம் ஆடும் துறை, 181
அனபாய சோழ மன்னன், 207-8
அனிதம்-கணக்கு இல்லாதது, 72
அனிந்திதை, 127-9, 131
அஷ்டாங்க யோகம், 199
ஆகுபெயர், 75, 77, 79, 107, 127, 188, 211, 214, 226-7, 237, 239, 242-3, 312
ஆட்கொண்டார், 149
ஆடகேசுவரம், 231
ஆடகேசுவரர், 231
ஆதிசேடன், 40
ஆதி தேவர், 298
ஆதிதேவனார், 81
ஆதி மூர்த்தி, 131
ஆதி விநாயகர், 149
ஆபரணங்களின் வகை, 220
ஆயிரக்கால் மண்டபம், 230
ஆராய்ச்சி மணி, 250-52, 269
ஆரூரர், 25
ஆலால சுந்தரர்(ன்), 123, 128-32, 138-40, 312
ஆளுடைய பிள்ளையார் திருக் கலம்பகம், 229
ஆளுடைய பிள்ளையார் திருச் சண்பை விருத்தம், 229
ஆளுடைய பிள்ளையார் திருத் தொகை, 229
ஆளுடைய பிள்ளையார் திரு மும்மணிக்கோவை, 229
ஆளுடைய பிள்ளையார் திரு வந்தாதி, 229
ஆறுமுக நாவலர் எழுதிய உபோற்காதம், 3
ஆனந்தத் தாண்டவம், 311
ஆனாய நாயனார், 21
இசை ஞானியார், 25
இட ஆகுபெயர், 57, 67, 129, 139-40, 152, 156, 180, 237, 248, 256, 259
இடங்கழி நாயனார். 20
இடைக்குறை, 52, 54, 62, 71-3, 75, 80, 106, 112-5, 123, 126, 128-9, 131-2, 138,140, 144, 154, 167, 171, 191, 213-4, 219, 221, 226, 233, 244-5, 247-8, 252, 255,265, 269-70, 279-81, 287, 302, 306, 309, 311
இந்தளம், 149
இந்திரன், 78, 80, 149,170-71, 189-90, 231, 269-70, 295-6
இந்திரன் திருமால் பிரம தேவன் முதலிய தேவர்கள் சிவபெருமானை வணங்குதல், 270-71
இமய மலை, 157-8
இமயமலையாகிய அரசன், 165
இயற்பகை நாயனார், 21
இரண்டாம் குலோத்துங்க சோழ மன்னன், 57, 225

இராசதானி நகரம், 223
இராசராசச் சோழச் சக்கர வர்த்தி, 16
இராசராச சோழன், 158
இராமன் கதை, 53
இராமாயணம், 40
இருபத்து நான்கு கோட்டங் கள், 13
இலக்குமி தேவி, 197
இலச்சினை, 157-8
இளம்பரிதி போன்றவன், 241
இளம்பெருமான் அடிகள், 229, 299
இளைஞனுக்குக் கன்றுக்குட்டி உவமை, 287
இளையான்குடி மாற நாய னார், 13
இறைவனுடைய ஆறு குணங் கள், 4
இன்ன தன்மையன் என்றறி யாதவன், 90-91
ஈற்றசை நிலை, 52, 59, 76, 85, 141, 144, 157, 162, 167-9, 180-82, 187, 215 218, 221, 224-5, 251, 260, 288
உபமன்யு பக்த விலாஸம், 3
உபமன்னிய முனிவர்(ன்) 11, 89, 105-7, 112-4, 120-21, 123, 126, 130, 138, 142, 146, 152-3
உம்மை, 286
உமாதேவி, 42, 284-5, 307
உமாபதி சிவம், 45
உயிர்களின் வகை, 160, 259, 263-4
உருக்குமணிப்பிராட்டி, 105-6
உருத்திர பசுபதி நாயனார், 20
உருபு மயக்கம், 78, 81, 123, 166-8, 183-4, 192, 210, 237, 240, 246, 249, 261
உலகங்கள் ஏழு, 147
உவம ஆகுபெயர், 127, 142, 187
உறுதிப் பொருள்கள், 48
எங்கும் ஆகி இருந்தவர், 233-6
எட்டுத் திசைகள், 140
எதுகை, 244
எம்பிராட்டி, 140
எறிபத்த நாயனார், 21
ஏகதேச உருவகம், 52
ஏகாம்பரேசுவரன், 146-7, 165
ஏயர்கோன் கலிக்காம நாய னார், 13, 21
ஏனமும் அன்னமும் தேடு வார், 216-7
ஏனாதி நாயனார், 21
ஐந்தாவது தமிழ் வேதம், 37
ஐந்து பூதங்கள், 72-3
ஐம்பெரும் பூதங்கள், 159
ஐயடிகள் காடவர் கோன் நாயனார், 20, 35, 228
ஐயாறப்பர், 148
ஒட்டக்கூத்தர், 225
ஒருசொற் பல பொருள் அணி, 72
ஒரு பொருட் பல சொல் அணி, 180
ஒருமை பன்மை மயக்கம், 49-55, 57-9, 62, 67, 70-7, 75, 77-81, 106-7, 111-2, 114, 120-21, 123, 126-30, 140-41, 143-4, 147, 152-4, 156-8, 161, 166-89, 191-7, 203, 205-8, 211-5, 218-9, 224—7, 233, 237, 239, 247-56, 258-9, 261, 263-70, 281-5, 288-90, 294-7, 299—302, 306-12

ஒருமையாளர், 141-2
கங்காகுல திலகர், 27
கங்கையாறு, 120, 147-8, 161-2, 210
கடைக்குறை, 53, 59, 67, 70, 128, 150, 165-6, 171, 220, 223, 240-41, 244, 256, 312
கடைகளுக்கு வரும் பண்டங்கள், 220
கடைவீதிக்குச் சமுத்திரம் உவமை, 220
கண்டிகை, 310-11
கண்ணப்ப நாயனார், 21
கண்ணபிரான், 106
கண்ணன், 105
கணநாத நாயனார், 20
கணம்புல்ல நாயனார், 21
கந்தர் அநுபூதி, 252
கந்தர் அலங்காரம், 252
கபில தேவ நாயனார், 57, 113, 228, 299
கம்பர், 71, 181, 202
கம்பராமாயணம், 62, 181, 224, 246, 262, 309
கம்பை நதி, 146-7
கம்பையாறு, 146-7
கமலாம்பாள், 231
கமலாலயம், 228, 231, 239
கமலினி, 127-9
கயிலாசபதி, 89
கயிலாசம், 61
கயிலாயம், 84
கயிலாய மலை, 75-6, 78, 80, 111, 123
கயிலைத் திருமாமலை, 61
கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி, 229
கரிகால் வளவன், 158
கல்லாட தேவ நாயனார், 228
கலிக்கம்ப நாயனார், 21
கலித்தொகை, 208, 259
கலிய நாயனார், 21
கலைகள் அறுபத்து நான்கு, 238-9
கலைமகள், 40
கழற்சிங்க நாயனார், 20, 230
கழறிற்றறிவார், 35
கற்றைவார் சடையான், 85
கன்னட மொழி பேசுகிறவர்கள், 21
கனல் மலர் செங்கையாளர், 151
காகு ஸ்வரம், 59
காஞ்சி மாநகரம், 147
காஞ்சீபுரம், 146, 230
காந்தார பஞ்சமம், 156
காந்தாரம், 150, 234
காமாட்சி அம்மை, 146-7, 165
கார் எட்டு, 228
காரி நாயனார், 21
காரைக்காலம்மையார், 20, 35, 228
கால்-சக்கரம், 250
கால மயக்கம், 52, 295
காவிரி, 160
காவிரி ஆறு, 148-9, 158-9, 161-2, 164-9, 171-2
காவிரி ஆறு பொன்னைக் கொழித்தல், 161, 165, 167
குங்கிலியக் கலய நாயனார், 20
குடகு, 159
குடகு மலை, 162, 165
குணப்பெருங் குன்றனார், 309
குலச்சிறை நாயனார், 21
குலோத்துங்க சோழன் உலா, 58, 251
குளகம், 106, 111, 120, 128-9, 131-2, 140, 244, 252, 299

குறிஞ்சி, 231-2
குறிஞ்சி நிலம், 188, 199, 200
குறிஞ்சிப்பண், 150
குன்றத்தூர், 14, 35-6, 43-4.
குன்றத்தூர் முனிவர், 40
குன்றைவள நாடு, 13
கூடல்கிழான், 13
கூற்றுவ நாயனார், 20
கைலாசபதி, 61, 67, 72, 75-8, 80, 106, 112, 121, 123, 129-32, 138
கைலாசபதியார், 84-7, 106, 112, 127-8
கைலாசம், 121
கைலாச மூர்த்தி, 130-31
கைலாய மலை, 69, 138
கொடி வகைகள், 194
கோச்செங்கட் சோழ நாயனார் 20
கோட்புலி நாயனார், 13, 21, 24
கோபப் பிரசாதம், 223
கோயில் திருப்பண்ணியர் விருத்தம், 229
கோயில் நான்மணி மாலை, 229
கோயிற் புராணம், 7
கோவதை, 261
கோஹத்தி, 261, 279
கௌசிகம், 231
சங்கர சோழன் உலா, 225
சங்கராசாரியார், 11
சடங்குகளின் வகை, 198
சடாபாரத்துக்குத் தங்கம் உவமை, 210-11
சடையனார், 25
சண்டேச நாயனார், 20
சத்தி நாயனார், 13, 21
சத்திய லோகம், 37, 75
சந்தி, 51, 55, 57, 59, 62, 70, 72, 78, 81, 85, 87, 89, 111, 114-5, 121, 123, 126-7, 129-30, 139, 142, 144, 148, 153-5, 159, 161-2, 166, 172, 175-7, 181.3, 186-90, 192-5, 201, 208-10, 212, 214-5, 223-4, 227, 237-9, 242, 244-8, 250-53, 255, 259-62, 264, 267-70, 281-2, 287, 289-90, 301, 307-8, 311
சந்திரவட்டக் குடை, 241-2, 252-3
சப்தவிடங்க ஸ்தலங்கள், 230
சப்த ஸ்தானங்கள், 148
சம்பு, 114, 214
சம்புவின் அடித் தாமரைப் போதலால் இறைஞ்சாத இயல்பு, 115-9
சஹ்யம், 159
சாக்கிய நாயனார், 13, 21
சாதிகளின் வகை, 205-6
சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார், 21
சிதம்பர சபாநாதர், 11
சிதம்பரம், 11, 15, 17, 19, 35-6, 38, 44, 46-9, 51, 142, 228
சிதம்பர மும்மணிக் கோவை 259, 288
சிபிச்சக்கரவர்த்தி, 223
சிலப்பதிகாரம், 241, 251
சிலேடை, 160-61, 164-5
சிவகண நாதர்கள், 85
சிவகாமவல்லி, 142
சிவஞான சித்தியார், 6-7,
சிவஞான போதம், 192
சிவஞான முனிவர், 153
சிவதருமோத்தரம், 8

சிவநெறிப் பிரகாசம்,6
சிவ புசங்கம், 11
சிவபெருமான் கணநாதர் சூழ இருத்தல், 81
சிவபெருமான் காதுகளில் குழைகளைஅணிந்திருத்தல், 77
சிவபெருமான் திருமும்மணிக் கோவை, 229
சிவபெருமான் திருவந்தாதி, 228
சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, 228
சிவபெருமான் பூதகணம் சூழ இருத்தல், 285-6
சிவபெருமான் வன்னி பத்திரத் தைத் தலையில் அணிந்தவர், 210
சிவரகசியம், 11
சிவாகமங்கள், 12
சிவாலயத் தேவர், 16
சிவானந்த லகரி, 11
சிறப்புலி நாயனார், 20
சிறுத்தொண்ட நாயனார், 120
சீகாமரம், 232
சீகாழி, 31, 34, 152
சீகாழி நகரம், 144
சீவக சிந்தாமணி 14-5,37,192, 226, 238, 241
சுந்தரமூர்த்தி, 112-8
சுந்தரமூர்த்தி நாயனார், 3, 6, 15, 18, 24, 30, 35, 39, 42-3, 57, 64, 69, 75, 77, 83, 86, 88-9, 103, 110, 113, 118, 120, 122,125, 132,139, 143, 146, 148-54, 156, 164, 174-5, 193, 197, 201, 210, 230, 232, 235, 278, 286, 299, 300, 304, 312
சுவர்க்க லோகம், 231
சூதர், 243
சூளாமணி, 226
செந்தமிழ் நாடு 112, 129,138-40, 151-2, 156, 158
செந்தமிழ் நிலம், 131, 207
செந்தமிழ் மொழி, 312
செந்துருத்திப் பண் 230
செம்பொற்சோதீசுவரர், 148
செம்மேனியன், 56
செருத்துணை நாயனார், 13, 21, 230
சேக்கிழார், 3, 15-20, 33, 35, 39-43, 51, 53-4, 59, 81, 153-6, 158, 162, 207-9,307, 310-12
சேக்கிழார் என்ற பரம்பரை யினர், 13
சேக்கிழார் நாயனார், 10, 24, 26-9, 31, 37
சேக்கிழார் நாயனார் புராணம், 45
சேக்கிழார் பரம்பரை, 44
சேரமான் பெருமாள் நாயனார், 35, 143, 148, 228, 230
சையாத்திரி, 159
சைவாகமம், 233
சொர்க்க லோகம், 245
சோதியன், 47
சோமாசி மாற நாயனார், 20
சோழநாடு, 156, 158, 168, 170-71, 178-79, 205, 207, 209, 226, 228, 266
சோழ மண்டலம், 147-8
சோழ மன்னர்கள் சிபிச் சக்கர வர்த்தியின் பரம்பரையில் வந்தவர்கள், 223
சோழமா நிலம், 287-8
சோழவள நாடு, 156
தக்கயாகப் பரணி, 260

தக்கராகம், 149
தஞ்சை மாநகரம், 148
தண்டியடிகள் நாயனார், 21, 230
தந்தையைப் போன்றவன், 132-8
தமிழ்ச்சங்கம், 40
தமிழ் நாடு, 157
தர்மசம்வர்த்தனி, 148
தரும தேவதை, 243-4
தலைவன், 168
தவக்கொடி காண ஆடுபவர், 143
தனி அடியார், 10
தனிப்பாடல், 245
தாயுமானவர், 236
திசைகள் எட்டு, 139, 300
திசைகள் நான்கு, 296
திசை முகன், 295
திணை மயக்கம், 57, 87, 113, 127, 158, 165, 180-81, 189, 191, 198-9, 201-3, 206-7, 210, 212, 215, 221, 224, 240, 244, 255-6, 264, 283
தியாகராசப்பெருமான், 218-9, 2௦8-60,
தியாகராஜர்,269-70
தியாகேசப் பெருமான்,229
தியாகேசர்(ன்), 230,311
திரு அம்மானை,204
திரு ஈங்கோய்மலை எழுபது, 228
திருக்கயிலாய மலை, 67, 71, 79, 89
திருக்கழுமல மும்மணிக் கோவை, 229
திருக்களிற்றுப்படியார், 9, 12
திருக்குறள், 160, 259, 309
திருக்குறிப்புத் தொண்ட நாயனார், 21
திருக்குறுந்தொகை, 150, 232
திருக்கூட்டச் சிறப்பு, 51, 294
திருக்கைலாய ஞான உலா, 35, 228
திருக்கோவையார், 42,2 28
திருச்சிற்றம்பலம், 15, 17, 26, 28-9, 34, 36, 41, 44, 46, 48-9, 51-2, 55, 57, 142-3
திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், 18, 20, 35-39, 42-4, 49, 51, 56, 63, 68, 71, 74, 77, 81.2, 85, 108, 113, 116, 122, 124, 127, 130-31, 134, 139, 142-3, 145, 150-51, 163, 168, 174, 176, 181, 185, 197, 204, 210, 217, 219, 231, 234, 274, 285, 291, 293, 298, 300, 303, 307
திருத்தக்க தேவர், 14
திருத் தாண்டகம், 150, 232
திருத்தொண்டத் தொகை, 3, 15, 24-5, 128-9, 152-5, 230, 312
திருத்தொண்டர் திரு அந்தாதி, 3, 16,25, 155,229
திருத்தொண்டர் புராணம், 1, 10, 24, 25-7, 30, 34, 37, 59, 153-4
திருத்தொண்டுகளின் வகை, 301
திருநகரச் சிறப்பு, 208
திருநந்தி தேவன், 81
திரு நாகேசுவரம், 14, 43
திருநாரையூர், 15, 25
திருநாரையூர் விநாயகர் திரு விரட்டை மணிமாலை, 229

திருநாவலூர், 15, 25, 112, 128-9
திருநாவுக்கரசர் திருவேகாதச மாலை, 229
திருநாவுக்கரசு நாயனார், 13, 18, 21, 30, 39,42-3, 50-51, 57, 64, 69, 83, 86, 88-9, 102, 110, 113, 116, 122, 125, 130, 136, 139, 142-3, 146, 148, 150-51, 155, 163, 168, 174, 176-7, 185, 197, 201, 210, 217, 219, 232, 234, 277, 286, 292, 198, 300, 304, 307-8, 310
திருநாளைப் போவார் நாயனார், 21
திருநீலகண்ட நாயனார், 21
திருநீலகண்ட யாழ்ப்பாணர், 16
திருநீலகண்ட யாழ்ப் பெரும் பாணர், 21
திருநெறித் தமிழ், 33
திருநெறிய தமிழ், 35, 44-5
திருநெறிய செந்தமிழ், 42
திருநேரிசை, 150, 230
திருப்பல்லாண்டு, 10
திருப்புகழ், 252
திருப்பேரம்பலம், 56
திருமகள், 105, 195, 197, 205-6, 208-10, 223, 228, 295-6
திருமந்திரம், 228
திருமந்திர மாலை, 35, 42
திருமலைச் சிறப்பு, 156-7
திருமால், 76-7, 80, 106-7,160-61, 215, 269-70, 295-7
திருமுகப் பாசுரம், 42, 228
திருமுருகாற்றுப்படை, 192, 228
திருமுருகாற்றுப்படை இறுதி வெண்பா, 238
திருமூலட்டானம், 228
திருமூலர், திருமூல நாயனார், 21, 35, 42
திருமேனி முழுவதும் விபூதியைப் பூசிக் கொள்ளுதல், 297-9
திருவலஞ்சுழி மும்மணிக் கோவை, 228
திருவள்ளுவர், 81,123
திருவாசகம், 10, 42, 204, 228
திருவாதவூரர், 42
திருவாரூர், 143-4, 209-10, 215, 217-9, 221-3, 228, 230-31, 258, 269-70, 288-90, 294-51, 312
திருவாரூர்த் தேரழகு, 230
திருவாரூர்ப்பிறந்தார், 21
திருவாரூர்ப் புராணம், 231
திருவாரூர் மும்மணிக் கோவை, 35, 228
திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், 228
திருவாலவாயுடையார், 42, 228
திருவாவடுதுறை, 204
திருவிசைப்பா, 20, 42, 228
திருவிடை மருதூர் மும்மணிக் கோவை, 229
திருவிரட்டை மணிமாலை, 35, 228
திருவிருத்தம், 250, 232
திருவிரையாக்கவி, 24
திரு விளையாடற் புராணம், 226
திரு வெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ், 204
திருவெழு கூற்றிருக்கை. 228
திருவேகம் முடையார் திருவந் தாதி, 229
திருவையாறு, 147-8

திருவொற்றியூர் ஒருபா ஒரு பது, 229
தில்லை, 49
தில்லைவாழ் அந்தணர், 11, 15-6, 20, 36
திவ்வியப் பிரபந்தம், 238
துதிக்கையைக் கை என்று கூறுதல், 50, 57
துவரை, 105
துவாரகாபுரி, 105-6
தெலுங்குமொழி பேசுகிறவர்கள், 21
தெய்வப் பெண்களின்கூந்தலில் இயற்கையாகவே நறுமணம் வீசுதல், 127
தேவாசிரய மண்டபம், 294
தேவாசிரயன், 230,295-7,299, 301, 307-10,
தேவாரம், 70
தேஜஸ், 167, 306
தொகுத்தல் விகாரம், 62
தொகையடியார்கள், 10, 12, 25
தொண்டர் சீர் பரவுவார், 28, 42-5
தொண்டை மண்டலம்,13, 43, 45, 146-7
தொண்டை மண்டலம் நின்று காத்த பெருமான், 43
தொண்டைமான், 43
தொல்காப்பியம், 171, 190
தோணிபுரம், 152
தோணியப்பர், 31, 34
தோன்றா எழுவாய்; 67, 106
நக்கீர தேவ நாயனார், 228
நக்கீரர், 127
நட்டராகம், 231
நடராஜப் பெருமான், 19, 20, 24, 26, 28-32, 34-5, 37-9, 41, 44, 46-9, 55-6, 58-9, 141-2
நடராஜப் பெருமானார், 15, 17-8, 51-2
நந்தி தேவர், 80
நந்தி தேவன், 147
நந்தியெம்பெருமான், 84-5
நம்பி ஆரூரர், 156
நம்பி ஆரூரன், 114
நம்பியாண்டார் நம்பி, 3, 10, 25, 42, 155, 229,299
நமசிவாய, 205- 6, 296
நமிநந்தி அடிகள் நாயனார்,20, 230,
நரசிங்கமுனையரையர், 20
நல்லிசைப் புலவர்கள், 41
நவரத்தினங்கள், 188
நன்னூல், 153
நாகப்பட்டினம், 228
நாகபிலம், 231
நாகேசுவரர், 14, 43
நாயகன், 162-4
நாயன்மார்களின் சாதிகள், 13-4, 19
நால்வகை யாப்பு, 153
நாற்பத்தெண்ணாயிரம் வேளாளர்கள், 13
நான்கு வேதங்கள், 3, 38, 67, 70, 80, 143-4, 179-80, 198, 211, 221, 233, 248-9, 260, 266
நிபந்தம், 233
நிலமகள், 223
நிறை செல்வத் திருவாரூர், 228
நீன்றசீர் நெடுமாற நாயனார், 20
நீதி சாத்திரம், 227-8
நீர்நிலைகளின் வகை, 189

நீர் மலர்கள், 181-2
நீலநக்க நாயனார், 20
நீல லோசனி, 214
நீலோற்பலாம்பாள், 123
நீறு தூயது, 307
நெடுநல்வாடை, 208, 259
நேச நாயனார், 21
பகீரதன், 162
பகுதிப்பொருள் விகுதி, 78, 158
பஞ்சநதீசுவரன், 147-9
பஞ்சாட்சரம், 205-6, 296
பட்டினத்துப் பிள்ளையார், 57, 69, 269
பண்களின் வகை, 200
பத்தராய்ப் பணிவார்கள், 21
பதியிலார், 214
பதினொரு திருமுறைகள், 229
பதினோராம் திருமுறையில் அடங்கிய நூல்கள், 228-9
பயம் ஐந்து, 263
பரணதேவ நாயனார், 228
பரமனையே பாடுவார், 21
பரமேசுவரன், 129-30, 165, 184, 244
பரவை நாச்சியார், 214-5, 231, 239
பரிபாடல், 192
பரிமேலழகர், 259
பழந்தக்கராகம், 150
பழமொழி, 230
பறவைகளின் வகை, 206
பன்னிரண்டாம் திருமுறை, 25, 33, 38, 41, 229
பாயிரம், 46
பார்வதி தேவி, 126, 164, 214
பார்வதியம்மை, 128, 164
பாரத நாடு, 131, 151
பால சூரியன், 240
பாலறா வாயர், 13, 43
பாலாறு, 13
பிரமதேவன், 15, 80, 160-61, 215, 269-70, 295
பிரமபுரி, 152
பிரமபுரீசர், 34, 151-2
பிறைக்கண்ணி, 87-8
புகழ்ச்சோழ நாயனார், 20
புகழ்த்துணை நாயனார், 20
புரந்தரன், 76
புராணம் என்பதற்குரிய இரண்டு பொருள்கள், 1
புராணர், 154-5
புரிசைகிழான், 13
புலிக்காலன், 141
புலியூர்க் கோட்டம், 13
புற்றிடம் கொண்டார், 228, 231
புறப்பொருள் வெண்பா மாலை, 192
புறநானூறு, 208, 223, 226, 259, 262
புனல்நாடு, 156
பூங்கோயில், 228, 288-9, 291, 294
பூசை-பூனை, 53
பூதங்கள் ஐந்து, 143, 158, 307-8
பூதங்கள் கலங்கினாலும் இறைவன் திருவடிகளை மறவாதவர்கள், 308
பூதங்கள் சிவபெருமானோடு இருத்தல், 73-4
பூத நாதன், 105
பூத நாயகர், 294-5
பூமடந்தை, 223
பூமி தேவி, 158-9
பெண்களின் புன்னகைக்கு முல்லை மலர் உவமை, 176-7

பெண்களின் விளையாடல்கள், 178
பெண்பாற் பிள்ளைத் தமிழ் நூல்கள், 204
பெண்மணிகள் அம்மானை ஆடுதல், 204
பெண்மணிகள் சந்தனத்தைப் பூசிக்கொள்ளுதல், 168
பெண்மணிகள் தங்கள் பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பைப் பூசிக் கொள்ளுதல், 201-2
பெண்மணிகளின் கொங்கைக்கு அரும்பு உவமை, 176
பெண்மணிகளின் நெற்றிக்குச் சந்திரன் உவமை, 174
பெண்மணிகளின் முகத்துக்குச் சந்திரன் உவமை, 127
பெண்மணிகளின் வாய் மொழிகளுக்குப் பண்கள் உவமை, 197
பெண்மணிகளுக்கு அன்னப் பறவை உவமை, 130
பெண்மணிகளுக்குப் பூங்கொடி உவமை, 143
பெயர்-புகழ், 192
பெயரெச்ச வினையாலணையும் பெயர், 290
பெரிய நாயகியார், 34
பெரிய புராணம், 19, 24-5, 30, 31, 35, 37-8, 40, 42, 44, 46, 50, 51, 55, 58, 61, 157, 185, 209, 229, 259, 287, 294
பெருங்கதை, 225
பெருந்தேவபாணி, 228
பெரும்பற்றப் புலியூர், 36, 141-2, 206
பெருமிழலைக் குறும்ப நாயனார், 21
பொதிய மலை, 40, 41
பொதுக்கடிதல், 259-60
பொதுக்கடிந்து காத்தல், 208
பொய்யடிமை இல்லாத புலவர், 21
பொருள்-குழந்தை, 55
பொல்லாப் பிள்ளையார், 15
பொற்றாள், 49
பொன்வண்ணத் தந்தாதி 35, 228
பொன்னி, 161
போற்றிக் கலிவெண்பா, 228
மகாதேவர், 294
மகாபாரதம், 40
மங்கல காரியங்களின் வகை, 196
மங்கையர்க்கரசியார், 20
மண்மடந்தை, 158-9
மணி முத்தா நதி, 230
மணிமேகலை, 159-60, 241
மணிவயிறு, 237
மரங்களின் வகைகள், 182, 194
மருத நிலம், 171, 188-90
மலர் வகைகள், 203
மலையாள மொழி பேசுகிறவர்கள், 21
மனுநீதிச் சோழமன்னன், 225, 227-8, 231, 236-8, 240, 251-5, 257-8, 269, 279-83, 285, 287-9
மனுநீதிச் சோழ வேந்தன், 241-4
மனுநீதிச் சோழன், 226, 233, 247-50, 261-2, 264-7, 286-7
மனு நூல், 265
மனுவேந்தன், 224,226

மாக்கதை, 5
மாகதர், 243
மாடுகள் மேய்ந்து விட்டு மாலையில் தாங்கள் உள்ள வீடுகளுக்குத் திரும்பி வருதல், 204
மாணிக்கவாசகர், 42, 50, 57, 66, 69, 77, 83, 89, 105, 111, 119, 122, 126, 137, 139, 143, 146, 155, 164, 197, 201, 211, 217, 220, 236, 278, 293, 299, 300, 306-7
மாற்றுரைத்த பிள்ளையார், 231
மானக்கஞ்சாற நாயனார், 13, 21
மீன்களின் வகை, 186
மீனாட்சி சுந்தரம் பிள்ளை, 204
முதல்வன், 123-4
முப்பத்திரண்டு தருமங்கள், 123-4, 164-5, 189-90, 260
முப் போதும் திருமேனி தீண்டுவார் நாயனார், 20
முருக நாயனார், 20
முல்லைப் பாட்டு, 204
முழு நீறு பூசிய முனிவர், 21
முற்றெச்சம், 77, 121, 132, 184, 255
முன்பின்னாகத் தொக்க தொகை, 295
முனையடுவார் நாயனார், 13, 21
முனைவர், 291-3
மூத்த திருப்பதிகம், 35, 228
மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, 228
மூத்த பிள்ளையார் திரு மும் மணிக்கோவை, 229
மூர்க்க நாயனார், 21
மூர்த்தி நாயனார், 21, 24
மூன்று உலகங்கள், 67
மூன்று மதங்கள், 51, 70-71
மெய்க்கீர்த்திகள், 225
மெய்ப்பொருள் நாயனார், 20
மெல்லியலார், 131
மேகராகக் குறிஞ்சி, 149
யக்ஞதத்தர், 22
யசோதர காவியம், 309
யமதருமன், 245
யமன், 251-2
யமனுடைய வாகனம் எருமை மாடு, 252
யாதவன், 105
யார்க்கும் அறிவரியான், 62
யானையின் பிளிறலுக்கு மேகத்தின் முழக்கம் உவமை, 71
வடசொல் திரிபு, 167-8, 300
வந்தியர், 243
வயல்களின் வகை, 160
வரதர், 49
வரிசைக்குளத்துக் கிழான், 13
வருணம் நான்கு, 199
வள்ளல், 122
வள்ளலார், 219-20
வன்மீக நாதர், 143-4, 154, 209-11, 214-5, 221-2, 227, 233, 291, 294-5, 300, 301, 310-11,
வன்றொண்டர் (ன்), 112-3, 152-4, 215
வாத்தியங்களின் வகை, 212
வாபீ, 168
வாயிலார் நாயனார், 13, 21
வால்மீகி பகவான், 40

வாலி, 149
வாழை மரங்களின் வகை, 193
வாளை மீன் கமுகின்மேல் பாய்தல், 181
விக்கிரம சோழன், 225
விநாயகப் பெருமான், 50, 51, 76, 78. 149, 159
வியாக்கிரபாதன், 141
வியாழக் குறிஞ்சி, 149, 231
விருத்தாசலம், 230
விலங்குகளின் வகை, 206
விளி, 114
விற்பூட்டுப் பொருள்கோள், 49,219, 222
விறன்மிண்ட நாயனார், 13, 21, 230
வீதி விடங்கப்பெருமான், 283-5
வீதிவிடங்கர், 228
வெண்குளப்பாக் கிழான், 13
வெண்கொற்றக் குடை, 208
வெள்ளநீர்ச்சடை மெய்ப் பொருள், 121-2
வேத மூலம், 143-6
வேதவியாச முனிவர், 40
வேந்தன்-இந்திரன், 190
வேற்றுப் பொருள் வைப்பணி, 287
ஹரன், 183
க்ஷேத்திரத் திருவெண்பா, 35, 225

## எமது புதிய வெளியீடுகளிற் சில....

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ராமமூர்த்தி | எஸ். வி. வி. | 28 | 00 |
| 2. | கோபாலன். ஐ. ஸி. எஸ். | ,, | 17 | 00 |
| 3. | உல்லாச வேளை | ,, | 22 | 00 |
| 4. | செல்லாத ரூபாய் | ,, | 11 | 50 |
| 5. | தீபாவளிக் கதைகள் | ,, | 7 | 25 |
| 6. | பொம்மி | ,, | 7 | 00 |
| 7. | வாழ்க்கையே வாழ்க்கை | ,, | 12 | 00 |
| 8. | சம்பத்து | ,, | (அச்சில்) | |
| 9. | At a Dinner | S. V. V. | 16 | 00 |
| 10. | Marriage | ,, | 12 | 00 |
| 11. | Soap Bubbles | ,, | (Under print) | |
| 12. | மஹாபாரதக் கதைகள் | பி. ஸ்ரீ. | 32 | 50 |
| 13. | கனகாம்பரம் | கு. ப. ரா. | 11 | 50 |
| 14. | ஆத்ம சிந்தனை | ,, | 7 | 50 |
| 15. | டால்ஸ்டாய் வாழ்க்கையும் உபதேசமும் | ,, | 11 | 00 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் | ,, | (அச்சில்) | |
| 17. | மங்கையர்க்கரசியின் காதல் | வ.வே.சு. ஐயர் | 11 | 00 |
| 18. | சந்தனக் காவடி | தி. ஜ. ர. | 11 | 50 |
| 19. | ஒரே ஒரு ஊரில்... | சு. ரா. | 11 | 00 |
| 20. | தேசபக்தன் கந்தன் | கா. சி. வேங்கடரமணி | 20 | 00 |
| 21. | பட்டிணக் காக்காய் | ராஜ சூடாமணி | 7 | 50 |
| 22. | நரி அண்ணாவின் வால் | ,, | 6 | 50 |
| 23 | வாயு பகவானும் ஆலமரமும் | ,, | 6 | 50 |
| 24. | எரி நட்சத்திரம் | வி. ஸ. காண்டேகர் | 24 | 25 |
| 25. | ஆத்திசூடிக் கதைகள் | சீனிவாசன் | 20 | 00 |
| 26. | அன்றாட வாழ்வில் சுகாதாரம் | ,, | 3 | 50 |
| 27. | ஆரோக்கியமாய் வாழ... | ,, | 5 | 00 |
| 28. | இயற்கையில் அறிவியல் | ,, | 12 | 00 |
| 29. | படித்த மனைவி | 'லக்ஷ்மி' | 12 | 00 |
| 30, | அமர ஜோதி | த. நா. சேனாபதி | 6 | 25 |
| 31. | அன்னை கஸ்தூரி | எம். எஸ். சுப்ரமணியம் | 8 | 00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 32. | காந்தி காட்டும் பாதை | ஐம்புநாதன் | 4 | 50 |
| 33. | பண்டித மோதிலால் நேரு | வே. சாமிநாத சர்மா | 5 | 25 |
| 34. | பல்லவ மகேந்திர வர்மன் | த. நா. சுப்பிரமணியன் | 9 | 00 |
| 35. | பால பாரதி | சக்தி சீனிவாசன் | 8 | 00 |
| 36. | கம்பதாசன் வாழ்வும் பணியும் | சிலோன் விஜயேந்திரன் | 15 | 00 |
| 37. | கதைக் கொடி | 9 பிரபல ஆசிரியர்கள் | 7 | 00 |
| 38. | திருக்குறள் நீதிக் கதைகள் | சுந்தர சுப்ரமணியம் | 9 | 00 |
| 39. | கவிச்சக்கரவர்த்தி கம்பர் | ச. தா. மூர்த்தி | 17 | 00 |
| 40. | நன்னடையால் உயர்ந்தோர் | ம. க. ஐயராம் | 5 | 50 |
| 41. | வரலாற்றுக் கதைகள் | ராதாகிருஷ்ணபிள்ளை | 7 | 50 |
| 42. | தென்னாட்டுக் கோயில் Vol I | ,, | 12 | 00 |
| 43. | வட நாட்டுத் தலங்கள் | ,, | (அச்சில்) | |
| 44. | கொல்லைக் கோழி வளர்ப்பு | ச. கு. கணபதி | (அச்சில்) | |
| 45. | மங்கல வாழ்வுக்கு மணியான யோசனைகள் | பேராசிரியர் டாக்டர் கே. கே. ராமலிங்கம் | 10 | 00 |
| 46. | தெய்வத்தின் அருள்வாக்கு | ,, | (அச்சில்) | |
| 47. | உணவும் சுகவாழ்வும் | டாக்டர் சோஷத்திரி நாதன் | 8 | 00 |
| 48. | சிந்தனைக் கோவை | சக்தி சீனிவாசன் | 4 | 50 |
| 49. | இந்துமத உபாக்கியானம் | ஏ. கிருஷ்ணசாமி | 15 | 00 |
| 50. | தாலாட்ட மறந்த தமிழ்க் கவிஞன் | 'சேயோன்' | 13 | 25 |
| 51. | சாணக்கிய சபதம் | ஏ. நாராயணசாமி | 7 | 00 |
| 52. | பால ராமாயணம் | பண்டித கல்யாணராமன் | 8 | 50 |
| 53. | கன்றுங் கனியுதவும் | எல். உலகநாத பிள்ளை | 5 | 50 |

**அடுத்து வரும் நூல்கள்**

| | | |
|---|---|---|
| 54. | கன்னியாகுமரி | த. நா. குமாரசாமி |
| 55. | சக்கரவாகம் | சிதம்பர சுப்ரமணியன் |
| 56. | இளைஞன் கனவு | நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் |
| 57. | புதுவழி | ,, |

58. போஸ்ட் மாஸ்டர் — ரவீந்திரநாத் தாகூர்
59. இளமைப் பருவம் — ,,
60. கோழிப் பண்ணை — ச.கு.க.
61. பண்ணை வாழ்க்கை — ,,
62. காய்கறித் தோட்டம் — ,,
63. தாவரங்களும் நீங்களும் — ,,
64. பழத் தோட்டம் — ,,
65. விஷ விருட்சம் — பங்கிம் சந்திரர்
66. ஆனந்த மடம் — ,,
67. ஐரோப்பியச் சிறுகதைகள் — க. நா. சு.
68. ஜப்பானியச் சிறு கதைகள் — ,,
69. தென்னாட்டுக் கோயில்கள் Part II
M. ராதாகிருஷ்ண பிள்ளை
70. பாகவதக் கதைகள் — ,,
71. தமிழர் வீரம் — ,,
72. அறம் காத்த அரண்கள் — ,,
73. அருள் கொழிக்கும் ஆலயங்கள் — ,,
74. சுகர் கூறிய கண்ணன் கதை — ,,
75. பிற்கால வைணவம் — ,,
76. இலங்கையின் கதை — ,,
77. பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள் — கா.ஸ்ரீ.ஸ்ரீ.
78. வங்கத்துச் சிறுகதைகள் — த. நா. குமாரசாமி
த. நா. சேனாபதி
79. இந்தியச் சிறுகதைகள் — சு. குருசாமி
80. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்
தெ. பெ. மீனாட்சி சுந்தரனார்
81. ஆறுபடை விளக்கம்
Part I. II. III, IV, V, VI, VII, VIII
பி. ஸ்ரீ. ஆசார்யா
82. அருணகிரிநாதர் — ,,
83. துள்ளித்திரிகின்ற காலத்திலே — ,,
84. சிவநேசச் செல்வர்கள் — Part I II
85. சரத்சந்திரர் கதைகள் — சு. குருசாமி

